

விகடன் பிரசுரம்
கிறுக்கு ராஜாக்களின் கதை!
சரித்திரக் கிறுக்கர்கள் முதல் சமகாலச் சர்வாதிகாரிகள் வரை
முகில்
எச்சரிக்கை!




*நூலாசிரியர்-முகில்*

*எழுத்தாளர் முகில், 2001-02 விகடன் மாணவ நிருபர். கல்கியில் பத்திரிகையாளராகவும், கிழக்கு பதிப்பகத்தில் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றியவர். வரலாற்று நூல்களை எழுதுவதில் கவனம் செலுத்துபவர். 'அகம் புறம் அந்தப்புரம்', 'முகலாயர்கள்', 'யூதர்கள்', 'ஹிட்லர்', 'செங்கிஸ்கான்', 'கிளியோபாட்ரா', 'பயணச் சரித்திரம்', 'உணவு சரித்திரம்' உள்ளிட்ட இவரது நூல்கள் வாசகர்களிடையே வரவேற்பு பெற்றவை. ஆனந்த விகடனில் 'நம்பர் 1: சாதனையாளர்களின் சரித்திரம்' என்ற சூப்பர் ஹிட் தொடரை எழுதியவர். பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா ஆகிய மூன்று துறைகளிலும் இயங்கி வருகிறார். சொந்த ஊர் தூத்துக்குடி.*

Knox e_ Library
Whatsapp Group +94758603182

# கிறுக்கு ராஜாக்களின் கதை! - 1

முகில், படம்: பா.காளிமுத்து




**WARNING:**

*இந்தத் தொடரை வாசிப்பது உங்கள் மனநலனுக்குத் தீங்கானது!*

## பாபிலோனிய பல்வாள் தேவன்!

திகுதிகுவென வீட்டில் பரவ ஆரம்பித்தது தீ. வீட்டுக்காரன் பதறிப் போனான். நேரங்கெட்ட நேரத்தில் நின்றாடிய நெருப்பை அணைக்க முடியும் என்று தோன்றவில்லை. மனைவி, பிள்ளைகளை வெளியே இழுத்துப் போட்டான். ''ஐயோ... எல்லாம் போச்சே!'' என்று மனைவியின் கதறல் பின்னணி இசையென ஒலிக்க... அக்னி, பிரவேசம் செய்த வீட்டுக்குள் அவனும் பிரவேசித்தான். இன்சூரன்ஸ் இல்லாத காலம். இயன்ற அளவு பொருள்களை வெளியில் எடுத்துப் போட்டால் நஷ்டம் குறையும்.

அனலை உணர்ந்து வந்தான் பக்கத்து வீட்டுக்காரன். 'அய்யகோ! அடுத்த வீட்டில் தீ... உதவி செய்வதே நீதி!' - நொடியும் தாமதிக்காமல் நெருப்பைத் தாண்டிக் குதித்தான். அந்த வீட்டுக்காரனுடன் இணைந்து சில பொருள்களை மீட்க உதவினான். ஆனால், அவனும் சபலங்கள் நிறைந்த சராசரி மனிதன்தானே. எரியும் வீட்டிலுள்ள ஒரு சிறிய பொருளின் மீது ஆசைத்தீ பற்றியது. அதை எடுத்து அவசர அவசரமாகத் தன் உடைக்குள் மறைத்தான்.

ஆனால், வீட்டுக்காரனுக்கு சி.சி.டி.வி-யின் கண்கள். கண்டுபிடித்துவிட்டான். ''அடேய் கிராதகா! என் வீட்டிலா திருடுகிறாய்?'' என்று கத்தினான். அவன் கண்களில் நெருப்பைவிட அதிகத் தகிப்பு. நெஞ்சில் ஓங்கி ஒரே மிதி. நெருப்பில் விழுந்தான் பக்கத்து வீட்டுக்காரன். உடை பற்றிக்கொள்ள, கதறி எழுந்து ஓடியவனை, அடித்து உதைத்து மீண்டும் நெருப்பில் தள்ளி உயிரோடு எரித்தான். தீ தின்று முடித்த வீட்டில் பக்கத்து வீட்டுக்காரனும் சாம்பலாகிக் கிடந்தான்.

ஊர்ப் பஞ்சாயத்து கூடியது. நீதிபதிகள் விசாரித்தார்கள். ''தீப்பிடித்த என் வீட்டில் திருடினான். அதனால்தான் அவனைத் தீக்கிரையாக்கினேன்'' என்றான் வீட்டுக்காரன். ''நீயொரு நீதிமான்! நீதியானை! நீதிசிங்கம்!'' என்னும் ரீதியில் பஞ்சாயத்தார் வாழ்த்த, ஊரே அந்தக் கொலைகாரனைக் கொண்டாடியது.

'இதென்ன காட்டு மிராண்டித்தனம்' என்று பொங்க வேண்டாம்! 'தீப்பிடித்த வீட்டில் உதவி செய்யச் சென்றவன் ஏதாவது திருடினால், அவனை அந்தத் தீயிலேயே தள்ளி எரிக்கலாம்' என்பதே அப்போது அங்கே சட்டம். ஆம், அவர்களின் பேரரசர் அப்படித்தான் சட்டம் இயற்றியிருந்தார்.

அங்கே என்றால் எங்கே? எப்போது? யார் அந்தக் கூறுகெட்ட பேரரசர்?

ஹம்முராபி.

சுமார் 3,800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்வாங்கு வாழ்ந்த மாமன்னர். தந்தையை அடித்துத் துரத்திவிட்டு அமோரிட் நாட்டின் அரியணையைக் கைப்பற்றிய உத்தமபுத்திரர். வெறும் 50 சதுர மைல் பரப்பளவு கொண்ட ராஜ்ஜியத்தின் ராஜாவாகத்தான் தொழிலை ஆரம்பித்தார். தன் வீரத்தாலும் சாதுரியத்தாலும் மெசோபடோமியாவின் பல்வேறு பகுதிகளை வென்று, முதலாம் பாபிலோனியப் பேரரசைக் கட்டியெழுப்பிய பாபிலோனிய பல்வாள் தேவனாக வரலாற்றில் நின்றார். அன்னாரது ஆட்சிக்காலம் கி.மு. 1792 முதல் கி.மு. 1750 வரை.

வெவ்வேறு பிரதேசங்களைக் கைப்பற்றி, வேறு வேறு மொழி பேசும் மக்களை அடக்கியாள்வது எவருக்கும் கடினமான விஷயம்தான். ஆகவே ஹம்முராபி, தன் பேரரசின் எல்லா பகுதிகளுக்கும் நிபுணர்களை அனுப்பினார். எங்கெங்கே, என்னென்ன மாதிரியான சட்டங்களெல்லாம் புழக்கத்தில் இருக்கின்றன என்று திரட்டினார். அவற்றையெல்லாம் ஆராய்ந்து, வெட்டி, ஒட்டி, திருத்தம் செய்து, கூடுதலாகத் தனது அனுபவ மசாலாவைச் சேர்த்து, பாபிலோனியப் பேரரசு முழுமைக்குமான புதிய சட்டத்தொகுப்பை உருவாக்கினார்.

இதுவே நமக்குக் கிடைத்திருக்கும், மனிதக் குல வரலாற்றின் மிகப் பழைமையான முதல் சட்டத் தொகுப்பு. ஹம்முராபியின் முழுமையான சட்டங்கள் செதுக்கப்பட்ட கல்வெட்டு, கி.பி. 1902ல் பிரெஞ்சு தொல்லியல் ஆய்வாளர்களால் ஈரானின் சுஸா நகரில் கண்டறியப்பட்டது. (தற்போது பாரிஸின் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ளது.)

நம் ஆள்காட்டி விரல் வடிவிலான, ஏழு அடி நான்கு அங்குலம் உயரமுள்ள கல் ஒன்றில், அக்காடியன் (Akkadian) மொழியில் இவை செதுக்கப்பட்டுள்ளன. வணிகம், அடிமைகள், திருட்டு, வேலை, விவசாயம், விவாகரத்து, குடும்பம், சமூகம் என்று பல்வேறு பிரிவுகளில் 282 சட்டங்களை ஹம்முராபி அருளியிருக்கிறார்.

'இந்த மண்ணைத் தீய சக்திகளிடமிருந்து காக்கவும், ஏழைகளை அநியாயங்களிலிருந்து பாதுகாக்கவும், கடவுளர்கள் என்னைத் தேர்ந்தெடுத்து இந்தச் சட்டங்களை அருளினர்' என்று ஹம்முராபியே இந்தச் சட்டத் தொகுப்புக்கு முன்னுரை கொடுத்துள்ளார். இதைக் காப்பி பேஸ்ட் செய்துதான் அவருக்குப் பின்வந்த பல்வேறு ஆட்சியாளர்கள் நீதியை நிலைநாட்டியிருக்கின்றனர் என்கிறது வரலாறு. சரி, ஹம்முராபியின் சட்டங்களில் அப்படி என்ன சிறப்பு?

- புயலா, மழை பொய்த்துவிட்டதா, இன்ன பிற காரணங்களால் அந்த ஆண்டில் விளைச்சல் இல்லையா? விவசாயக் கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டாம். கடன் கொடுத்தவர்கள் தம் கடன் பட்டியலை அழித்துவிட வேண்டும். (வாயில் எலி கவ்வி, நிர்வாணப் போராட்டம் நடத்தாமலேயே விவசாயக் கடன் ரத்தைச் சாத்தியப்படுத்தியிருக்கிறார் ஹம்முராபி தி கிரேட்!)
- ஒரு பெண் தன் கணவனோடு வாழ விருப்பமில்லை என்று தெரிவித்தால், கணவனும் அதற்குச் சம்மதித்துவிட்டால், அந்தப் பெண் தன்னுடைய தந்தை வீட்டிலிருந்து வரதட்சணையாகக் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் திரும்ப எடுத்துக் கொண்டுக் கிளம்பி விடலாம். (இதுவல்லவோ பெண் சுதந்திரம்!)
- ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண் காணாமல் போய்விட்டாலோ, கடத்தப்பட்டுவிட்டாலோ, அவனுடைய குடும்பத்தை உற்றார், உறவினர்கள் தக்க உதவிகள் செய்து காப்பாற்ற வேண்டும். (என்னவொரு மனிதநேயம்!)
- ஒரு நீதிபதி சொன்ன தீர்ப்பு தவறு என்று பின்பு கண்டறியப்பட்டால், அவருக்கு 12 மடங்கு அபராதத் தொகை விதிக்கப்படும். பதவி நீக்கத் தண்டனையும் உண்டு. (ஆம், அநீதிபதிக்கும் ஆப்பு உண்டு.)

'அடடே... அத்தனை சட்டங்களும் அருமையாக இருக்கின்றனவே' என்று லைக், லவ், வாவ் பொத்தான்களை அவசரப்பட்டு அழுத்த வேண்டாம். கோபம் மற்றும் சோக பொத்தான்களுக்கும் ஏகப்பட்ட வேலை கிடக்கிறது.

- தகாத வழியில் பிறந்த ஒருவன், தன்னை வளர்க்கும் தாய் அல்லது தந்தையைப் பார்த்து, "நீ என் அம்மாவே இல்லை" அல்லது "நீ என் அப்பாவே இல்லை" என்று சொன்னால், அவனது நாக்கு இழுத்து வைத்து நறுக்கப்படும். ஒருவன் கோபத்தில் அவனது தந்தையைத் தாக்கினால், அவனது கைகள் வெட்டப்படும். ஓர் அடிமை தன் எஜமானைப் பார்த்து "நீ என் முதலாளி இல்லை" என்று முனங்கினாலும் அவன் காதுகள் அறுக்கப்படும்.



**ஹம்முராபி உருவம் பொறித்த இலைச் சின்னம்**

Knox e_ Library
Whatsapp Group +94758603182

- தன் மனைவியின் நடத்தையில் ஒருவனுக்குச் சந்தேகம் எழுந்தால், அவள் கட்டிலும் கலவியுமாகப் பிடிபடா விட்டாலும், அவளை யூப்ரடிஸ் நதி வெள்ளத்தில் தூக்கி எறிந்து விடலாம். அவள் உத்தமி என்றால் கடவுளே கரை சேர்த்துவிடுவார். இல்லையென்றால் மூழ்கி இறந்து விடுவாள். அதேசமயம், ஆண்கள் படி தாண்டினால் அது குற்றமில்லை. மனைவியல்லாமல் வேறொரு பெண்ணை ஒருவன் கர்ப்பமாக்கினால், அவனுக்கு வெறும் அபராதம்தான். பிரசவத்துக்குப் பின் அந்தப் பெண் இறந்துபோனால், அவள் பிரசவித்தது பெண் குழந்தையென்றால், அதன் ஆயுளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

- ஒருவன் மீது ஒரு குற்றம் சாட்டப்படுகிறது. தன்னை நிரபராதி என நிரூபிக்க இயலாத அவனை, ஆற்றின் ஆழமான பகுதியில் தள்ளிவிடுவார்கள். அவன் மூழ்கிச் செத்துவிட்டால், அக்மார்க் குற்றவாளி. அவனுடைய வீடு, குற்றஞ்சாட்டியவனுக்குச் சொந்தமாகிவிடும். நீந்தி மேலேறி வந்துவிட்டால் அவன் நிரபராதி. குற்றஞ்சாட்டியவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படும். அவன் வீடு, தப்பித்தவனுக்குச் சொந்தமாகிவிடும். (நிரபராதியாக இருந்து நீச்சல் தெரியாவிட்டால் என்ற கேள்விக்கெல்லாம் ஹம்முராபி இடமளிக்கவில்லை.)

- ஒரு மேஸ்திரி கட்டிக்கொடுத்த வீட்டின் சுவர் இடிந்துவிட்டால், அதை அவரே தன் செலவில் சரிசெய்து தர வேண்டும். சுவர் இடிந்து வீட்டுக்காரன் செத்துப் போனால், மேஸ்திரிக்கு மரணதண்டனை. சுவர் இடிந்து வீட்டுக்காரனின் மகன் செத்துப் போனால், மேஸ்திரியின் மகனும் கொல்லப்படுவான்.

- ஒருவன் அடுத்தவனது கண்ணைத் தோண்டி விட்டால், அவன் கண்ணைப் பதிலுக்குத் தோண்டி விடலாம். பல்லை உடைத்துவிட்டால், உடைத்தவனின் பல்லை உடைக்கலாம். எலும்பென்றால் பதிலுக்கு எலும்பை முறிக்கலாம். இதுபோன்ற ரத்தம் தெறிக்கும் ரிவெஞ்ச் சட்டங்களை அறிமுகப்படுத்தியது அண்ணன் ஹம்முராபியே! ஆனால், இதிலும் வர்க்க பேதங்கள் உண்டு. உயர்குடியைச் சேர்ந்தவன் சாதாரணனின் கண்ணை நோண்டினாலோ அல்லது வேறு ரகக் குற்றங்கள் செய்தாலோ, வெறும் அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டது. மரண தண்டனையெல்லாம் கிடையாது.

- கர்ப்பமாக இருக்கும் அடிமைப்பெண்ணை உயர்குடிக்காரன் கொன்றுவிட்டால் அதற்கும் அபராதம் மட்டுமே. அதேசமயம் கர்ப்பமாக இருக்கும் உயர்குடி அல்லது நடுத்தர வர்க்கப் பெண்ணைக் கொன்றால், பதிலுக்குக் குற்றவாளியின் அப்பாவி மகளும் கொல்லப்படுவாள்.

- கள்ளக் காதல் ஜோடி ஒன்று, தம் அசல் இணையைக் கொல்லத் திட்டமிட்டால், அவர்களிருவருமே கழுமரத்தில் ஏற்றப்படுவர். ஒரு தாய் முறையற்ற உறவில் ஈடுபட்டால், அவள் ஜோடியுடன் சேர்த்து உயிருடன் எரிக்கப்படுவாள்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளி காலி; இல்லையேல் குற்றம் சுமத்தியவனுக்கு உயிர் இருக்காது. இப்படி ஏகப்பட்ட மரண தண்டனைகளும், உயிரை வதைக்கும் கிறுக்குத்தனமான தண்டனைகளும் நிறைந்ததே ஹம்முராபியின் காலம்.




இன்னொரு கோணத்தில் பார்த்தால், நாகரிகம் பெரிதாக வளராத பண்டைக் காலத்தில், மூர்க்கமான குடிமக்களுக்கு மூக்கணாங்கயிறு போட இப்பேர்ப்பட்ட அதிரடிச் சட்டங்கள் தேவைப்பட்டிருக்கலாம். ஆகவே ஹம்முராபியைக்கூட அரை மனத்துடன் மன்னித்துவிடலாம். ஆனால், நாகரிகமும் அறிவியலும் வளர்ந்த பிற்காலத்திலும்கூட அரை மெண்டலாக ஆட்சி செய்த பலர் வரலாற்றில் வலம் வந்திருக்கிறார்கள். (டிஜிட்டல் யுகத்திலும் உலகை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.)

மதிகெட்டவர்கள். மறை கழன்றவர்கள். குரூரர்கள். காமக்கொடூரர்கள். அதிகாரப் போதை அரக்கர்கள். மமதையேறிய மூடர்கள். வக்கிர வஞ்சகர்கள். ரத்தவெறி ராட்சஷர்கள். பித்தேறிய பிணந்தின்னிகள். எம்மொழியாலும் விவரிக்க இயலா தனிவழிச் சனியன்கள்... ஆண் பெண் பேதமின்றி இப்படிப்பட்ட கிறுக்குப் பிறவிகளே ஒவ்வோர் அத்தியாயத்திலும் உங்களைத் தேடி வர இருக்கிறார்கள். எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள்.

(வருவார்கள்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

## கிறுக்கு ராஜாக்களின் கதை! – 2

முகில், படம்: பா.காளிமுத்து

கிறுக்கு ராஜாக்களின் கதை! 2

### தோத்தாங்குளி

‘‘எனக்கு அ... அடுத்து... அரியணை ஏ... ஏற வேண்டியது... ஜஸ்டின்!’’

கி.பி. 565 நவம்பர் 14 நள்ளிரவில் பைசாந்தியப் பேரரசர் முதலாம் ஜஸ்டினியன், தமது மரணப்படுக்கையில் கூறிய இறுதி வார்த்தைகள் இவை என்று நம்பப்படுகிறது. அதை உடனிருந்து கேட்ட ஒரே நபர், அரண்மனையின் தலைமை அதிகாரி பொறுப்பிலிருந்த கல்லினிகஸ். இந்த விஷயத்தை அவர்தான், பேரரசி தியோடோராவிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்.

83 வயதுவரை வாழ்வாங்கு வாழ்ந்துவிட்டுத்தான் இறந்து போயிருக்கிறார் என்றாலும், ஜஸ்டினியனின் மரணம் பைசாந்தியப் பேரரசுக்கு பேரிழப்பே. காரணம், இவரின் 38 வருட ஆட்சிக்காலம், பைசாந்தியப் பேரரசின் பொற்காலம். இத்தாலியின் பெரும் பகுதி, பால்கன் பகுதிகள், ஸ்பெயினின் தெற்கில் ஒரு பகுதி, வட ஆப்ரிக்காவில் சில பகுதிகள் என்று பைசாந்தியப் பேரரசின் எல்லைகளை ஏராளமாக விரிவாக்கியவர் இவரே. ரோமானியச் சட்டங்களை நெறிப்படுத்தி, தன் ராஜ்ஜியத்தில் அமலுக்குக் கொண்டு வந்தவர். மத்தியத் தரைக்கடலைச் சுற்றி மீண்டும் வலுவான ரோமப் பேரரசை நிறுவ வேண்டும் என்பது இவரது பெருங்கனவு. அது அரைகுறையாக நிறைவேறுவதற்கு முன்பாக, கிழவர் மண்டையைப் போட்டுவிட்டார்.

அடுத்தது?

ஜஸ்டினியனுக்கு நேரடி வாரிசு கிடையாது. 'உங்களில் யார் அடுத்த பேரரசர்?' போட்டியில் ஜஸ்டினியன் பரம்பரையில் வந்த ஏழு பேர் எதிரும் புதிருமாக முறைத்துக்கொண்டிருந்தார்கள். அதனால் என்ன? அவரே 'ஜஸ்டின்' என்று ஒரு நாமகரணத்தைச் சொல்லிவிட்டாரே என நினைக்கலாம். என்றாலும் குழப்பமிருந்தது. காரணம், ஏழு பேரில் இரண்டு 'ஜஸ்டின்'கள் இருந்தார்கள்.



ஒருவர் ஜஸ்டினியனின் உறவினரும், படையின் முதன்மைத் தளபதியுமான ஜெர்மானஸின் மகன் ஜஸ்டின். இந்த ஜஸ்டின் கல்வி அறிவும், போர் அனுபவங்களும், தலைமைப் பண்பும் மிக்கவர். ஜஸ்டினியனின் மனம் கவர்ந்த வலிமையான தளபதி. பேரரசர் ஆவதற்குரிய பத்துப் பொருத்தங்களும் நிரம்பியவர்.

இன்னொருவர், ஜஸ்டினியனின் சகோதரி விஜிலாண்டியாவின் மகனான ஜஸ்டின். கல்வி அறிவு கொண்டவர் என்றாலும், வலிமையோ, போர் அனுபவங்களோ இல்லாதவர். சொகுசு சுந்தரர்.

‘இருவரில் எந்த ஜஸ்டினாக இருக்கும்’ என்று கல்லினிகஸ் குழம்ப, பேரரசி தியோடோரா யோசிக்கவே இல்லை. ஜெர்மானஸை அவருக்குப் பிடிக்காது. ஆகவே ஜெர்மானஸின் மகனைப் புறந்தள்ளினார். இன்னொரு ஜஸ்டின், அவரது செல்ல மருமகளான சோஃபியாவைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். ஆகவே இரண்டாவது ஜஸ்டினையே ‘பைசாந்தியப் பேரரசர் இரண்டாம் ஜஸ்டின்’ என்று அறிவிக்க முடிவெடுத்தார் தியோடோரா. அந்த ஜஸ்டினுக்கு ரகசிய அழைப்பு அனுப்பப்பட்டது.

தலைநகர் கான்ஸ்டான்டிநோபிள் அரண்மனையைச் சுற்றி பலத்த காவல். ஏற்கெனவே அங்கே செனட் உறுப்பினர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். தியோடோராவின் உத்தரவுப்படி இரண்டாம் ஜஸ்டினை அடுத்த பேரரசராக ஒருமனதாக அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். ‘‘பேரரசர் ஆவதற்கு உங்களுக்குச் சம்மதமா?’’ என்று மதகுரு ஒப்புக்குக் கேட்பது மரபு. ‘‘அய்யகோ! என்னால் இயலாது’’ என்று போலியாக நடித்து மறுப்பதும் மரபே. பின்பு, ‘‘உங்களுக்காக இந்தச் சுமையை ஏற்றுக்கொள்கிறேன்’’ என்று சீன் போடுவதும் நடக்கும். அதையெல்லாம் இரண்டாம் ஜஸ்டினும் செவ்வனே செய்தார். தனது 45-வது வயதில், பைசாந்தியப் பேரரசராகச் சத்தமின்றி முடிசூட்டிக் கொண்டார். அதன்பிறகே, ஜஸ்டினியனின் இறப்புச் செய்தி வெளியிடப்பட்டது. தேசம் கண் கலங்கியது.


இரண்டாம் ஜஸ்டினின் ஓப்பனிங் இன்னிங்ஸ் நன்றாகத்தான் இருந்தது. முதல் காரியமாக, தன் மனைவி சோஃபியாவைப் பேரரசியாக அறிவித்தார். பழைய கடன்களை அடைத்தார். மக்களுக்குச் சுமையாக இருந்த சில வரிகளை நீக்கினார். காலியாகக் கிடந்த கஜானாவை நிரப்ப பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

எல்லையில் சில முரட்டு இனக்குழுக்களுடனான மோதல் வாடிக்கையாக இருந்தது. அவர்களுக்கெல்லாம் மானியங்களும் லஞ்சமும் கொடுத்துக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார் முன்னாள் பேரரசர். ஜஸ்டின் அந்த மானியங்களை நிறுத்தினார். உடனே எல்லைகளில் பதற்றம். அவார், லொம்பார்ட்ஸ் போன்ற இனக்குழுக்கள் அட்டூழியங்களை ஆரம்பித்தனர். அவர்களை அடக்க, துருக்கியர்களுடன் கைகோத்துக் கொண்டு படைகளை அனுப்பினார் ஜஸ்டின். செலவுதான் இழுத்துக்கொண்டே போனதே தவிர, எதிரிகளை அடக்க முடியவில்லை. இந்தப் பிரச்னை ஒருபுறம் இழுத்துக் கொண்டிருக்கும்போதே, தேவையே இன்றி கிழக்கு எல்லையில் பெர்சியாவின் மீது படையெடுத்தார். பெர்சியர்களின் வசமிருந்த அர்மேனியாவின் சில பகுதிகளை பைசாந்தியர்கள் கைப்பற்றினர். பதிலுக்கு பெர்சியர்கள் படை திரட்டி வந்தபோது, பைசாந்தியர்களால் கட்டுப்படுத்தவே இயலவில்லை.


போர் அனுபவமின்மை. திட்டமிடுதலில் திறமையின்மை. தளபதிகள் மீது நம்பிக்கையின்மை… இந்த இன்மைகளால் கடும் இன்னல்களுக்கு ஆளானார் இரண்டாம் ஜஸ்டின். கோபத்தின் விளைநிலமானார். அதனால் முட்டாள்தனங்கள் தொடர்ந்தன. முன்னேறிவந்த பெர்சியப் படைகள், பைசாந்தியப் பேரரசின் முக்கிய நகரங்களுள் ஒன்றான தாராவைக் கைப்பற்றின.

ஜஸ்டினியன் விரிவுபடுத்திய பைசாந்தியப் பேரரசின் பல பகுதிகளை இழந்து, தோத்தாங்குளியாகத் துவண்டு போனார் ஜஸ்டின். மனஅழுத்தம் எகிறியது. மூளை பிசகியது. பேச்சு உளறலானது. நடவடிக்கைகள் நகைப்புக்குள்ளாயின. 'பேரரசர் எப்போது என்ன செய்வார்…' என்ற பீதி அரண்மனை வளாகத்தில் எப்போதும் நிலவியது. ''போச்சு… பேரரசர் ஓட ஆரம்பித்துவிட்டார்'' என்று யாராவது பதறுவார்கள். பிரேக் பிடிக்காத தண்ணீர் லாரி போல அரண்மனையின் பரந்த முற்றங்களில் ஜஸ்டின் தறிகெட்டு ஓடிக் கொண்டிருப்பார். சேவகர்கள் அங்குமிங்கும் பாய்ந்து அவரைப் பிடிக்க முயற்சி செய்வார்கள். ஆயிரம் அழிச்சாட்டியங்கள்

செய்தாலும் 'ஹானரபிள் அரசர்' அல்லவா. அவருக்கு வலிக்காமல், காயப்படுத்தாமல் பிடித்துத் தொலைக்க வேண்டும்! ஆனால், ஜஸ்டினோ தன்னைப் பிடிப்பவரை நன்றாகக் கடித்து வைத்துவிடுவார். அவர் வலியை வெளிக்காட்டக்கூடாது. என்ன இருந்தாலும், கடித்ததுப் பேரரசர் அல்லவா? வாயில் ரத்தம் வழிய புன்னகை செய்வார், அப்பாவி முகத்துடன்.



முன்னாள் பேரரசர் ஜஸ்டினியன்



முன்னாள் பேரரசி தியோடோரா

ஒருநாள்... ''பேரரசியாரே! பேரரசர் சாளரத்தின் மீதேறி நின்று, குதிக்கப் போவதாக மிரட்டுகிறார்'' – ஓடோடி வந்து பதறினான் ஒருவன். அவரைக் கீழே இறக்குவதற்குள் பெரும்பாடாகிவிட்டது. சோஃபியா, பேரரசர் புழங்கும் அறைகளிலுள்ள சாளரங்களுக்கெல்லாம் கம்பி பொருத்த ஏற்பாடு செய்தார்.

சில நேரங்களில் பேரரசர் கட்டிலுக்கடியிலோ, மெத்தைக்கு அடியிலோ அமைதியாகக் கிடப்பார். ஆள் இருப்பதே தெரியாது. ஆனால், எப்போது எப்படி மாறுவார் என்பது புரியாது. ஆக, பேரரசர் விழித்திருக்கும் நேரமெல்லாம் அவரது வெறியைக் கட்டுப்படுத்துவதற்காக இசைக்கருவிகள் இசைக்கப்பட்டுக்கொண்டே இருந்தன. சில சமயங்களில் அதற்கும்

அடங்காமல் திமிறி எழுவார் ஜஸ்டின். நாற்காலியின் நான்கு கால்களிலும் சக்கரத்தைப் பொருத்தினார்கள். பேரரசரை உட்கார வைத்து உருட்டிக்கொண்டே அரண்மனையெங்கும் ஓடினார்கள். பேரரசர் குழந்தையாக மாறி, குதூகலமாகச் சிரிப்பார்.

இவற்றையெல்லாம் மீறியும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. கழுத்திலிருந்தோ, தலையிலிருந்தோ ரத்தம் வழிய வழிய... பேரரசரின் அறைக்குள்ளிருந்து சேவகர்கள் ஓடி வருவதுண்டு. ஆம். சில பொழுதுகளில் யார் அருகில் வந்தாலும் கடித்துக் குதறினார் ஜஸ்டின். ''ராஜாவுக்கு முத்திப் போச்சு. ரெண்டு பேரைக் கடிச்சே தின்னுட்டாராம்'' என ராஜ்ஜியத்தில் மக்கள் பீதியுடன் பேசிக் கொண்டார்கள். சாதாரணன் என்றால் சிறையில் அடைக்கலாம். தண்டனை கொடுக்கலாம். பேரரசருக்கு யார் தண்டனை கொடுப்பது? அந்த அதிகாரம் யாருக்கும் இல்லையே!



**இரண்டாம் ஜஸ்டின்**
**வெளியிட்ட நாணயங்கள்**

ஒரு கட்டத்தில் பேரரசி சோஃபியா தீர்க்கமான முடிவொன்றை எடுத்தார். தனது விசுவாசத்துக்குரிய தளபதி டைபெரியஸுக்கு ஆளும் அதிகாரத்தை (அந்தப் பதவியை 'Ceaser' என்று அழைப்பர்) வழங்கினார். அந்த நிகழ்வில் பேரரசர் இரண்டாம் ஜஸ்டின் தனது இறுதியான, தெளிவான உரையை நிகழ்த்தினார். ''இந்தப் பதவி நான் உனக்கு வழங்குவதல்ல. இறைவன் வழங்குவது. பேரரசி உன் தாய். அவளுக்கு மரியாதை கொடு. அனுபவமிக்கவர்கள் ஆலோசனைகளைக் கேள். பழிவாங்கும் வெறியில்

என்னைப்போல் முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே. உன்னை நேசிப்பது போல் மக்களையும் நேசி. ஏழைகளின் தேவைகளை நிறைவேற்று!''

உணர்வுபூர்வமான உரையில் அவை நெகிழ்ந்தது. பேரரசர் தம் கீரிடத்தை இறக்கி வைத்துவிட்டு ஓய்வெடுக்கக் கிளம்பினார். அடுத்த நான்காண்டுகளுக்கு சக்கரம் பொருத்தப்பட்ட நாற்காலி உருண்டுகொண்டே இருந்தது. கி.பி. 578, நவம்பர் 15 அன்று அதற்கு வேலையின்றிப் போனது. ஐம்பத்தெட்டு வயதில் இரண்டாம் ஜஸ்டின் இயற்கை எய்தினார். 'பைத்தியக்கார பைசாந்தியர்' என்ற பட்டம் மட்டும் வரலாற்றில் அவருக்கு நிலைத்தது.

சரி, இன்னொரு ஜஸ்டின் இருந்தாரே... என்ன ஆனார் அவர்? ஜஸ்டினியன் இறந்த சமயத்தில், அவர் எல்லைப் பகுதி பாதுகாப்பில் இருந்தார். அவர் அறியாமலேயே இரண்டாம் ஜஸ்டினை ரகசியமாக அரியணையில் ஏற்றினார்கள். 'என்றைக்காவது தளபதி ஜஸ்டின் தனக்கு எதிரியாக விஸ்வரூபம் எடுக்கலாம்' எனப் பேரரசர் ஜஸ்டின் பயந்தார். சதி ஒன்றில் தளபதி ஜஸ்டின் கொல்லப்பட்டார். ஒருவேளை அவர் பைசாந்தியப் பேரரசராக அரியணை ஏறியிருந்தால், உலகின் வரலாறு மாறியிருக்கக் கூடும். இரண்டாம் ஜஸ்டினுக்கும் பைத்தியம் பிடித்திருக்காது.

(வருவார்கள்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 3**


**முகில், படம்: பா.காளிமுத்து**

# கிறுக்கு ராஜாக்களின் கதை

## இவான் வேற மாதிரி!

ஜோதிடர்கள் சிலர் அவையில் கூடியிருந்தனர். 'மாமன்னர் எப்போது வருவார்... என்ன கேட்டுத் தொலைப்பார்... இன்றைக்கு உயிரோடு வீடு திரும்புவோமா?' பயமும் படபடப்பும் அவர்களுக்குள் படமெடுத்துக் கொண்டிருந்தபோதே மகா கனம் பொருந்திய... மன்னிக்கவும், மகா தலைக்கனம் பொருந்திய ரஷ்யாவின் பேரரசரும் முதலாம் ஜார் மன்னருமான நான்காம் இவான் அங்கே பிரசன்னமானார். 53 வயதுதான். ஆனால், ஆடிக்களித்து தேடிச்சேர்த்த நோய்களால் தேகத்தின் வயது 73 என்று சொல்லும்படியாக இருந்தது. உடல் தளர்ந்திருந்தாலும் கம்பீரத்துக்குக் குறைச்சலில்லை. நீண்ட முகம். நீளத் தாடி. மிரட்டும் மீசை. சந்தேகம் புரளும் கண்கள். சைத்தானின் மூக்கு. தீயவற்றையே உச்சரித்துப் பழகிய உக்கிரமான உதடுகள். தலை தொடங்கித் தரை வரை புரளும் தடித்த அலங்கார அங்கி. கறுப்பு உறை அணிந்த கைகளில் ரத்தக்கறை படிந்த கோல். கொடுங்கோல் என்றே சொல்லலாம்.

வந்தார். அமர்ந்தார். அவர் உடலில் இருந்து வீசிய துர்நாற்றத்தைச் சகித்துக் கொள்வது கடினம்தான் என்றாலும், கொள்ளாவிட்டால் கொல்லாமல் விடமாட்டார் என்பதால் ஜோதிடர்கள் பேரமைதி காத்தனர்.



''நான் என்றைக்குச் செத்துப்போவேன் என்று நாள் குறியுங்கள்.''

பேரரசரின் வார்த்தைகள், ஜோதிடர்களை ஸ்தம்பிக்கச் செய்தன. வேறு வழியில்லை. நாள் குறித்துதான் ஆக வேண்டும். பேரரசருக்கு, அல்லது தங்களுக்குத் தாங்களே. கணக்கிட்டார்கள். ராசிகளோடு பேசி, நட்சத்திரங்களோடு அளவளாவி, சூரியனையும் சந்திரனையும் கலந்தாலோசித்து முடிவாக தேதி ஒன்றை அறிவித்தார்கள்.

1584, மார்ச் 18. புதன்கிழமை.

சொல்லிவிட்டுப் பேரரசரையே பேரச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ''அன்றைக்கு நான் தவறுவது தவறினால்?'' என்றார் இவான். ''எங்கள் கணிப்பு தவறாது'' என்றார், ஒரு ஜோதிடர் மட்டும் தைரியமாக. ''தவறினால் அதுவே உங்களுக்கான மரணத் தேதி!'' - கிளம்பினார் இவான்.

அந்தத் தேதியில் இவான் இவ்வுலகை விட்டுக் கிளம்பினாரா என்று தெரிந்துகொள்வதற்கு முன்பு, அவரைப் பற்றி முகச்சுளிப்புடனும் பதைபதைப்புடனும் தெரிந்துகொள்ள நிறைய சமாச்சாரங்கள் இருக்கின்றன. பதினைந்தாம் நூற்றாண்டு ரஷ்ய வரலாற்றிலிருந்து ஆரம்பிப்பது வசதியாக இருக்கும்.

பதினைந்தாம் நூற்றாண்டு ரஷ்யா என்பது பரந்து விரிந்த பேரரசு அல்ல. அன்றைக்கு அது மாஸ்கோவிய ரஷ்யா, கீவிய ரஷ்யா, மங்கோலிய ரஷ்யா என்று உதிரி உதிரியாகக் கிடந்தது. வெவ்வேறு இன ஆட்சியாளர்கள். குறிப்பாக மங்கோலிய தத்தார் இனத்தவர்களே எல்லோருக்குமான எதிரிகளாகப் பயம்காட்டிக் கொண்டிருந்தார்கள். தத்தார் இனத்தவர்களின் வலிமை உட்பகையால் சிதைய, மூன்றாம் இவான் (நான்காம் இவானின் தாத்தா!) மாஸ்கோவின் மன்னராகவும் ரஷ்யா முழுமைக்குமான மாமன்னராகவும் எழுச்சி பெற்றார். ஐரோப்பியப் பேரரசுகள், ரஷ்யாவைப்

பேரரசாக அங்கீகரித்தன. அதனுடன் வணிக உறவை வளர்க்கும் எண்ணத்துடன் கைகுலுக்கின.

ரஷ்யாவின் அதிகார அடுக்கு என்பது ஒரு பிரமிடு வடிவில் இருந்தது. அனைத்து அதிகாரங்களும் நிரம்பியவராக கிராண்ட் பிரின்ஸ் (பேரரசர்) உச்சத்தில் இருந்தார். அடுத்த அடுக்கில் முந்தைய குறு மன்னர்களின் வாரிசுகள் 'தங்களில் யார் செல்வாக்குமிக்கவர்' என்று முட்டிமோதி அரசியல் செய்துகொண்டிருந்தனர். மூன்றாவது அடுக்கில் 'போயர்கள்' என்ற நிலப்பிரபுக்கள் பரவியிருந்தனர். ராணுவம், குடிமை நிர்வாகம் உள்ளிட்ட பல முக்கியமான துறைகள் போயர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. 'டூமா' என்பது போயர்களின் கவுன்சில். பேரரசருக்கே ஆலோசனை சொல்லும் அதிகாரம் டூமாவுக்கு இருந்தது. ஆக, போயர்களின் கையே ஒட்டுமொத்தமாக ஓங்கியிருந்தது. பிரமிடின் கடைசி அடுக்கு... வேறு யார், பாவப்பட்ட குடிமக்களே.



மூன்றாம் இவான்

ரஷ்யப் பேரரசுக்கு அடித்தளமிட்ட மூன்றாம் இவான், கி.பி 1505-ல் இறந்துபோனார். அடுத்து அவரின் மகன் மூன்றாம் வாஸிலி அரியணை ஏறினார். போரிட்டார். தத்தார்களை அடக்கினார். தம் காலத்தில் பேரரசின் எல்லைகளை இயன்ற அளவு விரிவாக்கினார். தனக்கு ஆண் குழந்தை பெற்றுத் தராத முதல் மனைவியை ஒதுக்கிவிட்டு, தத்தார் வழியில் வந்த யெலெனா என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். அந்தத் திருமணத்தை அங்கீகரிக்க முடியாது என்று திருச்சபை முகம் திருப்பியது.

கி.பி 1530, ஆகஸ்ட் 25. மாலை ஆறு மணி. மேற்கில் இடிச்சத்தம். பிரசவ வலியில் கதறி, ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் யெலெனா. மகர ராசி. கன்னி லக்னம். ''எதுவுமே சரியில்லையே. எல்லாம் கெட்ட சகுனங்கள். சபிக்கப்பட்ட குழந்தை இது. கணக்கு வழக்கில்லாத மரணம் இவனால் நிகழும்'' என்று ஜெருசலேமைச் சேர்ந்த பெரியவர் ஒருவர், வாஸிலியிடம் பதறினார். வாஸிலி காதில் போட்டுக் கொள்ளவில்லை. தன் குழந்தைக்கு இவான் வாஸில்யெவிச் என்று பெயரிட்டு, ராஜ வாரிசாக அறிவித்தார்.

அடுத்த மூன்றாண்டுகளிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார் மூன்றாம் வாஸிலி. அவரது உறவினர்களுக்கும், யெலெனாவின் உறவினர்களுக்கும் இடையே கிரெம்லின் எனப்படும் மாஸ்கோவின் அரண்மனையை யார் கைப்பற்றுவது என்பதில் பதவி வெறிப் போட்டி வீரியம் பெற்றது. ராஜ வாரிசான தன் மகன் நான்காம் இவானைக் காப்பாற்றும் நோக்கில், தானே அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றாள் யெலெனா. இடைஞ்சலாக வந்த வாஸிலியின் உடன்பிறப்புகள் கதையை முடித்தாள். நம்பிக்கைக்குரிய போயர்கள் சிலரது ஆதரவுடன் ஆட்சி நடத்தினாள்.

கி.பி 1538-ல் ஒருநாள் யெலெனா திடீரென இறந்துபோனாள். போயர்களே அவளை விஷம் வைத்துக் கொன்றுவிட்டதாகக் கிசுகிசுத்தார்கள். எட்டு வயது இளவரசன் இவான் திகைத்து நின்றான்.

அவனுக்குத் துணையாகக் காது கேளாத, வாய் பேச இயலாத தம்பி யூரி மட்டும். சொந்த அரண்மனையிலேயே கெஞ்சிக் கூத்தாடி பிச்சை யெடுத்து உண்ணும் நிலையில்தான் இளவரசர்கள் இருந்தார்கள்.

அரண்மனையில் எல்லா நாளும் வன்முறை. கோட்டையில் தினமும் பல கொலைகள் விழும். இவானின் பால்யம் இப்படித்தான் இருந்தது. போயர்களும் பிற உறவினர்களும் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள கொலைவெறி அரசியல் நிகழ்த்தினார்கள். சிறுவன் இவானுக்கு மதுவைப் பழக்கினார்கள். அவனைச் சித்ரவதைக் கூடத்தில் உட்காரவைத்து, 'நடப்பதை வேடிக்கைப் பார்' என்று மனத்தளவில் சித்ரவதை செய்தனர். காணக்கூடாத காட்சிகளைக் கண்டுகண்டு அவனது மனம் அதில் ருசி காண ஆரம்பித்தது. அவனது மனிதம் கரைந்து காணாமல் போனது.

'பூனையைப் பிடி... நாயை இழுத்து வா... கோட்டைச் சுவர் மீதேறி அவற்றைக் கீழே எறி. கதறித் துடிக்கின்றனவா? பறவையின் சிறகுகளைப் பிய்த்து, ரத்தம் சொட்ட அதன் உடலைக் கிழி. கிரீச்சிட்டு உயிர் துறக்கின்றனவா! ஆஹா, இந்த விளையாட்டு எனக்கு மிக மிகப் பிடித்திருக்கிறது.'

கி.பி. 1539-ல் இவானின் தாய்வழி உறவினர்களின் கை ஓங்கியது. குருதிக்கு மத்தியில் அவர்கள் கிரெம்லினைக் கைப்பற்றினார்கள். எதிரிகள் உயிருடன் தோலுரிக்கப்பட்டு, மாஸ்கோ சதுக்கத்தில் தொங்கவிடப்பட்டனர். யெலெனாவின் உறவினரான ஆண்ட்ரூ, அரசப் பிரதிநிதியாக அதிகாரம் செலுத்தினார். நாளடைவில் இவானுக்கு ஆண்ட்ரூவின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை. நல்லதொரு நாளில் ஆண்ட்ரூ கைது செய்யப்பட்டார். வேட்டை நாய்கள் நிரம்பிய கூண்டுக்குள் உயிருடன் எறியப்பட்டார். டாட்.



**அனாஸ்டாஸியா**

*தன் முதல் கொலையை நிறைவேற்றும் போது நான்காம் இவானுக்கு வயது 13.* வெறி நாய்களுக்கு மத்தியில் அதிகாரத்தின் உச்சியில் உட்கார்ந்து ஆள வேண்டுமா? இதுவே பாதை. தவறென்றாலும் இது மட்டும்தான் சரியான வழி. எதிரியோ, இல்லையோ... ஒருவன்மீது சந்தேகம் வந்துவிட்டால், அவனை உலகத்தைவிட்டே வழியனுப்பி விடு. சந்தேக நிவர்த்தி அதுவே. இவான் மூர்க்கமான அரசியலுக்குத் தயாராகி நின்றார்.

தனது பதினாறாவது வயதில் ரஷ்ய ராஜ்ஜியத்தின் பேரரசராக, செஞ்சதுக்கத்திலுள்ள டோர்மிஷன் தேவாலயத்தில் முடிசூட்டிக்கொண்டார் (கி.பி 1547). தன்னை 'ஜார்' என்று பெருமிதம் பீறிட அழைத்துக்கொண்டார்.

(‘ஜார்’ என்பது ரோமானியப் பேரரசின் ‘சீஸர்’ பட்டத்துக்கு ஒப்பானது. பேரரசர் என்று அர்த்தம்.)

பேரரசருக்கு பேரரசி வேண்டாமா? எட்டுத்திக்கும் சுயம்வரத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது, ‘தகுந்த தகுதியுடைய பேரழகிகள் கிரெம்லின் வரலாம்’ என்று. ‘யாரும் தங்கள் வீட்டுக் கன்னிப் பெண்களை மறைத்து வைக்கக் கூடாது’ என்று கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ‘சுமார் 1,500 பெண்களை அலசி ஆராய்ந்தார்கள்’ என்கிறது ஒரு சரித்திரக் குறிப்பு. அதில் இவானைக் கவர்ந்த இதயக்கனி, அனாஸ்டாஸியா ரோமனோவா. போயர் ஒருத்தியின் மகள். பிரமாண்டத் திருமணம். அனாஸ்டாஸியாவை ‘ஜாரினா’ (பேரரசி) என்று அறிவித்தார் இவான்.

சந்தேகச் சக்கரவர்த்தி இவானுக்கு, அனாஸ்டாஸியா தன் மீது காட்டும் அன்பில் துளி சந்தேகமும் வரவில்லை. காதலாகிக் கசிந்துருகி களிப்புடன் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். மணமக்கள் சில தேவாலயங்களுக்குச் சென்று நாள்கணக்கில் வழிபாடு நடத்துவது மரபு. அதற்காக இவான், மாஸ்கோ அருகிலுள்ள ஆஸ்ட்ரோவ்கா என்ற ஊரில் முகாமிட்டிருந்தார். பனி படர்ந்த கடும் குளிர்காலம்.

அப்போது ஸ்கோவ் (Pskov) என்ற ஊரிலிருந்து 70 பேர் பேரரசரைத் தேடி வந்தனர். அவர்களது கொடுமைக்கார கவர்னர், ஊழலில் திளைக்கிறார். ஊரை அடித்து உலையில் போடுகிறார். தகுந்த ஆதாரங்களுடன் புகார் கொடுக்க, இவான் முன்வந்து நின்றனர்.

இவான் வேற மாதிரி அல்லவா… கொதித்துக் குதித்தார். ‘‘என் ராஜ்ஜியத்தை, என் ஆட்சியைக் குறை சொல்கிறீர்களா? ராஜ துரோகிகளே! இவர்களைப் பிடித்து அம்மணமாக்குங்கள். அந்தப் பனியில் போட்டுப் புரட்டுங்கள்’’ என்றார். அப்படியே செய்தார்கள்.

ஆள்பவன், எங்கும் மதுவை ஓடவிட்டுக் குடிமக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லலாம்; அல்லது இவான் மாதிரியும் செய்யலாம். தன் கையிலிருந்த சூடான சிவப்பு ஒயினை அந்த மக்களின் தலைமுடியிலும் தாடியிலும் ஊற்றினார் இவான். தீயால் தீண்டினார். பற்றியெரியும் நெருப்புடன் அவர்கள் கதறி உயிர்ப்பிச்சை கேட்டுக் கொண்டிருக்கும்போதே, தூதுவன் ஒருவன் ஓடோடி வந்தான். மூச்சிரைக்கக் கத்தினான்.

"பேரரசரே! மாஸ்கோ நகரம் தீப்பற்றி எரிகிறது..."

(வருவார்கள்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 4

முகில், படம்: பா.காளிமுத்து




### 'மக்களால் நான், மக்களுக்காக நான்!'

பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் மாஸ்கோவில் தீ விபத்து என்பது வழக்கமான ஒன்று. கல் கட்டடங்கள் கிடையாது. மரத்தாலான வீடுகளே. சமைக்கும்போதோ, குளிர் காயும்போதோ, காற்றினால் சிறு பொறி சிதறினால் கூட, பல பகுதிகள் சிதைவதும் பல உயிர்கள் வதைபடுவதும் தொடர்ந்தன.

அன்றைக்கும் அப்படித்தான் மாஸ்கோவில் நெருப்பு பற்றிக் கொண்டது. ஆஸ்ட்ரோவ்கா என்ற ஊரில் முகாமிட்டிருந்த பேரரசர் நான்காம் இவான், செய்தி கேள்விப்பட்டதும் குதிரையேறி மாஸ்கோவுக்கு வந்தார். நெருப்பின் நடுவே மக்கள் பரிதவித்துக் கொண்டிருந்தனர். அவரது அரண்மனையான கிரெம்லினுக்கு ஆபத்தில்லை என்று தெரிந்ததும் நிம்மதியடைந்தார்.

ஆனால், கி.பி. 1547, மார்ச் 24-ல் கிரெம்லினின் மேற்கே அர்பாட் என்ற இடத்தில் தீப்பற்றிக் கொண்டது. காற்றின் வேகம் அதிகமாக இருக்கவே... 4ஜி வேகத்தில் தீ பரவியது. முதலில் ஒரு தேவாலயம் தீக்கிரையானது. பிறகு பல வீடுகள். தீயின் திசை மாறி, கிரெம்லின் வளாகத்திலும் நின்றாடியது. கருவூலம், நூலகம், ஆயுதக்கிடங்கு, அலுவலகம் என்று எங்கெங்கும் நெருப்பின் நடனம். வெடிமருந்துக் கிடங்கு ஒன்று பலத்த சத்தத்துடன்

வெடித்துச் சிதறியது. நெருப்பு பரவி, டோர்மிஷன் தேவாலயத்தின் பிரமாண்ட மணி அறுந்து விழுந்தது.

நகரமே தவித்துக் கொண்டிருக்க... மக்களைக் காக்க வேண்டிய பேரரசர் இவான், தன் உற்றார் உறவினர்களுடன் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் அடைக்கலம் தேடிக்கொண்டார். ஒயினை உறிஞ்சியபடியே, தூரத்தில் தெரிந்த புகைமூட்டத்தை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். ஓரிரு நாள்கள் கழித்து கிரெம்லின் வளாகத்தின் சேதங்களைச் சரிசெய்யக் கட்டளையிட்டார். பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

போயர்கள் மீது நடவடிக்கை



பல மணி நேரங்கள் நின்றாடிய அந்தத் தீயினால் பலத்த சேதம். 88,000 பேர் இடம் பெயர்ந்தனர். உயிரிழப்பு சுமார் 2,700க்கும் மேல். எல்லாவற்றையும் இழந்து பரிதவித்துக் கொண்டிருந்த மக்களின் கோபம், மன்னரின் குடும்பத்தின் மீது திரும்பியது. 'நெருப்பு பரவியது விபத்து அல்ல. மாய மந்திர வித்தை. ஒரு உயிருள்ள மனிதனின் நெஞ்சைக் கிழித்து, இதயத்தை எடுத்து, அதை நீரில் போட்டு, மந்திரங்கள் ஓதி, அந்த மாய நீரை

நகரமெங்கும் தெளித்து, அதன்மூலம் தீயைப் பரவ வைத்திருக்கின்றனர். அப்படிச் செய்தது ஒரு சூனியக்காரக் கிழவி. அவள் பெயர் அனா' என்று வதந்தி பரவியது..

அனா, வேறு யாருமல்ல. பேரரசரின் தாய்வழிப்பாட்டி. அவளும் அவளைச் சார்ந்த பிற உறவினர்களுமே மந்திர சக்தியால் மாஸ்கோவைத் தீக்கிரையாக்கிவிட்டனர் என்று மக்கள் கொதித்தனர். ஆம், அன்றைய ஐரோப்பிய சமூகங்களில் 'பிளாக் மேஜிக்' மீது மக்களுக்கு அபரிமிதமான நம்பிக்கையும் பயமும் இருந்தது. ஆகவே பாதிக்கப்பட்ட மக்கள், கொலை வெறியுடன் அனாவையும் அவளைச் சார்ந்தவர்களையும் தேடினர். இவானின் மாமன் ஒருவர் சிக்கினார். அவரைக் கொன்று, செஞ்சதுக்கத்தில் தொங்க விட்டனர். கோபம் அடங்காத கூட்டம், கிழவியையும் மற்றவர்களையும் தேடி, இவான் முன்பாகவே வந்து நின்று கூப்பாடு போட்டது. ''கிழவியை வரச்சொல்லுங்கள்!''

'என்னது... எனக்கே கட்டளையிட்டு, என்னையே அவமதிக்கிறீர்களா?' இவான் வீறுகொண்டு வீரர்களைக் கூட்டத்தின் மீது ஏவினார். ரத்தம். அபயக்குரல்கள். சில பிணங்கள். கிழவிக்கு ஆபத்தில்லை.

இப்படி மங்களகரமாக தீ விபத்துடன் ஆரம்பமான நான்காம் இவானின் ஆட்சியில், அவருக்கு ஆலோசனை வழங்க அனுபவமுள்ள, நம்பிக்கையான மூவர் குழு ஒன்று இருந்தது. அவர்களது சொற்களைச் சற்றே காதில் வாங்கிய இவான், வறுமைக்கு வாழ்க்கைப்பட்டிருந்த பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினார். தீயணைப்பு முன்னேற்பாடுகளைச் செய்தார். தேவாலயங்களைச் சீரமைத்தார். விசுவாசமற்ற போயர்களையும் கவர்னர்களையும் கட்டம் கட்டிக் கழுத்தறுத்தார். வஞ்சம் வைத்து நெஞ்சம் பிளந்தார். கொலையுதிர் காலம் தொடர்ந்தது.



**இவானும் சூனியக்காரக் கிழவியும்**

ஏராளமான ஆள்களைச் சேர்த்து ராணுவத்தை விரிவுபடுத்தினார். கி.பி. 1552-ல் காஸன் என்ற இஸ்லாமிய நகரத்தின் மீது படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது. நாற்பது நாள்கள் நடந்த கடும்போரில் காஸன், இவானிடம் வீழ்ந்தது. 'இஸ்லாமியர்கள் மீது கிறிஸ்தவர்கள் நடத்திய கொடூரப்போர்' என்றே இதனை வரலாற்றாளர்கள் விவரிக்கின்றனர். வெற்றிக்குப் பிறகு ரஷ்யப் படைகள் வெறியாட்டம் போட்டன. போரிலும் அதற்குப் பிறகான வன்முறையிலும் கொல்லப்பட்ட + காணாமல் போன காஸன் தரப்பு எண்ணிக்கை சுமார் 65ஆயிரம். கைதானவர்கள் சுமார் 1,90,000 பேர். அந்நகரத்தின் இளம்பெண்கள், சிறுமிகளை எல்லாம் பரிசுப்பொருள்களாகக் கைப்பற்றிக்கொண்டு மாஸ்கோ திரும்பினார் இவான்.

காஸன் வெற்றி, மங்கோலிய தத்தார்களுக்கு எதிரான ரஷ்யப் பேரரசர் நான்காம் இவானின் முதல் வெற்றி. முழு உத்வேகத்துடன் அடுத்தடுத்த படையெடுப்புகளை நிகழ்த்தினார் இவான். ரஷ்யர்களின் ராட்சஷத் தாக்குதலில் அஸ்ட்ராகான் ராஜ்ஜியம் அலறியது. சைபீரிய இனக்குழுக்கள்

சரிந்தன. பின்லாந்தின் பாகன்கள் பின்வாங்கினர். துருக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ரஷ்யப் பேரரசின் எல்லை, எல்லைகள் தாண்டி விரிந்தது. இப்படிப் பல்வேறு இன, மத, மொழி மக்கள் புதிதாக இவானின் அதிகாரத்தின் கீழ். அவர்களைத் தனது பேரரசின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள இவான் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதித்தார். 'கிறிஸ்துவர்களாக மதம் மாற வேண்டும்.' சம்மதித்து அடிபணிந்தவர்களுக்கு அரசாங்க வேலை உள்ளிட்ட சலுகைகள் கிட்டின. சகலரையும் உள்ளடக்கிய புனித ரஷ்யப் பேரரசு உருவாகியது. உலகின் கண்கள் மாஸ்கோவை சற்றே அச்சத்துடன் உற்று நோக்கின.



**காஸன் போர்**

இந்தப் போர்களுக்கு மத்தியில் பேரரசருக்குத் திடீரென உடல்நலம் குன்றியது (கி.பி. 1553). கடும் காய்ச்சல். படுத்த படுக்கை. தன் நம்பிக்கைக்குரிய இளவரசர்களை, போயர்களை அழைத்தார். ''என் மகனும் இளவரசனுமாகிய டிமிட்ரியையே அடுத்த பேரரசனாக அரியணை ஏற்றுவோம் எனச் சத்தியம் செய்து கொடுங்கள்'' என்று கேட்டார். டிமிட்ரி அப்போது கைக்குழந்தை. 'இவான் போய்ச் சேர்ந்துவிடுவார்' என்று அதீத

நம்பிக்கையில் பலரும் அதைப் புறக்கணித்தனர். ஆனால், காய்ச்சல்தான் போய்ச் சேர்ந்தது. கம்பீரமாக எழுந்து உட்கார்ந்தார் பேரரசர். சத்தியம் செய்யாதவர்களையெல்லாம் தேடிப்பிடித்துத் தீர்த்துக் கட்டினார்.

ஆனாலும், டிமிட்ரிக்குக் கொடுத்து வைக்கவில்லை. படகுப் பயணம் ஒன்றில் வேலைக்காரப் பெண் தவறவிட, நீரில் மூழ்கி குழந்தை இறந்துபோனது. அதற்குப் பின்னும் இரண்டு ஆண் குழந்தைகளை (இவானோவிச், பியோடோர்) பெற்றுக் கொடுத்த புண்ணியவதி அனாஸ்டாஸியா, கி.பி. 1560-ல் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். இவான் நிலைகுலைந்தார். தன் காதல் பேரரசியின் இழப்பை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளை விரும்பாத போயர்களே விஷம் வைத்துக் கொன்றுவிட்டதாக மனதார நம்பினார். அதற்கு ஆதாரோ, ஆதாரமோ இல்லையென்றாலும், அவரது தாய்க்கு நேர்ந்த மரணம் மனதில் நிழலாடியது. மனநலம் பாதிக்கப்பட்டு உக்கிரமானார். தரையில் புரண்டு அழுதார். கிடைத்ததை எல்லாம் போட்டுடைத்தார். தன் தலையாலேயே முட்டி பொருள்களைச் சேதப்படுத்தினார். வில்லன் இவான், வெறிகொண்ட இவானாக மாறியது, காதல் மனைவியின் இறப்புக்குப் பிறகுதான்.

காஸன் மற்றும் பிற போர்களில் கிடைத்த வெற்றிகளின் அடையாளமாக, மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாபெரும் தேவாலயம் ஒன்றைக் கட்டியெழுப்பச் சொன்னார் இவான். செயின்ட் பஸில் தேவாலயம் 1561–ல் வானுயர்ந்து நின்றது. கண் படும் அழகுடன் மிளிர்ந்தது. அதைக் கட்டிய கட்டடக்கலை நிபுணரை வரவழைத்தார் இவான். பெரும் பரிசை எதிர்பார்த்து நின்றவர், இவானிடமிருந்து உதிர்ந்த உத்தரவால் விதிர்விதிர்த்துப் போனார். ‘‘இதேபோல் ஓர் அற்புதமான தேவாலயம் உலகில் வேறெங்குமே உருவாகிவிடக்கூடாது. இவனது கண்களைத் தோண்டி எடுங்கள்!’’

கி.பி. 1564. ‘போயர்களும் டூமாவும்தான் தனது அதிகாரத்தை மட்டுப்படுத்துகிறார்கள். பெரும் தலைவலியாக இருக்கிறார்கள்’ எனக்

கொதித்தார் இவான். 'பேரரசு எங்கும் பரவிக் கிடக்கும் போயர்களைக் கூண்டோடுப் பரலோகம் அனுப்பிவிட்டால் டூமா டுமீல் ஆகிவிடும்' எனத் திட்டமிட்டார். பக்கா ஸ்கிரிப்ட் உடன் ரியாலிட்டி ஷோ ஒன்றை அரங்கேற்றினார். தனது உடைமைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மாஸ்கோவை விட்டு ரகசியமாக வெளியேறினார் இவான்.

வெளியே ஓரிடத்தில் தங்கியபடி மாஸ்கோவுக்கு இரண்டு கடிதங்களை அனுப்பினார். அதில் ஒன்று, போயர்களின் ஊழல்களையும், அவர்களின் குற்றங்களையும் துரோகங்களையும் பட்டியலிட்டது. 'போயர்கள் முற்றிலும் ஒதுங்கினால் மட்டுமே நான் மீண்டும் மாஸ்கோவுக்குத் திரும்புவேன். முழு அதிகாரத்துடன் ஆட்சியைத் தொடர்வேன்' என்று அந்தக் கடிதம் முழக்கமிட்டது. 'மக்களால் நான், மக்களுக்காக நான்!' என்று இரண்டாவது கடிதம் மக்கள் நல மகுடி வாசித்தது. 'பேரரசின் நலன் கருதி, மக்கள் இதற்காகத் தெருவில் இறங்கிப் போராட வேண்டும்' என்று உசுப்பிவிட்டது.



ஆப்ரிச்நிகி படைவீரன்

நம்பிய மக்கள், பேரரசருக்காக வெம்பி, தெம்புடன் தெருவில் இறங்கிப் போராடினார்கள். 'பேரரசர் நாடு திரும்ப வேண்டும். போயர்கள் ஒழிக! டூமா - டௌன் டௌன்!' ஒரு மாதம் பிகு பண்ணிவிட்டு, நல்லதொரு நாளில் கிரெம்லினுக்குள் மீண்டும் புகுந்தார் இவான். கொடுங்கோலனாக. சர்வாதிகாரியாக. வில்லாதி வில்லனாக. 'இனி எந்தக் கேள்வியும் இன்றி பகைவர்களைப் பந்தாடுவேன். எதிரிகளை எரிப்பேன். துரோகிகளைத் துவம்சம் செய்வேன். நானே ஜெகஜ்ஜால ஜார்! சர்வ அதிகாரமும் எனதே!'

அதன்பின் முதல் வேலையாக *Oprichniki* என்ற பெயரில் ரகசியக் காவல் படை ஒன்றை உருவாக்கினார் இவான். முரட்டு மூடர்கள், மூர்க்கமான கிரிமினல்களால் ஆன வெறியேறிய படை அது. வீரர்கள் ஒவ்வொருவரும் இவானிடம் தனிப்பட்ட முறையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டு படையில் சேர்ந்தனர். கருப்புச்சீருடையில் கருப்புக் குதிரைகளில் ஆப்ரிச்நிகிகள் வலம் வந்தாலே சகலரும் நடுநடுங்கினர். அவர்கள் கையில் நாயின் மண்டையும் துடைப்பமும். நாய் போன்ற எதிரிகளைத் துடைப்பத்தால் பெருக்கித் தள்ளுவதே படையின் உயரிய நோக்கம்.

ஆப்ரிச்நிகிகளுடன் இணைந்து இவான் ஆடிய ஆட்டம், குருதி கொப்பளிக்கும் ஓர் அத்தியாயம்.

**(அடுத்த இதழிலும் இவானே வருவார்...)**

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 5

முகில், படம்: பா.காளிமுத்து

# கிறுக்கு ராஜாக்களின் கதை!

5 முகில்

### செம்பனியான உறைபனி!

சோவியத் ரஷ்யாவின் தன்னிகரற்றத் தலைவரான ஜோசப் ஸ்டாலின், தன் மனம் கவர்ந்த முன்மாதிரி நாயகர்களாகச் சிலரைக் குறிப்பிட்டிருக்கிறார். அதில் ஒருவர் முதலாம் ஜார் மன்னரான நான்காம் இவான். ஆனால், 'Ivan – The Terrible' என்பதே அன்னாருக்கு வரலாற்றில் நிலைத்த பெயர். ஏன் என்பது வாசித்தால் புரியும்.

என்றைக்கும் சாமியார்களையும் அரசியலையும் பிரிக்க முடியாதல்லவா! அப்படி அன்றைக்கும் இருந்தார்கள். ரஷ்யப் பேரரசில் தனக்கு எதிராக மதகுருக்கள் செயல்படுகிறார்கள் எனப் பேரரசருக்குச் சந்தேகம். அவர்களை எல்லாம் கிருபையுடன் வாழ்விலிருந்து விடுதலை கொடுத்து ரட்சிக்க விரும்பினார் இவான்.

தேவாலயம். பிரார்த்தனை நடந்து கொண்டிருக்கும். ரகசியக் காவல் படையினரான ஆப்ரிச்நிகிகள் தடதடவென உள்ளே நுழைவார்கள். கண்மூடித்தனமான தாக்குதல். மதகுருவின் ரத்தத்தால் பலிபீடம் பரிசுத்தமாக்கப்படும். அல்லது, கடத்தப்பட்ட மதகுருவின் உயிருக்குப் பேரரசரே விடுதலை அளிப்பார்.

பேரரசருக்கு வேண்டாத போயர்களுக்கும் அதேநிலைதான். அவர்கள் எந்தப் பொந்தில் பதுங்கியிருந்தாலும், ஆப்ரிச்நிகிகள் அநாயசமாகக் கண்டுபிடித்து, வதைத்துக் கொன்றனர். செத்த பிறகும் அவன் நரகத்துக்கே செல்ல வேண்டும் என்பது பேரரசரின் ஆசை. கொல்லப்பட்டவனுக்கு

வேண்டிய யாராவது, இறந்தவனுடைய ஆன்மா பரலோகத்தை அடைய பிரார்த்தனை செய்துவிட்டால்? கொல்லப்பட்டனுக்குத் துணையாக அவனுடைய குடும்பத்தினரை, உறவினர்களை, நண்பர்களை எல்லாம் சேர்த்தே அனுப்பி வைத்தனர்.

**லிவோனியப் போரில்...**



'தான்' என்ற அகங்காரம் உச்சமடைந்தபோது, இவான் தன்னை ராஜ்ஜியத்தின் கடவுளாக அறிவித்துக்கொண்டு, புதியதொரு வழிபாட்டு மரபை உருவாக்கினார். அவரே மடாதிபதி! அவருக்கு விசுவாசமான படையினரே மதகுருக்கள்! அதற்கான மதச்சடங்குகளையும் உருவாக்கினார். கம்பீர உடையணிந்து வழிபாட்டுக் கூடத்தில் பிரசன்னமாவார் இவான். வீரர்களின் கூட்டம் ஆர்ப்பரிக்கும். பலிபீடத்தின் முன் மண்டியிடுவார். மடாரென தலையைத் தரையில் மோதி, பாவ மன்னிப்பு கேட்டுக் கதறுவார். முன் நெற்றியில் ரத்தம் கசிய, எழுந்து நிற்பார். பாவங்கள் கரைந்துவிட்டதால், புதிய பாவச்செயல்களுக்கான கணக்கு ஆரம்பமாகும்.

ஆண் கைதிகளை இழுத்து வருவார்கள். இவான் கையிலிருக்கும் சூடேற்றிய கூர்மையான கம்பி, அவர்களின் நெஞ்சில் நர்த்தனம் புரியும். அந்தக் கதறலே இவானுக்கு மெல்லிசையாக, அவர் தன் பிரசங்கத்தைத் தொடங்குவார். அரங்கம் அதிரப் பாடுவார். மிதமிஞ்சிய போதை கரைபுரண்டோட, பெண்கள் இழுத்து வரப்படுவர். வேறெதற்கு? காமமே கடவுளை அடைய கதகதப்பான வழி என்பதும் காலங்காலமாக நம்பப்படுவதுதானே. ஆபாவாணன் அன்றே ரஷ்யாவில் பிறந்திருந்தால் 'ராத்திரி நேரத்து பூஜையில்... ரகசிய தரிசன ஆசையில்...' என்று இவானுக்காக எழுதியிருக்கக் கூடும். வேறென்ன, ஹ்ஹா... ஹ்ஹா... தினம் ஆராதனை! ஹ்ஹா... ஹ்ஹா... அதில் சுகவேதனை!

ஒருமுறை போயர் ஒருவருக்கு இவான் குரூர மரண தண்டனை விதித்தார். ''அந்தப் பீப்பாயில் வெடிமருந்தை நிரப்புங்கள். அதை அவனது உடம்பில் கட்டி வெடிக்க வையுங்கள்.'' அந்த உடல் சில்லு சில்லாகச் சிதறி விழுந்தது. ஆப்ரிச்நிகிகளுக்குத் துப்பாக்கிச் சுட்டுப் பழகுவதற்கு ஏதாவது இலக்கு வேண்டுமல்லவா. ''வயலில் வேலை செய்யும் பெண்களை இழுத்து வாருங்கள். துணிகளை உருவிக் கட்டிப்போடுங்கள். நீ முதல் பெண்ணின் கழுத்தில் சுடு. அடுத்தவன் இரண்டாவதுப் பெண்ணின் நெஞ்சில் சுடு. நீ மூன்றாவதாக நிற்பவளது...''

சந்தேகத்தால், மிக நெருக்கமானவர்களைக்கூட துளியும் வருத்தமின்றித் தீர்த்துக் கட்டியிருக்கிறார் இவான். பேரரசின் கருவூல அதிகாரி நிகிடா ஃபனிகோவ், நீர் கொதிக்கும் கொப்பரையில் வேக வைத்துக் கொல்லப்பட்டார். அரசவை உறுப்பினரான விஸ்கோவாடி, தூக்கில் இடப்பட்டார். பின் அவரது உடல் சில நூறு துண்டுகளாக நறுக்கப்பட்டது.

ஜெரோம் ஹார்ஸே, பிரிட்டிஷ்காரர். ரஷ்ய ராஜ்ஜியத்துக்கு, எலிசபெத் மகாராணி அனுப்பிய ராஜ தூதுவர். இவானின் வெறியாட்டங்களை நேரில் கண்டு பதிவுசெய்த ஐரோப்பியர். போரிஸ் டெலுபா என்ற எதிரி


இளவரசனை, இவான் எப்படிக் கொன்றார் என்ற ஜெரோமின் பதிவு குலைநடுங்க வைப்பது.

‘இளவரசர் போரிஸ் இழுத்துவரப்பட்டார். கூர்மையான நீண்ட மரக்கம்பு தரையில் நிற்க வைக்கப்பட்டிருந்தது. போரிஸை அதில் சொருகினார்கள். ஆசனவாயில் புகுந்த கம்பு, கழுத்தைக் கிழித்து வெளியே வந்தது. ஆனால், போரிஸின் உயிர் உடனே வெளியேறவில்லை. அவரது தாயை அழைத்து வந்தார்கள். மகனைக் கண்டு அவள் கதறினாள். துப்பாக்கி ஏந்திய நூறு ஆப்ரிச்நிகிகள் அவளைச் சூழ்ந்துநின்று சுட ஆரம்பித்தனர். அந்த ஒற்றை உடலை, கணக்கில்லாமல் தோட்டாக்கள் துளைத்தன. இந்தக் கொடுமையைப் பார்த்தபடி கிடந்த போரிஸின் உடலிலிருந்து, உயிர் சொட்டுச் சொட்டாக வெளியேற 15 மணி நேரம் பிடித்தது.’

இவான் தனித்தனியாக பல்வேறு காலங்களில் மேற்கொண்ட மேற்படி கொடுமைகளை எல்லாம், ‘காம்போ பேக்’ போல ஒரே இடத்தில் ஒருமுறை நிகழ்த்தினார். நோவ்கோரோட். மாஸ்கோவின் வடமேற்கில் ரஷ்யப் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்த நகரம். அதற்கு மேற்கில்தான் லிவோனியா (இன்றைய எஸ்டோனியாவும் லாத்வியாவும் இணைந்த பகுதி) இருந்தது. லிவோனியா மீதான ஆக்கிரமிப்பு முயற்சியை கி.பி. 1558-ல் இவான் மேற்கொண்டார். ஆனால், அதன் அண்டை நாடுகளான ஸ்வீடன், டென்மார்க், போலந்து, லித்துவேனியா போன்றவை இணைந்து ரஷ்யப் படைகளுக்கு பெப்பே காட்டின. போர் இழுத்துக்கொண்டே செல்ல... இவானுக்குள் சந்தேகப் புயல் சுழன்றாடியது.

ஒருவேளை நோவ்கோரோட் போயர்களும் மக்களும் எதிரிகளுடன் கைகோத்து நம்மைக் கவிழ்க்க நினைக்கிறார்களோ? சந்தேகமும் உயிர்க்கொல்லி நோய்தான். அடுத்தவர்களின் உயிரைக் கொல்லும் நோய். ஆப்ரிச்நிகிகள், நோவ்கோரோடுக்குள் புகுந்து வேட்டையாட ஆரம்பித்தார்கள் (கி.பி. 1570). தினமும் ஆயிரக்கணக்கான கொலைகள். ‘குடும்பத்தோடு எரி. வோல்கோவ் நதியின் உறைபனி நீரில் கும்பலாகத்

*தள்ளிக் கொல். ஆண்மையை நீக்கு. வன்புணர். வரிசையாக நிற்க வைத்துக் தலைகளை வெட்டு...' ஐந்து வாரங்கள் தொடர்ந்த படுகொலையால் உறைபனி செம்பனியானது. பலி எண்ணிக்கை 30 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை இருக்கலாம் என்கிறது ஒரு சரித்திரக் குறிப்பு. இதையெல்லாம் தன் மகன், இளவரசன் இவானோவிச்சைப் பார்த்து ரசிக்கச் சொன்னார் இவான்.*



**தாக்கப்பட்ட இளவரசன்**

*அங்கிருந்து மாஸ்கோவுக்குத் திரும்பிய பின், அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. 'யார் எப்போது நம்மைக் கொல்வார்களோ' என்ற பயம் துரத்தியது. கிரெம்லினிலிருந்து வெளியேறி, மாஸ்கோவுக்கு வெளியே அலெக்ஸாண்ட்ரோவ்ஸ்கயா கோட்டையில் சில காலம் பதுங்கியிருந்தார். 300 ஆப்ரிச்நிகிகள் எப்போதும் பாதுகாப்புப் பணியில் இருந்தனர்.*

*லிவோனியா போர் கி.பி. 1583 வரை இழுத்தது. இறுதியில் ரஷ்யப் படைகளுக்குத் தோல்வியையே பரிசளித்தது. மண்ணாசையால்*

மடத்தனமாகத் தொடர்ந்து போர்களை நடத்திக் கொண்டிருந்த இவான், வீழ்ச்சியைச் சந்தித்தார். பேரரசின் பொருளாதாரமும் பொசுங்கிப் போனது. இவானின் உடலும் உள்ளமும் நோய்களின் பிணைக்கைதியாகின. முதல் மனைவி அனாஸ்டாஸியாவை இழந்த சோகத்துக்குப் பின் பேரரசர், எட்டே எட்டு திருமணங்கள் மட்டும் செய்துகொண்டார். அந்த மனைவிகளில் சிலரை விலக்கி வைத்தார். சிலரது மரணத்துக்குக் காரணமாக இருந்தார். ஒருத்தியை அடித்துத் துரத்தினார்.

இவானுக்குப் பிறகான ராஜ வாரிசாக, இளவரசர் இவான் இவானோவிச் (அனாஸ்டாஸியாவின் இரண்டாவது மகன்) அறிவிக்கப்பட்டிருந்தார். இளவரசரின் முதல் இரு மனைவிகளையும், 'குழந்தையில்லை' என்று குறைகூறி கன்னிமடத்துக்குத் துரத்திவிட்டார் இவான். மூன்றாவது மனைவி யெலெனா ஸெரிமெட்டாவா கர்ப்பமாக இருந்தாள். அன்றைக்கு மெல்லிய உடை அணிந்திருந்த யெலெனாவைக் கண்டதும் மாமனார் இவானுக்கு ஆத்திரம் பொங்கியது. அவளைக் கண்மூடித்தனமாக அடித்தார். அவளது கதறல் கேட்டு இளவரசன் இவானோவிச் அங்கே வந்தார். தகப்பனின் தகாத செயலைக் கண்டு கொதித்தெழுந்து எதிர்த்தார். தன்னிலை இழந்தார் இவான். தன் செங்கோலால் மகனுடைய மண்டையில் ஒரே அடி! தலையில் ரத்தம் பீறிட இளவரசர் விழுந்தார். 'ஐயோ… நானே என் மகனைக் கொன்று விட்டேனே!' எனப் பேரரசர் கதறினார்.

யெலெனாவின் கர்ப்பம் கலைந்திருந்தது. மகன் படுத்த படுக்கையானான். காரணகர்த்தாவான இவான், ஏதாவது அற்புதம் நிகழ்த்தச் சொல்லி, கண்ணீருடன் ஆண்டவரிடம் ஜெபித்துக் கொண்டிருந்தார். ஐந்தாவது நாளில் இளவரசர் இறந்துபோனார். (கி.பி. 1581, நவம்பர் 19) மகனுடைய சவப்பெட்டி மீது தன் தலையால் மோதிக்கொண்டே இருந்தார் இவான்.



இவானின் இறுதி நிமிடங்கள்

பால்வினை நோய்கள் உள்ளிட்ட பல நோய்கள் பேரரசர் உடல் மீது போர் தொடுத்தன. தோல் சுருங்கியது. உடலில் தீரா துர்நாற்றம். அவரால் கொல்லப்பட்டவர்களது ஆவி, அவரைச் சூழ்ந்து மிரட்டுவது போன்ற கனவுகளால் தூக்கம் தொலைத்தார். ‘இத்தனை பேரைக் கொன்று விட்டேனே’ எனப் பாவ மன்னிப்புப் பிரார்த்தனைகளைத் தொடர்ந்தார். விஷத்தன்மை கொண்ட பாதரசத்தால் செய்யப்பட்ட மருந்துகளைச் சாப்பிட ஆரம்பித்தார். அவருக்கு மரணம் தேவைப் பட்டது. ஆகவே ஜோதிடர்களை அழைத்து நாள் குறித்தார்.

1584, மார்ச் 18. புதன்கிழமை.

அன்றைக்கு உற்சாகமாகவே விடிந்தது. மரணத்துக்காகப் பேரரசர் ஆவலுடன் காத்திருந்தார். எதுவும் நடப்பது போலில்லை. ஜோதிடர்களை எச்சரித்து செய்தி அனுப்பினார். ‘இன்னும் இன்றைய நாள் முடியவில்லை’ என்று அவர்கள் பதில் அனுப்பினார்கள்.

குளித்துவிட்டு வந்து சதுரங்கம் ஆட அமர்ந்தார் நான்காம் இவான். சிப்பாய் ஒன்றை வெட்ட நினைத்தபோது, அவரது உடல் வெட்டியது. வாய் கோணியது. மயங்கிச் சரிந்தார். சதுரங்கப் பலகையில் ராஜா வெட்டப்படவில்லை. நான்காம் இவான், காலத்திடம் வீழ்ந்து கிடந்தார்.

(வருவார்கள்…)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 6**

**முகில், படம்: பா.காளிமுத்து**




### *1,171 மொரோக்கோ இரவுகள்!*

*வேகமாக ஓடிக் கொண்டிருந்த குதிரை திடீரெனத் தடுமாற, பிடி நழுவிக் கீழே விழுந்தார் அல் ரஷீத். மொரோக்கோ வின் சுல்தான். பதினேழாம் நூற்றாண்டில் மொரோக்கோ, ஒரு ராஜ்ஜியமாக விரிவடையத் தொடங்கியது இவரது காலத்தில்தான். அந்தக் குதிரையை உயிருடன் விட்டார்களா என்று செய்தி இல்லை. அல் ரஷீத் இறந்து போனார். அடுத்து அரியணை ஏறியவர் அல் ரஷீத்தின் ஒன்றுவிட்ட சகோதரர், மௌலே இஸ்மாயில் இபின் ஷாரிஃப். கி.பி 1672-ம் ஆண்டு... தனது 26-வது வயதில் Alaouite பரம்பரையிலிருந்து சுல்தானாகப் பதவியேற்ற இஸ்மாயிலை, கி.பி 1727-ல் மரணம் வந்து அழைத்துச் செல்லும் வரை யாராலும் அசைக்க முடியவில்லை.*

*இங்கே சில கொசுறுக் குறிப்புகள்... Alaouite பரம்பரையைத் தோற்று வித்தது இஸ்மாயிலின் தந்தை, ஷாரிஃப் இபின் அலி. இதே பரம்பரை யினரே இன்றைக்கும் மொரோக்கோவை ஆள்கிறார்கள். தற்போதைய மன்னர் ஆறாம் முகம்மது.*

பெருந்தலை ஒன்று மண்டையைப் போட்ட பின், அடுத்த தலைவர் தலையெடுக்க பல தலைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்பதுதானே அரசியல் தலைவிதி. அதைத்தான் இஸ்மாயிலும் செய்தார். பிளவுபட்டுக்கிடந்த பழங்குடி தலைவர்களையும், சிற்றரசர்களையும் படைகொண்டு அதட்டி ஒன்றிணைத்தார். அப்படி இஸ்மாயிலுக்கு அடிபணிபவர்கள், தங்கள் மகளை அல்லது மகள்களை சுல்தானின் அந்தப்புரத்துக்கு அர்ப்பணித்துவிட வேண்டும்.

சுல்தான் இஸ்மாயில்



மாராக்கெஷ் என்ற நகரத்தின் மக்கள் மட்டும் இஸ்மாயிலை சுல்தானாக ஏற்கவில்லை. அவர்கள் அகமது என்ற இளவரசரை ஆதரித்தனர். இஸ்மாயில் மாராக்கெஷ் மீது படையெடுப்பது… அகமது தப்பிப்பது…

மீண்டும் அகமது வந்து மாராக்கெஷ்ஷைக் கைப்பற்றுவது... இப்படியாகக் கண்ணாமூச்சி நடந்தது. கி.பி 1687-ல் அகமது கொல்லப்பட்டார்.

'நான் முகம்மதுவின் வழித்தோன்றல். என் முன் நின்று என் முகத்தைப் பார்த்துப் பேசும் அருகதையோ, அதிகாரமோ இங்கே யாருக்கும் கிடையாது' என்று பிரகடனப்படுத்தியிருந்தார் சுல்தான் இஸ்மாயில். மீறி, சுல்தானை நிமிர்ந்து பார்த்துப் பேசியவர்களுக்கெல்லாம் குழி வெட்டப்பட்டது. தன் ஆட்சியின் ஆரம்ப நாள்களிலேயே 400 எதிரிகளின் தலையை அறுத்து ஃபெஸ் நகரக் கோட்டைச் சுவரில் தொங்கவிட்டார். பயத்தை ஆழமாக விதைத்து, அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ளும் சர்வாதிகார உத்தி.

அன்றைக்கு சுல்தானின் உடை வெள்ளையாகவோ, பச்சையாகவோ இருந்தால் சேதாரம் குறைவாக இருக்கும் என்று நம்பலாம். மஞ்சள் உடை என்றால் அவ்வளவுதான்... தனக்காகக் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தும் அடிமையைக்கூடக் காரணமின்றி வெட்டுவார். இப்படி தம் 56 வருட ஆட்சிக் காலத்தில், இஸ்மாயில் கொன்று குவித்தவர்களது உத்தேச எண்ணிக்கை 30 ஆயிரம் இருக்கலாம்.

இன்னொரு பழக்கமும் அவருக்கு இருந்தது. அவர் நினைக்கும்போதெல்லாம் குர்-ஆன் வாசிப்பார்... குதிரையில் செல்லும்போதுகூட! அதற்கெனவே ஓர் அடிமை, அவர் குதிரையில் அதிவேகமாகச் செல்லும்போதும் வாசிப்பதற்கேற்ப குர்-ஆனைப் பிடித்துக்கொண்டு அதே வேகத்தில் வர வேண்டும் என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு. அது எப்படிச் சாத்தியம் என்பது உங்கள் கற்பனைக்கு.

சரி... சுல்தானின் அந்தப்புரத்துக்குள் நுழைவதற்கு முன்பு, அவரது வீர தீர சூர பராக்கிரமங்கள் சிலவற்றையும் பார்த்துவிடலாம்.

சுல்தான் ஆவதற்கு முன்பு, மொரோக்கோவின் வடக்குப் பகுதியிலுள்ள மெக்னெஸ் நகரத்தின் வைஸ்ராயாக இருந்தார் இஸ்மாயில். அந்நகரத்தின்

மீதுள்ள பாசத்தினால், சுல்தான் ஆனபிறகு தனது தலைநகரத்தை ஃபெஸ்ஸிலிருந்து மெக்னெஸுக்கு மாற்றினார். புதிய அலங்கார வளைவுகள், பிரமாண்ட மாளிகைகள், மசூதிகள், தோட்டங்கள் என்று மெக்னெஸ் புதுப்பொலிவு பெற்றது. போர்ச்சுக்கீசிய அடிமை ஒருவன், அலங்கார வளைவு ஒன்றை வடிவமைத்திருந்தான். ''இதைவிட அழகாக உன்னால் கட்ட இயலுமா?'' என்று இஸ்மாயில் கேட்க, ''முடியும்'' என்றான் விவரமின்றி. ''பிறகு ஏன் கட்டவில்லை?'' என்று சுல்தானின் நாக்கு கேட்கவில்லை. வாள் கேட்டது.

மொரோக்கோவில் ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்புகள் அதிகம் இருந்தன. அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்கி ஐரோப்பியர்களை ஓட விட்டார் இஸ்மாயில். கி.பி 1681-ல் ஸ்பெயினின் ஆக்கிரமிப்பிலிருந்த மொரோக்கோவின் முக்கியத் துறைமுக நகரமான அல்-மமூராவை, இஸ்மாயிலின் படைகள் கைப்பற்றின. ஸ்பானியர்களின் சொத்துகள், ஆயுதங்கள் சூறையாடப்பட்டன. பிடிபட்ட ஸ்பானியர்கள் (வீரர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள்) அனைவருமே அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். இதேபோல ஸ்பெயின் ஆக்கிரமித்திருந்த லாராசே துறைமுகத்தையும், பிரிட்டன் பிடுங்கி வைத்திருந்த டேன்ஜியர் துறைமுகத்தையும் மீட்டெடுத்தது இஸ்மாயிலின் பிற சாதனைகள்.

1679,1682,1695 ஆண்டுகளில் சுல்தான்,துருக்கியர்களுடன் மோதினார். ஒவ்வொரு முறையும் துருக்கியப் படைகளுக்குப் பின்னடைவே. 'இஸ்மாயில் இருக்கும் வரை இங்கே எந்த ஆணியும் பிடுங்க முடியாது' என்று துருக்கியர்கள் தோல்வி முகத்துடன் திரும்பினர். இந்த யுத்த வெற்றிகளுக்கெல்லாம் காரணம், இஸ்மாயில் உருவாக்கியிருந்த சிறப்புக் கறுப்பர்கள் படை (சுமார் ஒன்றை லட்சம் வீரர்கள் கொண்டது) மற்றும் Jaysh al-Rifi என்ற பெர்பெர் இன முரட்டுப்படை. இந்தப் படைகளால், அன்று மொரோக்கோ வலிமையான ஆப்பிரிக்க ராஜ்ஜியமாக ஆட்டம்காட்டியது.



சுல்தானின் திருமணத் தூதை நிராகரிக்கும் பிரான்ஸ் இளவரசி

*எதிரியின் எதிரி நண்பன் அல்லவா? எதிரி ஸ்பெயினின் எதிரியான பிரான்ஸுடன் சுல்தான் நட்பு வளர்த்தார். பிரான்ஸ் அரசர் பதினான்காம் லூயியின் ஆணைப்படி, அந்நாட்டு தளபதிகள் மொரோக்கோவுக்கு வந்து ராணுவப் பயிற்சி கொடுத்தனர். அங்கிருந்து வல்லுநர்கள் இங்கே வந்து மெக்னெஸ் நகரை நிர்மாணிக்க நிறையவே உதவினர்.*

*கி.பி 1682-ல் சுல்தான் இஸ்மாயில், தனது தூதராக முகம்மது தமீமை பிரான்ஸுக்கு அனுப்பினார். அங்கே பிரான்ஸ் அரசரின் விருந்தோம்பலில் திளைத்த தமீம், மறக்காமல் சுல்தானின் ஆசையையும் நேரம் பார்த்து வெளிப்படுத்தினார். 'உங்க மகள் இளவரசி மேரி அன்னாவை, சுல்தான் கட்டிக்க விரும்புறாரு.' இளவரசி புத்திசாலியாகத்தான் இருக்க வேண்டும். தலையை இடமும் வலமுமாகப் பலமாக அசைத்து 'விருப்பமில்லை'*

என்றாள். சுல்தானுக்கு பிரான்ஸ் கிளியிடம் பிரெஞ்சு கிஸ் வாங்க யோகமில்லை.

அதற்காக வருத்தப்பட்டு 'உச்' கொட்ட வேண்டாம். அவருக்கு நான்கு மனைவிகள். இதுதவிர, அவரது அந்தப்புரத்திலிருந்த ஆசைநாயகிகளின் எண்ணிக்கை 500+. மொரோக்கோவின் அந்தப்புரம் சகல வசதிகள் கொண்ட சிறை. வேறு எவனாவது அந்தப்புரப் பெண் ஒருத்தியைக் கண்ணாரக் கண்டுவிட்டால் அவன் காலி. அதே நிலைதான் அந்தப்புரப் பெண்ணுக்கும். அவளது பற்கள் பிடுங்கப்படும்; அல்லது கொங்கைகள் துண்டிக்கப்படும்; அல்லது சுல்தானே கழுத்தை நெறித்துக் கதையை முடிப்பார். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு அந்தப்புரத்தில் வேலையில்லை. ஆனால், சுல்தானிடமிருந்து உயிர் தப்பி முப்பது வயதுக்கு மேல் விடுதலை பெறுவதே பெரும் பாக்கியம்தான்.

மனிதக் குல வரலாற்றிலேயே அதிக வாரிசுகளை உருவாக்கியவர் மங்கோலியப் பேரரசர் செங்கிஸ்கான். அவருக்கு 1,000 முதல் 2,000 வாரிசுகள் உண்டு. இதெல்லாம் அனுமானம். ஆனால், சுல்தான் இஸ்மாயிலின் விஷயத்தில் அது வரலாற்றுபூர்வமான உண்மை. 'இஸ்மாயிலுக்கும் அவருடைய மனைவிகள் + ஆசைநாயகிகளுக்கும் பிறந்த வாரிசுகளின் எண்ணிக்கை 888' என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு. 'ஆயிரத்துக்கும் மேல்' என்கிறார்கள் சில வரலாற்றாளர்கள். முக்கியமான ஆதாரம், இஸ்மாயிலின் ஆட்சிக்காலத்தில் பிரான்ஸின் தூதுவராக மொரோக்கோவுக்கு அடிக்கடி சென்று வந்த Dominique Busnot எழுதி வைத்துள்ள குறிப்புகள். 'கி.பி 1704 வாரிசு கணக்கெடுப்பின்படி, 57 வயது சுல்தானுக்கு 1,171 பிள்ளைகள்' என்று பதிவு செய்துள்ளார் டொமினிக். அதன்படி, 'உலகிலேயே அதிகம் பிள்ளைகள் பெற்ற தகப்பன் சுல்தான் இஸ்மாயில்' என்று கின்னஸ் சாதனையும் சென்ற நூற்றாண்டில் பதியப்பட்டிருக்கிறது. சுல்தான் தனக்குப் பிறந்த பெண் பிள்ளைகளை உயிரோடு விடவில்லை என்கிறது இன்னொரு குறிப்பு.



**இஸ்மாயிலின் நினைவிடம்**

ஒரே ஆளால் தன் வாழ்நாளில் 1,171 குழந்தைகளுக்குத் 'தகப்பர்' ஆக முடியுமா? நமக்கு வந்த அதே சந்தேகத்துடன், வியன்னா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் சிலர் ஆய்வில் இறங்கினர். அல்காரிதம், அல்ஜீப்ரா, இன்னபிற கணிதமுறைகளில் எல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்து 'வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது' என்றே அறிக்கை அளித்துள்ளனர்.

கூடவே சில கேள்விகளையும் முன்வைக்கிறார்கள். அந்தப்புரத்தில் உள்ள பெண்கள், மாதச்சுழற்சியில் கருத்தரிக்க வாய்ப்புள்ள நாள்களில் சுல்தானுடன் இணைந்திருக்க வேண்டும். எல்லா சமயத்திலும் அது நிகழ்ந்திருக்காது. அதைக் கருத்தில்கொண்டு, 'நிகழ்தகவு'ப்படி பார்த்தால், இத்தனைக் குழந்தைகளை உருவாக்க, சுல்தான் தொடர்ந்து 32 வருடங்கள் நாள் தவறாமல் உழைப்பைக் 'கொட்டியிருக்க' வேண்டும். அது சாத்தியமா? மேற்கொண்டு உற்பத்தியாகும் கேள்விகளைச் சேலம் சிவராஜ் வைத்தியருக்கு ஃபார்வேர்ட் செய்துவிட்டு, முடிவுரைக்குச் செல்வோம். வாழ்வாங்கு வாழ்ந்த இஸ்மாயில் தனது எண்பதாவது வயதில் வபாத் ஆனார். அதற்கு முன்பே தனக்கான நினைவிடத்தை இழைத்து இழைத்துக்

கட்டிவைத்துக்கொண்டார். அந்தக் கட்டுமானப் பணியில் ஒழுங்காக வேலை பார்க்கவில்லையென நூற்றுக்கணக்கான அடிமைகளின் உயிரைப் பிடுங்கினார் என்பது தனிக்கதை.

கடைசி விஷயம்... சுல்தான் தன் வாழ்வில் மனிதர்களைவிட பூனைகளை அதிகம் விரும்பினார். ஏகப்பட்ட பூனைகள் வளர்த்தார். நேரம் ஒதுக்கி அவற்றுக்குத் தானே இறைச்சியும் ஊட்டினார். மன்னிக்கவும். சுல்தானைப் பற்றி நல்லதாகச் சொல்லுமிடத்திலும் 'பூனைக்குட்டி' வெளியே வந்துவிடுகிறது. ஒருநாள் பூனை ஒன்று சுல்தான், ஊட்டிய இறைச்சியை வாங்காமல் அடம்பிடிக்க, அவருக்குக் கடும் கோபம். வீரர்களை அழைத்துப் பூனையைக் கைது செய்தார். 'எனக்கு அடிபணியாவிட்டால் என்ன தண்டனை என்று மக்கள் புரிந்துகொள்ளட்டும்' என்று சீறினார். அதன்படி நகரத்தின் நடுவே மக்கள் மத்தியில், அந்தப் பூனைக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

(வருவார்கள்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

## *கிறுக்கு ராஜாக்களின் கதை! - 7*

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை!

### *ரணகள ரனவலோனா!*

*மடகாஸ்கர். உலகின் நான்காவது பெரிய தீவு. ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள, இயற்கையின் சகல அழகும் கொட்டிக் கிடக்கும் திமிரெடுத்த தீவு. உலகில் வேறெங்குமே காண இயலாத அபூர்வத் தாவர வகைகளும், அரிய விலங்கினங்களும் இங்கே அதிகம். அதேபோலொரு அபூர்வப்பிறவியாக, அரிய குணங்கள் கொண்ட ராணியாக, 'இப்படியும் ஒருத்தி வாழ்ந்திருக்க முடியுமா' என்ற பதைபதைப்பைக் கிளப்பும் ஒருத்தி இந்த மடகாஸ்கரை ஆண்டு, அழுத்தமாகத் தன் முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்றிருக்கிறாள்.*

*('என்னது, கிறுக்கு ராஜாக்களின் கதையில் ராணியா' எனக் கேள்வி எழலாம். சிறு விளக்கம். தலைப்பிலுள்ள 'ராஜா' என்பது ஒரு குறியீடு. அதற்குள் ராஜா, ராணி தொடங்கி அறமற்ற ஆட்சியாளர்கள், சர்வதேச சர்வாதிகாரிகள், தற்கால தற்குறி அதிபர்கள் வரை சகலரும் அடக்கம்!)*

*கி.பி. 1869-ல்தான் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. அதற்கு முன்பெல்லாம் ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாக இந்தியாவை அடைய வேண்டும் என்றால், ஆப்பிரிக்கக் கண்டத்தை முழுமையாகச் சுற்றித்தான் வரவேண்டும். அப்படிச் சுற்றி வந்த ஐரோப்பியர்கள், பதினாறாம் நூற்றாண்டில் மடகாஸ்கரைக் கண்டுகொண்டனர். 'அட... ஓய்வெடுத்துச் செல்ல மிக அருமையான தீவு' என்று குதூகலித்தனர். பதினேழாம்*

நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்கள் இங்கே காலனி அமைக்க வந்தனர். பிரிட்டிஷாரும் மோப்பம் பிடித்து வந்து சேர்ந்தனர். மடகாஸ்கரில் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென் உரத்து ஒலிக்கத் தொடங்கியது.



ராணி ரனவலோனா

அண்ட்ரியெனாம்போய்னிமெரினா - என்னவென்று யோசிக்க வேண்டாம். கி.பி. 1787-ல் மடகாஸ்கரின் மன்னராகப் பொறுப்பேற்றவரின் திருநாமம். அங்கும் 'மெரினா'தான் பிரதானம். சமாதி உள்ள இடமல்ல. மன்னர் சார்ந்த இனத்தின் பெயர். பிளவுபட்டுக் கிடந்த தம் மெரினா இன மக்களை 'தர்ம யுத்தம்' நடத்தி ஒன்றாக்கி, மடகாஸ்கரில் மெரினா இனத்தின் ராஜ்ஜியத்தை உருவாக்கிய பிக்பாஸ் இவரே. அப்படி தர்மயுத்தம் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, இவரைக் கொல்ல பகைவர்கள் சதிவலை பின்னியிருந்தனர். அன்பரது விசுவாசி ஒருவர் உரிய நேரத்தில் தகவல் சொல்லிக் காப்பாற்றினார். பகைவர்களுக்குப் பால் ஊற்றப்பட்டது.

பின்னர், அன்பர் மன்னராகப் பதவியேற்ற பின், விசுவாசியை அழைத்தார். 'நான் இன்றைக்கு மன்னனாக இருப்பதற்கே இவன்தான் காரணம். இவனுக்கு ஆகப்பெரிய கௌரவத்தைத் தர வேண்டும்!' அவரது நெஞ்சம் விம்மியது. ''உன் மகளை நான் என் மகளாகத் தத்தெடுத்துக் கொள்கிறேன்.'' விசுவாசியின் கண்கள் பனித்தன.

விசுவாசியின் மகளுடைய இயற்பெயர், ரமவோ. மெரினா இனத்தைச் சேர்ந்தவளே. மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவளுக்கு மன்னரின் கனிவால் இளவரசியாகும் வாய்ப்பு கனிந்தது. அவளுக்கு 'ரனவலோனா' என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. மன்னர் அத்துடன் நிறுத்தவில்லை. மகளாக அறிவித்தவளை, உரிய வயதில் தன் மகன் இளவரசன் ரடாமாவுக்குத் திருமணம் செய்துவைத்து மருமகள் ஆக்கினார். இளவரசனுக்குப் பன்னிரண்டு பெண்டாட்டிகள். அதில் ரனவலோனாவே 'அதிகாரபூர்வ முதல் பெண்டாட்டி' என்று அறிவித்தார் அருமை மன்னர். அதாவது 'ரடாமாவுக்கும் ரனவலோனாவுக்கும் ஆண் குழந்தை பிறந்தால், அதுவே ரடாமாவுக்கு அடுத்த ராஜ வாரிசு' என்று அர்த்தம்.

என்ன காரணத்தாலோ, ரடாமாவுக்கு ரனவலோனா மேல், பிரியமோ, பியாரோ, பிரேமமோ பிறக்கவில்லை. ஆகவே அவர்களுக்குப் பிள்ளைகளும் பிறக்கவில்லை. 1810-ம் ஆண்டில் மன்னர் அண்ட்ரியெனாம் போய்னிமெரினா இறந்துபோனார். மடகாஸ்கரின் மன்னர் 'முதலாம் ரடாமா'வாக இளவரசர் பதவியேற்றார். அவர் அரியணையைத் தக்க வைத்துக்கொள்ள சில பல தலைகளைக் காவு கொடுக்க வேண்டியதிருந்தது. அதில் ரனவலோனாவுக்கு நெருக்கமானவர்களும் அடக்கம்.

'மடகாஸ்கரை முன்னேற்ற வேண்டும். அதற்கு ஐரோப்பியர்களின் உதவி தேவை' என்பதே ரடாமாவின் எண்ணமாக இருந்தது. பிரெஞ்சுக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் மடகாஸ்காரைத் தங்கள் காலனியாக வளைத்துப் போடும் வஞ்சக எண்ணத்துடன், ரடாமாவுக்கு ஆஃபர்களை அள்ளி வழங்கினர். அதில் ரடாமா, பிரிட்டிஷார் பக்கம்

சாய்ந்தார். அவர்களுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு கதவுகளைத் திறந்து விட்டார். மடகாஸ்கரில் பள்ளிகள் முளைத்தன. அவர்கள் மொழிக்கென்று எழுத்துரு உருவானது. கூடவே கிறிஸ்துவ மிஷினரிகளும் தேவாலயங்களும் பெருகின. மலகாஸி மொழி பேசும் மைந்தர்கள் மாற்று மதக் கடவுளை வணங்கிக்கொண்டு திரிவது ரனவலோனாவுக்குக் கடும் எரிச்சலைத் தந்தது. மலகாஸி மக்கள் தங்கள் தெய்வங்களை, கலாசாரத்தை, சடங்குகளை முற்றிலுமாகப் புறக்கணித்துவிடுவார்களோ என்று அஞ்சினாள். ஆனால், தன் கணவரே அதற்கு உறுதுணையாக இருக்கிறார் என்னும் நிஜமும் கசந்தது.

ராணி ரனவலோனா



*பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட மன்னர் முதலாம் ரடாமா, 1828, ஜூலை 27ல் இறந்து போனார். அவருக்கும் ரனவலோனாவுக்கும் மட்டுமல்ல, அவருக்கும் மற்ற எந்த மனைவிக்குமே வாரிசுகள் கிடையாது. ஆக, அவர்களது மரபுப்படி, ரடாமாவின் சகோதரி மகன் ரகோடோப் என்ற இளவரசனே அடுத்த மன்னராகப் பதவியேற்கத் தகுதியுடையவனாக இருந்தான். அவன் கிறிஸ்தவப் பள்ளியில் பாடம் பயின்றவன். தகுதியும் திறமையும் உடையவன். கிறிஸ்துவ மதத்தைத் தழுவியதால் அவனுக்கு ஐரோப்பியர்களின் ஆதரவு இருந்தது என்றும் ஒரு செய்தி உண்டு. அப்பேர்ப்பட்டவன் அரியணை ஏறுவதை, ராணி ரனவலோனா அவ்வளவு சீக்கிரம் அனுமதிப்பாளா என்ன? ரத்த ஆறு ஓடி ஓய்ந்த பிறகே அரியணை யாருக்கு என்பது முடிவுக்கு வரும் என்னும் பதற்றமான சூழ்நிலை. மன்னரோடு இறுதி நொடியில் இருந்த இரண்டு அதிகாரிகள், இறப்புச் செய்தியை வெளிப்படையாக அறிவிக்க முடியாமல் தவித்தனர். பிரேக்கிங் நியூஸைத் தவிர்த்தனர். ஆம், அப்போலோவில் மட்டுமல்ல... அன்றைக்கு அங்கேயும் தலைமை இறந்தபோது அதே நிலைதான்.*


*இருந்தாலும் ரனவலோனாவுக்குச் செய்தி கசிந்தது. மன்னர் இறந்ததைவிட, 'இனி நாம் மடகாஸ்கரின் ராணியாகத் தொடர முடியாது' என்பதே அவளுக்கு அதிகம் அதிர்ச்சி தந்தது.*

*'இளவரசன் ரகோடோப் நம்மைக் கொல்வதற்கு சதி செய்வான். அதிலிருந்து பிழைத்தால் மட்டும் போதாது. அவனையே தீர்த்துக்கட்ட வேண்டும். அதற்கு நமக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்க்க வேண்டும். அப்போதுதான் ஆட்டம் காட்டி அரியணையைக் கைப்பற்ற முடியும்.' ரனவலோனா களமாடினாள். 'கிறிஸ்துவத்தை மடகாஸ்கர் மண்ணிலிருந்து அடித்து விரட்டுவதே என் லட்சியம்' என்று சூளுரைத்தாள். மலகாஸி பூசாரிகளின் அமோக ஆதரவு ராணிக்குக் கிடைத்தது. பழைமை விரும்பிகளும், கிறிஸ்துவத்தை எதிர்ப்பவர்களும், ரடாமாவின் பிரிட்டிஷ் ஜிங்ஜக் நடவடிக்கைகளால் மனக்கசப்பில் இருந்தவர்களும், 'ராணியம்மா*

வாழ்க!' என்று கொடி பிடித்துக்கொண்டு திரண்டனர். முக்கியமான அதிகாரிகள் சிலர், ராணியை ரகசிய இடத்தில் வைத்துப் பாதுகாத்தனர்.

ஆகஸ்ட் 11 அன்று வெளியே வந்த ரனவலோனா, ஆதரவுப் படை வீரர்களுடன் அரண்மனை நோக்கிச் சென்றாள். அரண்மனையையும் அதிகாரத்தையும் கைப்பற்றினாள். மக்கள் மத்தியில் பேசினாள். இன்றைக்கு 'அம்மாவின் ஆன்மா' போல, அன்றைக்கு தெய்வம்.

'என் கனவில் நம் தெய்வங்கள் வந்தன. நானே மடகாஸ்கரின் அடுத்த ஆட்சியாளராக வேண்டுமென்று தெய்வங்கள் ஆணையிட்டன. நான் என் மலகாஸி மக்களின் நலனுக்காகவும், எனது பெயரை மகிமைப்படுத்தும் விதமாகவும் இந்த மண்ணை ஆளுவேன். நான் வணங்கும் என் முன்னோர்கள் என்னை வழிநடத்துவர். சுற்றிலும் இருக்கும் கடலே என் ராஜ்ஜியத்தின் எல்லை. அதில் ஒரு மயிரளவுகூட எதிரிகளுக்கு விட்டுக்கொடுக்க மாட்டேன்!'



**முதலாம் ரடாமாவின் கல்லறை**

ரனவலோனாவின் வார்த்தைகளில் மக்கள் மதி மயங்கி, நிலம் அதிர வாழ்த்தினர். மனதார அவளை ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டனர். சில தினங்களில் இளவரசன் ரகோடோப் பிடித்து வரப்பட்டான். அவன் கண் முன்னேயே அவனுக்குக் குழி தோண்டப்பட்டது. உடலெங்கும் ஈட்டிகள்

பாய்ந்தன. புதைக்கப்பட்டான். ரடாமாவின் சகோதரி உள்ளிட்ட குடும்பத்தினரும் ஆதரவாளர்களும், இன்னபிற எதிரிகளும் விதவிதமாகத் தீர்த்துக் கட்டப்பட்டனர்.

அடுத்த காரியமாக தன் அருமைக் கணவனின் பூத உடலை வைத்து அனுதாப அரசியல் செய்ய ஆரம்பித்தாள் ரனவலோனா. அதை உடனே புதைக்கவில்லை. எல்லோரும் பார்வையிடக் கிடத்தினாள். உடலை ஈக்கள், பூச்சிகள் மொய்க்காமல் விசிறுவதற்கென்றே 24*7 அடிமைகள் நியமிக்கப்பட்டனர். துக்கம் அனுஷ்டிக்கும் விதமாக ஆண்கள் ஒவ்வொருவருமே மொட்டை அடிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தாள். (தலைமைக்காக, தொண்டர்கள் பச்சை குத்துவது, மொட்டை அடிப்பது எல்லாம் பாரம்பர்ய வழக்கம்தான்.) ‘இவை துக்க நாள்கள். ஆகவே, யாரும் குளிக்கக்கூடாது. கண்ணாடியில் முகம் பார்க்கக்கூடாது. நடனம் ஆடக்கூடாது. சிரிக்கக் கூடாது. இசைக்கக் கூடாது. கைதட்டக் கூடாது. தூங்கலாம். ஆனால், பாய் விரிக்கக்கூடாது. இவற்றை மீறினால் கடும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்; அல்லது வாழ்நாள் அடிமையாக்கப்படுவீர்கள்.’

இப்படி மக்களைக் கதற வைத்து, பல நாள்கள் துக்கத்தை அனுஷ்டித்துத் தொலைத்து மன்னரது உடலை ஒருவழியாகப் புதைத்தாள் ரனவலோனா. அதுவும் சாதாரணமாக அல்ல. சிவப்புப் பட்டுத்துணியாலான லம்பாவால் (அம்மக்களின் பாரம்பர்ய சால்வை) உடலைச் சுற்றி, வெள்ளியாலான சவப்பெட்டியில் வைத்துப் புதைத்தாள். மன்னருடன் புதைக்கப்பட்ட பிற பொருள்களின் பட்டியல்... அரிய ஐரோப்பிய ஓவியங்கள், ஆயிரக்கணக்கான நாணயங்கள், கல்லறைக்குள் அன்னாரின் ஆவி அணிந்து திரிய 80 செட் உடைகள், நகைகள், தங்கப் பாத்திரங்கள், மேசை, நாற்காலி, படுக்கை, கண்ணாடி, தண்ணீர்க்குடுவை, குவளை, கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்கள், அப்புறம் ரம்.

*மன்னர் இறந்து ஒரு வருடம் கழித்து, கண்ணுக்கெட்டிய தொலைவில் உள்ளூர் எதிரிகளே இல்லை என்று உறுதியான பிறகே மடகாஸ்கரின் மாண்புமிகு ராணியாக அரியணையில் அமர்ந்தாள் ரனவலோனா (கி.பி.1828, ஆகஸ்ட் 12). அடுத்தது என்ன?*

*'நான் ஒரு பிள்ளை பெற்றுக்கொள்ள வேண்டும்.'*

(அடுத்த இதழிலும் ரனவலோனாவே வருவாள்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 8

முகில், படம்: பா.காளிமுத்து

# கிறுக்கு ராஜாக்களின் கதை!

### மக்கள்தொகையை பாதியாகக் குறைத்த மகாராணி!


அண்ட்ரியாமிஹாஜா. துடிப்பான தளபதி. மன்னர் முதலாம் ரடாமாவின் இறப்புக்குப் பிறகான குழப்பத்தில், ராணி ரனவலோனாவுக்குப் பக்கபலமாக நின்று அவளை அரியணை ஏற்றியதில் இவர் பங்கு அதிகம். ஆகவே, அவரைத் தன் நெஞ்சத்திலும் மஞ்சத்திலும் ஏற்றினாள் ராணி. இருவருக்கும் கி.பி. 1829, செப்டம்பர் 23-ல் பிறந்த பையனுக்கு 'ரகோடோ' அலைஸ் 'இரண்டாம் ரடாமா' என்று பெயர் வைக்கப்பட்டது.

இரண்டாம் ரடாமாவா? ஆம், அவர்களது மரபுப்படி மன்னர் இறந்த பிறகு, அதிகாரபூர்வ ராணி, வேறு யாருடைய கூட்டுத்தயாரிப்பிலும் குழந்தை பெற்றுக்கொள்ளலாம். அதற்கு ராஜ வாரிசு என்ற அங்கீகாரம் உண்டு. அந்த லாஜிக்கின்படி, இரண்டாம் ரடாமாவின் பயாலஜிக்கல் ஃபாதர் அண்ட்ரியாமிஹாஜா, அஃபிஷியல் ஃபாதர் முதலாம் ரடாமா.

'ராணியின் காதலன்' என்ற செல்வாக்குடன் திரிந்த அண்ட்ரியாமிஹாஜா மீது சக தளபதிகளுக்குப் பொறாமை. ஆகவே, அண்ட்ரியாமிஹாஜாவுக்கு அரியணை மீது ஆசை என்றும், அவருக்கு இன்னொரு காதலி இருக்கிறாள் என்றும் ராணியிடம் மூட்டிவிட்டார்கள். போதையேறிய பொழுதொன்றில் ரனவலோனா சீறினாள். ''இவனை டேங்குவேனா விசாரணைக்கு உட்படுத்துங்கள்!'' (அதென்ன விசாரணை என்பது சில பத்திகள் தள்ளி...) அண்ட்ரியாமிஹாஜா அதற்கு உடன்படாததால், உடனே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு, உடல் புதைக்கப்பட்டது. அதன்பின் ராணியால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. 'அவன் உயிர்த்தெழுந்து வந்து என்னைக் கொன்றுவிட்டால்?' உடனே, ''அவன்

உடலைத் தோண்டியெடுத்து தலையை அறுத்து கால் பகுதியில் போடுங்கள். தலைக்குப் பதிலாக கறுப்பு நாய் ஒன்றின் தலையை வெட்டி வையுங்கள்!'' எனக் கட்டளையிட்டாள்.

**உயிருடன் எரிக்கப்படும் கிறிஸ்தவர்கள்**




அப்படியே செய்தார்கள். ராணியின் கனவுகளில் நாய்த்தலை மனிதன் குரைத்தான். மீண்டும் பதறிக் கட்டளையிட்டாள். ''அவன் உடலின் மிச்சங்களை எரியுங்கள். எலும்புகளையும் சாம்பலாக்குங்கள்!'' அதன்படி சாம்பலையும் காற்றில் கரைத்தனர். இருந்தும் ராணிக்குப் பயம் போகவில்லை. அண்ட்ரியாமிஹாஜாவின் குடும்பத்தினர் சிலரையும் கொன்ற பிறகே நிம்மதியடைந்தாள்.

இருந்தாலும் அவளது நிம்மதியை நிரந்தரமாகக் கெடுக்கும் சக்திகளாகப் பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரர்களும் அம்மண்ணில் வேரூன்றியிருந்தனர். அடுத்து அவள் பார்வை கிறிஸ்தவ மதம் மீது திரும்பியது. கிறிஸ்தவப் பள்ளிகளையும் தேவாலயங்களையும் மூடினாள். ‘‘எல்லோரும் இங்கிருந்து ஓட வேண்டும். இல்லையேல் குழிதோண்டிப் புதைக்கப்படுவீர்கள்’’ எனக் கர்ஜித்தாள். இத்தனைக் கட்டுப்பாடுகளை மீறியும் தன்னுடைய மலகாஸி மைந்தர்கள் மதம் மாறி ஜெபிப்பதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. கி.பி. 1836. பதினான்கு பேர், ரனவலோனா முன்பாகவே மரண பயமின்றி ஸ்தோத்திரம் சொல்ல, ஆத்திரம் பொங்கியது அவளுக்கு. அவர்களது குருதியால் பூமி சிவந்தது.

‘மிஷன் மிஷனரி’ ஆரம்பமானது. ஐரோப்பியக் கிறிஸ்தவர்களும், மதம் மாறிய மலகாஸிக்களும் கருணையின்றிக் குறிவைக்கப்பட்டனர். பிடிபட்டவர்கள் ‘டேங்குவேனா’ (tanguena) என்ற பாரம்பர்ய முறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். கொஞ்சம் சோறு, கோழியின் தோல் மூன்று துண்டு, டேங்குவேனா என்ற விஷ விதை ஆகியவை வாயில் திணிக்கப்படும். பிறகு நீரைக் குடித்து வாந்தியெடுக்க வேண்டும். மூன்று துண்டு கோழித் தோலும் சேதாரமின்றி வெளியே வந்துவிட்டால், அவன்/அவள் குற்றமற்றவன்/ள். விடுதலை. ஒரு துண்டு தோல் சேதாரமடைந்திருந்தாலும் உயிர் காலி. ஆனால், அந்த விஷ விதையைத் தின்ற எவருமே பிழைத்ததில்லை என்பதே நிஜம்.

கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இன்னொரு முறை... விரல்களை, கைகளை, அல்லது கால்களை வெட்டி ஆளை வெயிலில் போட்டு விடுவார்கள். குருதியின் வழியே உயிரும் சொட்டுச் சொட்டாக வெளியேறும். எப்படியெல்லாம் கிரியேட்டிவாகக் கொல்லலாம் என்று ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி ‘கொலை மேளா’ நடத்தினாள் ரனவலோனா.

ராணியின் ஊர்வலம்



தண்ணீரில் மூழ்கடிப்பது, வெந்நீரில் வேக வைப்பது, கழுத்தை நெரிப்பது, கோணிப்பையில் கட்டுவது, கல்லால் அடிப்பது, உயிருடன் கொள்ளி, மலையுச்சியிலிருந்து தள்ளி, காலில் கயிற்றைக் கட்டி அந்தரத்தில் தொங்கவிட்டுப் பின் கயிற்றை அறுப்பது, சிலுவையில் அறைவது.

சில சமயங்களில் ராணி, ''வந்து என் பாதத்தில் முத்தமிடு. மன்னிக்கிறேன்'' என்பாள். அந்த அப்பாவியும் தரையில் விழுந்து பாதத்தில் முத்தமிடுவான். ''ஓடிப் போ'' என்பாள். ஓட ஆரம்பிப்பவன், சிறிது தூரத்திலேயே வாயில் நுரை தள்ள கீழே விழுந்து இறப்பான். ஆம், ரனவலோனாவின் பாதங்கள் விஷத்தில் தோய்க்கப்பட்டிருக்கும்.

இவற்றைவிடவும் கொடூரக் காட்சிகள் இருக்கின்றன. வேண்டாம். கடந்துவிடுவோம்.

மடகாஸ்கரைச் சுற்றி சிறு சிறு தீவுகளில் ஆதிக்கம் செலுத்திய பிரான்ஸுக்கு, மடகாஸ்கரையே தன் காலனி ஆக்க வேண்டுமென்ற வெறி இருந்தது. இந்தியா செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களின் பயணத்துக்கு உதவியாக மடகாஸ்கரில் ஒரு தளம் பிரிட்டனுக்குத் தேவைப்பட்டது. ஆகவே, ரனவலோனாவை அடக்க பிரான்ஸும் பிரிட்டனும் கைகோத்துப்

படையெடுத்தன (கி.பி.1849). படுதோல்வி. கொல்லப்பட்ட ஐரோப்பியர்களின் தலைகளை மட்டும் குச்சியில் செருகி கடற்கரையில் வரிசையாக வைக்கச் சொன்னாள் ரனவலோனா. “இதைப் பார்த்து இனி எவனும் இங்கே வாலாட்ட வரக்கூடாது.”

இப்படி ஐரோப்பியர்கள் மீது அளவற்ற வெறுப்பு கொண்டிருந்தாலும், ரனவலோனாவுக்கு நெருக்கமான விசுவாசியாக இருந்தது ஒரு பிரெஞ்சுக்காரரே. ஜீன் லபார்ட் (Jean Laborde). கி.பி.1831-ல் கப்பல் உடைந்துபோக, நீந்தி மடகாஸ்கரில் கரையேறியவர். பின் ராணியின் ஆலோசகராக, காதலர்களுள் ஒருவராக ஆனவர். பொறியியல், உலோகவியல், வெடிமருந்து, ஆயுதத் தயாரிப்பில் அனுபவம் கொண்ட லபார்ட், மடகாஸ்கரின் பலத்தைப் பெருக்கினார். சோப், பீங்கான், பட்டுத் தயாரிப்பில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கினார். ராணிக்கு மரத்தால் ஆன மிகப்பெரிய அரண்மனை ஒன்றையும் கட்டிக்கொடுத்தார். லபார்டின் பழக்கத்தால் ரனவலோனா பிரெஞ்சு பாணி உடையணிந்தாள். நடை பழகினாள். கலை பயின்று, பியானோ வாசித்தபடி, மென்மையாகப் புன்னகை செய்தாள். இருந்தாலும் வயதாக வயதாக ரனவலோனாவின் மூர்க்கம் அதிகரித்தது. கிறுக்குத்தனங்கள் எல்லை மீறின. அரியணைக் கனவில் காத்திருந்த இளவரசர் ரடாமா பொறுமையிழந்தார்.


ரனவலோனா


இரண்டாம் ரடாமா

ரடாமாவின் தவிப்பைப் புரிந்துகொண்ட பிரெஞ்சுக்காரர்கள், ஓர் ஒப்பந்தத்துடன் வந்தனர் (கி.பி.1855). “ராணியை வீழ்த்தி உங்களை மன்னன் ஆக்குகிறோம்” என்று ஆசை காட்டினர். ரடாமாவுக்கு பிரெஞ்சு தெரியாது. ‘நான் மன்னரான பின், மடகாஸ்கரை பிரான்ஸின் காலனி ஆக்கவும், நீங்கள்


இங்குள்ள வளங்களை அளவின்றிச் சுரண்டவும் சம்மதிக்கிறேன்' என்னும் ஒப்பந்தத்தின் சாரம் தெரியாமல் அதில் கையெழுத்திட்டார். ரகசியம் காக்கச் சொல்லி பைபிள் மீது சத்தியம் வாங்கினர்.

ரடாமா மற்றும் லபார்ட் ஆசியுடன், லம்பெர்ட் என்ற பிரெஞ்சுக்காரரின் தலைமையில் ராணியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டது. எமகாதக ராணியிடம் நடக்குமா? அவள் சதியை முறியடித்தாள். 'பாலூட்டி வளர்த்த கடாவே...' என்று நெஞ்சைப் பிடித்து அழுவாச்சி சீன் போடாமல், மகனை மண்டையில் தட்டி ஓரமாக உட்கார வைத்தாள். லம்பெர்ட் உள்ளிட்ட மற்ற சதிகாரர்களை உடனே கொல்லாமல், விதவிதமாக மரண பயம் காட்டினாள். பிறகு, மலேரியா கொசுக்கள் நிறைந்த காட்டுக்குள் துரத்திவிட்டாள். அங்கிருந்து பிழைத்து வெளியே வருவது சாத்தியமற்ற ஒன்று. பெரும்பாலோனோர் இறந்துபோக, லபார்ட் எப்படியோ தப்பித்து வெளியேறினார். (ரனவலோனாவின் ஆட்சிக்குப் பிறகு மன்னர் இரண்டாம் ரடாமாவின் ஆலோசகராக லபார்ட்டே வந்தது தனிக்கதை.)

சரி, எருமை வேட்டைக்கு வருவோம். திடீரென்று ஒருநாள், ''நான் எருமை வேட்டை ஆடப்போகிறேன். ஏற்பாடு செய்யுங்கள்'' என்று அறிவித்தாள் ராணி. ஏற்பாடு என்றால் சாதாரணமானதல்ல. 'நான் போகும் வழியெல்லாம் புதிய சாலைகள் போடுங்கள். நான் தங்குவதற்கு மாளிகைகள் கட்டுங்கள்.' இந்த வேலைகளுக்காக பல்லாயிரக்கணக்கான மக்கள், கொத்தடிமைகளாக்கப்பட்டனர். அவர்களுக்கு உணவு, நீர், ஓய்வு எதுவும் கிடையாது. ஓர் அடிமை செத்து விழுந்தால், பிணத்தை ஓரமாகத் தூக்கிப் போட்டுவிட்டு வேலையைத் தொடர்ந்தார்கள். இப்படி 16 வாரங்கள், தன் சுற்றம் சூழ சொகுசாக எருமை வேட்டை என்ற பெயரில் வலம்வந்த ரனவலோனா, ஓர் எருமையைக் கூட வேட்டையாடியதாகத் தெரியவில்லை. ஆனால், இதற்கான ஏற்பாட்டில் அவள் வேட்டையாடிய மனித உயிர்களின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரம்.

இப்படி அவ்வப்போது ராணி, நாட்டை வலம் வரக் கிளம்புவாள். போகும் இடமெல்லாம் உயிர்ச் சேதாரம் அதிகம். ரனவலோனாவின் ஆட்சியில் மெரினா இனத்தவர்களே இன்பங்களை அனுபவிக்க, மற்ற இனத்தவர்களுக்கு மரணம் சகஜமான விஷயமாகிப் போனது. அவள் தன் படையினருக்குச் சம்பளம் வழங்கவில்லை. பதிலாக, 'தேவைப்பட்டால் எங்காவது புகுந்து இஷ்டம்போல கொள்ளையடித்துக் கொள்ளுங்கள்' என்ற உரிமையை வழங்கியிருந்தாள். கிறிஸ்தவர்களை வேட்டையாடுவது, சொந்த மக்களையே கொத்தடிமையாக்கிக் கொல்வது, டேங்குவானா விசாரணைக் கொலைகள் என்று ரனவலோனாவின் ஆட்சியில், 1833-1839க்கு இடைப்பட்ட காலத்தில், மடகாஸ்கரின் மக்கள் தொகை 50 லட்சத்திலிருந்து 25 லட்சமாகக் குறைந்து போனது என்கிறது ஒரு புள்ளிவிவரம்.

அந்தரத்தில் தொங்கவிட்டு
மரண தண்டனை



தம் தெய்வங்களின் சிலை வழிபாட்டில் அதிகப்பற்று வைத்திருந்த ரனவலோனா, தன்னையும் மக்களின் தெய்வமாகவே கருதினாள். மெரினா இன புத்தாண்டு அன்று, தேசத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கிளம்பி வந்து அரண்மனை முன் குவிவார்கள். ராணி,

*மாடத்தில் தோன்றுவாள். மக்கள் முன்னிலையில் 'ராஜ குளியல்' மேற்கொள்வாள். பின்பு, தான் குளித்த நீரை மக்கள் மீது தெளிப்பாள். பாவாத்மாவின் புண்ணிய தீர்த்தம் அது.*

*கி.பி.1861-ல் ரனவலோனாவின் கடைசி ராஜ குளியல் நடந்தது. அந்த ஆகஸ்ட் 16-ல் இறந்துபோனாள். அவள் பெருமையைச் சொல்லும்விதமாக பன்னிரண்டாயிரம் எருமைகள் பலி கொடுக்கப்பட்டு, அவற்றின் இறைச்சி எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டது. அவள் சகல மரியாதைகளுடனும் புதைக்கப்பட்டபோது, பெரிய வெடிவிபத்து நேர்ந்தது. அப்போதும் சிலரைத் தன்னுடன் துணைக்கழைத்துச் சென்றாள் ரனவலோனா.*

*32 ஆண்டுகள் ஐரோப்பிய ஆதிக்கத்துக்கு ஆட்டம் காட்டியவள் என்ற விதத்தில் ரனவலோனா தனித்துவமானவளே. 1896-ல் மடகாஸ்கர், பிரான்ஸின் காலனியானது.*

**(வருவார்கள்...)**

# கிறுக்கு ராஜாக்களின் கதை! - 9

**முகில், படம்: பா.காளிமுத்து**




## ஓர் இளவரசனின் கதை!

*அவசிய முன்குறிப்பு: இந்த வரலாறு கொரிய மண்ணில் நிகழ்ந்ததென்பதால், இதில் வரும் பெயர்களை வாசிப்பது உங்கள் நாக்கெலும்பு முறிவுக்கு வழிவகுக்கும் என்ற முன்னெச்சரிக்கையை இங்கே வைத்துவிட்டுத் தொடர்கிறேன்.*

*கொரிய மண்ணில் ஜோஸியான் பரம்பரை தோற்றுவிக்கப்பட்டது கி.பி. 1392-ல். அதில் 21-வது மன்னராக அரியணை ஏறியவர் இயோங்ஜோ (கி.பி.1724). அந்த இடத்துக்கு அவர் வந்து சேர்ந்தது பூப்பாதையில் அல்ல, முரட்டுத்தனமான முள்பாதையில்தான்.*

*அப்போது சோரோன், நோரோன் என்று இரண்டு பிரிவினர் அங்கே வலுவாக அரசியல் செய்து கொண்டிருந்தனர். இந்த இரண்டில் ஏதாவது ஒரு பிரிவினர் மூர்க்கத்தனமாக முட்டுக்கொடுத்தால் மட்டுமே ஒருவர் மன்னராக முடியும். 19-வது மன்னர் சுக்ஜோங் இறந்த பிறகு, அவரின் மகனான கியோங்ஜோங், சோரோன் பிரிவினரது அமோக ஆதரவோடு 20-வது மன்னராக முடிசூடினார். இவர், இயோங்ஜோவின் ஒன்றுவிட்ட சகோதரர். அந்தச் சூழலில் இயோங்ஜோ சில பகுதிகளை நிர்வகிக்கும் தளபதியாக வலம் வந்தார். அந்த கொரிய கொக்கு, உரிய தருணத்துக்காக, அரியணைக் கனவுடன் காத்திருந்தது.*

*கியோங்ஜோங்குக்கு அடிக்கடி உடல் நலமில்லாமல் போனது. தவிர, அவருக்கு வாரிசும் கிடையாது. அடுத்த ராஜ வாரிசாக இயோங்ஜோவை அறிவிக்க வேண்டுமென நோரோன் பிரிவினர் அழுத்தம் கொடுத்தனர். இது சோரோன் பிரிவினருக்குப் பிடிக்கவில்லை. நோரோன் பிரிவின் பெருந்தலைகள் சிலர் கொல்லப்பட்டனர். இயோங்ஜோவைக் கொல்லவும் முயற்சிகள் நடந்தன. அவர், சோரோனின் சதிகளுக்குத் தப்பினார். 'விதியோடு விளையாட நான் விரும்பவில்லை. ஒதுங்குகிறேன். ஏதோ ஒரு மூலையில் சாதாரணனாக வாழ்ந்து கொள்கிறேன்' என மன்னருக்கு வெள்ளைக்கொடி செய்தி அனுப்பினார். அப்போதைக்குச் சலசலப்புகள் அடங்கின.*

*அந்தக் கோடையில் ஒரு பகல் பொழுதில் நண்டுக்குழம்பு உண்டார் கியோங்ஜோங். வயிறு பாதிக்கப்பட்டது. உடல் நலம் மேலும் மோசமாகி மோட்சத்துக்குப் பயணச்சீட்டு வாங்கினார். #RIP. இதில் இன்னொரு வெர்ஷன் உண்டு. கியோங்ஜோங்கின் உடல் நலம் தேறுவதற்கென,*

வாழ்த்துச் செய்தியோடு நண்டையும் அனுப்பி வைத்ததே பாசக்கார இயோங்ஜோதான். அந்த பாசக்குழம்பே பாசக்கயிறானது என்றும் சொல்கிறார்கள். மொத்தத்தில் நண்டு உண்டு சென்று சேர்ந்தார் கியோங்ஜோங். நன்று என்று மன்னராக நிமிர்ந்தார் இயோங்ஜோ, நோரோன்களின் பேராதரவோடு.

இப்படிப் பல குட்டிக்கரணங்கள் அடித்து, தன் 31-வது வயதில் ஆட்சிக்கு வந்த இயோங்ஜோ, அதிகார போதையில் ஆடலாம் என்றோ, வருமானத்துக்கு மீறி சொத்து சேர்க்கலாம் என்றோ, ஆடம்பரத்தில் மூழ்கித் திளைக்கலாம் என்றோ, மலைநாட்டில் எஸ்டேட் வாங்கி திராட்சைத் தோட்டம் போடலாம் என்றோ கிஞ்சித்தும் எண்ணவில்லை. தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஜோஸியான் பரம்பரையின் ஆகச்சிறந்த மன்னராக ஆட்சி செய்ய வேண்டும் என்றே மனதார விரும்பினார். உரியவர்கள் ஆலோசனைகளுடன் உன்னத ஆட்சி நடத்தினார். நீதி, நிர்வாகம், பொருளாதாரம் சிறக்க, மாதம் மும்மாரியும், அதிலொன்று பனிமாரியும் பெய்தது. ஷேமம்!

திருவள்ளுவர் தனது 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்தையே மன்னருக்கு அர்ப்பணிக்கலாம். இயோங்ஜோவின் ஒழுக்க விதிகள் அப்பேர்ப்பட்டவை. நேர்த்தியாக உடையணிவார். நேரந்தவறாமை மிக முக்கியம். தினமும் 15 மணி நேரம் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வார். அதுவும், முதுகுத் தண்டு வளையாமல், நேராக உட்கார்ந்து, சோர்வின்றி. எந்தக் கோப்பும் அவர் பார்வைக்குப் பிறகே நகரும். நேரத்துக்கு உணவு. கன்னாபின்னா மெனுவெல்லாம் கிடையாது. காய்கறிகள் மட்டும். தேவையற்ற வார்த்தைகளைக்கூட பேச மாட்டார். நல்ல காரியங்களுக்குச் செல்ல ஒரு வாசல், கெட்ட காரியங்களுக்குச் செல்ல ஒரு வாசல் என்று வழிவகுத்து வாழ்ந்தார். (அந்தப்புரம் தவிர்த்து) சுய ஒழுக்கத்தின் சூப்பர் ஸ்டாராகத் திகழ்ந்த இயோங்ஜோ, சுற்றியிருப்பவர்களும் தன்னைப் போலவே இருந்து தொலைக்க வேண்டுமென எதிர்பார்த்தார். ஆகவே, எதிலும் கடுமை காட்டினார். தன் மகனிடம்கூட.

இயோங்ஜோவின் அதிகாரபூர்வ ராணிக்குக் குழந்தையில்லை. அவருடைய துணைவிக்குப் பிறந்த மகன் ஒருவன், தனது ஒன்பதாவது வயதில் இறந்துபோனான். பிற துணைவிகளுக்குப் பிறந்ததெல்லாம் பெண் பிள்ளைகள். 'எனக்கு இன்னொரு மகன் பிறப்பானா? எனக்குப் பின் இந்த ராஜ்ஜியத்தை ஆள்வானா?' ஏங்கிக் கிடந்த இயோங்ஜோவின் விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியானது. அவரது 41-வது வயதில், ஸியோன்ஹி என்ற துணைவிக்கு ஒரு மகன் பிறந்தான் (கி.பி.1735). யி ஸன் என்று பெயரிட்டு மகிழ்ந்தார்.

ஜோஸியான் மன்னர் பரம்பரையில் ஆண் குழந்தை பிறந்தால், உரிய தகுதிகளுடன் வளர்ந்த பிறகே, 'ராஜ வாரிசாக' அறிவிக்கும் பழக்கம் இருந்தது. ஆனால், இளவரசர் யி ஸன் பிறந்த சில நாள்களிலேயே 'ராஜ வாரிசாக' அறிவிக்கப்பட்டார். பரம்பரையின் அடுத்த சூரியன் கிழக்கிலிருந்துதான் உதித்து, பிரகாசமாக உருவாகி வரவேண்டும் என்ற எண்ணத்தில், பிறந்த நூறாவது நாளிலேயே இளவரசனை, அரண்மனையின் 'கிழக்கு மாளிகைக்கு' அனுப்பினார்.

அது இளவசரனுக்குரிய மாளிகையானது. வளர்ப்புப் பெற்றோர் நியமிக்கப்பட்டனர். அவர்கள், முன்னாள் மன்னர் கியோங்ஜோங்கின் விசுவாச வேலைக்காரர்கள். இயோங்ஜோதான் கியோங்ஜோங்கைக் கொன்றதாக நம்பினார்கள். ஆகவே, வளர்ப்புப் பெற்றோர் பாத்திரத்தில் டபுள் கேம் ஆடினார்கள். இயோங்ஜோவின் கட்டளைகளுக்கு இம்மி பிசகாமல் அடிபணிந்தே இளவரசரை வளர்ப்பதாகக் காட்டிக் கொண்டார்கள். ஆனால், மன்னரது விருப்பத்துக்கு மாறான விஷயங்களை இளவரசனுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். 'இதான உனக்குப் பிடிச்சிருக்கு. செய். ஆனா, மன்னருக்குத் தெரியாம பண்ணு. தெரிஞ்சா உங்க அப்பா கொன்னுருவாரு' - என்று இளவரசனுக்குள் மன்னர் மீது அதீத பயத்தை தொடர்ந்து விதைத்தனர்.

‘மன்னரே, நீங்கள் தூங்கும் நேரம் வந்துவிட்டது’ என்று பணியாள் நினைவூட்ட, இயோங்ஜோவோ ராப்பகலாக உட்கார்ந்து புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். அது, ‘இளவரசன் எப்படியெல்லாம் நிர்வாகம் செய்ய வேண்டும்’ என்று கற்றுக்கொடுக்கும் புத்தகம். எல்லாவற்றையும் தியரியாகப் பார்த்த மன்னர், பிராக்டிகலாக தன் மகன் மீது அன்பும் அக்கறையும் செலுத்த வேண்டும் என்று யோசிக்கவே இல்லை.

தாயும் தன் மகன் மீது வெளிப்படையாகப் பாசம் காட்டவில்லை. ‘தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. அதன்படி நடந்தால்தான் நீ என் பிள்ளை’ என்று கடுமையே காட்டினாள். பாசத்துக்கு ஏங்கிய இளவரசன், பயத்தினால் தன் தாயிடமிருந்தும் தந்தையிடமிருந்தும் விலகினான்.

எட்டு வயதில் இளவரசன் விரும்பும் விதத்தில் ஒருத்தி நெருங்கி வந்தாள். பால்ய சுயம்வரம். பல்வேறுகட்ட சோதனைகளுக்குப் பிறகு, ஹைஜியோங் என்ற சிறுமி இளவரசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். கோலாகலத் திருமணம்.



**மன்னர் கியோங்ஜோங்**

அதற்கு அடுத்த ஆண்டில் இளவரசனுக்கு உடல் நலம் சரியின்றிப் போனது. பிழைத்ததே பெரிய விஷயம். ஆனால், பக்க விளைவுகளாக சில விநோத மனநலக் கோளாறுகளும் தொற்றிக் கொண்டன. 'ஏன் இப்படியெல்லாம் செய்கிறான்' என்று புரியாத புதிராக இளவரசன் நடந்து கொண்டான். எப்போதும் இல்லை. எப்போதாவது. ஆனால், கடும் காய்ச்சல், தட்டம்மை, இன்னபிற நோய்கள் அடுத்தடுத்து தாக்கியதில் சற்றே மூளை பாதிப்பு ஏற்பட்டது உண்மையே.

நோய் பாதித்த காலங்களிலும் தந்தையின் அன்பான கவனிப்பு கிடைக்காதது இளவரசனுக்கு மன பாதிப்பைத் தந்தது. அந்தச் சமயங்களில் இளவரசியையும் விலக்கிவைத்திருந்தார்கள். மற்றபடி இளவரசி ஹைஜியோங், இளவரசனுக்கு நல்லதொரு விளையாட்டுத் தோழியாக இருந்தாள். பொழுதுபோக்க, அப்பா - அம்மா விளையாட்டு விளையாடினார்கள். இளவரசன், நிஜமாகவே அப்பா - அம்மா விளையாட்டுக்குத் தயாராகிவிட்டான் என்று அவனது பதினான்காவது வயதில் ஒரு விழா எடுத்தனர். ஏற்கெனவே வில்வித்தை, வாள்வித்தை, தற்காப்புக் கலை, ஓவியம் மற்றும் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்த இளவரசர், கலவியிலும் சாதித்தார்.

அடுத்த வருடமே ஹைஜியோங் ஒரு குழந்தைக்குத் தாயானாள். குழந்தை நிலைக்கவில்லை. மீண்டும் ஓர் ஆண் குழந்தை. ஜியோன்ஜோ என்று பெயரிட்டனர். 'ராஜ பேரன்' என்ற அங்கீகாரம் அந்தப் பிஞ்சுக்குக் கிடைத்தது. ஆனால், மகனை எந்தவிதத்திலும் அங்கீகரிக்கும் மனசு மட்டும் மன்னருக்கு வாய்க்கவே இல்லை.

இளவரசர், மன்னரைத் தினமும் மூன்று வேளையும் மரியாதை நிமித்தமாகச் சந்திக்க வேண்டும். சந்திக்கும் பொழுதுகளெல்லாமே சம்பிரதாயமாகவே நகர்ந்தன. தந்தை தன் அருகில் உட்கார வைத்து தலைகோதி கனிவுடன் பேச மாட்டாரா என்ற ஏக்கம் இளவரசருக்குள் குறையவே இல்லை.

*15 வயது இளவரசருக்கு, மன்னர் சில பொறுப்புகளைக் கொடுத்தார். ஆனால், அனுபவமற்ற இளவரசரிடம் அசாத்தியமான நிர்வாகத் திறமையை எதிர்பார்த்தார். அவர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் இளவரசரால் பதில்கூட சொல்ல முடியவில்லை. எப்போதும் அனிச்சையாக மேல் அண்ணத்துடன் நாக்கு ஒட்டிக்கொண்டது. மன்னரின் ஆத்திர அணைக்கட்டு உடைவது வாடிக்கையானது.*



**இளவரசன் யி ஸன்**

*சில சமயங்களில் இளவரசர், 'மன்னரே, இதனை இப்படிக் கையாளலாமா?' என்று தயக்கத்துடன் ஆலோசனை கேட்பார். மன்னர் அனல் துப்புவார். 'சின்ன பிரச்னையைக்கூட சரி பண்ண முடியல. நீயெல்லாம் இளவரசன்னு சொல்லிக்க அருகதையே இல்ல. என் பார்வைல இருந்து ஓடிப்போயிரு!'*

இன்னொரு சமயம் இளவரசர் சற்றே தெம்புடன் வருவார். ‘இன்றைக்கு நானே அந்தப் பிரச்னைக்குத் தீர்வு கண்டுட்டேன் மன்னரே’ என்று மகிழ்வுடன் சொல்வார். அப்போதும் மன்னர் கனல் கக்குவார். ‘நீ எதுக்குப் பண்ணுன? அப்ப, மன்னன் நான் எதுக்கு இருக்குறேன்?’

ஒவ்வொரு முறையும் மன்னரின் கோப வார்த்தைகள் இளவரசரைப் பொசுக்கின. அதுவும் அடுத்தவர்கள், வேலையாள்கள், அடிமைகள் முன்பெல்லாம் தந்தை தன்னைக் கணக்கு வழக்கின்றி அவமானப்படுத்துகிறாரே என்ற எண்ணம் தீவிர மன அழுத்தத்தைத் தந்தது. இளவரசரோ, மன்னரிடம் தந்தைப் பாசத்தைத் தேடி ஏமாந்தார். மன்னரோ, தன் மகனை வருங்காலத்தில் தகுதியுள்ள ஓர் ஆட்சியாளனாக வரமாட்டோனோ என்ற ஏமாற்றமும் கோபமுமாக இருந்தார். வேதியியல் கொஞ்சம்கூட ஒத்துப்போகவில்லை. இருவரது உணர்வுகளிலும் அடர் அமிலம் பரவியது. அது பெரும் விளைவுகளை உண்டாக்கியது.

**(அடுத்த இதழில் இளவரசர் வருவார்...)**

## *கிறுக்கு ராஜாக்களின் கதை! - 10*

*முகில், படம்: பா.காளிமுத்து*




### *நாலடி மரணப்பெட்டி!*

*தாவோயிசம். சீனாவின் சமய தத்துவக் கோட்பாடுகளில் ஒன்று. 'மாற்றம் என்பது தானாக நிகழும்' என்பது தாவோயிசத் தத்துவம். அதை கொரிய இளவரசரான யி ஸன் மனப்பூர்வமாக நம்பினார். 'ஆம், என்றைக்காவது ஒருநாள் என் தந்தையிடமும் மாற்றம் என்பது தானாக நிகழும். அவர் என்னிடம் பாசம் காட்டுவார்!'*

*மன்னர் இயோங்ஜோவுக்கு தாவோயிசம் பிடிக்காது. தன் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக நடக்கும் மகனையும் சுத்தமாகப் பிடிக்காது. அவருக்குள் மாற்றம் நிகழவில்லை. பதிலாக, தான் வெறுக்கும் மகனது பெயரை மாற்றினார். ''இனி அவன் பெயர் யி ஸன் அல்ல. சடோ! அப்படித்தான் அவனை அழைக்கவேண்டும்.'' அந்தப் பெயருக்கான பொருள், 'மிகுந்த வருத்தத்துக்குரியவன்!' மன்னரின் கட்டளை என்பதால், இனி 'சடோ' என்றே நாமும் குறிப்பிடுவோம்.*

*தன் மூத்த சகோதரி Hwahyop மீது சடோவுக்கு அளவற்ற பாசம் உண்டு. பேரழகி அவள். திருமணமான அவளுக்கு ஆண் பிள்ளை பிறக்கவில்லை என்ற காரணத்தினால் மன்னர் அவளை வெறுத்தார். ஆகவே, அவளை சடோவுக்கு அதிகம் பிடித்தது. தாயிடம் கிடைக்காத அன்பு, அவளிடம் கிடைத்தது. கி.பி 1752-ல் அந்தச் சகோதரி அம்மை நோயில் இறந்தபோது அம்மாவையே இழந்ததுபோல அழுது தீர்த்தார் சடோ.*




அவரது மன அழுத்தம் தீவிரமானது. தாவோயிச மந்திர வித்தைகளைக் கற்றுக்கொள்வதில் சடோவின் கவனம் திரும்பியது. 'Okchugyeong' என்ற தாவோயிச நூலை ஆழ்ந்து வாசித்தார். அதில் இடிகளின் கடவுளான லெய்காங் தோன்றி மிரட்டினார்... சடோவின் கனவுகளிலும். சடார் சடாரென தூக்கத்திலிருந்து எழுந்து அலறுவார். இடிச்சத்தம் கேட்டாலே பதறுவார். ''என்னை இடிகளின் கடவுள் தாக்க வருகிறார்'' என்று தன்னிலை இழப்பார்.

'இடி', 'இறப்பு' போன்ற அமங்கல வார்த்தைகளைக் கேட்டாலே காதுகளைக் கழுவும் பழக்கம் மன்னருக்கு இருந்தது. பிறகு சடோ வந்து பேசிச் சென்றாலே மன்னர் காதுகளைக் கழுவ ஆரம்பித்தார். அவனோடு

பேசியதற்காக வாய் கொப்பளித்தார்; உடையை மாற்றினார். அதீத வெறுப்புடன் சடோவுக்குப் புதிய பொறுப்பினைக் கொடுத்தார். குற்றவாளிகளைச் சித்ரவதை செய்யும் சிறையின் மேற்பார்வையாளர் பணி. அந்தக் காட்சிகள் சடோவின் மனநலத்தை மேலும் குரூரமாக்கின. கி.பி 1755. ராணி (மன்னரின் முதல் மனைவி, சடோவின் அதிகாரபூர்வ தாய்) மரணப் படுக்கையில் கிடந்தாள். மன்னரின் கட்டளைப்படி ராணியைப் பார்க்க வந்தார் சடோ. என்னவோ, மகனைக் கண்டதுமே மன்னரின் தொங்கு தாடி கோபத்தில் துடித்தது. ''எங்க வந்த? ஓடிப்போயிரு!'' பதறிய சடோ, அரண்மனை ஜன்னல் வழியே வெளியே எகிறிக் குதித்து ஓடினார். சில நாள்களில் ராணி இறந்துபோனாள். நிலை தடுமாறிய சடோ, தன் பணியாளர்களாக இருந்த திருநங்கைகளைக் கண் மூடித்தனமாக அடித்துத் துன்புறுத்தினார்.

இப்படி இருவேறு துருவங்களாகத் திரிந்த தந்தையும் மகனும் ஒரு 'மேட்டரில்' மட்டும் ஒரேபோலத் திகழ்ந்தார்கள். கட்டில்களில் கடமையாற்றி தொட்டில்களைப் பெருக்குவது. முதல் ராணி போய்ச் சேர்ந்த பின் இன்னொருத்தியைத் திருமணம் செய்து, அவளுக்கு அதிகாரபூர்வ ராணி அந்தஸ்து வழங்கினார் இயோங்ஜோ. அந்த இரண்டாவது ராணிக்கு சடோவைவிட பத்து வயது குறைவு.

இன்னொருபுறம் சடோவும், இளவரசி தவிர வேறு வேறு துணைவிகளுடன் இன்பத்துப் பால் காய்ச்சினார். சடோவின் ஒரு துணைவியான யோங்பின் என்ற பெண் கி.பி 1754-ல் கர்ப்பமுற்றாள். 'இவன் கெட்ட கேட்டுக்கு இதெல்லாம் தேவையா?' மன்னர் சீறினார். பீதியான சடோ அந்தப் பெண்ணின் கருவைக் கலைக்க முயன்றார். கலையவில்லை. அவளையே கொல்ல முயன்றார். இளவரசி ஹையெஜியோங் அவளைக் காப்பாற்றி, மறைத்து வைத்து, பிரசவம் பார்த்தாள். ஆண் குழந்தை. அடுத்த வருடமும் சடோ அதே துணைவியுடன் ஓர் ஆண் குழந்தை பெற்றுக்கொண்டார். அதே சமயத்தில் மன்னருக்கும் அவருடைய வேறு துணைவிகளுக்கும் தொடர்ச்சியாக இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன.

*'அவனுக்கு மட்டும் ஆண் குழந்தையா?' பொறாமையில் பொசுங்கினார் மன்னர்.*

*சடோவின் லீலைகள் எல்லை மீறின. புதிதாக பிங்கே என்ற துணைவியுடன் கலந்தார். அவள் ஜோஸியான் பரம்பரையைச் சேர்ந்தவள். ஒருவிதத்தில் சடோவின் சகோதரி முறை. உண்மை தெரிந்த மன்னர் கொதித்தெழுந்தார். பயம் தலைக்கேற ஓடிப்போய் கிணற்றில் குதித்தார் சடோ. அது பனிக்காலம் என்பதால் கிணறு உறைந்து கிடைத்தது. சடோ சாகவில்லை. பிறகு பிங்கேவையும் கொல்ல முயன்றார். வழக்கம்போல இளவரசிதான் காப்பாற்றினாள். கி.பி 1761-ல் பித்தமும் ரத்தவெறியும் தலைக்கேறிய ஒரு பொழுதில் பிங்கேவை அடித்தே கொன்றார் சடோ.*

*தினமும் தன் மாளிகையில் நள்ளிரவு விருந்துகளில் கூத்தடித்த சடோவை, ஒருநாள் மன்னர் நேரடியாகவே தேடி வந்து பரேடு விட்டார். அவர் போன பிறகு, சடோவின் கிறுக்குத்தனங்கள் அரங்கேறின. தன் வேலையாள்களைக் கொலைவெறியுடன் துரத்தினார். தீப்பந்தங்களை அவர்கள் மீது எறிந்தார். மாளிகை தீப்பற்றியது. அப்போது இளவரசி ஹைஹெஜியோங் நிறைமாத கர்ப்பிணி. பதறி எழுந்து தன் மகன் ஜியோன்ஜோவைத் தூக்கிக் கொண்டு நெருப்பிலிருந்து எப்படியோ தப்பித்தாள்.*

**அரிசிப்பெட்டி**



சடோவுக்கு வழக்கமாக உடையணிந்துவிடும் வேலையாள், ஒருநாள் கவனம் தடுமாற சடோ மூர்க்கமானார். வேலையாளைக் கொன்றார். அதுமுதல் சடோவை நெருங்குவது என்றாலே வேலையாள்கள் கிலியானார்கள்; பலியும் ஆனார்கள். ஒருநாள் சடோ, தன் ஆடைகளில் துர்சக்தி புகுந்துவிட்டது எனக் கதறி, பல ஆடைகளைக் குவித்துப் போட்டுக் கொளுத்தினார். சில சமயங்களில் பிறந்த கோலத்தில் திரிந்தார்.

ஒருமுறை தன்னைச் சந்திக்க சடோ வந்தபோது இளவரசி ஹையெஜியோங் அலறினாள். அவர் கையில் ஒரு கோல். அதில் அறுக்கப்பட்ட ஒரு திருநங்கையின் தலை சொருகப்பட்டிருந்தது. அந்தப்புரப் பெண்கள் மீது சடோ முரட்டுத் தனமாகப் பாய்வதும், இணங்க மறுப்பவர்கள் உயிர் மாய்வதும் தொடர்ந்தன. சடோவின் வேலையாள்கள், வைத்தியர், அந்தப்புரப் பெண்கள், அரசு அலுவலர்கள் என்று தினமும் ஓரிரு பிணங்கள் மாளிகையை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. ‘‘அதென்னவோ தெரியல... ரத்தம் பார்த்து உயிரைக் கொன்னாதான் என் மனசு அமைதியாகுது’’ என்று மனச்சலனமற்ற ஒரு பொழுதில் இளவரசியிடம் வாக்குமூலம் தந்தார் சடோ. பின்பு ஒரு நாளில் சதுரங்கப் பலகையால் இளவரசியையே கடுமையாகத் தாக்கினார். அவள் காயங்களோடு உயிர் தப்பினாள்.

இறந்து போன சடோவின் சகோதரி Hwahyop-ன் கணவனுக்கும் சடோவுக்கும் ஒரு பிரச்னை. ஒரு கட்டத்தில் சடோ, அரண்மனை வளாகத்திலேயே கொலைவெறியுடன் தன் மச்சானைத் துரத்தினார். மச்சான் பதுங்கித் தப்பிக்க, மன்னரின் மாளிகை வளாகத்தில் சடோ வெறியுடன் திரிந்தார். செய்தி திரிக்கப்பட்டது. ‘இளவரசர், மன்னரையே கொல்வதற்கு முயற்சி செய்கிறார்.’ இயோங்ஜோவுக்கு அழுத்தம் அதிகமானது. ‘‘இந்தப் பிரச்னையைத் தீர்க்கலேன்னா, உம்ம பதவிக்கே ஆபத்து!’ நோரோன்கள் மன்னரை எச்சரிக்கைகளால் பிதுக்கினார்கள். சடோ, தன் இளைய சகோதரி ஒருத்தியிடமும் அத்துமீற, அவளும் மன்னரிடம் கதறினாள். சடோவின் தாயாரும் தன் கணவரிடம் கண்ணீர் சிந்தினாள். ‘‘நம்ம பேரன்

*ஜியோன்ஜோவைக் காப்பாத்தணும்னா வேற வழியே இல்லை. நீங்க சடோவை...'' - நெஞ்சில் அடித்து அழுதாள்.*





*கி.பி 1762. ஜூலை 4. மன்னர் முன் சடோ குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். ''இனி இவன் ராஜ வாரிசு இல்லை'' என அறிவித்தார் இயோங்ஜோ. ''ஏன் இப்படிக் குற்றங்கள் செய்தாய்?'' என மன்னர் கேட்க, கண்ணீருடன் சடோ சொன்ன பதில், ''நீங்கள் என் தந்தை. நான் உங்களிடம் எதிர்பார்த்தது ஒரு துளி அன்பை மட்டுமே. அது எப்போதுமே கிடைக்கவில்லை. இப்போதாவது...''*

*மரண தண்டனையை நிறைவேற்றச் சொல்லி அந்தத் தகப்பன் கட்டளை இடவில்லை. காரணம், அவர்களது மரபுப்படி குற்றவாளிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால், அவனது மனைவியும் குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும். ஆகவே சடோவுக்கு வேறொரு முறையில் சாகும் வாய்ப்பளித்தார். மரத்தாலான ஒரு அரிசிப் பெட்டியை அங்கே கொண்டு வந்து வைத்தார்கள். நான்கடி நீளம், நான்கடி அகலம், நான்கடி உயரமுள்ள அந்த அரிசிப்பெட்டி, சடோவுக்கான வாய்க்கரிசிப் பெட்டியாக முடிவு செய்யப்பட்டது.*

இளவரசி ஹையெஜியோங் கண்ணீர் மல்க நின்றாள். பேரன், மன்னர் முன் விழுந்து கெஞ்சினான். ''என் அப்பாவை விட்டுவிடுங்கள்!'' இருவரும் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

சடோ, தன் தந்தையைக் கடைசியாகக் கண்ணீர் மல்கப் பார்த்தார். இனியும் பேசுவதற்கு ஏதுமில்லை. அந்தப் பெட்டிக்குள் இறங்கினார். இறுதியாக ஒருமுறை சடோவின் கண்கள் வெளி உலகத்தை, ஆகாயத்தைப் பார்த்தன. பெட்டி மூடப்பட்டது. அதன் மேல் ஆணிகள் இறங்கின.

சடோவின் கதறல் சத்தம் அன்று முழுக்கக் கேட்டுக்கொண்டே இருந்தது. ஏழாவது நாள் இறுதியாக ஒருமுறை கேட்டது. எட்டாவது நாள் 27 வயது சடோவின் பிணம் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. சகல மரியாதையுடனும் சடோவின் அடக்கம் நடந்தது. கூடவே அவருடைய வேலையாள்கள், அலுவலர்கள், வீரர்கள், ஆசைநாயகிகள் சிலரும் மன்னரின் கட்டளைப்படி கொல்லப்பட்டனர்.



**சடோ வரைந்த நாய் ஓவியம்**

தாய் நாய் ஒன்றை, குட்டிகள் பாசத்துடன் தேடி ஓடி வருவது போல சடோ வரைந்த ஓவியம் பிரபலமானது. அதுதான் அவர் தன் வாழ்வில் எதிர்பார்த்துக் கிடைக்காத விஷயமும்கூட. பெற்றோரின் வாஞ்சையான அரவணைப்போடு இளவரசர் வளர்க்கப்பட்டிருந்தால், அவர் விதி வேறு மாதிரியும் இருந்திருக்கலாம்.

மன்னர் இயோங்ஜோ கி.பி 1776-ல் இறந்துபோனார். அவருக்குப் பிறகு சடோவின் மகன் ஜியோன்ஜோ மன்னர் ஆனார். தன் தந்தை சடோவுக்கு 'இளவரசர்' என்ற பட்டத்தை மீண்டும் வழங்கி, பிரமாண்ட கோட்டையொன்றில் நினைவிடம் அமைத்து மரியாதை செய்தார். ('Hwaseong' என்ற அந்தக் கோட்டை, யுனெஸ்கோவால் பாரம்பர்ய சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.)

இளவரசி ஹையெஜியோங், தன் கணவனின் நினைவுகளைப் புத்தகமாக எழுதி வைத்தாள். அந்தப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு, சடோவின் கதை பலமுறை படமாக்கப்பட்டிருக்கிறது. 2015-ல் வெளியான 'The Throne' என்ற கொரிய படம் கூட பிளாக் பஸ்டர் ஹிட். சடோ, வாழ்க்கையில் தோற்றவர். அந்தத் தோல்வியாளரின் கதை சினிமாவாக என்றைக்குமே தோற்றதில்லை.

(வருவார்கள்...)

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 1**

**முகில், படம்: பா.காளிமுத்து**




## மண்ணில் வாழ்ந்த எமன்!


ஹூனர்கள்... மத்திய ஆசியப் பகுதிகளில் வாழ்ந்த நாடோடி இனத்தவர்கள். மேய்ச்சல்தான் பிரதானத் தொழில். ஆனால், கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் அசுரப் பாய்ச்சலில் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தி, புதிய ராஜ்ஜியங்களை அமைத்த அதிரடி வீர வரலாறு இவர்களுக்கு உண்டு. இவர்களில் ஒரு பிரிவினர், மேற்கே ரோம் சாம்ராஜ்ஜியத்தை நோக்கிப் படையெடுத்தனர். இன்னொரு பிரிவினர், கைபர் கணவாய் வழியே இந்தியாவை நோக்கிப் படையெடுத்தனர். இங்கே வந்தவர்கள், வெள்ளை ஹூனர்கள் (அல்லது ஹெப்தலைட்ஸ்) என்றழைக்கப்படுகிறார்கள்.

அப்போது இந்தியாவின் பெரும்பகுதி குப்தப் பேரரசாக விளங்கியது. பேரரசர் ஸ்கந்த குப்தரின் மறைவுக்குப் பிறகு குப்தப் பேரரசு தள்ளாடிக் கொண்டிருந்த நிலையில், ஹூனர்களின் மன்னர் தோரமணன் இந்தியா மீது படையெடுத்தார். இங்கே பல ராஜ்ஜியங்களை வாரிச் சுருட்டி கக்கத்தில் வைத்துக்கொண்டார். சஞ்செலி கல்வெட்டுக் குறிப்புகளின்படி, கி.பி 493 முதல் கி.பி 515 வரை ஆட்சி செய்த மாமன்னர் தோரமணனின் ராஜ்ஜியம், ஈரானியர்களின் பழம்பெரும் நகரமான பாக்திரியாவிலிருந்து, இந்தியத் துணைக்கண்டத்தின் குஜராத், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், காஷ்மீரின் சில பகுதிகள் வரை பரவியிருந்தது.

கி.பி 510-ல் நடந்த ஒரு போரில் குப்த மன்னர் பானு குப்தரிடம் தோரமணன் தோற்றுப்போனார். கி.பி 515-ல் எமனிடம் தோற்றுப்போனார்.

அவருக்குப் பின் அவரின் மகனான இரண்டாம் தோரமணன்தான் அரியணைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், தோரமணனின் இன்னொரு மனைவியின் மகனான மிகிரகுலன் முரட்டு பலத்துடன் அரியணையைக் கைப்பற்றினார். இரண்டாம் தோரமணன் தலைமறைவாக வாழ ஆரம்பித்தார்.

கி.பி 515 தொடங்கி 540 வரை ஆட்சி செய்தார் மிகிரகுலன். (சிலர் 530 வரை என்கிறார்கள்... காலத்தில் குழப்பம் உண்டு!) அவர் பற்றி கல்வெட்டுகள் வழியாகவும், ஓரிரு நூல்கள் வழியாகவும் நமக்குக் கிடைத்திருப்பவை சொற்ப செய்திகளே. ஆனால், அவையே குலைநடுங்கச் செய்பவை.



மிகிரகுலன் உருவம் பொறித்த நாணயம்

மிகிரகுலன் என்ற பெயருக்கான பொருள், 'சூரியனை வணங்குபவர்'. ஹூனர்கள், காந்தார தேசத்தில் கால் வைத்தபோது சிவ வழிபாட்டையும் ஏற்றுக்கொண்டார்கள். தோரமணனும் மிகிரகுலனும் சிவ பக்தர்களே. தோரமணனுக்குச் சில பெருமைகள் உண்டு. ஹூனர்களின் படை பலத்தைப் பெருக்கியவர். ஆகச்சிறந்த நிர்வாகி. மக்கள் மீது அக்கறை கொண்டவர். மக்கள் விரும்பிய ஹூன மாமன்னர்.

ஆனால், மிகிரகுலனின் ஆட்சியில் எல்லாம் தலைகீழ். ஹூனர்களே அவரைக் கண்டு நடுங்கும்படியான குணச்சித்திரம் கொண்டிருந்தார் அவர். ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கப் பயணியான காஸ்மாஸ் இண்டிமோபிளெஸ்டெஸ் என்பவர், மிகிரகுலன் படையை நேரே கண்டு வாய் பிளந்து குறிப்பெழுதியிருக்கிறார். 'யானைகள் 2,000 இருக்கும். குதிரைப்படை எண்ணிக்கையில் அடங்காது.' இப்பேர்ப்பட்ட படை கொண்ட மிகிரகுலனின் காட்டுத்தனமான தாக்குதலில் பல ராஜ்ஜியங்கள் வீழ்ந்தன. ஆப்கானிஸ்தான் முதல் மத்தியப்பிரதேசத்தின் குவாலியர் வரை ராஜ்ஜியத்தின் எல்லை பரவிக் கிடந்தது. சகாலாவைத் (பாகிஸ்தானிலுள்ள இன்றைய சியால்கோட்) தலைநகரமாகக் கொண்டு கொடுங்கோல் ஆட்சி புரிந்தார் மிகிரகுலன். பிணந்தின்னிக் கழுகுகளும் வல்லூறுகளும் காகங்களும் மிகிரகுலன் செல்லுமிடங்களிலெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தன. பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள், பிராமணர்கள், நோயாளிகள் எல்லோரும் சமமே. ஆம், கொல்லப்பட வேண்டிய எதிரிகளே. பிணங்களுக்கும் மரண ஓலங்களுக்கும் மத்தியில் அமர்ந்து ஓய்வெடுப்பதே மிகிரகுலனுக்கு ஆகச்சிறந்த இளைப்பாறலைத் தந்தது.

'வியக்கத்தக்க வீரன். இயற்கையிலேயே திறமையானவன்' என்று மிகிரகுலனுக்கு நற்சான்றிதழ் கொடுத்திருப்பவர், ஏழாம் நூற்றாண்டு சீனப் பயணியான யுவான் சுவாங். ஆனால், புத்த மத நூல்கள் பலவும் வெறுப்பு பொங்கச் சொல்லும் செய்தி, 'இவன் பௌத்தத்தின் பகைவன்!'

*ஆம், மிகிரகுலனுக்குப் பௌத்தம் ஆகாது. ஆகவே, பௌத்தத் துறவிகளைக் கொல்வதும், அம்மதத்தைப் பின்பற்றுவர்களைக் கழுத்தறுப்பதும், புத்த மடாலயங்களைத் துவம்சம் செய்வதும் ஹூனர்களுக்கு 'எக்ஸ்ட்ரா கரிகுலர்' ஆக்டிவிட்டீஸாக இருந்தன. 'மிகிரகுலனின் ராஜ்ஜியத்துக்கு உள்பட்ட பகுதிகளிலிருந்த சுமார் 1,400 பௌத்த மடாலயங்கள் அழிக்கப்பட்டன' என்கிறது ஒரு குறிப்பு.*

*மண்டோசோர் கல்வெட்டுச் செய்தியின்படி, மால்வாவின் மன்னர் யசோதர்மன், போரில் மிகிரகுலனைத் தோற்கடித்தார் (கி.பி.533). அதன்பிறகு இந்தியாவின் மேற்குப் பகுதியில் தன் பலத்தை நிரூபிக்க நினைத்த மிகிரகுலன், பாடலிபுத்திரத்திலிருந்த நரசிம்ம குப்த பலாதித்யருக்கு ஆணை ஒன்றை அனுப்பினார். 'நீவிர், உம் ராஜ்ஜியத்தில் உள்ள பௌத்த மடாலயங்களை எல்லாம் அழிக்க வேண்டும். புத்தத் துறவிகளைக் கொல்ல வேண்டும். அங்கே புத்தரின் சுவடுகள் எதுவுமே இருக்கக்கூடாது.'*

*புத்த நேசரான குப்தர் அதை மதிக்கவில்லை. ஆகவே, மிகிரகுலன் ரத கஜ துரக பராதிகளுடன் வெறிகொண்டு கிளம்பினார். பாடலிபுத்திரத்தை அடைந்தபோதுதான் தெரிந்தது, நரசிம்ம குப்தர் தப்பித்துவிட்டார் என்று. துரத்தினார்... துரத்தினார்... வங்கக்கடல் எல்லை வரை துரத்தினார். ஆனால், குப்தர் சிக்கவில்லை. சிக்கிய புத்த பிட்சுகளெல்லாம் உயிர் தப்பவில்லை.*

*''அருகில்தான் நாளந்தா பல்கலைக்கழகம். அங்கே செல்லலாமா?'' என்றார் மிகிரகுலன். படிப்பதற்கு அல்ல, இடிப்பதற்கு. நாளந்தா பல்கலைக்கழகம் முதன்முதலில் தாக்கப்பட்டது மிகிரகுலனால்தான். அங்கே பல்வேறு பொக்கிஷங்களும் சிதைக்கப்பட்டன. பௌத்த துறவிகளும் மாணவர்களும் மரணத்தைத் தழுவினார்கள்.*

*பிற்பாடு அதே பௌத்த மதம்தான் மிகிரகுலனுக்கு உயிர்ப்பிச்சை போட்டது. நரசிம்ம குப்தர் திரும்பி வந்தார், பெரும் படைபலத்துடன். ஹூனர்களை ஓடவிட்டார். மிகிரகுலன் பிடிபட்டார். பல காலம் சிறைவாசம்.*

ஆனால், கொல்லப்படவில்லை. உயிர்களிடத்தில் கருணை காட்டச் சொல்லியிருக்கிறாரல்லவா புத்தர். ஆகவே, 'பிழைத்துப் போ' என்று மிகிரகுலனை அனுப்பி வைத்தார். அவர் சிறைபட்டிருந்த காலத்தில் அவருடைய சகோதரர் இரண்டாம் தோரமணன், ஹூனர்களின் ஆட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளைத் தன் வசப்படுத்தியிருந்தார்.

மிகிரகுலன் எங்கே செல்வதென்று தெரியாமல் காஷ்மீருக்குச் சென்றார். அங்கே ஓர் அப்பாவி மன்னர், இந்தத் துஷ்டனைக் கண்டு தூர விலகாமல் இஷ்டப்பட்டு அடைக்கலம் கொடுத்தார். அவருக்குக் கஷ்டகாலம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் சமர்த்தாக இருந்த மிகிரகுலன், பின் அந்த மன்னனுக்கு எதிராகப் படை திரட்டினார். மன்னனைக் கொன்றார். தான் அரியணையில் அமர்ந்தார். மீண்டும் தனது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டு காந்தார தேசத்தின் மீது படையெடுத்தார். வென்றார். காந்தாரம் கந்தரகோலமானது. காந்தாரத்திலும் காஷ்மீரிலும் பௌத்த மடாலயங்கள் மண்ணோடு மண்ணாயின. கொல்லப்பட்ட பௌத்தர்கள் புத்தருக்குள் நித்திரை அடைந்தனர்.

நாளந்தா பல்கலைக்கழகம்



*காஷ்மீரை ஆண்ட மன்னர்களின் கதையைச் சொல்லும் வரலாற்று நூல், 'ராஜ தரங்கிணி'. பன்னிரண்டாம் நூற்றாண்டில் காஷ்மீரில் வாழ்ந்த கல்ஹனா என்பவரால் எழுதப்பட்ட இந்நூலில், மிகிரகுலன் நிகழ்த்திய குரூரங்களை விவரிக்கும் பக்கங்களும் உண்டு.*

*ஒரு சமயம், தன் ராணி ஒருத்தியின் ரவிக்கையை உற்றுக் கவனித்தார் மிகிரகுலன். அதில் மார்புப் பகுதியில் தங்க ஜரிகையால் இரண்டு பாதங்கள் நெய்யப்பட்டிருந்தன. 'என்ன அது' என்று விசாரித்தார். ''இது சிலோனில் இருந்து வந்த ரவிக்கை. இந்தப் பாதங்கள் சிலோன் அரசரின் பாதங்களைக் குறிப்பவை'' என்றார் காரியதரிசி. கோபம் உச்சிக்கு ஏறியது. ''என்னது, எனது ராணியின் ரவிக்கையில் எவனோ ஒருவனின் பாதங்களா? படைகள் கிளம்பட்டும்!''*

*சிலோனுக்குப் படையெடுத்துச் சென்ற மிகிரகுலன், அங்கே சர்வ நாசம் விளைவித்தார். அதன் மன்னனைக் கொன்றார். தனக்குக் கட்டுப்பட்ட இன்னொரு பிரகஸ்பதியை அங்கே அரியணையில் அமர வைத்துவிட்டுக் கிளம்பினார். இங்கே தமிழகத்தில் பல்லவர்கள் ராஜ்ஜியத்திலும், சோழர்களின் ராஜ்ஜியத்திலும் மிகிரகுலனின் படைகள் நுழைந்து ஆட்டம் காட்டிவிட்டுச் சென்றதாகச் சொல்கிறது ராஜதரங்கிணி.*

*காஷ்மீருக்குத் திரும்பிக்கொண்டிருந்த மிகிரகுலனின் படைகள் ஒரு பள்ளத்தாக்குப் பகுதியில் பயணம் செய்தன. அப்போது யானை ஒன்று கால் இடறி, அலறலுடன் பள்ளத்தில் உருண்டு விழுந்து கதறி இறந்தது. அந்தக் கதறலும், வலியின் பிளிறலும், மிகிரகுலனின் காதுகளுக்கு மெல்லிசையாக ஒலித்தது.*

*''அட, இந்த இசை இன்பமாக இருக்கிறதே. இன்னொரு யானையைத் தள்ளிவிடுங்கள்!''*

*தள்ளினார்கள். அதே கதறல். ரசித்துச் சிரித்தார். ''இன்னும் சில யானைகளைத் தள்ளுங்கள்.''*

*அந்தப் பள்ளத்தாக்கெங்கும் யானைகளின் அவல ஒலி எதிரொலித்துக்கொண்டே இருந்தது. பேரானந்தத்தில் தன்னை மறந்து சிரித்தபடியே இருந்தார் மிகிரகுலன். அவர் தன் வாழ்வில் சிரித்தது அந்த ஒருமுறை மட்டும்தான். அதற்காகக் கொல்லப்பட்ட யானைகளின் எண்ணிக்கை நூறு இருக்கலாம்.*

*சந்த்ரகுல்யா ஆற்றை மடை மாற்றிவிடும் வேலைகளைச் செய்தார் மிகிரகுலன். அப்போது, பெரிய பாறை ஒன்று தடையாகக் குறுக்கே இருந்தது. அதை அசைக்க முடியவில்லை. தவம் செய்தார் மிகிரகுலன். தன்னிடம் கடவுள் வந்து, 'பாறைக்குள் சக்திமிக்க யட்சன் ஒருவன் வசிக்கிறான். பத்தினி ஒருத்தியின் கைபட்டால் அவன் வழிவிடுவான். பாறை நகரும்' என்று தெரிவித்ததாகச் சொன்னார். பல்வேறு உயர்குடி பெண்கள் வரவழைக்கப்பட்டனர். பாறையைத் தொட்டனர். நகரவில்லை. பின், ஒரு குயவனின் மனைவியான சந்த்ரவதி வந்து பாறையைத் தொட்டாள். நகர்ந்தது. வழி பிறந்தது. மிகிரகுலன் மீதமிருந்த பெண்களைப் பார்த்து கர்ஜித்தார். ''இந்தப் பாவம் பிடித்தப் பெண்களையெல்லாம் கொல்லுங்கள். இவர்களின் குடும்பத்தினரையும் விட்டுவைக்காதீர்கள்.'' சந்த்ரகுல்யா ஆறு, ரத்த ஆறாக மாறியது.*

*'இத்தனைப் பாவங்கள் செய்துவிட்டோமே' என்று பிராயச்சித்தமாக சில கோயில்களைக் கட்டினார் மிகிரகுலன். அதில் மிகிரேஸ்வரா என்ற அவர் பெயரிலான கோயிலும் அடக்கம். ஹோலடா என்ற நகரத்தின் பெயரை 'மிகிராபுரா' என்று மாற்றி வைத்தார். பாவங்களைப் போக்க பிராமணர்களுக்கு நூற்றுக்கணக்கில் அக்ரஹாரங்களைக் கட்டிக் கொடுத்தார். காஷ்மீர் பிராமணர்கள் வேண்டாமென விலகி ஓடினர். காந்தார பிராமணர்கள் ஏற்று மகிழ்ந்தனர்.*

இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்ட மிகிரகுலன், தனக்கு நரகம்தான் வாய்க்குமோ என்று அஞ்சினார். யாகங்களை மேற்கொண்டார். சுபயோக சுபதினம் ஒன்றில், கடும் தவத்துக்குப் பிறகு நெருப்பை மூட்டச் சொன்னார். அதில் கூரிய ஆயுதங்கள் போடப்பட்டன. கையைத் தலைக்குமேல் குவித்து வணங்கியபடி, தகிதகிக்கும் நெருப்பில் குதித்தார். எமனடி சேர்ந்தார். சுபமஸ்து!

**டெயில் பீஸ்:** மிகிரகுலனுக்கு 'மண்ணில் வாழ்ந்த எமன்' என்ற பட்டம் உண்டு. ஆம், போரினாலும் இன்ன பிற கொடூரங்களினாலும் மிகிரகுலனால் கொல்லப்பட்ட உயிர்களின் உத்தேச எண்ணிக்கை மூன்று கோடி இருக்கலாம் என்கிறார்கள்.

(வருவார்கள்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 12

முகில், படம்: பா.காளிமுத்து




### அநாதை To அதிபர்

அந்தக் கிராமத்தின் தலைவரான மிண்டோகோன், பிரெஞ்சுக் காவலர்களால் தரதரவென இழுத்துச் செல்லப்பட்டார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் கீழ்ப்படியாமை மற்றும் புரட்சியைத் தூண்டியது. 1927, நவம்பர் 13 அன்று Mbaiki என்ற நகரத்திலுள்ள சதுக்கத்துக்கு மிண்டோகோனை, பிரெஞ்சுக் காவலர்கள் இழுத்து வந்தார்கள். எல்லோர் முன்னிலையிலும் தாக்கித் துன்புறுத்தினார்கள். அடியும் உதையும் மிதியும் தொடர்ந்துகொண்டே இருந்தது, அவர் உயிரிழக்கும் வரை.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், மத்திய ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் பிரான்ஸின் காலனி ஆதிக்கம் கொடிக்கட்டிப் பறந்தது. பிரான்ஸைச் சேர்ந்த பதினேழு நிறுவனங்கள், அந்தப் பகுதிகளின் இயற்கை வளங்களைச் சுரண்டிக் கொழித்தன. அதற்கு வேலை செய்வதற்கென்றே உள்ளூர் மக்களை அடிமைகளாகப் பயன்படுத்தினர்.

Bobangui என்ற கிராமத்தின் தலைவராக இருந்தவரே மிண்டோகோன். பிரான்ஸின் ஒரு நிறுவனத்துக்கு அடிமைகளாக வேலை செய்ய தன் கிராமத்து ஆள்களை விநியோகித்து வந்தார். கங்காணி வேலை. அதே சமயம் கர்னு என்ற தலைவர் பிரான்ஸின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிவந்தார். மிண்டோகோனும் கர்னுவால் ஈர்க்கப்பட்டார். ஆள்களை விநியோகம்

செய்வதை நிறுத்தினார். பதிலுக்கு அவர்கள் மிண்டோகோனின் மூச்சை நிறுத்தினார்கள்.

பொகாஸா



தன் கணவன் இறந்த துக்கம் தாளாமல் தற்கொலை செய்துகொண்டாள் மிண்டோகோனின் மனைவியான மேரி. இந்தத் தம்பதிக்கு மொத்தம் பன்னிரண்டு பிள்ளைகள். அதில் ஒரு மகனே பொகாஸா. அப்போது அவனுக்கு வயது ஆறு. 'நான் இப்படி அநாதையாகக் காரணம் பிரான்ஸ்தான். பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகப் போராடி என் தாய் மண்ணை மீட்பேன். என் பெற்றோரைக் கொன்றவர்களைப் பழி வாங்கியே தீருவேன்' என்று சபதம் எடுக்கும் தெளிவெல்லாம் அவனுக்கு இல்லை. பிரான்ஸ் நடத்திய ஒரு கிறிஸ்தவ மிஷனரி பள்ளிதான் பொகாஸாவுக்கு ஆதரவு கொடுத்தது.

பிரான்ஸின் அரவணைப்புடன்தான் பொகாஸா வளர்ந்தான். சாகும் வரையில் பிரான்ஸ் மீதான அதீதப் பாசம் குறையவே இல்லை.

பள்ளியில் பொகாஸா தனிமைப்படுத்தப்படுவது வாடிக்கையானது. அநாதை என்று சக சிறுவர்கள் பரிகசிப்பதும் வலித்தது. இருந்தும், படிப்பில் கவனம் செலுத்தினான். ஜீன் பெடெல் என்பவர் எழுதிய பிரெஞ்சு இலக்கணப் புத்தகம் அவனை ஈர்த்தது. அதையே படித்துக் கொண்டிருந்தான். ஆசிரியர்கள் அவனை 'ஜீன் பெடெல் பொகாஸா' என்றே வேடிக்கையாக அழைக்க ஆரம்பித்தனர். அதையே தன் முழுப் பெயராகவும் பெருமையுடன் மாற்றியமைத்துக் கொண்டான். அவனுக்கு பிரெஞ்சு மொழி பிடித்தது. பிரெஞ்சுக்காரர்களைப் பிடித்தது. பிரெஞ்சுக் கலாசாரம் ஈர்த்தது. எல்லாவற்றையும்விட, பிரான்ஸின் மாவீரன் நெப்போலியனை அதிகம் பிடித்தது. 'நானும் ஒருநாள் நெப்போலியன் போல சக்கரவர்த்தி ஆவேன்!' - அவன் கண்களில் கனவு மிதந்தது.

இளவயதில்
பொகாஸா



அதற்கேற்பவே பொகாஸாவின் வாழ்க்கைப் பாதையும் அமைந்தது. பருவ வயதில் ராணுவத்தில் இணைந்தார், பொகாஸா. பிரான்ஸ் தேசத்துக்காகப் பணியாற்றும் மத்திய ஆப்பிரிக்க ராணுவ வீரர். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் நாஸிப் படைகளை எதிர்த்துப் போரிட்டார். போரின் இறுதியில் ஜெர்மனிக்குள்ளேயே புகுந்து, எஞ்சிக் கிடந்த நாஸி வீரர்களைத் துவம்சம் செய்யும் படைப் பிரிவிலும் இருந்தார். போருக்குப் பிறகும் ரேடியோ தொலைத்தொடர்பு நுட்பம் கற்றுக்கொண்டு, பிரான்ஸின் ராணுவத்திலேயே பணியாற்றினார்.

பிரெஞ்சு காலனியான இந்தோசீனா பகுதிக்கு 1950-ல் சென்ற படைப் பிரிவில் பொகாஸாவும் இருந்தார். வியட்நாம். அங்கே ஒரு பெண் இவர் விழியில் விழுந்து, இதயம் நுழைந்து, உயிரில் கலந்தாள். திருமணம் செய்து கொண்டார்கள். பொகாஸா தகப்பனும் ஆனார். பிறந்த பெண் குழந்தையை

பிரெஞ்சுக் குடிமகளாகப் பதிவுசெய்தார். 1953-ல் வியட்நாமிலிருந்து கிளம்ப வேண்டியதிருந்தது. 'அழாதே பெண்ணே! நிச்சயமாக நான் மீண்டும் இங்கே வருவேன்.' - பிரிவு முத்தத்துடன் சத்தியம் செய்துவிட்டுக் கிளம்பினார். சத்தியமாக அங்கு திரும்பி வரவே இல்லை.

உபாங்கி ஆற்றின் கரைகளிலும், சாரி ஆற்றின் படுகையிலும் அமைந்துள்ள மத்திய ஆப்பிரிக்கப் பிரதேசத்தை பிரெஞ்சுக்காரர்கள் 'உபாங்கி-சாரி' என்றே அழைத்தனர். பிரெஞ்சுக் காலனியாக இருந்த உபாங்கி-சாரி, 1958-ல் பிரான்ஸின் சுயாட்சி உரிமை பெற்ற நாடாக மாறியது. 1960, ஆகஸ்ட் 13-ல் பிரான்ஸிடம் இருந்து விடுதலை பெற்று, 'மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு' என்ற புதிய தேசமாக மலர்ந்தது.

இந்தோசீனாவிலிருந்து மீண்டும் பிரான்ஸுக்குத் திரும்பிய பொகாஸா, அங்கே லெப்டினன்ட்டாகப் பதவி உயர்வு பெற்றுப் பணியைத் தொடர்ந்தார். சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு தன் தாய் மண்ணான உபாங்கி-சாரிக்குத் திரும்பினார் (1959). 'சிலுசிலுவெனக் குளிர் அடிக்குது அடிக்குது... சிறு அரும்புகள் மலர் வெடிக்குது வெடிக்குது... வனம் விட்டு வனம் வந்து மரங் கொத்தி பறவைகள் மனம் விட்டு சிரிக்கின்றதே...' -பொகாஸோவின் மனம் மகிழ்ந்தது.

டேவிட் டாக்கோ. உபாங்கி-சாரியின் முக்கிய அரசியல்வாதி. அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு மலர்ந்தபோது, அதன் முதல் அதிபராக நியமிக்கப்பட்டவர் டேவிட் டாக்கோதான். பொகாஸாவின் ஊர்க்காரர். இருவரும் தூரத்து உறவினர்களும்கூட. ஆகவே, 1962-ல் பிரான்ஸ் ராணுவப் பணியிலிருந்து விலகிய பொகாஸா, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் ராணுவத்தில் இணைந்தார். டேவிட், ராணுவ பலத்தைப் பெருக்கும் பொறுப்பையும், தலைமைத் தளபதி பொறுப்பையும் நம்பிக்கையுடன் பொகாஸாவிடம் ஒப்படைத்தார். அதுவரை மனித பலத்துடன் இயங்கிக்கொண்டிருந்த

பொகாஸா, ஆப்பிரிக்க யானை பலத்துடன் பிளிற ஆரம்பித்தது அதற்குப் பிறகுதான்.

பிரான்ஸின் ராணுவத்தில் பணியாற்றிய பேரனுபவம் கைகொடுத்தது. தேசத்தின் மொத்த ராணுவத்தையும் அதிகாரம் செய்யும் கர்னலாக உயர்ந்தார் (1964). பொது நிகழ்ச்சிகளில் மிடுக்குடன் கலந்துகொண்டார். அவர் அதுவரை வாங்கிய ராணுவப் பதக்கங்களும் அங்கீகாரங்களும் அவரது உடையில் பளபளத்தன. அதிபர் டேவிட்டுக்கு இணையாக அமர்ந்து கெத்து காட்டினார். அவரது ஆணவமும் அதிகாரமும் கொடிகட்டிப் பறந்தன. அரசின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியான ஜீன் பவுல், அதிபரிடம் எச்சரித்தார். 'ஆட்டம் ஜாஸ்தியா இருக்குது. பாத்துக்கோங்க.'



அதிபர் டேவிட் டாக்கோ

டேவிட்டும் லேசுப்பட்ட ஆள் அல்ல. சர்வாதிகார லட்சணங்கள் கொண்டவரே. தான் அதிபராக வந்த சில மாதங்களிலேயே எதிர்க்கட்சிகளை எல்லாம் ஏறக்கட்டினார்.

MESAN என்ற தனது கட்சியைத் தேசத்தின் ஒரே கட்சியாக்கினார். 1964-ல் 'ஜனநாயக' முறைப்படி தேர்தலும் நடத்தி, 60 மீஸான் உறுப்பினர்கள் அடங்கிய பூரணப் பெரும்பான்மை கொண்ட ஆட்சி அமைத்தார். எங்கும் எதிலும் ஊழல்.

எப்போதும், எல்லா இடங்களிலும் பெரியண்ணன்களின் தலையீடுதானே பிரச்னை. மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, சுதந்திர தேசமென்றாலும், அதன் பாதுகாப்பு, வணிகம், பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கைகளில் பெரியண்ணன் பிரான்ஸின் தலையீடு அமோகமாக இருந்தது. அந்தத் தேசத்தின் வைர வளம், பிரான்ஸுக்கு அவ்வளவு முக்கியமாக இருந்தது. இங்கே சீனா, தனது சப்பை மூக்கை நுழைத்தது. 'நாங்கள் உங்களுக்குத் தொழில் வளர்ச்சியில் உதவுகிறோம். அதற்கான கடன்களை அள்ளி அள்ளிக் கொடுக்கிறோம். ஆதரிப்பீர் கம்யூனிசம்!' என்று செவ்வொளி பரப்ப முயன்றது. பிரான்ஸின் ஏகபோக அதிகாரத்தை விரும்பாத டேவிட்டும் சீனாவின் பக்கம் சாய நினைத்தார்.

தளபதிகள், ராணுவப் புரட்சி செய்து, ஆட்சியைக் கவிழ்த்து, சர்வாதிகாரியாக உருமாறுவதுதானே உலக வழக்கம். அதேபோன்ற சூழல்தான் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசிலும் நிலவியது. அமைச்சர்கள் சிலர், அதிபரை எச்சரித்தனர். 'கர்னலை ராணுவப் பணியிலிருந்து விடுவித்து, ஏதேனும் ஒரு துறைக்கு அமைச்சராக்கிவிடுங்கள். ஆபத்து குறையும்.' அதிபர் கேட்கவில்லை. பொகாஸாவைத் தவறாக எடைபோட்டார். 'கர்னலுக்குக் கொத்துக் கொத்தாக மெடல்களை வாங்கிக் குத்திக்கொள்வதில்தான் ஆர்வம். ஆட்சியைக் கவிழ்க்கும் அளவுக்கு அவர் புத்திசாலி அல்ல.'

பிறகு, பொகாஸாவின் மமதை ததும்பும் நடவடிக்கைகள் எல்லை மீற, டேவிட்டுக்குப் பயம் வந்தது. 1965 -ம் ஆண்டு ஜூலையில், விழா ஒன்றுக்காக பாரிஸுக்குச் சென்றார் பொகாஸா. டேவிட், அவரை நாடு திரும்ப விடாமல் தடுத்தார். 'நான் என்றுமே பிரான்ஸின் உண்மைத் தொண்டன். எனக்கு ஆதரவு கொடுங்கள்!' என்று பிரெஞ்சு அரசியல்வாதிகளின் ஆதரவைத் திரட்டினார் பொகாஸா. பிரான்ஸ், தன் வளர்ப்பு மகன் பொகாஸாவை நம்பியது. 'கர்னலைத் தேசத்துக்குள் அனுமதிக்காமல் தடுப்பது உங்களுக்கு நல்லதல்ல' என்று அதிபர் டேவிட்டை மிரட்டியது.

பொகாஸா நாடு திரும்பினார். அதிபருக்கும் அவருக்குமான முட்டல், மோதல்கள் வேலி தாண்டின. பொகாஸாவைக் கைது செய்து சிறையில் அடைக்கும் சந்தர்ப்பத்துக்காக டேவிட் காத்திருந்தார். டேவிட்டை மொத்தமாக முடக்கும் சந்தர்ப்பத்தை பொகாஸா உருவாக்கிக் கொண்டார்.



உபாங்கி-சாரியில் பிரெஞ்சுப்படை

சம்பளமே வரவில்லை என்று ஊழியர்கள் ஸ்டிரைக் நடத்திக் கொண்டிருந்தார்கள். எல்லைகளிலும் ஏகப்பட்ட பிரச்னைகள். பொருளாதாரச் சீரழிவால் தேசமே அதிபர் மீது அதிருப்தியில் இருந்தது. 1965, டிசம்பர் 31. பொகாஸாவின் ராணுவப் புரட்சி அரங்கேறியது. அலெக்சாண்ட்ரே பான்ஸா என்ற ராணுவத் தளபதி, பொகாஸாவின்

வலதுகரமாகச் செயல்பட்டார். ராணுவம் மற்றும் போலீஸின் துணையுடன் அரசின் தலைமையகத்தை, முக்கிய அலுவலகங்களைக் கைப்பற்றினார்கள். எதிரிகள் உதிரிகளாக்கப்பட்டார்கள். அதிபர் டேவிட் கைதுசெய்யப்பட்டு, சிறைச்சாலை ஒன்றுக்கு அழைத்துவரப்பட்டார். அங்கே பொகாஸா வந்தார். வன்மம் நிறைந்த சிரிப்புடன் அதிபரை அணைத்தார். 'உங்களை எச்சரிக்க நினைத்தேன். ஆனால், காலம் கடந்துவிட்டது. மரியாதையாகக் கையெழுத்துப் போடுங்கள்.'

டேவிட்டின் ராஜினாமா கடிதத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது. அவர் சிறையில் அடைக்கப்பட்டார். 1966, புது வருட தினம். அதிகாலை மூன்று மணி. மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் ரேடியோக்கள் இரைந்தன. தொண்டையைச் செருமிக்கொண்டு உரையாற்றினார் பொகாஸா. 'மன் கீ பாத்' போல் மனதிலிருந்து ஓர் உரை!

'மத்திய ஆப்பிரிக்கர்களே! கர்னல் பொகாஸா பேசுகிறேன். அதிகாலை மூன்று மணி. இப்போது உங்கள் ராணுவம் இந்த ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. டேவிட் டாக்கோ ராஜினாமா செய்துவிட்டார். நீதி வென்றுவிட்டது. முதலாளித்துவம் தோற்கடிக்கப்பட்டது. சமத்துவம் நிரம்பிய புதிய சகாப்தம் பிறந்திருக்கிறது. உங்களையும் உங்கள் சொத்துகளையும் ராணுவம் என்றும் பாதுகாக்கும். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு நீடுழி வாழட்டும்!'

ஜீன் பெடெல் பொகாஸா, தன்னைத் தானே புதிய அதிபராக அறிவித்துக் கொண்டார். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசுக்கு 'பதின்மூன்றரைச் சனி' அமோகமாக ஆரம்பமானது.

(அடுத்த இதழிலும் பொகாஸா வருவார்...)

# கிறுக்கு ராஜாக்களின் கதை! - 13

**முகில், படம்: பா.காளிமுத்து**




## பொகாஸா - 'நான் ஆப்பிரிக்க நெப்போலியன்!'

தேசத்தை ஊழலாலும், இன்னபிற முறைகேடுகளாலும் கூறுபோட்ட அதிபர் ஒருவர், புரட்சியால் ஆட்சியிலிருந்து வலுக்கட்டாயமாகத் தூக்கியெறியப்பட்டால் அது மக்களுக்குக் கொண்டாட்டமான செய்திதான். ஆனால், புதிய அதிபராக ஓர் அசுரன் வந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தால்?

மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் நிலை அப்படித்தான் ஆகிப்போனது. அதிபர் டேவிட்டைத் தூக்கியெறிந்துவிட்டு, கர்னல் பொகாஸா கனத்த மகிழ்ச்சியுடன் ஆட்சியைப் பிடித்தார். ஏற்கெனவே இருந்த அமைச்சரவையைக் கலைத்தார். அரசியல் சட்டத்தை நீக்கினார். புதிய சட்டங்கள் உருவாக்கப்படும், அதற்குமுன் புதிய அரசைத் தேர்ந்தெடுக்க முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்றெல்லாம் சும்மா சொல்லிவைத்தார்.

அரசியல் எதிரிகளைக் களையெடுக்கும் குரூரக் காட்சிகள் அரங்கேறின. ராணுவத்தினர் எங்காவது புகுந்து கொள்ளையடிப்பதும், பெண்களின் கற்பைச் சூறையாடுவதும் வாடிக்கையாகிப் போனது. இன்னொரு பக்கம் பொகாஸா, 'தானே தேசத்தை மீட்க வந்த தேவதூதன்' என்னும் போலி பிம்பத்தைக் கட்டமைக்க உழைத்தார். வானொலியில் அடிக்கடி உரையாற்றினார். 'சமூகத்தின் இந்த இழிநிலைக்கு யார் காரணம்?

இதற்கு முன்பிருந்த அரசுதான்!' என்று இங்கே தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பி.ஜே.பி மாறி மாறிச் சொல்லுவதுபோல அவரும் சொன்னார்.

'எனக்கு அதிபர் பதவியிலெல்லாம் ஆசை இல்லை. கம்யூனிஸ்ட்கள் இங்கே நுழையப் பார்க்கிறார்கள். அவர்களை ஒழிப்பது என் கடமை. தேசத்தின் ஊழலை வேரறுத்தபின், நாட்டின் பொருளாதாரம் புஷ்டியான பின், நான் இந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிடுவேன்' என்று சூளுரைத்தார்.

'குடியரசின் மீட்பர்', 'மத்திய ஆப்பிரிக்காவின் சிற்பி', 'இரும்பு மனிதர்', 'ஈடு இணையற்ற வழிகாட்டி' – இவை அவருக்கு அவரே கொடுத்துக் கொண்ட செல்ஃபி பட்டங்கள்! மாபெரும் ஸ்டுடியோ ஒன்றைக் கட்டினார். சிறந்த கவிஞர்களை இழுத்து வந்தார். 'என்னைப்பற்றி கூச்சப்படாமல் புகழ்ந்து எழுதுங்கள்' என்று கட்டளையிட்டார். புகழ்பெற்ற இசைக்கலைஞர்களின் கைவண்ணத்தில், தித்திக்கும் தேன்சொட்டும் பொகாஸா புகழ் கானங்கள் பதியப்பட்டன. தேசமெங்கும் ரிப்பீட் மோடில் ஓடவிட்டார். மக்கள் சைலன்ட் மோடில் வேறு வழியின்றி சகித்துக்கொண்டனர்.



கிறுக்குத்தனமான சட்டங்களையும் விதிகளையும் அமல்படுத்தி, மக்களை மாக்கான்கள் ஆக்குவதுதானே என்றைக்கும் ஆட்சியாளர்களின் பொழுதுபோக்கு. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க மகோன்னத வழி ஒன்றைக் கண்டார் பொகாஸா. 18 முதல் 55 வயது வரையுள்ள ஒவ்வொருவரும் தாங்கள் ஏதோ ஒரு வேலையில் இருக்கிறோம் என்று அரசிடம் கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் கடும் அபராதத்தையோ அல்லது கொடும் சிறைத்தண்டனையையோ அடைய நேரிடும். (எல்லோரும் வேலையிலிருப்பதாகப் பயந்து ஒப்புக்கொண்டால், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடும் அல்லது ஒளிந்துவிடும் அல்லவா?) யாரும் பிச்சையெடுக்கக் கூடாது. அது தேசத்துக்கு அவமானம். (தேசநலன் கருதி பட்டினியில் செத்துப்போக உரிமையுண்டு.) ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்யக் கூடாது. (அதிபருக்கு இதில் விதிவிலக்குண்டு.)

ஒருவன் திருடினானா அல்லது வேறு ஏதாவது குற்றம் செய்தானா? அவனது ஒரு காதை வெட்டு. மீண்டும் குற்றம் செய்து பிடிபட்டானா? இன்னொரு காதையும் வெட்டு. மறுபடியும் பிடிபட்டால் கையை வெட்டு. மறுபடியும் மறுபடியும் பிடிபட்டால் வெட்டுவதற்கு உறுப்பா இல்லை.எதையாவது வெட்டு. ரத்தம் சொட்டும் சட்டங்கள் பிறந்தன.

புதிய விமான நிலையம், நட்சத்திர ஹோட்டல், மாபெரும் விளையாட்டு மைதானம், நாடாளுமன்றக் கட்டடம், பல்கலைக்கழகம், பெரிய மருத்துவமனை போன்றவை கட்டப்பட்டன. தலைநகரமான பாங்கி, தனித்துவ அழகுடன் திகழ மெனக்கிட்டார். காரணம், தன் மண்ணில் யுரேனிய மற்றும் வைர வளத்தைக் காட்டி, அயல் தேசங்களைத் தொழில் தொடங்க அழைப்பது. அதன் மூலம் தன் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வது. இங்கே 'தன்' என்பது தேசமல்ல; பொகாஸாவும் அவரைச் சார்ந்தவர்களும்.

*அரசின் காபித் தோட்டங்களையெல்லாம் தன் தோட்டங்களாகவே கருதினார் பொகாஸா. அதில் வந்த 'சொற்ப' வருமானத்தால் பாவம் அவரால் ஆசைப்பட்ட அளவுக்கு ஆடம்பரமாக இருக்க இயலவில்லை. பிரான்ஸில் சில சொகுசு அரண்மனைகள் மட்டுமே வாங்க முடிந்தது. சில சொகுசுக் கப்பல்களையும் கட்டிக்கொண்டார்.*

*மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தை ஆரம்பத்தில் பிரான்ஸ் ஏற்கவில்லை. பொகாஸா, தன் தேசத்தின் வளத்தையும், அதனால் பிரான்ஸுக்குக் கிடைக்கும் பொருளாதார லாபத்தையும் காட்டி நைச்சியமாக மிரட்டினார். பிரான்ஸ் அசட்டுச் சிரிப்புடன், 'பொகாஸா எங்கள் வீட்டுப்பிள்ளை' என்று அங்கீகாரம் கொடுத்து அணைத்துக் கொண்டது.*

*பொகாஸாவின் ராணுவப்புரட்சிக்குக் கைகோத்துச் செயல்பட்ட தளபதி பான்ஸா, பிறகு பல பதவிகளில் இருந்தார். அவருக்கும் பொகாஸாவுக்கும் பல விஷயங்களில் ஒத்துப்போகவில்லை. பான்ஸா மீண்டுமொரு ராணுவப்புரட்சிக்கு வித்திடுவதாகவும், பொகாஸாவைக் கொல்ல சதித்திட்டம் தீட்டுவதாகவும் தகவல்கள் புகைந்தன (1969). பொகாஸா பொங்கினார். 'அவனைக் கைது செய்து இழுத்து வாருங்கள்!'*

*அமெரிக்காவின் டைம் இதழ் பான்ஸாவின் முடிவை இப்படிப் பதிவுசெய்திருக்கிறது. 'கைது செய்யப்பட்ட பான்ஸா, ஏப்ரல் 12-ல் அமைச்சரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் இழுத்துவரப்பட்டார். பொகாஸா, தான் காபி கலக்கப் பயன்படுத்தும் சிறு கத்தியைக் கொண்டு பான்ஸாவின் உடலைச் சரமாரியாக வெட்டினார். வீரர்கள், பான்ஸாவின் முதுகிலேயே மீண்டும் மீண்டும் மீண்டும் ஓங்கி மிதித்தனர், அவர் முதுகெலும்பு உடையும்வரை. பாங்கி நகர வீதிகளில் பான்ஸாவைத் தரதரவென இழுத்து வந்தனர். பின்பு அவர் சுடப்பட்டார்.'*

அத்தனை காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் அதிபர் டேவிட் டாக்கோ, 1969-ல் விடுவிக்கப்பட்டார். 'எங்காவது ஓடிப்போ' என்று அவரை விரட்டி விட்டார்கள். 1971-ல், 'இனி அதிபர், ராணுவத் தலைமைத் தளபதி, பிரதமர் அனைத்தும் நானே!' என்று பொகாஸா அறிவித்துக்கொண்டார். நிரந்தர முதல்வர், நிரந்தரப் பொதுச்செயலாளர்போல, 1972-ல் பொகாஸாவும், அடுத்த அதிமதுர அறிவிப்பை வெளியிட்டார். 'இனி நானே நிரந்தர அதிபர்!'

பின்னொரு நாள், ஜீன் பெடெல் பொகாஸா தன் பெயரை சலா எடின் அஹமத் பொகாஸா என்று மாற்றிக்கொண்டார். ஆம், இஸ்லாமிய மதத்துக்கு மாறினார். லிபியாவின் கடாஃபி, 'நீங்கள் மதம் மாறினால் நான் உங்கள் தேசத்துக்குப் பண உதவி செய்கிறேன்' என்று திருவாய் மலர்ந்திருந்தார். ஆனால், எதுவும் வரவில்லை. பொகாஸா U டர்ன் அடித்து மீண்டும் கிறித்துவரானார்.

எத்தனை நாளைக்குத்தான் நான் அதிபராகக் குப்பை கொட்டுவது? இந்தக் கேள்வி பொகாஸாவின் மனத்தில் உதித்தபோது, அவருக்குள் மாவீரர் நெப்போலியனின் குதிரை குதித்தோடிக் கொண்டிருந்தது. என் ஆதர்ச நெப்போலியன், படைத்தளபதியாக இருந்து சக்கரவர்த்தி ஆனவர். எனில், எனக்கும் அதே தகுதியும் உரிமையும் இருக்கிறதல்லவா. 1976-ன் நல்லதொரு பொழுதில் பொகாஸா அறிவித்தார், 'நான் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் மன்னன் ஆகப்போகிறேன்!'

ஓராண்டுக்கு முன்பாகவே முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. 'நானே ஆப்பிரிக்காவின் நெப்போலியன். எனது முடிசூட்டு விழா, நெப்போலியனின் முடிசூட்டு விழா போலவே நடக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். செலவைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள்.'

உலகமெங்கும் இருந்து வரும் விருந்தினர்களை வரவேற்றுத் தங்க வைப்பதற்காக, பாங்கியில் மாளிகைகள், இல்லங்கள், ஹோட்டல்கள் புதுப்பிக்கப்பட்டன. கட்டப்பட்டன. விருந்தினர்களை ஏற்றிச் செல்வதற்காகவே 60 புதிய மெர்சிடிஸ்-பென்ஸ் கார்கள் ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டன. இறக்குமதிச் செலவு மட்டும் சில லட்சம் டாலர்கள்.

பாரிஸின் புகழ்பெற்ற சிற்பி ஆலிவர் பிரைஸ், சிம்மாசனத்தை வடிவமைப்பதற்காக வரவழைக்கப்பட்டார். வருங்கால மன்னர் பவனி வரும் தேரை உருவாக்கும் கௌரவமும் ஆலிவருக்கு வழங்கப்பட்டது. இரண்டு டன் எடையில் ($2.5 மில்லியன் மதிப்பில்) வெண்கலமும், தங்கத் தகடும் கொண்டு சிம்மாசனம் உருவானது. Saint-Germain-des-Pres jeweller என்ற நகைக்கடை, நெப்போலியன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களே பொகாஸாவின் கீரிடம், செங்கோல், வாள், இன்ன பிற அரச சமாசாரங்களைத் தயாரித்தனர். பில் தொகை 5 மில்லியன் டாலர்.



குடும்பத்தினருடன் பொகாஸா

எல்லோருக்கும் டிரெஸ் கோட் கொடுக்கப்பட்டிருந்தது. பள்ளி மாணவர்களுக்கு வெள்ளை நிற உடை. அரசு அலுவலர்கள், தனியார் ஊழியர்களுக்குக் கருநீலம், அமைச்சர் பெருமக்களுக்குக் கறுப்பு கோட், சர்ட். மற்றவர்களுக்கே இப்படியெனில் மாண்புமிகு பொகாஸாவுக்கு? நெப்போலியனுக்கு உடை தைத்த டெய்லர் இருக்கிறாரா? என்னது, அதற்குள் செத்துப்போய்விட்டாரா? சரி, நெப்போலியனுக்கு உடை தைத்த Guiselin நிறுவனம் இருக்கிறதல்லவா, அங்குதான் எனக்கு உடை தைக்கப்பட வேண்டும். அதேபோல. கச்சிதமாக. கம்பீரமாக. டாம்பீகமாக! உடைக்கான பில் $145000.

தன்னுடன் ராணியாக முடிசூட்டிக் கொள்ள, தனது 17 அதிகாரபூர்வ மனைவிகளில் ஒருத்தியும் பிரியசகியுமான கேத்ரீனைத் தேர்ந்தெடுத்தார் பொகாஸா. அம்மணிக்கான உடை, கிரீடம், சிம்மாசனம், இன்னபிற தயாரிப்புகளுக்கான செலவெல்லாம் தனி.

*Bokassa, the new Bonaparte*
*Bangui, his illustrious city*
*Eclipses Rome, Athens, Sparta*
*By its brilliant beauty.*

பிரான்ஸிலிருந்து பிடித்து வரப்பட்ட ஓர் இசையமைப்பாளர் விரல் ரேகைகள் தேயத் தேய பொகாஸா முடிசூட்டு விழா ஆல்பத்தைச் சமைத்தார்.

இப்படிப் பார்த்து பார்த்து ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, உலகமெங்கும் இருக்கும் தலைவர்களுக்கும்,அதிபர்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் முடிசூட்டு விழாவுக்குப் பெருமையுடன் அழைப்பு விடுத்தார் பொகாஸா. தலையில் அடித்துக் கொண்டு அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்தார்கள், 'ஏய் என்னப்பா இது..? இந்தாளுக்கு என்ன கிறுக்குப் புடிச்சிருச்சா?'

(அடுத்த இதழிலும் பொகாஸா வருவார்...)

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை!




## பொகாஸா - பிணந்தின்னிக் கழுகு!

*1977, டிசம்பர் 4-ஐ நோக்கி மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு தயாராகிக் கொண்டிருந்தது. அன்றைக்குத்தான் அதிபர் பொகாஸா, மாமன்னர் பொகாஸாவாக முடிசூட்டிக்கொள்ளவிருந்தார். அதுவும் மாவீரன் நெப்போலியன் ஸ்டைலில். நெப்போலியனுக்குக் கீரிடத்தைக் கையிலெடுத்துத் தந்தது அப்போதைய போப் ஏழாம் ப்யூஸ். ஆகவே, பொகாஸாவிடமிருந்து போப் ஆறாம் பவுலுக்கு அழைப்புச் சென்றது. தர்மசங்கடத்தில் நெளிந்த போப், சாதுர்யமாக ஒரு பதிலை அனுப்பினார். 'வயசாயிருச்சுல்ல. இனிமே அவ்வளவு தூரம் பிரயாணமெல்லாம் தோதுப்படாது. வாடிகன்லருந்து என் சார்பா யாரையாவது அனுப்பி வைக்கிறேன்.'*

அப்போது உலகில் எஞ்சியிருந்த பிற அரசர்களுக்கெல்லாம் பொகாஸாவிடமிருந்து அழைப்புச் சென்றது. யாரும் வருவதாக ஒப்புக் கொள்ளவில்லை. பெரும்பாலான அதிபர்களும் பிரதமர்களும் அழைப்பை நிர்தாட்சண்யமாக நிராகரித்தனர். சிலர் மட்டும் மரியாதை நிமித்தமாக தங்கள் பிரதிநிதிகளை அனுப்பித் தொலைத்தனர்.

காங்கோ சர்வாதிகாரி மொபுட்டு, உகாண்டாவின் இடி அமீன் உள்ளிட்டோரும் பொகாஸாவின் ஆத்ம நண்பர்களும் வர மறுத்துவிட்டனர். இந்தப் பட்டாபிஷேகத்துக்கு ஆன செலவுகளுக்குக் கைகொடுத்த பிரான்ஸின் அதிபர் வால்ரி ஜிஸ்கார்ட்கூட, தன்னுடைய முக்கிய அமைச்சர்கள் வந்து விழாவைச் சிறப்பிப்பார்கள் என்று சொல்லிவிட்டார். பொகாஸா அதற்கெல்லாம் அசரவில்லை. 'நான் மாமன்னர் ஆகப்போகிறேன் அல்லவா. எல்லோருக்கும் பொறாமை' என்று உறுமிக்கொண்டார்.

அந்தத் திருநாளும் வந்தது. வந்த சர்வதேச விருந்தினர்களின் எண்ணிக்கை, பத்திரிகையாளர்களையும் சேர்த்து வெறும் அறுநூற்றுச் சொச்சம். உள்ளூர் மக்கள் தயவுடன் 'மாபெரும் கூட்டம்' இமேஜ் கட்டிக்காக்கப்பட்டது. காலை ஏழு மணி முதலே மெர்சிடிஸ் பென்ஸ் கார்கள் விழா அரங்கத்துக்கு விருந்தினர்களை அழைத்துவர புழுதி பறக்க அலைந்தன. பொகாஸாவின் குடும்பத்தினர், பிற மனைவிகள், குழந்தைகள் (மொத்தம் 60 பேர்) வர தனித்தனி சாரட் வண்டிகள். எல்லோருக்கும் சிவப்புக் கம்பள வரவேற்பு. மகாராணி கேத்ரீனுக்கு தனிப்பட்ட வரவேற்பு. பொகாஸா, தன் ராஜ வாரிசாக அறிவித்திருந்த, 'இளவரசன் இரண்டாம் பொகாஸா' என்ற நான்கு வயதுப் பொடியன் (கேத்ரீனுக்குப் பிறந்தவன்), தூக்கம் நிறைந்த கண்களுடனும் ஏகப்பட்ட கொட்டாவிகளுடனும் அரங்கத்துக்கு வந்து சேர்ந்தான்.

காலை ஒன்பதரை மணிக்குச் சாம்பல் நிறக் குதிரைகள் பூட்டப்பட்ட அலங்கரிக்கப்பட்ட ரதத்தில், குதிரைப்படை வீரர்கள் சூழ, பவனி வந்தார் பொகாஸா. (ரதத்தை இழுப்பதற்கென எட்டு குதிரைகள்

பெல்ஜியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. வெப்பம் தாங்காமல் சில குதிரைகள் இறைவனடிச் சேர்ந்திருந்தன.) தங்கக் கழுகு ஒன்று பிரமாண்டமாகத் தன் இறக்கைகளை விரித்திருப்பதுபோல வடிவமைக்கப்பட்டிருந்த சிம்மாசனம் நோக்கி, சிவப்புக் கம்பளத்தில் மிடுக்குடன் சென்றார் பொகாஸா. கேத்ரீனுக்குத் தனி சிம்மாசனம்.

மிகவும் நீளமான வெல்வெட் அங்கி ஒன்றை ஒன்பது பேர் சுமந்து வந்தனர். அது 7,85,000 சிறு சிறு முத்துகளாலும், 12,20,000 ஸ்படிக மணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதை பொகாஸாவின் முதுகில் மாட்டிவிட்டனர். அது தரையில் புரண்டபடி கிடக்க, நெப்போலிய கம்பீரத்துடன் பொகாஸா சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். மாணிக்கமும், மரகதமும், 8,000 சிறு வைரக் கற்களும், முகப்பில் 80 காரட் கொண்ட பெரிய வைரமும் பதிக்கப்பட்ட ராஜ கிரீடம் கொண்டு வரப்பட்டது. இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கீரிடம் போன்றே வடிவமைக்கப்பட்ட அதில், நெப்போலியனின் கிரீடத்திற்குரிய அம்சங்களும், கழுகு, ஆப்பிரிக்க வரைபடம், உச்சியில் உலகைக் குறிக்கும் நீல உருண்டை உள்ளிட்ட கூடுதல் ஜிகினாக்களும் இணைக்கப்பட்டிருந்தன.

காலை மணி 10.43. சீஸரின் லாரெல் மாலை போன்ற தலைக்கீரிடம் அணிந்திருந்த பொகாஸா, அதைக் கழற்றிவிட்டு, தனக்குத் தானே கிரீடத்தைச் சூட்டிக் கொண்டு மாமன்னர் ஆனார். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, மத்திய ஆப்பிரிக்கப் பேரரசு ஆனது. கரகோஷம். கேமராக்கள் ஒளிர்ந்தன. கொஞ்சம் சிரித்திருக்கலாம். மறந்துவிட்டார்போல. தன் முன் மண்டியிட்டு நின்ற கேத்ரீனுக்கு மகாராணியாக முடிசூட்டினார் பொகாஸா. வாத்திய கோஷ்டிகள் இசை மழை பொழிந்தார்கள். அன்றைக்கு வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ். நிகழ்ச்சி முழுக்க இளவரசன் கொட்டாவி விட்டுக்கொண்டே இருந்தான். பாவம்.

ராஜ விருந்து ஆரம்பமானது. பல டன் உணவு வகைகள் பரிமாறப்பட்டன. 24,000 பாட்டில்கள், Moet et Chandon ஷாம்பெயின் ஆறு

ஓடியது. மன்னர் பொகாஸா, தனக்குப் பிடித்தமான Chivas Regal scotch-ஐப் பருகினார். பட்டப்பகலில் வாணவேடிக்கை. காசைக் கரியாக்கி அன்றைக்கான நிகழ்வுகள் நிறைவு பெற்றன. மறுநாள் காலையில் பொகாஸா, ஃபீல்ட் மார்ஷல் உடையில் தமது படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள். காரனேஷன் கோப்பைக்கான கூடைப்பந்து போட்டி. இரவு விருந்து. சுபம். இரண்டு நாள்கள் எகிடுதகிடு கொண்டாட்டங்களுக்குப் பிறகு பாங்கி நகரம் இயல்புக்கு வந்தது. இந்த விழாவுக்காகச் செலவழிக்கப்பட்ட சுமார் முப்பது மில்லியன் டாலர்களால், நாட்டின் பொருளாதாரம் இயல்பைவிட படுமோசமாகிப் போனது.

அதிபராக இருந்தபோதே அழிச்சாட்டியம் செய்த பொகாஸா, மாமன்னரான பின் மனிதத்தன்மையை முற்றிலும் இழந்தார். தன் சொகுசு பங்களாவில் அமர்ந்து, ஸ்காட்ச் அருந்தியபடி கைதிகளைச் சுத்தியலாலும், இரும்புச் சங்கிலியாலும் தாக்கச் சொல்லி வேடிக்கை பார்ப்பது அவருக்குப் பொழுதுபோக்கானது. 'அவை பசியோடு காத்திருக்கின்றன. சீக்கிரம் இவர்களைத் துண்டு துண்டாக அறுத்துப் போடுங்கள்.' இங்கே 'அவை' என்பது பொகாஸாவின் வளர்ப்பு முதலைகளையும் சிங்கங்களையும் குறிப்பவை.

முடிசூட்டு விழாவுக்கு வராத பிரான்ஸ் அதிபர், வேட்டை ஆசை வந்துவிட்டால் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசுக்குப் பறந்து வந்துவிடுவார். அவராலும் பொகாஸாவாலும் கொல்லப்பட்ட ஆப்பிரிக்க யானைகளின் எண்ணிக்கைக்குக் கணக்கே கிடையாது. மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் யானைத் தந்தம் வணிகத்தில் கோலோச்சிய ஒரு தனியார் நிறுவனத்தின், பெரும்பான்மையான பங்குகள் பொகாஸா வசமே இருந்தன. (1976ல் சுமார் எண்பதாயிரமாக இருந்த யானைகளின் எண்ணிக்கை, தந்தம் வணிகத்தால் 1980களின் மத்தியில் வெறும் பதினைந்தாயிரமாகக் குறுகிப்போனது என்கிறது ஒரு புள்ளிவிவரம்.) தந்தம், வைரம், யுரேனியம் போன்ற தேவைகளுக்காக, பொகாஸாவின் கேடுகெட்ட ஆட்டங்களுக்கெல்லாம் பீப்பீ


ஊதிக் கொண்டிருந்தார் பிரான்ஸ் அதிபர். என்ன ஆட்டம் ஆடினாலும் எவனுக்கும் 'end card' உண்டுதானே.

அது மாணவர்கள் போராட்டமாக ஆரம்பமானது. பொகாஸாவின் மனைவி ஒருவருடைய நிறுவனம் தயாரிக்கும் சீருடைகளைத்தான் மாணவர்கள் அணிய வேண்டுமென்ற விதி கட்டாயமாக்கப்பட்டிருந்தது. பொகாஸாவின் உருவப்படம் பதிக்கப்பட்ட அந்தச் சீருடைகளின் விலை மிக அதிகம். 1979-ல் இதை எதிர்த்து, சில நூறு மாணவர்கள் வீதிக்கு வந்து போராடினார். பொகாஸாவின் ரோல்ஸ் ராய்ஸ் வீதியில் பவனி வர, உச்சகட்டக் கோபத்தில் அதைக் கற்கள் கொண்டு தாக்கினர். பொகாஸா, மாணவர்கள் மீது ராணுவத்தை ஏவினார். சில மாணவர்கள் கொல்லப்பட்டனர். மீண்டும் மாபெரும் இளைஞர் போராட்டமாக அது எழுச்சி பெற்றது. வெறிகொண்ட பொகாஸா நூற்றுக் கணக்கானவர்களைச் சிறைபிடிக்கச் சொன்னார். கொடுமைப்படுத்தினர். படுகொலைகள் அரங்கேறின. பொகாஸாவும் கூரிய தந்தத்தைக் கொண்டு சில மாணவர்களின் கண்களைத் தோண்டினார். தன் கோலால் சிறுவர்களின் தலையில் அடித்தே கொன்றார். சிறிய சிறை அறையில், நெருக்கடியில் பிதுங்கி பலர் உயிரை விட்டனர்.

அம்னெஸ்ட்டி இண்டர்நேஷனல், இந்தக் கொடூரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. உலகம் பதற, பிரான்ஸ் தலையில் அடித்துக் கொண்டது. பிரான்ஸின் எழுநூறு வீரர்கள் பறந்து வந்து பாராசூட்டில் குதித்தனர் (செப். 20, 1979). பொகாஸா அதற்கெல்லாம் முன்பாகவே லிபியாவில் தஞ்சமடைந்திருந்தார். அவரது குடும்பத்தினரும் வேறு வேறு இடங்களில் பாதுகாப்பாகவே இருந்தனர்.

பழைய அதிபர் டேவிட் டாக்கோ, மீண்டும் அதிபராக்கப்பட்டார். மத்திய ஆப்பிரிக்கப் பேரரசு, பழையபடி குடியரசு ஆக்கப்பட்டது. முன்னாள் அதிபரும் மன்னருமான பொகாஸா மீது அடுத்தடுத்து சர்ச்சைகள் கிளம்பின. பிரான்ஸ் வீரர்கள், பொகாஸாவின் மாளிகைக் குளிர்சாதனப்

பெட்டியைத் திறந்தனர். அதிர்ந்தனர். உறைந்தனர். அதில் எங்கெங்கும் நர மாமிசம். காணாமல்போன பள்ளிச் சிறுவர்களின் உடல் துண்டுகள் அங்கே இருந்தன. முடிசூட்டு விழா விருந்தில்கூட பிரான்ஸ் அமைச்சர் ஒருவருக்கு, பொகாஸா மாமிசம் பரிமாறினார். 'நீங்கள் என்னவென்று தெரியாமலே அதை ருசித்து உண்டிருக்கிறீர்கள். அது நர மாமிசம்' என்று பின்பு அவர் சொன்னதாகச் சர்ச்சை கிளம்பியது.



இளவரசன் இரண்டாம் பொகாஸா மகாராணி கேத்ரீன்

அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள். ஏகப்பட்ட வழக்குகள். பிரான்ஸ், பொகாஸாவைத் தன் நாட்டுக்குள் விடவில்லை. ஐவரி கோஸ்ட்டில் தலைமறைவாக இருந்த பொகாஸா, தன் சுயசரிதையை எழுத ஆரம்பித்தார். அதில் பிரான்ஸ் அதிபர் வால்ரி ஜிஸ்கார்டுக்குப் பெண் ஏற்பாடு செய்து கொடுத்ததாகவும், ஏகப்பட்ட வைரங்களைப் பரிசாகக் கொடுத்ததாகவும் மனம் திறந்து எழுதினார். பிரான்ஸ், அந்தப் புத்தகத்தின் 8,000 பிரதிகளை வாங்கி அழித்தது.

ஏழு வருட வனவாசத்துக்குப் பிறகு, 1986-ல் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசுக்கு வந்து சரணடைந்தார் பொகாஸா. விசாரணை தொடங்கியது.

பிரான்ஸின் இரண்டு படா வக்கீல்கள் பொகாஸாவுக்காக வாதாடினர். அரண்மனைச் சமையல்காரர், பொகாஸாவால் சிறையிலடைக்கப்பட்டு உயிர் தப்பிய மாணவர்கள் சிலர், பொகாஸாவால் கொல்லப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் என்று எல்லோருமே தைரியமாக சாட்சி சொன்னார்கள். 'அந்தக் குளிர்சாதனப்பெட்டி என்னுடையது இல்லை' என்று சாதித்தார் பொகாஸா. ஒரு கட்டத்தில் கோபம் தலைக்கேறி கத்தினார். 'கடந்த 21 ஆண்டுகளில் இந்த நாட்டில் நடந்த கொலைகளை யெல்லாம் நான்தான் செய்தேனா?'

நர மாமிச வழக்கில் உரிய ஆதாரமில்லை என்று அறிவித்த நீதிமன்றம், பெரும்பான்மையான வழக்குகளில் பொகாஸாவைக் குற்றவாளி என்று அறிவித்தது. 'எனக்கு மரண தண்டனை கொடுத்துவிடுங்கள்' என்று நீதிபதியின் இறுதித் தீர்ப்புக்கு முன் நீலிக்கண்ணீர் வடித்தார் பொகாஸா. தீர்ப்பும் அப்படித்தான் வாசிக்கப்பட்டது. குற்றவாளி பொகாஸா சிறையில் அடைக்கப்பட்டார் (1987).

அடுத்த ஆண்டிலேயே மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் அப்போதைய அதிபர் கோலிங்பா, பொகாஸாவின் மரண தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றியமைத்தார். 1993-ல் கோலிங்பா, தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பல கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். அதில் பொகாஸாவும் ஒருவர். வெறுங்காலுடன் வெள்ளுடை அணிந்து சிறையிலிருந்து வெளியே வந்த பொகாஸா சிரித்தபடி சொன்னார், 'நானே பதின்மூன்றாம் திருத்தூதர் (அப்போஸ்தலர்)'.

அந்த மனிதத்தன்மையற்ற புனிதர், 1996-ல் தனது எழுபத்தைந்தாவது வயதில் மாரடைப்பால் காலமானார். அப்போது, பிரெஞ்சு ராணுவத்தின் முன்னாள் படைத் தளபதிக்கான பென்ஷன் மட்டுமே அவருக்கான வருமானமாக இருந்தது.

(வருவார்கள்...)

## ***கிறுக்கு ராஜாக்களின் கதை! - 15***

***முகில், படம்: பா.காளிமுத்து***





### *இப்படியும் ஒரு காதல் கதை!*

*Amor a primeira vista - இது போர்ச்சுக்கீசிய வாசகம். ஆங்கிலத்தில் சொன்னால் love at first sight. தமிழில், கண்டதும் காதல். பதினான்காம் நூற்றாண்டில், அவளைக் கண்ட நொடியில் போர்ச்சுக்கீசிய இளவரசர் பீட்டருக்குள்ளும் (போர்ச்சுக்கீசிய மொழியில் பெட்ரோ) அதே ரசவாதம்தான் நிகழ்ந்தது.*

*கள்ளங்கபடமற்ற முகத்தில் கள் வடியும் கண்கள். கூரான நாசிக்குக் கீழ் தீரா அழகு சொட்டும் செவ்விதழ்கள். இதுதான் புருவத்தின் இலக்கணம் என்று சொல்லத்தகுந்த வளைவு. வெற்றிடம் கொண்ட நெற்றியில்கூட அத்தனை வனப்பு. தங்க ஜரிகை கொண்டு நெய்த கூந்தல். அதன் சுருளில் சிக்கினால் மீள்வது கடினம் என்றது புத்தி. சிக்கி, அப்படியே தொலைந்து போய்விட ஏங்கியது இதயம். யார் இவள்?*

*போர்ச்சுக்கீசிய அரசரான நான்காம் அஃபோன்ஸோ, தன்னுடைய ஒரே ராஜ வாரிசான இளவரசர் பீட்டருக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்தார். அண்டை ராஜ்ஜியம் காஸ்டைல் (Castile). அவர்களும் இவர்களும் பெண் கொடுப்பதும் எடுப்பதும் வழக்கமே. 20 வயது பீட்டருக்கு, ஜுவான் மேனுவல் என்ற காஸ்டைல் அரச குடும்ப இளவரசரின் மகள் கான்ஸ்டன்ஸா முடிவுசெய்யப்பட்டாள். கி.பி 1340-ல் நடந்த இந்தத் திருமணத்தின் பின், அரசியலும் அலையடித்துக் கொண்டிருந்தது.*




ஜுவான் மேனுவலும், காஸ்டைல் அரசர் அல்ஃபோன்ஸோ என்பவரும் நெருங்கிய உறவினர்கள். ஜுவானின் மகள் (சிறுமி) கான்ஸ்டன்ஸாவை 1325-ல் அல்ஃபோன்ஸோ திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமண உறவு இரண்டாண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. 1328-ல் காஸ்டைல் அரசர், போர்த்துக்கீசிய அரசரின் மகளான மரியாவை (இளவரசர் பீட்டரின் சகோதரிதான்) இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டார். முதல் மனைவி கான்ஸ்டன்ஸாவைச் சிறையில் அடைத்தார். அவளின் அப்பா ஜுவான் கோபம் கொண்டு மோதலில் இறங்கினார். பின்பு சமாதானம் எட்டப்பட்டு, கான்ஸ்டன்ஸா விடுதலை செய்யப்பட்டாள். மரியாவுக்கும் காஸ்டைல் அரசருக்குமிடையே வாரிசுகள் பிறந்தன. சில வருடங்களில்

காஸ்டைல் அரசருக்கு இன்னொரு பெண்மீது மோகம் பிறக்கவே, மரியாவைப் போர்ச்சுகலுக்கே துரத்திவிட்டார். போர்ச்சுகல் அரசர் அஃபோன்ஸோ துடித்துப்போனார். காஸ்டைல் அரசரின் முன்னாள் மனைவியான கான்ஸ்டன்ஸாவையே தன் மகனான பீட்டருக்கு மணம்முடித்து வைத்தார். ஏன்? தன் முன்னாள் மாப்பிள்ளை அல்ஃபோன்ஸோவை எரிச்சலூட்டி பழிவாங்கவும், இந்தத் திருமண உறவால் காஸ்டைல் ராஜ குடும்பத்தில் போர்ச்சுக்கீசிய ராஜ குடும்பத்தின் பிடியை மேலும் வலுப்படுத்தவும். தலைசுற்றுகிறதா?

இளவரசர் பீட்டருக்கோ சுற்றும் உலகமே உறைந்து நின்றது போலிருந்தது, இரண்டாவது பத்தி வர்ணனைக்குச் சொந்தக்காரியான 'அவளை'க் கண்டதும். அந்த அவள், கான்ஸ்டன்ஸா அல்ல. மருமகளாக கான்ஸ்டன்ஸா அரண்மனைக்கு வந்தபோது, உடன் வந்த தோழி. அவள் பெயர் இனெஸ் (Ines de Castro).

ஆரம்பம் முதலே பீட்டருக்கு கான்ஸ்டன்ஸாவைத் திருமணம் செய்வதில் விருப்பமில்லை. தந்தையின் வற்புறுத்தல். தலையாட்டினார். கான்ஸ்டன்ஸாவுடன் நடக்க வேண்டிய காரியங்களெல்லாம் நடந்தாலும், அவரது காதல் மனசு என்னவோ இனெஸ் முன் மண்டியிட்டு நின்றது.

இனெஸ், காஸ்டைல் உயர்குடிப் பெண் என்றாலும், ராஜ வம்சம் இல்லை. நாளடைவில் அரண்மனை வட்டாரத்தில் பீட்டர் – இனெஸ் காதல் விவகாரமே வைரல் கிசுகிசுவாகப் பரவியது. இருவரும் அடிக்கடி ரகசியமாகச் சந்தித்துக் கொண்டனர். 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' – பீட்டர் உருகினார். 'அய்யோ, அது இளவரசிக்கு நான் செய்யும் துரோகம்' – இனெஸ் பதறினாள். 'இளவரசனான என் விருப்பத்தை நிராகரிப்பதும் துரோகம்தானே!'- பீட்டரின் அடர்காதலில் கரைந்தாள் இனெஸ்.

அரசர் கூப்பிட்டு மகனைக் கண்டித்தார். மனைவி கான்ஸ்டன்ஸா செய்வதறியாது தவித்தாள். இளவரசரோ, இனெஸுக்கு இதயம் திறந்து

காதல் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தார். அரண்மனை வழியாக ஓடும் கால்வாய் ஒன்று, இனெஸ் தங்கியிருந்த கோட்டைக்கும் சென்றது. சிறு மரக்கலங்களைத் தயாரித்து, அதனுள் கடிதங்களைப் பதுக்கிவைத்து அனுப்பினார் பீட்டர். பத்திரமாகப் பெற்றுக்கொண்டாள் இனெஸ். கால்வாயில் காதல் ஓடிக்கொண்டிருந்தது.

கான்ஸ்டன்ஸாவுக்கு அப்போது இரண்டாவது குழந்தை பிறந்திருந்தது. இனெஸைத் தன்னுடைய கண்காணிப்பின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் குழந்தைக்கு வளர்ப்புத் தாயாக நியமித்தாள் கான்ஸ்டன்ஸா. ஆனால், குழந்தை சில நாள்களிலேயே இறந்தது. அடுத்தகட்ட நடவடிக்கையாக அரசர் அஃபோன்ஸா, இனெஸை மீண்டும் காஸ்டைலுக்கே அனுப்பிவைத்தார்.

ஆனால், பீட்டர் நினைத்தபோதெல்லாம் காஸ்டைலுக்குச் சென்று சுதந்திரமாகக் காதல் வளர்த்தார். யாராலும் எதுவும் செய்யமுடியவில்லை. மூன்றாவதாக, ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றுக் கொடுத்துவிட்டு, தன் பூலோகக் கடமையை முடித்துக் கொண்டாள் இளவரசி கான்ஸ்டன்ஸா (1345). பீட்டர், பீறிட்டு அழவெல்லாம் இல்லை. வழி பிறந்தது என்று விழிகளில் புன்னகை தேக்கினார்.

பீட்டருக்கு மறுமணம் செய்துவைக்க வேறு ராஜ குடும்ப வரன்களைக் கொண்டுவந்தார் அரசர். ‘என் திருமணம் இனெஸுடன் மட்டும்தான்’ என பீட்டர் பிடிவாதம் பிடித்தார். ‘ஒருபோதும் நடக்காது.’ அரசரும் அசைந்து கொடுக்கவில்லை. பீட்டர், மீண்டும் இனெஸை போர்ச்சுகல் ராஜ்ஜியத்துக்கே அழைத்துவந்தார். கோய்ம்ப்ரா என்ற ஊரில் ஒரு மாளிகையில் இருவரும் குடும்பம் நடத்தினர். முதலில் பிறந்த ஆண் பிள்ளைக்கு அஃபோன்ஸோ என்ற பெயரையே வைத்து, அரசர் அஃபோன்ஸோவைக் கடுப்பேற்றினார். அந்தப் பிள்ளை அதிக நாள் வாழவில்லை. இருந்தாலும் அடுத்தடுத்து இரண்டு ஆணும், ஒரு பெண்ணுமாக மூன்று குழந்தைகள் பிறந்தன. ‘கவலைப்படாதே அன்பே!

நான் அரசரான பின் உன்னை அரசியாக்குவேன்.' பீட்டர், இனெஸிடம் வாக்குக் கொடுத்தார்.

அரசர் அஃபோன்ஸோ காதுக்கு ஒரு கிசுகிசு வந்து சேர்ந்தது. பீட்டருக்கும் கான்ஸ்டான்ஸாவுக்கும் பிறந்த, ராஜ குடும்ப பேரனான பெர்டினாண்டைக் கொல்ல சதி நடக்கிறது. இனெஸுக்கும் இளவரசருக்கும் பிறந்த ஆண் குழந்தைகளை ராஜ குடும்பத்தின் பேரனாக்கும் வேலைகள் நடக்கின்றன.

அதில் கொஞ்சம் உண்மையும் இருந்தது. இனெஸின் சகோதரர்கள் பீட்டரை ஆக்கிரமித்திருந்தனர். இதற்குமேல் அவளை விட்டு வைக்கவே கூடாது என முடிவெடுத்த அரசர், தன் சகாக்கள் மூன்று பேரை அனுப்பிவைத்தார். 1355, ஜனவரி 7. பீட்டர் வேட்டைக்குப் போயிருந்த சமயம் பார்த்து மூவரும் அந்த மாளிகைக்குள் புகுந்தனர், இனெஸை வேட்டையாட. மூவரது கத்திகளும் இனெஸின் உடம்பைப் பதம் பார்த்தன. குழந்தைகளின் கதறல்களுக்கிடையே மரித்துப்போனாள் அவள்.



காதல் வளர்க்கும் பீட்டரும் இனெஸும்

துடிதுடித்துப் போனார் இளவரசர் பீட்டர். தன் தந்தைதான் இதைச் செய்தார் என்று அறிந்ததும் மூர்க்கத்துடன் கிளம்பினார். அவரைத் தடுக்க வந்தவர்களெல்லாம் பலியாயினர். யாராலும் அவரைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இனெஸின் சகோதரர்கள் பீட்டருக்குத் தோள் கொடுக்க, தந்தைக்கும் மகனுக்குமிடையே சில காலம் உள்நாட்டுப் போர் தொடர்ந்தது. அரசி பீட்ரைஸ் தன் மகனைப் பெரும்பாடுபட்டுச் சமாதானப்படுத்தினாள். பீட்டர், வன்மத்தை விழுங்கிக்கொண்டு அமைதியாகக் காத்திருந்தார். அரசர் அஃபோன்ஸா 1357-ல் இறந்துபோனார். புதிய அரசராக அரியணை ஏறினார் பீட்டர்.

'அந்த மூன்று கயவர்களையும் பிடித்து வாருங்கள்' – அவரது முதல் கட்டளையே அதுதான். மூவருமே ராஜ்ஜியத்தை விட்டு தப்பியோடி தலைமறைவாகியிருந்தனர். 1361-ல் இருவர் பிடிபட்டனர். அரசர் பீட்டர் முன்பு அழைத்துவரப்பட்டனர். இரவு நேரம். பீட்டர் உணவருந்திக்கொண்டிருந்தார். காவலர்கள், இருவரையும் கடுமையாகத் தாக்கினர். அவர்களது கதறல் பீட்டருக்கு இனிமையாக இருந்தது. 'இனெஸும் இப்படித்தானே கதறியிருப்பாள்!' பீட்டர், கட்டளையிட்டார். 'என் இதயத்தைக் கொன்ற இந்த இருவரது இதயங்களையும் பிடுங்கி எடுங்கள்!' ஒருவனது நெஞ்சைக் கிழித்தும், இன்னொருவனது முதுகைக் கிழித்தும் இதயங்களை வெளியே எடுத்துப் போட்டனர். அவை துடித்து அடங்கியபோது, பீட்டர் கைகளைக் கழுவினார்.

'1357-லேயே நான் இனெஸைத் திருமணம் செய்துவிட்டேன். தேதி நினைவில்லை' என்றார் பீட்டர். சரியான ஆதாரங்கள் இல்லாததால் திருச்சபை அந்தத் திருமணத்தை அங்கீகரிக்கவில்லை. 'நீங்கள் யார் அங்கீகரிப்பதற்கு? நான் எனது இனெஸை அரசியாக்கப் போகிறேன்' என்றார்.

கோய்ம்ப்ராவில் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து இனெஸின் உடல் தோண்டியெடுக்கப்பட்டது. அது, அலங்கரிக்கப்பட்ட ரதம் ஒன்றில்

*ஏற்றப்பட்டது. குதிரைப்படைகள் அணிவகுக்க, முக்கிய அமைச்சர்கள், ராஜ குடும்பத்துப் பெண்கள், பணியாளர்கள் சூழ்ந்து வர, வழியெங்கும் ஆயிரக்கணக்கானோர் மெழுகுவத்தி ஏந்தி அஞ்சலி செலுத்த, இனெஸின் இறுதி ஊர்வலம் மீண்டும் ஆரம்பமானது.*



**அரசர் அஃபோன்ஸோவிடம் கெஞ்சும் இனெஸ்**

*அரண்மனைக்கு இனெஸின் உடல் எடுத்து வரப்பட்டது. சவத்துக்கு அரசியின் உடை மாட்டி அலங்கரித்தனர். சவத்தை அரியணையில் அமர்த்தச் சொன்னார் பீட்டர். கிரீடம் சூட்டி, 'அனைவரும் அரசி இனெஸுக்கு மரியாதை செலுத்துங்கள்' – கட்டளையிட்டார். எல்லோரும் வரிசையாக வந்து, இனெஸின் முன் மண்டியிட்டு, சவத்தின் புறங்கைக்கு முத்தமிட்டு நகர்ந்தனர்.*

*பிறகு இனெஸின் உடல் அல்கோப்கா மடாலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஏகப்பட்ட மதச்சடங்குகளுக்குப் பிறகு அவளது உடல் அலங்கரிக்கப்பட்ட கல்லறையில் வைத்து மூடப்பட்டது. அடுத்த ஆறே ஆண்டுகளில் தனது 46-வது வயதில் அரசர் பீட்டரும் இறந்துபோனார்.*

இனெஸின் கல்லறைக்கு எதிரிலேயே அவளைப் பார்க்கும் கோணத்திலேயே பீட்டரின் உடலும் அலங்கரிக்கப்பட்ட கல்லறையில் வைக்கப்பட்டது.

ஏன்?

இறுதித் தீர்ப்பு நாளன்று, உயிர்த்தெழும்போது பீட்டரும் இனெஸும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி எழ வேண்டும் என்பதற்காக.

ஆம், இப்படியும் ஒரு காதல் கதை.

(வருவார்கள்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 16**

**முகில், படம்: பா.காளிமுத்து**



## அதிரடி ஆசைநாயகி!

'அரண்மனையிலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் மகளை அந்தப்புரத்துக்கு அனுப்பிவையுங்கள். இது பேரரசரின் உத்தரவு!'

வீரர்கள் வீடு தேடி வந்து நின்றார்கள். உயர்குடி இளம்பெண்களைத் தேடிவந்து அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்வதென்பது சீன ராஜ்ஜியங்களில் காலம் காலமாக நடந்ததுதான். அப்படித்தான் ஷிஹுவோ என்பவரது வீட்டுக்கும் வந்தார்கள். பெரும் வியாபாரி. அவருக்கு 13 வயதில் வூ ஸெடியான் என்ற மகள் இருந்தாள். (சீனாவில் முழு சூரிய கிரகணம் தெரிந்த ஆண்டான கி.பி.624-ல் வூ பிறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.) வசதியாக வளர்ந்தவள். வீட்டைச் சுத்தம் பண்ணுவது, பாத்திரங்கள் துலக்குவது, துணி துவைப்பது போன்ற வேலைகளைச் செய்யவெல்லாம் வேலையாள்கள் இருந்ததால், தன் தந்தையின் அறிவுரையின்படி கல்வி கற்றாள். புத்தகங்கள் வாசித்தாள். அவளுக்கு வரலாற்றில் விருப்பமிருந்தது. இலக்கியங்கள் இனித்தன. அரசியல் பயில ஆர்வமிருந்தது. இசை கேட்டாள். அறிவில் மிளிர்ந்தாள்.

'வூ... நீ போக வேண்டுமா?' - அவளின் தாய் யாங் கண்ணீர் விட்டாள். ஆனால், வூ கலங்கவில்லை. கதறவில்லை. தாயைச் சமாதானப்படுத்தினாள். 'இது என் விதியாக இருக்கலாம். அல்லது விதியை மாற்றும் நிகழ்வாகக்கூட இருக்கலாம். சொர்க்கத்தின் மகனைச் சந்திக்கச் செல்லும் வாய்ப்பை ஏன் இழக்க வேண்டும்?' மகளின் கேள்வியில் தாய் பதிலின்றி நின்றாள்.

'சொர்க்கத்தின் மகன்' என்றால், 'சீனாவின் பேரரசர்' என்று பொருள். அந்தப்புரத்தின் ஆசைநாயகிகளுள் ஒருத்தியாகச் சென்றவள், 'சொர்க்கத்தின் மகள்' ஆகி சீனாவின் தாங் பேரரசையே ஆட்டிப் படைத்த வரலாறுதான் இது. இன்னும் சொல்வதென்றால், சீன வரலாற்றிலேயே இடம்பெற்ற ஒரே ஒரு பேரரசி வூ ஸெடியான் மட்டுமே. அந்த உச்சத்தை அடைவதற்கான அவளது பாதை குருதி கொப்பளிக்கும் அத்தியாயங்களால் நிரம்பியது.



சீனாவில் தாங் அரச மரபு கி.பி.618-ல் தோற்றுவிக்கப்பட்டது. சாங்கான் (இன்றைய சியான்) நகரமே அவர்களது தலைநகரம். தாங் அரச மரபுக் காலமே சீனப் பண்பாட்டின் மிகச் செறிவான காலம் என்கிறது வரலாறு. அதன் இரண்டாவது பேரரசர் தாய்ஸோங் காலத்தில் வூ, அவரது அந்தப்புரத்துக்கு அழைத்து வரப்பட்டாள். ஒரு பெண்ணின் அழகையும்

*அறிவையும் பரிசோதித்து அதற்கேற்ப ரேங்க் கொடுத்து அவளுக்கான பணியை, அந்தஸ்தை நிர்ணயிப்பது பாரம்பர்ய வழக்கம்.*

*சுமாரான பெண் என்றால் ரேங்க் 8. அந்தப்புரத்தில் எடுபிடி வேலைகள் செய்யலாம். அதற்கடுத்த நிலையிலுள்ள பெண்ணுக்கு ரேங்க் 7. பேரரசருக்கு எடுபிடி வேலைகள் செய்யலாம். ரேங்க் 6 என்றால் பேரரசரின் உடலுக்குச் சில பணிவிடைகள் செய்யலாம். ரேங்க் 5 கொண்ட பெண்கள் புத்திசாலிகள். பேரரசருக்கு அலுவல் ரீதியாக உதவலாம். ரேங்க் 4 என்றால் அந்தப்புரத்தில் சில அதிகாரங்கள் கொண்ட அழகிகள். ரேங்க் 3 என்றால் பேரரசரின் அந்தரங்கப் படுக்கையறைக்குள் நுழையும் உரிமை கொண்ட பேரழகிகள். ரேங்க் 2 உடன் ஒன்பது ஆசைநாயகிகள் இருந்தனர். ரேங்க் 1 உடைய பெண்ணே தலைமை ஆசைநாயகி. அவளே பேரரசருக்கு மிகவும் நெருக்கமானவள். அதிக அதிகாரம் கொண்டவள். இவர்கள் போக, பேரரசர் திருமணம் செய்துகொண்ட மனைவிகள் தனி. அதில் பேரரசி பட்டம் கொண்டவள் தனி.*

*ஆளை அசத்தும் அழகில்லாத வூ-க்குக் கிடைத்த ரேங்க் 5. கல்வியறிவு உடையவளாயிற்றே. அரண்மனை நூலகத்தைப் பராமரிக்கும் வேலை வூ-க்கு ஒதுக்கப்பட்டது. அங்கே நிறையவே படித்தாள். நூலகத்துக்கு வந்த பேரரசர் தாய்ஸோங் (Taizong), வூவிடம் பேசினார். அவளும் தங்கு தடையின்றி நிறையவே பேசினாள். அரசியல், வரலாறு, தத்துவம் என்று. பேரரசர் அசந்துபோனார். அழகில் குறைந்த ஒரு பெண், பேரரசரின் படுக்கையறைக்குள் நுழைவது என்பது சீக்கிரம் நடக்காது. ஆனால், வூ-க்குப் பேரரசருடன் 'ஒரு போர்வைக்குள் இரு தூக்கம்' சீக்கிரமே வாய்த்தது. நேரங்கெட்ட நேரத்தில் விழிப்பு வந்துவிட்டால் அரசாங்கக் கோப்புகளைப் பார்வையிடுவார் தாய்ஸோங். அதற்காகவே அந்தப்புரத்துக்கும் கோப்புகள் அனுப்பி வைக்கப்படும். அவற்றைப் பேரரசர் பார்வையிட உதவும் பணி, வூ-க்குக் கிடைத்தது. கொஞ்சிக் குழைந்து பேரரசரிடம் நிர்வாக நுணுக்கங்களைக் கற்றுக்கொண்ட வூ, பயமின்றி அவருக்கே ஆலோசனைகள் சொல்லுமளவுக்குத் தன்னைத் தகவமைத்துக்கொண்டாள்.*



பேரரசி வூ ஸெடியான் – பேரரசர் காவ்ஸோங்

தாய்ஸோங், கிபி 649-ல் இறந்துபோனார். பேரரசரின் ஆசைநாயகிகளில் யாருக்கெல்லாம் குழந்தைகள் இல்லையோ, அவர்களெல்லாம் மொட்டையடித்துக்கொண்டு புத்த மடாலயத்துக்குச் சென்று மீதி வாழ்வைக் கழிக்க வேண்டும் என்பது மரபு. வூ முடியை இழந்தாள். புத்தரோடு பேசச் சென்றாள். மடாலய வாழ்க்கை.

தாய்ஸோங்கின் மகனான காவ்ஸோங் (Gaozong) அடுத்த பேரரசர் ஆனார். சுமார் இரண்டு வருடங்கள் கழிந்திருக்கும். காவ்ஸோங், தன் தந்தையின் நினைவு நாளில் அந்தப் புத்த மடாலயத்துக்குச் சென்றார். வழிபட்டுவிட்டுத் திரும்பியவரது கண்களில் வூ தென்பட்டாள். அவரது கண்களில் பொலபொலவெனக் கண்ணீர். வூவின் கண்களிலும். நீண்ட நாள்கள் கழித்து, தன் காதலியை மொட்டைத் தலையுடன் சந்நியாசக் கோலத்தில் கண்டால் காதலனுக்குக் கண்களும் இதயமும் கலங்காதா?

என்னது, காதலனா? இது எப்போது? பேரரசர் தாய்ஸோங்கின் ஆசைநாயகியாக இருக்கும்போதே, இளவரசர் காவ்ஸோங்குடனும் உபரியாகக் காதல் வளர்த்திருந்தாள் வூ. ஆகவே, பேரரசர் விம்மியபடி விலகிச்சென்றார். பேரரசி வாங் (காவ்ஸோங்கின் மனைவி), இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டாள். அவளுக்கு ஒரு காரியம் ஆக வேண்டியதிருந்தது. அப்போது பேரரசர் காவ்ஸோங்கின் தலைமை

ஆசைநாயகியாக இருந்த ஸியாவோ, அளவுக்குமீறி ஆடிக்கொண்டிருந்தாள். அவளிடம் மயங்கிக் கிடந்த காவ்ஸோங், வாங்கைக் கண்டுகொள்ளவே இல்லை. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்ற கிறித்துவுக்கு முந்தைய கால தியரிப்படி, ஸியாவோவை வீழ்த்த வூவைக் கூர்தீட்டினாள் பேரரசி.

'நீ இனி தலையை மழிக்காதே. முடியை வளர்த்துக்கொண்டு அரண்மனைக்கு வா!' பேரரசியின் கட்டளைப்படி வூ மீண்டும் அரண்மனைக்குள் 'நல்லவளாக' அடியெடுத்து வைத்தாள். பழைய காதலியை மீண்டும் கண்ட தாவ்ஸோங், வூவைச் சரணடைந்தார். வூ, அவரை பலமாக முடிந்துவைத்துக் கொண்டாள். ஸியாவோ திக்கற்று நின்றாள்.



காவ்ஸோங்

அதிகாரபூர்வமாகத் தலைமை ஆசைநாயகியாக வேண்டாமா? வூ, பேரரசருடன் சேர்ந்து இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டாள் (லி ஹாங், லி ஸியான்). அவளுக்கு காவ்ஸோங்கின் தலைமை ஆசைநாயகி அந்தஸ்து கிட்டியது. பேரரசிக்கும் பேரரசருக்குமிடையே வாரிசுகள் கிடையாது என்பதால் அந்தப்புரத்தில் வூவின் அதிகாரம் கொடிக்கட்டிப் பறந்தது. அந்தப்புரத்திலிருக்கும் பிற பெண்களுக்கெல்லாம் சலுகைகளை

வாரி வழங்கி அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்து நின்றாள் வூ. பேரரசியும் திகைத்து நின்றாள். ஸியாவோவே பரவாயில்லைபோல. வூவை எவளைக் கொண்டு அடக்குவது? வூ, தனது அடுத்த இலக்கை நிர்ணயித்திருந்தாள். 'நான் பேரரசியாக வேண்டும்.'

வூ-க்கு மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது (கி.பி.654). அது சில நாள்களில் மூச்சுத்திணறலால் இறந்துபோனது. (குழந்தையைக் கொன்றது வூ-தான் என்றொரு வெர்ஸன் உண்டு.) பேரரசரின் காதில் கதறலாக ஒரு குற்றச்சாட்டு விழுந்தது. 'பேரரசி, வூவின் பெண் குழந்தையைக் கொன்று விட்டாள். குழந்தை இருக்கும் அறைக்குப் பேரரசி செல்வதை நான் பார்த்தேன்.', 'ஆம். நானும் பார்த்தேன்.' சாட்சிகள் நாக்கில் நரம்பின்றி பொய்யுரைத்தன. வூவும் போலிக் கண்ணீர் பொழிந்தாள். சி.சி.டி.வி சுழலும் இந்தக் காலத்திலேயே எந்த ஆணியையும் பிடுங்க முடியவில்லை. அன்றைக்கு என்ன செய்ய முடியும்? பேரரசர் அதை நம்பினார். வாங்கைக் கண்டித்தார்.

வேறு வழியின்றி வாங், முன்னாள் எதிரி ஸியாவோவுடனேயே கைகோத்தாள், இந்நாள் எதிரி வூவைக் காலி செய்ய. 'அவர்கள் இருவரும் இணைந்து மந்திரவாதிகள் மூலம் நமக்குச் சூன்யம் வைக்கப்பார்க்கிறார்கள்.' வூ, தலையணை மந்திரம் ஓதினாள். அவள் சொல்வதையெல்லாம் நம்பியே பழகிவிட்டிருந்த காவ்ஸோங், வாங்கையும் ஸியோவாவையும் ஓர் அறையில் சிறைப்படுத்தினார். வாங், பேரரசி பதவியிலிருந்து நீக்கப்பட்டாள்.

தாங் பேரரசின் மகாராணியாக, பேரரசர் காவ்ஸோங் சிம்மாசனத்துக்கு இணையாக, அதே உயரம் கொண்ட சிம்மாசனத்தில் பேரரசியாக கம்பீரமாக அமர்ந்தாள் வூ ஸெடியான். (அதுவரை எந்தவொரு பேரரசியும் பேரரசருக்கு இணையாக அமர்ந்ததில்லை.) பேரரசியான பின் வூவின் முதல் ரகசியக் கட்டளை... 'அவர்கள் இருவரது கைகளையும் பாதங்களையும் வெட்டுங்கள். அவர்களை மது ஜாடிகளுக்குள் போட்டு ஊற வையுங்கள். தங்கள்

*ரத்தத்தையே குடித்து வாழட்டும்!' அப்படியே செய்தார்கள். வாங், விட்டுவிடும்படி கெஞ்சினாள். ஸியாவோ சாபமிட்டாள். 'அடுத்த ஜென்மத்தில் நான் பூனையாகவும், வூ எலியாகவும் பிறப்போம். அப்போது நான் அவள் தொண்டையைக் கடித்துக் குதறிக்கொல்வேன்!'*



**தாய்ஸோங்**

*சில நாள்கள் கழித்து வூவின் முன்னிலையில் வாங் மற்றும் ஸியாவோவின் உயிரற்ற உடல்கள் ஜாடியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டன. 'தலைகளை அறுத்துப் போடுங்கள்!' செய்தார்கள். இருந்தாலும் வூவின் கனவுகளில் அந்த இருவரும் அடிக்கடி 'முண்டங்களாக' வந்து பயமுறுத்தினார்கள். அலறி எழுந்தாள். பூனையைப் பார்த்தாலே வூ-க்குக் கோபம் வந்தது. யாரும் அரண்மனையில் பூனை வளர்க்கக்கூடாது என்று உத்தரவிட்டாள். அதே சமயம் பேரரசர், வூவின் ஆட்டங்களுக்கெல்லாம் வாலாட்டியபடி வளர்ப்பு நாய் போலத் திரிந்து கொண்டிருந்தார். காரணம், காவ்ஸோங்குக்கு ஆளுமைத்தன்மையும் நிர்வாகத் திறமையும் குறைவு. தவிர, அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த இடைவெளிகளையெல்லாம் பயன்படுத்தி,*

தனக்கென்று விசுவாசிகளாகவும் அடிமைகளாகவும் இருக்க ஒரு கூட்டத்தை உருவாக்கினாள் வூ.

அதுவரை பட்டத்து இளவரசராக இருந்தவர் லி ஸோங். லியு என்ற ஆசைநாயகிக்குப் பிறந்தவர். 'நான் பேரரசியான பிறகு, வேறு எவளுக்கோ பிறந்தவன் எப்படி பட்டத்து இளவரசனாக இருக்கலாம்? நம் மகனை அறிவியுங்கள்!' – வூ, காவ்ஸோங்குக்குக் கட்டளையிட்டாள். அவர் வழிமொழிந்தார் (கி.பி.656). 'இனி பட்டத்து இளவரசர் லி ஹாங்!'

அரசவையைச் சேர்ந்த பலரும் எதிர்ப்பு தெரிவித்தனர். பேரரசரிடம் 'இது சரியில்லை' என்று முணுமுணுத்தனர். யாரெல்லாம் தனக்கு எதிராகப் பேசுகிறார்கள் என்று பட்டியல் தயாரிக்கச் சொன்னாள் வூ. ஒவ்வொருவராகக் குறிவைத்தாள். அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் புனையப்பட்டன. அல்லது வேறு குற்றங்களில் அவர்கள் குற்றவாளியாக்கப் பட்டார்கள். பிறகென்ன? தலைகள் தரையில் உருண்டன. பேரரசர் கேட்டபோது, வூ சொன்ன பதில், 'பேரரசரை விமர்சிக்கும் உரிமை இங்கே யாருக்கும் கிடையாது.'

இப்படியாகப் பயத்தை ஆழமாக, அகலமாக விதைத்தாள் பேரரசி வூ. இவையெல்லாம் ஆரம்பம் மட்டுமே.

**(வூ வருவாள்...)**

**முகில், படம்: பா.காளிமுத்து**

# கிறுக்கு ராஜாக்களின் கதை




**'நானே வருங்கால புத்தர்!'**

*அதிகார மையத்துடன் ஒரு எக்ஸ் நெருங்கிப் பழகி, பின் அந்த எக்ஸே மறைமுக அதிகார மையம் ஆகும்போது, எக்ஸின் குடும்பமும் எங்கெங்கும் வியாபித்து ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும். இதுவே வாடிக்கை. நாமும் பார்த்திருக்கிறோம்.*

*சீனாவின் சாங் பேரரசின் அந்தப்புரத்துக்குள் சாதாரணப் பெண்ணாக நுழைந்து, தலைமை ஆசைநாயகியாக உயர்ந்து, பேரரசியையே வீழ்த்தி, தானே பேரரசியாக அரியணை ஏறிய வூ ஸெடியான், மேற்படி விஷயத்தில் மிகக் கவனமாக இருந்தாள். 'நானே சர்வ அதிகாரமும் கொண்டவள். எனக்கு ஆபத்தாக யார் தெரிந்தாலும் அவர்களை அழிப்பேன். அவர்கள் என் ரத்தச் சொந்தம் என்றாலும்கூட.'*

*வூவின் குடும்பத்தினரும் அரண்மனைக்குள்ளும் அந்தப்புரத்திலும் அதிகாரத்துடன் வலம் வரத் தொடங்கினர். ஆனால், வூ அதனை ரசிக்கவில்லை. அவளின் சகோதரியின் மகள், இன்னும் சில உறவுக்காரப் பெண்களெல்லாம் அந்தப்புரத்துக்குள் அழகிகளாகத் திரிந்தனர். 'என் வழியிலேயே இவர்களும் எனக்கே எதிரிகளாக வந்துவிட்டால்?'*

*'அக்கா என்னடி, தங்கை என்னடி, அரசியல் சூழ்ந்த உலகத்திலே!' அந்த இளம் பெண்கள் வூவின் கட்டளைப்படி கொல்லப்பட்டனர். குடும்பத்தினரும் ஒடுக்கப்பட்டனர். 'எல்லை மீறிப் போகிறாளே...' - ஆபத்தை உணர்ந்த*

பேரரசரும் சில சமயங்களில் வூவை அடக்க முயற்சி செய்தார். சான்ஸிலர் ஷாங்குவான் என்பவர் பேரரசரின் கட்டளைப்படி வூவைப் பதவியிறக்கம் செய்யும் அரசாணையைத் தயாரித்தார். விஷயமறிந்த வூ, பத்ரகாளியாக மாற, பேரரசர் பம்மினார். ஷாங்குவானுக்குத் தற்கொலை செய்துகொள்ளும் அருமையான வாய்ப்பு வழங்கப்பட்டது. தனக்கு நெருங்கிய ஒரு பெண்ணின் மகளுக்கு அந்தப்புரத்தில் பதவி உயர்வு வழங்க பேரரசர் சபலப்பட்டார். இருந்தாலும் வூவை நினைத்து நடுங்கினார். அந்தப் பெண்ணின் உணவில் விஷம் கலக்கப்பட்டது. அந்தப் பழி, வேண்டாத இரு நபர்கள்மீது சுமத்தப்பட்டது. வூ, ஒரே பந்தில் ஹாட்-ட்ரிக் விக்கெட் எடுத்தாள்.




கி.பி. 660. பேரரசர் காவ்ஸோங்குக்கு திடீரென உடல்நலக் குறைபாடு உண்டானது. பக்கவாதம். பார்வைத்திறனும் குறைந்துபோனது. அடுத்தவரை அண்டியே வாழ வேண்டிய நிலை. பேரரசி வூ அரியணையில் கூடுதல்

அதிகாரத்துடன் வசதியாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். வூவால் கொல்லப்பட்ட முன்னாள் பேரரசி வாங்கும் ஸியோவாவும் அடிக்கடி அவள் கனவில் வந்து கழுத்தை நெரிப்பது தொடர்ந்தது. ஆகவே, ராஜ்ஜியத்தின் கிழக்குப் பகுதி நகரமான லியோயாங்குக்குப் பேரரசருடன் ஜாகையை மாற்றிக்கொண்டாள் வூ.

சாங்கானை நிர்வகிக்கும் பொறுப்பு, இளவரசன் லி ஹாங்குக்கு வழங்கப்பட்டது. வூவின் வயிற்றில் பிறந்திருந்தாலும் லி ஹாங், கருணைமிக்கவனாக இருந்தான். அப்போது அந்தப் பிரதேசத்தில் பஞ்சம் சூழ்ந்தது. மக்களும் வீரர்களும் மரப்பட்டைகளை உண்டு வாழ்வதைக் கண்டு மனமிளகி, அரசின் கிடங்கிலிருந்து அரிசியை அள்ளிக்கொடுத்தான். இப்படியாக இன்னும் சில விஷயங்கள். 'இவன் நிர்வாகத்துக்கே லாயக்கற்றவன்' – வூ கடுப்பானாள். தாய்க்கும் மகனுக்கும் தகராறு வலுத்தது. 'வூ அரசாங்க விஷயங்களில் தலையிடவே கூடாது என்று உத்தரவிடுங்கள்.' லி ஹாங், பேரரசரை வற்புறுத்தியபடியே இருந்தான். கி.பி.675-ல் திடீரென இறந்துபோனான். 'கொஞ்சி வளர்ந்த மகனுக்கான உணவிலேயே நஞ்சைக் கலக்கச் சொன்னது வூதான்' என்று அரண்மனை வட்டாரத்தில் 'உச்' கொட்டினார்கள்.

வூவின் இரண்டாவது மகன் லி ஸியான், பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டான். அதேசமயம், பட்டத்து இளவரசர் போட்டிக்குத் தகுதியுள்ள, காவ்ஸோங்குக்கும் பிற பெண்களுக்கும் பிறந்த ஆண் வாரிசுகளை, காவ்ஸோங்கின் சகோதர, சகோதரி மகன்களையெல்லாம் கட்டம் கட்டி கல்லறைக்கு அனுப்பும் வேலையைத் தெளிவாகச் செய்தாள் வூ. கி.பி 675-ல் பேரரசரின் உடல்நிலை மேலும் பலவீனமடைந்தது. பேரரசி வூவை, தன் சார்பாக 'ஆளும் பிரதிநிதி' என்று அறிவித்தார் காவ்ஸோங்.

நிர்வாகத் திறமைமிக்க லி ஸியானுக்கும் தாயுடன் மனஸ்தாபம் வந்தது. 'உன்னைப் பெற்ற தாய் வூ அல்ல. அவளின் சகோதரி. வூ உன்னையும் தூக்கியெறிவாள்!' என்று லி ஸியானைச் சிலர் நம்ப வைத்தனர். ஆகவே,

அவனது நடவடிக்கைகளில் மாற்றம் உண்டானது. உஷாரான வூ, அரசியல் கொலையொன்றில் லி ஸியான்மீது குற்றம் சுமத்தி, பட்டம், பதவியைப் பிடுங்கினாள். அவனை ஒரு மாளிகையில் சிறைவைத்தாள்.




காவ்ஸோங்குக்கும் வூக்கும் பிறந்த மூன்றாவது மகன் ஸோங்ஸோங் (என்ற லி ஷியான்) பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டான். கி.பி. 683-ல் பேரரசர் காவ்ஸோங் தனது இறுதி நாள்களை எண்ணிக் கொண்டிருந்தார். 'பேரரசரின் உணவில் கொஞ்சம் கொஞ்சமாக விஷம் கலந்து அவரை முடக்கியதே வூதான்' என்று பரபரப்பாகப் பேசப்பட்டது. அந்த டிசம்பர் 27-ல் பேரரசர் காவ்ஸோங் இறந்தார்.

தாங் பேரரசின் அடுத்த பேரரசராக ஸோங்ஸோங், கம்பீரமாக அரியணையில் அமர்ந்தான். தன் மனைவியைப் பேரரசியாக அறிவித்தான். தன் மாமனாருக்கு பிரதம மந்திரி பதவி கொடுத்தான். இவை அனைத்தையும் சில நாள்கள் அமைதியாக கவனித்துக்கொண்டிருந்த வூ, உக்கிரமானாள். 'அவன் ஆட்சி செய்து கிழித்தது போதும். அவனை நான் பதவிநீக்கம் செய்கிறேன்.' வூவின் படைகள் ஸோங்ஸோங்கைத் தூக்கியெறிந்தன. நேற்றைய பேரரசன், இன்றைக்குச் சாதாரணனாக ஒதுக்கி, ஒடுக்கிவைக்கப்பட்டான். வூவின் நான்காவது மகன் ரைஸோங் அடுத்த பேரரசனாகப் பெயரளவுக்கு அறிவிக்கப்பட்டான்.

'மகனே ரைஸோங், உனக்கான அரண்மனையில் சௌகரியமாக இருக்குமிடம் தெரியாமல் இரு. உனக்கும் பேரரசின் நிர்வாகத்துக்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது. எல்லாவற்றையும் நானே பார்த்துக்கொள்கிறேன். புரிகிறதா?'

ஆட்சி, அதிகாரத்தை மீண்டும் தொடர்ந்தாள் பேரரசி வூ. இதற்கிடையில், இரண்டாவது மகன் லி ஸியான் ஆயுதங்கள் திரட்டி, சதி செய்வதாக செய்தி வந்தது. வூ, தளபதி ஒருவரை அனுப்பினாள். 'அவன் கதையை முடித்துவிடு.' தளபதியும், லி ஸியானைத் தேடிச் சென்றார். மிரட்டியே அவனைத் தற்கொலை செய்துகொள்ள வைத்தார். 'முடித்துவிட்டேன் பேரரசி' என்று வூவிடம் வந்து பணிவன்புடன் சொன்னார். 'என்னது! என் மகனைக் கொன்றுவிட்டாயா? பாவி!' - கதறல் நடிப்பைக் கடைவிரித்த வூ, தளபதிக்கு மரணதண்டனையை நிறைவேற்றினாள்.

'இனி இது தாங் பேரரசு அல்ல. பேரரசி வூவாகிய நான் ஆளும் ஸோவ் (Zhou) பேரரசு!' - ராஜ்ஜியத்தின் பெயரை மாற்றினாள். ஸோவ் பேரரசின் முதல் ஆட்சியாளராக (ஒரே ஒரு ஆட்சியாளரும்கூட), ஸோவ் அரச மரபைத் தோற்றுவித்த பெருமைக்குரியவளாகத் தன் பெயரைச் சரித்திரத்தில் பதிவு செய்துகொண்டாள்.



பேரரசர் காவ்ஸோங்

வூ, 'ரகசியக் காவல் படை' ஒன்றை அமைத்தாள். யார் யாரெல்லாம் தனக்கு எதிராகப் பேசுகிறார்களோ, ஆட்சியைக் கவிழ்க்க நினைக்கிறார்களோ, அந்நபர்களைக் குடும்பத்தோடு கருவறுக்கும் அதிகாரம், அந்த ரகசியக் காவல் படைக்கு அளிக்கப்பட்டிருந்தது. அரசாங்கக் கட்டடங்களில் தாமிரத்தாலான அஞ்சல் பெட்டிகள் வைக்கப்பட்டன. 'யாரெல்லாம் என்ன குற்றம் செய்கிறார்கள் என்று அரசுக்கு மொட்டைக்கடிதம் எழுதிப் போடலாம்' என்று மக்கள் மத்தியில் அறிவிக்கப்பட்டது. கடிதத்தில் குறிப்பிடப்பட்டோர் காவல் படையால் கைது செய்யப்பட்டனர். விசாரணை. விதவிதமான சித்ரவதை. சிறைத்தண்டனை. பெரும்பாலும் மரணதண்டனை. இப்படியாகத் தன்னை எதிர்க்க நினைத்தோரையெல்லாம், பலம் பெறவிடாமலேயே பஸ்பம் ஆக்கினாள் வூ. விழுந்த பிணங்களுக்குக் கணக்குவழக்கு கிடையாது.

சரி, மிதமிஞ்சிய அரசியல் கொலைகளைத் தவிர்த்து, வூவின் ராஜ்ஜியத்தில் நிர்வாகம், பொருளாதாரம், மக்கள் நலன் இவையெல்லாம் எப்படி இருந்தன? வலதுகைப் பெருவிரலை உயர்த்தலாம்.

வூ, வாழ்ந்ததும் ஆண்டதும் ஆறாம் நூற்றாண்டில். அதுவும் ஆணாதிக்கம் மிகுந்த சீன சமூகத்தில். அப்பேர்ப்பட்ட சூழலில், அதிகாரத்தை ஒரு சாதாரண பெண் கைப்பற்றி, ராஜ்ஜியத்தை நிர்வகிப்பது என்பது மாபெரும் செயல். அதற்கு இரக்கமும், கருணையும், மனிதமும் கிஞ்சித்தும் உதவாது என்பதே நிதர்சனம். அறமற்ற அரசியல், நயவஞ்சக நெஞ்சம், திணறடிக்கும் திமிர், அசரடிக்கும் ஆணவம் - இவையே தேவை என்று முடிவுசெய்து பலருக்கும் முடிவுரை எழுதினாள் வூ. 'பாசத்தில் வழுக்கி விழுந்தால் பாசக்கயிறுதான். மோசம் செய்து மூர்க்கம் காட்டினால் ராஜ்ஜியத்தின் மூக்கணாங்கயிறே என் கையில்தான்.' வூவின் பாணி அதுவாகத்தான் இருந்தது.

ஸோவ் பேரரசியாக கி.பி 705 வரை வூ ஆட்சி செய்தாள். அவள் ஆட்சியில் அரசின் ஒவ்வொரு மட்டத்திலும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க

‘தகுதித்தேர்வு முறை’ இருந்தது. அதில் தேறினால்தான் வேலையும் பதவியும். படித்த, திறமையான நபர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பாக, நிர்வாகத்தில் பெண்கள் இடம்பெற்றனர். ஆக, அரசு எந்திரம் ‘முதுகெலும்புடன்’ இயங்கியது. ராஜ்ஜியத்தின் பொருளாதாரம் நிமிர்ந்தது. விவசாயிகள் நலன் பாதுகாக்கப்பட்டது. முறைகேடுகளுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. ராணுவ பலம் பெருக்கப்பட்டு ராஜ்ஜியத்தின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டன. போர்களிலும் வெற்றி கிடைத்தது. போரின்றி, தூது அனுப்பி அண்டை ராஜ்ஜியங்களுடன் நல்லுறவு வளர்ப்பதிலும் வூ திறம்பட விளங்கினாள்.

‘பெண் என்பதாலேயே வூ கொடும் அரக்கியாகச் சித்தரிக்கப்படுகிறாள். அவளது வெற்றியை ஏற்றுக்கொள்ள இயலாத ஆணாதிக்கச் சமூகம், அவளது ஆட்சியை இருண்ட காலமாகச் சித்தரிக்கிறது’ என்ற வலுவான எதிர் வாதங்களும் உண்டு. அது உண்மையே. நிர்வாகத்தைப் பொறுத்தவரை வூ கில்லாடி. அதிகாரத்தைத் தக்க வைக்க கையாண்ட முறைகளில் ‘கில்’லேடி!

பேரரசருக்குத்தான் அந்தப்புரம் இருக்க வேண்டுமா என்ன? வூவுக்கும் பல காதலர்கள் இருந்தனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு புத்தத் துறவி, அரண்மனை மருத்துவர், ஸாங் சகோதரர்கள் என்ற இரண்டு பாடகர்கள். இவர்கள் எல்லோருமே பேரரசியின் பிற்காலக் காதலர்களாக வாழ்ந்து, பதவியும் சுகமும் அனுபவித்து, பிறகு சூழ்ச்சிகளில் கொல்லப்பட்டவர்கள். தவிர, பேரிளம்பெண் வூவின் அந்தப்புரத்தில் இளைஞர்கள் பலர் ஆசைநாயகர்களாகவும் சேவை செய்தனர்.

கி.பி 705-ல் வூ நோய்வாய்ப்பட்டு தளர்ந்துபோனாள். அவளின் மூன்றாவது மகன் ஸோங்ஸோங் மீண்டும் தலையெடுத்துவந்து, ஆட்சியையும் அதிகாரத்தையும் கைப்பற்றினான். பேரரசி வூவைத் தகுதிநீக்கம் செய்து வேறொரு மாளிகைக்கு அனுப்பிவைத்து விட்டு, அப்பாடாவென அரியணையில் அமர்ந்தான். ‘ஸோவ் அரசமரபு முடிவுக்கு வந்தது. தாங் அரச மரபு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது’ என்று அறிவித்தான்.



**வூவின் நினைவுத்தூண்**

அதே ஆண்டில் வூ இயற்கையாகவே இறந்துபோனாள். ரத்தக்கறை படிந்த கரங்களுடையவள் என்றாலும், அவள் தன் வாழ்நாளில் புத்தருக்கு ஏகப்பட்ட சிலைகளை உருவாக்கினாள். கூடவே இன்னொன்றையும் சொல்லிக் கொண்டாள். 'நானே மைத்ரேயா! வருங்காலப் புத்தர்!'

பொதுவாக சீனப் பேரரசர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவிடங்களில், அவர்களின் அருமை பெருமைகளை விலாவாரியாகச் செதுக்கியிருப்பார்கள். ஆனால், பேரரரசி வூ-க்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூணில் எதுவுமே எழுதப்படவில்லை. அதனால்தான் அவள் இன்னும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

(வருவார்கள்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 18

**முகில், படம்: பா.காளிமுத்து**

### ரங்கூன் ராட்சஷன்!

*இந்த அத்தியாயத்தின் கதாநாயகனான... மன்னிக்கவும், வில்லனான நீ வின் அவர்களுக்கு உகந்த எண் 9 என்று எண்கணித ஜோதிடர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பதினெட்டாம் (1+8=9) அத்தியாயத்தில் அன்னாரைப் பற்றி அளவளாவ இருக்கிறோம். அன்னாருக்கு மட்டுமே உகந்த எண் 9. ஆனால், அன்றைய பர்மாவுக்கே ஆகாத எண் அது. அந்த எண் மட்டுமல்ல, நீ வினும் பர்மியர்களுக்கே ஆகாதவர்தான்.*

*1910 அல்லது 1911. நீ வின் (Ne Win) பிறந்த ஆண்டு, இந்த இரண்டில் ஏதோ ஒன்று. ரங்கூனிலிருந்து சுமார் 200 மைல்கள் தொலைவிலிருக்கும் Paungdale என்ற சிறிய கிராமமே சொந்த ஊர். பெற்றோர் வைத்த பெயர் Shu Maung. ('பெருமைக்குரியவன்' என்று பொருள்.) பர்மிய சீனக் குடும்பம். தந்தை, சாதாரண அரசு அலுவலர். நடுத்தரமான வாழ்க்கை. கல்வியில் ஆர்வம் கொண்ட நீ வின், பள்ளிப் படிப்புக்குப் பிறகு ரங்கூன் பல்கலைக்கழகத்தில் உயிரியல் பாடத்தை விருப்பத்துடன் தேர்ந்தெடுத்தான். டாக்டராகும் கனவு கண்டான். பாழாய்ப்போன பயாலஜி வரவில்லை. ஃபெயில். ('டாக்டர்' ஆகமுடியாமல், பர்மாவின் 'டிக்டேட்டர்' ஆனதெல்லாம் பர்மியர்களின் தலைவிதி!)*

*1931-ல் படிப்பை நிறுத்திவிட்டு, அஞ்சல் அலுவலராக ரங்கூனின் பணிபுரிய ஆரம்பித்தார் நீ வின். அப்போது பிரிட்டனின் காலனி நாடாக பர்மா இருந்தது. பிரிட்டிஷாரை எதிர்த்து அங்கே ஆங் சான் (ஆங் சான் சூ கியின்*

தந்தை) சுதந்திரப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார். விடுதலை வேட்கை கொண்ட பர்மிய இளைஞர்கள் பலரும், ஆங் சானையே தங்கள் தலைவராகக் கொண்டு செயல்பட்டனர். நீ வினும் 'நாம் பர்மியர்' என்ற தேசிய இயக்கத்தில் இணைந்து போராட்டங்களில் கலந்து கொண்டார்.

ராணுவத் தளபதி நீ வின்



இரண்டாம் உலகப் போர் சமயம். பர்மியர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஜப்பானின் ஆதரவு இருந்தது. 'பர்மா சுதந்திர ராணுவம்' அமைக்க ஜப்பான் முன்வந்தது. ஆங் சான், ராணுவப் பயிற்சிக்காக முப்பது இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தார் (Thirty Comrades). அதில் நீ வினும் ஒருவர். ஜப்பான் வசம் இருந்த ஹைனான் தீவில் ஜப்பானிய கர்னல் சுஸுகி கெய்ஜி, முப்பது பர்மியர்களுக்கு ரகசியமாக ராணுவப் பயிற்சிகளை வழங்கினார் (1941). அங்கேதான் Shu Maung என்ற இயற்பெயர் நீ வின் ஆனது. 'சூரியக் கதிர் போன்றவன்' என்று பொருள்.

*பர்மா சுதந்திர ராணுவத்தின் உதவியுடன், ஜப்பானியப் படைகள் பர்மாவுக்குள் புகுந்து பிரிட்டனின் படைகளைப் பின்வாங்கச் செய்தன. 1943-ல் பர்மாவைச் சுதந்திர நாடாக ஒப்புக்கு அறிவித்தது ஜப்பான். பா மாவ் என்ற பொம்மைத் தலைவரை ஆட்சியில் உட்கார வைத்தது. 'ஜப்பானால் ஒருபோதும் பர்மாவுக்குச் சுதந்திரம் கிடைக்காது' என்று ஆங் சான் தாமதமாகவே உணர்ந்து கொண்டார். பர்மியப் போராளிகளில் ஒரு பிரிவினர், மீண்டும் பிரிட்டனுடன் கைகோத்து ஜப்பானியப் படைகளை விரட்டியடிக்க முடிவு செய்தார்கள்.*

*இது தொடர்பாக 1945-ல் இலங்கை நாட்டின் கண்டியில் நடந்த மாநாட்டில், பர்மிய ராணுவப் பிரதிநிதியாக நீ வின் கலந்து கொண்டார். பிரிட்டன் படைகள் மீண்டும் பர்மாவைக் கைப்பற்ற பர்மா சுதந்திர ராணுவமே உதவியது. இதை ஜப்பான் ஆதரவு பர்மிய கம்யூனிஸ்டுகள் எதிர்த்தனர். ஆரம்ப கால 'தோழர்' நீ வின், பிரிட்டிஷாரின் உற்ற நண்பராகிப் போனார். கம்யூனிஸ்டுகளை ஒடுக்கும் ஆபரேஷனுக்குப் பிரிட்டிஷார் திட்டமிட, அவற்றைத் தலைமை தாங்கி நல்லவிதமாக நடத்திக் கொடுத்தார் நீ வின். தன்னால் வளர்க்கப்பட்ட ஒரு காம்ரேட் கடா, இப்போது கம்யூனிஸ்டுகளின் மார்பிலேயே பாய்கிறதே என்று ஆங் சான் வருத்தப்பட்டார். வெள்ளம் தலைக்கு மேலே போய்விட்டது. 1947-ல் காலனிய பர்மாவின் துணைத்தலைவராக இருந்த ஆங் சானும், அவரது அமைச்சரவை சகாக்கள் ஆறு பேரும் படுகொலை செய்யப்பட்டனர். அதில் தொடர்புடைய ஆங் சானின் அரசியல் எதிரியான யூ ஸா கைது செய்யப்பட்டு மரண தண்டனைக்குள்ளானார். 1948, ஜனவரி 4-ல் பர்மாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சோஷலிஸ்ட்டான யூ நூ, சுதந்திர பர்மாவின் முதல் பிரதமரானார்.*

*பர்மிய சுதந்திரப் போராட்ட நாயகர்களுள் ஒருவராக நீ வினுக்கும் மக்கள் மத்தியில் மதிப்பிருந்தது. அப்போது இரண்டாம் நிலை ராணுவத் தளபதியாக இருந்த நீ வின், பிரதமர் யூ நூவின் ஆதரவுடன் அடுத்தடுத்தப் பதவிகளுக்கு உயர்ந்தார். தனக்கு ஆகாதவர்களையெல்லாம்*

ராணுவத்திலிருந்து காலி செய்தார். பர்மாவின் ராணுவத்தையே மொத்தமாகத் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டு வந்தார்.

சுதந்திரத்துக்குப் பிறகான பர்மாவில், வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையேயான பிரச்னைகள் தலை தூக்கின. ஷான் மற்றும் காயா மாகாணங்கள் பர்மாவிலிருந்து விடுதலையாகும் கனவுடன் இருந்தன. சட்டம், ஒழுங்கு நாறிக் கிடக்க, எப்போது வேண்டுமானாலும் கவிழலாம் என்பது போலத்தான் யூ நூவின் அரசும் ஊசலாடிக்கொண்டிருந்தது. சூழலைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக, பிரதமர் யூ நூ பதவி விலகினார். ஆட்சியை ராணுவத்திடம் ஒப்படைத்தார். 1958 அக்டோபர் முதல் 1960 ஏப்ரல் வரை சுமார் ஒன்றரை ஆண்டுகள் ராணுவத் தளபதி நீ வின் இடைக்காலப் பிரதமராகப் பதவி வகித்தார்.

பிரிட்டிஷ் காலனியாதிக்கம், இரண்டாம் உலகப்போர்க் காலம் என்று ராணுவ ஆட்சிக்குப் பழகியிருந்த பர்மிய மக்கள், ராணுவத் தளபதி நீ வினுடைய ஆட்சியை வெறுக்கவில்லை. சூழல் கட்டுக்குள் வந்தபிறகு, 1960-ல் பர்மாவில் மீண்டும் தேர்தல் நடந்தது. யூ நூவின் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற, அவர் மீண்டும் பிரதமரானார். மறுபடியும் அரசியல் குழப்பங்கள். ஸ்திரமற்ற சூழல். குற்றங்கள் பெருகின.

பதவி ருசி கண்ட பூனையான நீ வின், உரிய தருணத்துக்காகக் காத்திருந்தார். மீண்டும் ஒருமுறை இடைக்காலப் பிரதமராகவெல்லாம் விரும்பவில்லை. ஆங் சான் சமாதி முன் அமர்ந்து 'தியான ஸீனும்' போடவில்லை. அதற்கும் மேலே யோசித்தார். 1962, மார்ச் 2 அன்று, நீ வின் தலைமையில் ராணுவப் புரட்சி அரங்கேறியது. ரங்கூனின் முக்கிய இடங்களை, அரசுக் கட்டடங்களை ராணுவம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. பிரதமர் யூ நூவும், முக்கிய அமைச்சர்களும், முன்னாள் அதிபர் சாவோவும், தலைமை நீதிபதியும் கைது செய்யப்பட்டனர்.

'யூ நூவின் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டுவிட்டது. முக்கியமான ராணுவத் தளபதிகள் அடங்கிய Union Revolutionary Council இனி ஆட்சி செய்யும். அந்த கவுன்சிலின் சேர்மனாக நான் தேசத்தை வழிநடத்துவேன். இது ரத்தம் சிந்தாத அமைதியான புரட்சி.' - பெருமை பீற்றினார் நீ வின். ஆனால், சில கொலைகள் நடந்திருந்தன. குறிப்பாக, முன்னாள் அதிபர் சாவோவின் மகன் சாவோ மை சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். சில முக்கியஸ்தர்கள் காணாமல் போயிருந்தனர்.



**ஆங் சான்**

கோடை விடுமுறை முடிந்து, ரங்கூன் பல்கலைக்கழக மாணவர்கள் ஜூலையில் வகுப்புகளுக்குத் திரும்பினர். அவர்களிடையே ராணுவ அரசுக்கு எதிரான கனல் தகித்தது. அரசுக்கு எதிராக மாணவர் போராட்டம் அமைதி வழியில் ஆரம்பித்தது. ஜனநாயக தேசத்தின் தலைவர்களாலேயே மாணவர் எழுச்சியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நீ வின் சும்மா இருப்பாரா? ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை அடக்க ராணுவம் ஏவப்பட்டது.

மாணவர் சங்கக் கட்டடம் டைனமைட்டால் தகர்க்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இறந்துபோயினர். ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ரங்கூன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களும் காலவரையின்றி மூடப்பட்டன.

கையில் படிந்திருந்த ரத்தக்கறையைத் துடைத்துவிட்டு, நீ வின் வானொலியில் கர்ஜித்தார். 'இப்படிப் போராடுவதின் மூலம் அரசுக்குச் சவால் விடுகிறீர்கள். நீங்கள் கத்தியை எடுத்தால் நானும் கத்தியை எடுப்பேன். ஈட்டியை எடுத்தால் நானும் ஈட்டியை எடுப்பேன்.'

இடதுசாரி, வலதுசாரி என்ற பாகுபாடில்லாமல் கைதுகள் தொடர்ந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக கட்சிகள் சார்ந்த போராட்டங்களும் தொடர்ந்தன. 'எதிர்க்கட்சிகள் அனைத்தும் தடை செய்யப்படுகின்றன' என்ற ஒற்றை அறிவிப்பில் எதிர்ப்புகளை ஷட்-அப் பண்ணினார். 'இனி ஒரே ஒரு அதிகாரபூர்வக் கட்சிதான். அது தன் தலைமையிலான Burma Socialist Programme Party (BSPP) மட்டுமே' என்று அறிவித்தார். தேசியம், மார்க்ஸியம், பௌத்தம் எல்லாம் வேலைக்கே ஆகாது. 'Burmese way to Socialism - இதுவே எனது லட்சியம்' என்றார். தனது ஆட்சியில் புதிய பர்மா பிறக்கப்போகிறது என்றெல்லாம் தேனொழுகப் பேசிவிட்டு, முட்டாள்தனத்துடனும், குரூரத்துடனும் ஒவ்வொரு விஷயமாக அரங்கேற்ற ஆரம்பித்தார் நீ வின்.

பர்மாவை இரும்புத்திரை கொண்டு மூடினார். அயல் தேசத்தினர் யாரும் தொழில் தொடங்க, முதலீடு செய்ய முடியாது. ஏற்கெனவே அங்கே தொழில் நடத்திக்கொண்டிருக்கும் அயல் நாட்டினர் மூடிக்கொண்டு கிளம்பலாம். பர்மா இனி பர்மியர்களுக்கே. அனைத்தும் தேசியமயமாக்கப்படுகின்றன. பத்திரிகை, சில்லறை வணிகம், மர வணிகம், இன்னபிற.



1945-ல் பர்மாவில் பிரிட்டிஷ் படை

பர்மாவில் செழிப்புடன் வணிகம் செய்து கொண்டிருந்த சீன, இந்திய வணிகர்கள் இதனால் பெருமளவு பாதிக்கப்பட்டனர். பர்மாவின் பொருளாதாரத்துக்கு வலு சேர்த்த அரிசி ஏற்றுமதியும், தாதுப்பொருள்கள் ஏற்றுமதியும் பெருமளவு குறைந்து போயின. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பாதிப்பிருந்தது. ஏழை பர்மியன் ஒருவன் அன்றைய வருமானத்துக்காகத் தவித்துக்கொண்டிருந்த நேரத்தில், நீ வின் பிரிட்டனின் அஸ்காட் ரேஸ் கோர்ஸில் குதிரைகள் மீது பணம் கட்டிக்கொண்டிருந்தார். ஐரோப்பிய ஸ்பாக்களில், தன்னுடைய ஏகப்பட்ட மனைவிகளுடன் தேசநலன் கருதி மசாஜ் எடுத்துக்கொண்டிருந்தார்.

ஆசியாவின் செழிப்பான நாடுகளில் ஒன்றாக இருந்த பர்மாவை, நீ வின் தன் பொற்கால ஆட்சியால் உலகின் முதல் 10 ஏழை நாடுகளுள் ஒன்றாக மாற்றியது துயர வரலாறு. உலகுக்கே அரிசி கொடுத்த பர்மியர்கள்,

பட்டினியால் செத்த கொடுமைகளும் உண்டு. அதில் பர்மியத் தமிழர்களின் கண்ணீரும் உண்டு. இந்நிகழ்வுகளின் பின்னணியில், முதலில் குறிப்பிட்ட அந்த எண்ணுக்கும் பெரும்பங்கு உண்டு.

(நீ வின் வருவார்...)

Knox e_ Library
Whatsapp Group +94758603182

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 19

முகில், படம்: பா.காளிமுத்து

### ஒன்பதில் சனி!

*பிரிட்டிஷ் காலனியாதிக்க பர்மாவுக்கு, இந்தியர்கள் வணிகம் செய்வதற்காகவும் விவசாய வேலைகளுக்காகவும் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகமாகச் செல்லத் தொடங்கினர். அதில், தமிழர்கள் மிக அதிகம். ரங்கூன், அதைச் சுற்றிய பகுதிகளில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள்.*




*1962-ல் பர்மாவில் அமைந்த நீ வினின் ராணுவ ஆட்சி, பர்மிய வம்சாவளி இந்தியர்களுக்கு, குறிப்பாக பெரும்பான்மையான தமிழர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. அவரது பர்மியமயமாக்கல்*

கொள்கையினால், அங்கு குடியுரிமை பெறாத தமிழர்கள் வேலையை இழந்தார்கள். வணிகத்தை, சொத்துகளை இழந்தார்கள். கூடுதல் வரிச்சுமைகள் சேர்ந்தன. 1964, மே 15 மாலையில் வெளியான அரசின் ஓர் அறிவிப்பு, ஒட்டுமொத்த பர்மியர்களையும் பதற்றத்துக்குள்ளாக்கியது. 'இனி 50 கியாட், 100 கியாட் நோட்டுகள் செல்லாது.'



அதிபர்
நீ வின்

இந்தத் திடீர் பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கான காரணமாக நீ வின் சொன்னது... வேறென்ன? 'கறுப்புப் பணத்தை ஒழிக்கப் போகிறேன்.' அதுவரையிலான மக்களின் வங்கிச் சேமிப்பு, சிறுவாட்டுச் சேமிப்பெல்லாம் மதிப்பிழந்து போயின. கோபத்தில் மக்கள் வீதிகளில் திரண்டு 50, 100 கியாட் நோட்டுகளைக் குவித்துத் தீயிட்டார்கள். தலைமுறைகள் தாண்டி வாழ்ந்த மண்ணைவிட்டு இந்தியர்கள் வெளியேற ஆரம்பித்தார்கள். பர்மாவில்

*சம்பாதித்தவற்றைக் கொண்டு செல்லத் தடை இருந்தது. தமிழ்ப்பெண்களின் தாலிக்குக்கூட அனுமதி கிடைக்கவில்லை. இந்தியத் தூதரகத்தின் முன், 'கப்பலை விடுங்கள். கண்ணீரைத் துடையுங்கள்' என்று பர்மியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். கப்பல்கள் பர்மியத் தமிழர்களைக் கனத்த இதயத்துடன் இங்கே சுமந்து வந்தன. தமிழகத்தில் 'பர்மா காலனிகள்' உருவானது அதற்குப் பிறகுதான்.*

*1964-ல் மட்டும் பர்மாவிலிருந்து வெளியேறிய இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம். அதில், சுமார் 70 சதவிகிதம் தமிழர்கள். பர்மாவின் வளர்ச்சிக்குத் தூணாக இருந்த இந்தியர்களின், சீனர்களின் வெளியேற்றம் அங்கே பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை உண்டாக்கியது. 'வெளிநாட்டிலிருந்து ஒருவர் பர்மாவுக்குள் வந்தால் 24 மணி நேரத்துக்கு மட்டுமே விசா செல்லுபடியாகும்' என்ற விதியும் அமலுக்கு வந்தது.*

*1962 ஜூலையில் நடந்த ரங்கூன் பல்கலைக்கழக மாணவர் எழுச்சியில் மூடப்பட்ட கல்விக்கூடங்கள், 1964 செப்டம்பரில்தான் மீண்டும் திறக்கப்பட்டன. பல்வேறு மாணவர்களின் கல்வி பாழ். ஒருபுறம் 'பர்மாவைப் படிப்பறிவற்றவர்கள் இல்லாத தேசமாக்குவேன்' என்று சூளுரைத்த நீ வின், புதிய கல்விச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆங்கிலவழிக் கல்வியைத் தடைசெய்தார். கல்வி முறையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. இதனால், பர்மாவின் கல்வித்தரம் தாழ்ந்துபோனது. ஆம், மாணவர்களின் கல்வியோடு ஆட்சியாளர்கள் விளையாடுவது என்றென்றும் தொடரத்தான் செய்கிறது.*

*முப்போகம் விளைவித்த பர்மிய விவசாயிகள், நிலங்களை அரசிடம் பறிகொடுத்துவிட்டு, பட்டினிச்சாவுக்கு ஆளாயினர். கடத்தல் ஏகபோகமாக நடந்தது. கள்ளச்சந்தைகள் பெருகின. ராணுவ அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுசெல்லப்பட்ட துறைகளில், நிறுவனங்களில் ஏகப்பட்ட முறைகேடுகள். 1967-ல் கட்டுப்படுத்த இயலாத பணவீக்கம், அரிசி விலையில் அமோக உயர்வு, பிற அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு*

போன்றவற்றால் 'மக்கள் புரட்சி' எதுவும் ஏற்பட்டு விடுமோ என்று யோசித்தார் நீ வின். மக்களின் கவனத்தைத் திசை திருப்புதல்தானே எவர்கிரீன் உத்தி. அந்தச் சமயத்தில் பர்மிய சீனர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. சீனர்களின் கடைகளும் வீடுகளும் சூறையாடப்பட்டன. பர்மியர்கள் தம் முதுகில் கத்தி செருகப்பட்டதை மறந்து, சீனர்கள் சிந்தும் ரத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

1974-ல் நீ வின் Union Revolutionary Council-ஐக் கலைத்தார். இனி, அது Socialist Republic of the Union of Burma என்று அறிவித்தார். பிரதமர் பதவியிலிருந்து விலகிய நீ வின், தேசத்தின் அதிபர் ஆனார். பின் 1981-ல், அதிபர் பதவியிலிருந்தும் விலகினார். Burma Socialist Programme Party-ன் சேர்மனாக மட்டும் நீடித்தார். அதிபராக, பிரதமராக வேறு நபர்கள் 'ஆட்டுக்குத் தாடி' போல அநாவசியமாக ஒட்டிக் கொண்டிருந்தனர். அல்டிமேட் அதிகாரம் நீ வின் வசமே.


ஊ தாண்ட்

ஊ தாண்ட். இவர், ஒரு பர்மியர்; ரங்கூன் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்; ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக 1961-71 காலத்தில் பணியாற்றியவர். இவர், 1974, நவம்பர் 25-ல் இறந்துபோனார். நியூயார்க்கிலிருந்து ரங்கூனுக்குக் கொண்டுவரப்பட்ட அவரது உடலை, தக்க மரியாதையுடன் வாங்க அரசு சார்பில் யாரும் வரவில்லை. காரணம், ஊ தாண்ட் முன்னாள் பிரதமர் யூ நூவின் உற்ற தோழர். ஆகவே, 'தாண்டுக்கு அரசு மரியாதை அடக்கமெல்லாம் கிடையாது' என்று அறிவித்தார் நீ வின். தாண்டின் உடல் ஓரிடத்தில் சில மணி நேரம் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் திரண்டு வந்து உடலைக் கைப்பற்றினர்.

ராணுவத்தால் தகர்க்கப்பட்ட ரங்கூன் பல்கலைக்கழக மாணவர் சங்கக் கட்டடம் இருந்த இடத்தில், தாண்டின் உடலை மரியாதையுடன் அடக்கம் செய்தனர். நீ வினுக்கு எதிரான கோஷங்கள் காற்றைக் கிழித்தன.

மாபெரும் அவமானம். நீ வின் கொதித்தார். புதைக்கப்பட்ட இடத்தில் நினைவிடம் கட்டும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தபோது, அங்கே ராணுவம் புகுந்தது. தோட்டாக்கள் வெடித்தன. உயிர்கள் துடித்தன. மீண்டும் தாண்டின் உடல் தோண்டியெடுக்கப்பட்டு இன்னோர் இடத்தில் புதைக்கப்பட்டது. இந்நிகழ்வு மாபெரும் மக்கள் கிளர்ச்சியைத் தூண்டியது. வீதிகளில் இறங்கிய மக்கள், பொதுச் சொத்துகளைச் சூறையாட ஆரம்பித்தனர். எமர்ஜென்ஸி பிறப்பிக்கப்பட்டது. ராணுவ பீரங்கிகள் முழங்கின. சாலைகளில் உயிரற்ற உடல்கள் சிதறிக் கிடந்தன.

'நீ வினின் அதிகாரமும் இப்படி ஒருநாள் உயிரற்று வீழாதா' என்று ஒவ்வொரு பர்மியனும் ஏங்கிக் கொண்டிருந்தான். நீ வினோ தன் வருங்காலம் வளமாக இருக்க, ஜோதிடர்களிடம் ஆரூடம் கேட்டுக் கொண்டிருந்தார். ஆட்சியாளருக்கு ஜோதிடப் பித்துப் பிடித்துவிட்டால் மக்கள் படும்பாடு நமக்குத் தெரியாதா என்ன!

'நேரம் சரியில்லை. நீங்கள் படுகொலை செய்யப்படலாம். பரிகாரம் என்னவென்றால்...' - ஜோதிடர்கள் சொன்னபடியே அச்சுப் பிசகாமல் செய்தார் நீ வின். ஆளுயரக் கண்ணாடி முன் நின்று தன் பிம்பத்தைத் தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டார். நாய் ஒன்றைப் பிடித்து அறுத்து, அதன் ரத்தத்தைத் தன்மேல் ஊற்றிக் கொண்டார். படுகொலையை உருவகப்படுத்தும்விதமாக பன்றிகளைக் கொன்றார். 'உங்கள் பாதையில், வளைந்த வால் கொண்ட நாய் குறுக்கே வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.' ஜோதிடர் சொன்னார். நீ வின் செல்லும் சாலைகளிலெல்லாம் முன்பாகவே தெரு நாய்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நாய்கள் ஜாக்கிரதை.

*‘நீங்கள் பிறந்த இடத்தை வான்வழியே குதிரையில் வலம் வந்தால் சுபிட்சம்!’ ஜோதிடர் சொல்ல, ஹெலிகாப்டரில் ஏறினார் நீ வின். அதனுள் மரக்குதிரையில் அமர்ந்தபடி, தான் பிறந்த ஊரை வானில் கடிகாரத் திசையில் வலம் வந்தார். இன்னொரு முறை பேய்கள் நடமாடும் வேளையில், ராஜ உடையுடன் ரங்கூனில் ஒரு பாலத்தில் பின்பக்கமாகவே நடந்தார். ஆம், பிற்போக்குத்தனம்.*




90 மற்றும் 45 கியாட் மதிப்புள்ள நோட்டுகள்

*‘இடது பக்கமிருந்து உங்களுக்கு ஆபத்து வரலாம்’ என்றார் ஜோதிடர். ‘இடது’ என்றாலே நீ வினுக்கு ஆகாதே. ‘இனி யாரும் வாகனங்களை இடதுபக்கம் ஓட்டக்கூடாது. வலதுபக்கம் மட்டுமே ஓட்ட வேண்டும்’ என்று கிறுக்குத்தனமாக உத்தரவிட்டார். திடீர் விதி மாற்றத்தால் சகலரும் தடுமாற... விபத்துகள் பெருகின. சாலைகளில் ரத்தம். நீ வினோ டால்பின்களின் ரத்தத்தில் குளித்துக்கொண்டிருந்தார். இளமையுடன் இருக்க எவன் சொன்ன அழகுக் குறிப்பென்று தெரியவில்லை. ஸாரி, டால்பின்!*

*‘உங்களுக்கு ராசியான எண் 9. அதன் கூட்டுத்தொகை அனைத்திலும் வரும்படி பார்த்துக்கொண்டால் 90 வயதுவரை நிச்சயம் வாழ்வீர்கள்’ என்று எண் கணித ஜோதிடர் ஒருவர் திருவாய் மலர்ந்தார். அப்போதிருந்தே 9 பைத்தியம் நீ வினுக்குப் பிடித்தது. கார் எண், கிளம்பும் நேரம், உறுப்பினர்களின் எண்ணிக்கை என எல்லாவற்றிலும் கூட்டுத்தொகை 9 இருக்கும்படி பார்த்துக்கொண்டார். அப்படிப் பார்த்துப் பார்த்துச் செய்தவருக்கு 100 மற்றும் 50 கியாட் நோட்டுகள் கண்களை உறுத்தின.*

*1987-ல் முன்னறிவிப்பு எதுவுமின்றி ஒரே இரவில் 100, 50 கியாட் நோட்டுகளுக்குப் பதிலாக 90 மற்றும் 45 கியாட் மதிப்புள்ள நோட்டுகள்*

(கூட்டுத்தொகை 9) புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டன. பொருளாதாரம் ‘கோமா’வில் விழுந்தது. தேசம் திவால். வாழ்வாதாரம் தொலைத்து மக்கள் கதறினர். போலீஸ் அராஜகம், ராணுவ வெறியாட்டம், ஊழல்கள் போன்ற அனைத்தையும் எதிர்த்து, 1988 மார்ச் முதலே மாணவர் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்தன. 8.8.1988 அன்று பொது வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள், புத்த பிட்சுகள், தொழிலாளர்கள், இஸ்லாமியர்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றுகூடி எழுச்சி ஊர்வலம் நடத்தினர். பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் ஆங் சான் சூ கி உணர்ச்சி பொங்க உரையாற்றினார். அன்றைய தினம் ‘8888 கிளர்ச்சி’ என வரலாற்றில் பதிவானது.


கிளர்ச்சியாளர்கள் மத்தியில் பேசும் ஆங் சான் சூ கி

நீ வினைக் கைது செய்வது, அதிகாரத்திலிருந்து நீக்குவது, தேர்தல் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது போன்றவற்றை வலியுறுத்தி, தேசம் முழுவதும் போராட்டங்கள் வெவ்வேறு வடிவில் அடுத்தடுத்த தினங்களிலும் தொடர்ந்தன. அந்த ஆகஸ்ட் 8 முதல் 12 வரை தேசத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டக்காரர்கள் மீது ராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 3,000 முதல் 10,000 வரை இருக்கலாம். ஆயிரக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். லட்சக்கணக்கானோர்

இந்தியா, தாய்லாந்து என அயல்தேசங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். நீ வினின் இறுதி வெறியாட்டம் அது.

அழுத்தம் அதிகரிக்கவே நீ வின் தனது கட்சியின் சேர்மன் பதவியிலிருந்து விலக நேரிட்டது. தனது பிரிவுபசார உரையில் சீறினார். 'இப்படியே தொல்லைகள் தொடர்ந்தால் ராணுவம் வழக்கம்போல வானை நோக்கிச் சுட்டுக்கொண்டிருக்காது. நெஞ்சில்தான் சுடும்!'

எந்தப் பதவியில் இல்லாவிட்டாலும் நீ வினின் நிழல் அதிகாரம் அடுத்த பத்தாண்டுகளுக்குத் தொடர்ந்தது. அதன் பின் நீர்த்துப்போனது. மாபெரும் குற்றவாளியான நீ வின், அதிகாரம் போன பின்பும் எந்தத் தண்டனைக்கும் உள்ளாகாமல் சொகுசாகத்தான் வாழ்ந்தார். தன் 90-வது பிறந்தநாளில் 99 புத்த பிட்சுகளுக்கு பார்ட்டி வைத்து மகிழ்ந்தார். 2002, டிசம்பர் 5-ல் இறந்துபோனார். பர்மிய செய்தித்தாள்களில் ஓர் ஓரமாக 'மரண அறிவிப்பு' இடம்பெற்றிருந்தது. அரசு மரியாதை அடக்கமெல்லாம் நடக்கவில்லை. இறுதி ஊர்வலத்தில் 30 பேர் மட்டும் கலந்து கொண்டனர். 27 அல்லது 36 பேர் கலந்துகொண்டிருந்தால், நீ வினின் பிணம் புன்னகை செய்திருக்கக்கூடும்.

(வருவார்கள்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 20

முகில், படம்: பா.காளிமுத்து




### உயிர்களிடத்தில் அன்பு வேண்டாம்!

லண்டன் பாண்ட் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தார் அந்த இந்தியர். அவரது கண்களில் ரோல்ஸ் ராய்ஸ் கார் விற்பனையகம் தென்பட்டது. உள்ளே புகுந்தார். யாரும் அவரை வரவேற்கவில்லை. காரணம், சாதாரண உடை. கறுப்புத்தோல். அதுவும் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் யாரோ ஒருவன். உதாசீனப்படுத்த வெள்ளையர்களுக்கு இந்தக் காரணங்கள் போதாதா?

அந்த மனிதர் கடையின் சிப்பந்தியிடம் காரின் விலையை விசாரிக்க, 'இவன் எங்கே வாங்கப் போகிறான்' என்ற தொனியில் அலட்சியமாகவே பதில் வந்தது. காரின் சிறப்பம்சங்களைப் பற்றிக் கேட்டபோது, 'வெளியே செல்லும் வழி அந்தப் பக்கம்' என்று வாசலைக் கைகாட்டி அவமானப்படுத்தினார் சிப்பந்தி. அந்த மனிதர் அமைதியாக வெளியேறினார்.

சிறிது நேரம் கடந்திருக்கும். அந்த விற்பனையகத்துக்கு ஹோட்டல் ஒன்றிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. 'எங்கள் மகாராஜா, ரோல்ஸ் ராய்ஸ் கார் வாங்க அங்கே வருகிறார்' என்று தகவல் சொன்னார்கள். விற்பனையகம் பரபரப்பானது. பளபளக்கும் ராஜ உடை. மினுமினுக்கும் ஆடம்பர நகைகள். விற்பனையகத்துக்குள் கம்பீரமாக நுழைந்தார் அந்த மகாராஜா. பிரத்யேகமாக சிவப்புக் கம்பளம் விரித்திருந்தார்கள். கடையின் சிப்பந்திகள் ஓடிச்சென்று வரவேற்றார்கள். அப்போதுதான் தெரிந்தது, முதலில் வந்தவரும் இவர்தான் என்று. இந்தியாவின் ராஜஸ்தானைச் சேர்ந்த, அல்வார் சமஸ்தானத்தின் மகாராஜா. ஹிஸ் ஹைனெஸ் ராஜ் ராஜேஸ்வர் பரத் தர்மா பிரபாகர் மகாராஜா ஸ்ரீசவாய் சர் ஜெய் சிங்ஜி வீரேந்திர சிரோன்மணி தேவ் பகதூர். சுருக்கமாக ஜெய் சிங்.

முன்பு உதாசீனப்படுத்திய சிப்பந்தி, இப்போது குரல் நடுங்க மன்னிப்புக் கேட்டார். அதைக் கண்டுகொள்ளாத மகாராஜா ஜெய் சிங், ''ஷோரூமில் எத்தனை கார்கள் இருக்கின்றன?'' என்றார். ''ஆறு'' என்றார்கள். அத்தனையும் சேர்த்து எவ்வளவு என்று கேட்டு, அதை இந்தியாவுக்கு அனுப்பும் செலவுக்கும் சேர்த்துப் பணம் கொடுத்துவிட்டு வெளியேறினார்.

அன்றைக்கு உலகின் நம்பர் ஒன் கார், ரோல்ஸ் ராய்ஸ். ஒரு மகாராஜா ரோல்ஸ் ராய்ஸ் வைத்திருப்பது ஆகப்பெரிய கௌரவம். செல்வத்தில் கொழித்த சில மகாராஜாக்கள், தங்கள் விருப்பப்படி பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஏழெட்டு ரோல்ஸ் ராய்ஸ் கார்களுடன் வலம் வந்து பவுசு

*காட்டினர். அல்வார் சமஸ்தானத்தை ஆறு ரோல்ஸ் ராய்ஸ் கார்களும் வந்தடைந்தன. ஜெய் சிங் அதில் ஒன்றைக்கூட உபயோகிக்கவில்லை. கட்டளையிட்டார்.*

*'கார்களின் டயர்களுக்கருகில் துடைப்பங்களைக் கட்டுங்கள். இந்தக் கார்கள் அனைத்தையுமே அல்வார் நகரத்தில் குப்பை அள்ளும் பணிக்காகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.'*

*அப்படியே செய்தார்கள். இந்தச் செய்தி பரவ, ரோல்ஸ் ராய்ஸின் புகழ் நாறியது. அதன் பெயரைக் கேட்டாலே, 'எது... அந்தக் குப்பை அள்ளும் வண்டியா' என்று உலகம் சிரித்தது. விற்பனையும் பெருமளவு குறைந்துபோக, ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தினர் பதறி, மகாராஜா ஜெய் சிங்குக்கு மன்னிப்பு தந்தி அனுப்பினர். தங்கள் கார்களைக் குப்பை அள்ளப் பயன்படுத்த வேண்டாமெனக் கெஞ்சினர். கர்வத்துடன் அவர்களை மன்னித்தார் ஜெய் சிங். ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் குப்பை அள்ளும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டன.*

*'வெள்ளைக்காரன் கண்ணுலயே விரல விட்டு ஆட்டுறாரே. ஜெய் சிங் செம கெத்து!' என்று யாரும் இதற்காக அவரைக் கொண்டாடவில்லை. காரணம், அவரது டிசைன் அப்படி. அவரது செயல்பாடுகளால் மக்களும் மற்றவர்களும் அடைந்த துன்பங்களின் பட்டியல் மிக நீளமானது.*

*கி.பி. 1882-ல் பிறந்தவர் ஜெய் சிங். இவருக்கு 10 வயது இருக்கும்போது, தந்தை மங்கல் சிங் அளவுக்கு மீறிய குடியால் இறந்துபோனார். ஜெய் சிங் மேஜராகும்வரை, பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதி ஒருவர் நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டார். மேஜரான பிறகும் ஜெய் சிங், சமஸ்தானத்தின் வளர்ச்சி, பொருளாதாரம், மக்களின் வறுமை குறித்தெல்லாம் கொஞ்சமும் சிந்திக்கவில்லை. 'அதெல்லாம்கூட ஒரு மகாராஜாவின் கடமைதான்' என்று அவருக்கு வாழ்நாள் முழுக்கத் தோன்றவே இல்லை. 'மக்களும் இன்ன பிற பணியாளர்களும் தனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகப் பிறந்த,*

எந்தவித உரிமைகளுமற்ற அடிமைகள்' என்றுதான் மனதார நினைத்தார். மத்திய அரசுக்கு ஜிங் ஜக் அடித்தால் மாநிலத்தில் பிரச்னையின்றி ஆள முடியும் என்பதுபோல, பிரிட்டிஷ் அரசுக்கு ஆகச்சிறந்த விசுவாசியாக இருந்து தன் பதவி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டார்.

அல்வார் மக்கள், 'பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் கிடைக்குமா' என்று நினைக்காமல், 'எப்போது இந்த அரக்கனிடமிருந்து விடுதலை கிடைக்கும்' என்றே ஏங்கினர். மிருகங்களும் ஏங்கின. ஏன், அஃறிணைப் பொருள்கள் கூட ஏங்கியிருக்கக்கூடும்.

வாரம் ஒருமுறையாவது ஜெய் சிங், குதிரையேறி போலோ விளையாடுவார். மகாராஜா கோல்கள் அடிப்பதற்கேற்ப சக ஆட்டக்காரர்கள் விலகி விளையாட வேண்டுமென்பது எழுதப்படாத விதி. அதெல்லாம் மனிதர்களுக்குப் புரியும். குதிரைகளுக்குப் புரியுமா? அன்றைக்கு ஜெய் சிங், தனது வழக்கமான குதிரையில் ஏறி, போலோ மட்டையைச் சுழற்றினார். குதிரைக்கு மனசோ, வயிறோ, நேரமோ சரியில்லைபோல. மன்னர்பிரானுக்கு ஒத்துழைக்கவில்லை. கோபத்துடன் குதிரையிலிருந்து குதித்த ஜெய் சிங், போலோ மட்டையால் அதைப் பொளந்து கட்டினார். கதறிக் கனைத்து, தடுமாறி ஓடியது குதிரை. மட்டையை ஆத்திரத்துடன் வீசியெறிந்துவிட்டு மைதானத்தை விட்டுக் கிளம்பினார்.

அந்தக் குதிரை அதிர்ஷ்டசாலிதான். ஏனென்றால், அதற்கு முன்பு ஒரு குதிரை சண்டித்தனம் செய்தபோது, ஜெய் சிங் அதன் மீது பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்த சம்பவமெல்லாம் நடந்திருக்கிறது. ஆம், 'சக உயிர்களிடத்தில் அன்பு வேண்டாம்' என்பதே அவரின் தீவிரக் கொள்கை.

இன்னும் சில கொள்கைகளும் உண்டு. 'தீண்டாமை ஒரு புண்ணியச்செயல்' என்பது அதில் முக்கியமானது. ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த ஜெய் சிங், தன்னை ராமபிரானின் அவதாரமாக அறிவித்துக்கொண்டார். 'என்னைத் தவிர மற்ற எல்லோருமே

இழிபிறவிகளே. என்னைத் தொடும் அருகதைகூட மற்றவர்களுக்குக் கிடையாது' என்று கடுமை காட்டினார். எதையாவது தொட்டு / யாராவது தொட்டு தன் புனிதத்துக்குத் தீட்டு நேர்ந்தால், உடனே கங்கை நீரில் தலை முழுகுவார். இதற்காகவே அரண்மனையில் எப்போதும் கங்கை நீர் இருக்கும். சில நேரங்களில் அரண்மனை மொத்தத்தையுமே கங்கை நீரால் குளிப்பாட்டச் சொல்லி புனிதத்தை ரீ-இன்ஸ்டால் செய்வார்.



பக்கிங்ஹாம் அரண்மனை




துடைப்பத்துடன்...

அடுத்த அலர்ஜி விஷயம், தோல் பொருள்கள். குதிரையின் மீதேறிப் போவார். ஒட்டகத்திலும் ஒய்யாரமாகப் போவார். ஆனால், செத்த விலங்குகளின் தோலினால் செய்யப்பட்ட பொருள்களென்றால் சுத்தமாக ஆகாது. அரண்மனையிலோ, அவர் புழங்கும் மற்ற இடங்களிலோ தோல் பொருள்களே இருக்கக்கூடாது. தப்பித்தவறி யாராவது ஒரு பணியாளர் அவர்முன் அதைக் கொண்டு வந்துவிட்டால்? வேறென்ன, பணியாளரின் தோல் உரிந்துவிடும். தான் வாங்கிய ரோல்ஸ் ராய்ஸ் கார்களில்கூட தோலாலான இருக்கைகளையெல்லாம் அகற்றி, வேறுமாதிரி மாற்றச்சொல்லியிருந்தார். அது குப்பை அள்ளுவதற்குத்தான் என்றாலும்கூட.

ஒரு மகாராஜா என்றால் நான்கு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். அங்கெல்லாம் தோல் பொருள்கள் இருக்கும்; அல்லது புனிதம் கெட்டுப்போக சகல வாய்ப்புகளும் இருக்கும். அப்போதெல்லாம் என்ன செய்தார் ஜெய் சிங்?

ஒருமுறை பாலன்பூர் சமஸ்தானத்துக்குச் சென்றபோது, அங்கே அவரிடம் ஆசையாக வந்த நான்கு வயது இளவரசனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார். அப்போதுதான் இளவரசன் தோல் ஷூ அணிந்திருப்பதைக் கண்டு, கடுப்பாகி, அவனை அப்படியே தரையில் தூக்கிப் போட்டுவிட்டு எழுந்து சென்றார். இன்னொரு முறை பரத்பூர் மகாராஜாவின் படைகள், ஜெய் சிங்குக்கு அணிவகுப்பு மரியாதை செய்தபோது, அவர்கள் தோல் ஷூக்களும், தோல் மேலாடையும் அணிந்திருக்கிறார்கள் என்று அதைப் புறக்கணித்து நகர்ந்தார். இதனால் மற்ற மகாராஜாக்களும் ஜெய் சிங்கை வெறுப்புடனேயே நோக்கினர். மகாராஜாக்களுக்கிடையேயான சந்திப்புகளில், ஜெய் சிங்கின் கூத்துகளைப் பற்றி கடுகடுத்துக் கொள்வதும், ஜோக் அடித்து மகிழ்வதும் வாடிக்கையாக இருந்தது.

1931-ல், லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர் ஐந்தாம் ஜார்ஜும் குயின் மேரியும் கொடுத்த விருந்துக்கும் ஜெய் சிங்குக்கு அழைப்பு

வந்தது. வேறு வழியில்லை. புனிதம், தீட்டு பார்க்காமல் போய்த்தான் ஆகவேண்டும். இருந்தாலும் ஜெய் சிங் ஒரு விஷயத்துக்காக அதிகம் யோசித்தார். விருந்தில் கிங்கும் குயினும் வந்த விருந்தினர்களுக்கெல்லாம் மரியாதை நிமித்தமாகக் கைகொடுப்பார்கள். ச்சீ... அவர்கள் என் கையைத் தொட்டுக் குலுக்கினால் என் புனிதத்தன்மை என்னாவது? ஜெய் சிங், பக்கிங்ஹாம் அரண்மனைத் தலைமை அதிகாரிக்கு மமதையுடன் கடிதம் ஒன்றை எழுதினார். 'என்னால் கைகுலுக்க முடியாது. குலுக்கித்தான் ஆக வேண்டுமென்றால் கையுறை அணிந்துகொள்வேன்.'

அதிகாரியும் கொதிநிலை குறையாமல் பதில் அனுப்பினார். 'கையுறைக்கெல்லாம் அனுமதி கிடையாது. அது கிங், குயினுக்கு அவமரியாதை. மீறினால் உமது ஃப்யூஸ் பிடுங்கப்படும்' என்று. கிங், குயினிடம் கையுறை இன்றி கைகுலுக்குவதை மற்ற மகாராஜாக்கள் பார்த்துவிட்டால், இவரது புனிதத்தன்மை புஸ் ஆகிவிட்டதென புளகாங்கிதம் அடைவார்களே? இதுதான் ஜெய் சிங்கின் மாபெரும் கவலையாக இருந்தது.

லண்டனுக்குச் சென்று சேர்ந்தார். என்னென்னமோ யோசித்துப் பார்த்துவிட்டு மாலை வேளையில் ஒரு நவநாகரிக தையல் கடையை நோக்கி ஓடினார். பிரச்னையைச் சொன்னார். தீர்வும் கிடைத்தது. கையுறை என்றே தெரியாத, வண்ணமற்ற, மிக மெலிதான கையுறை ஒன்றை வாங்கினார். இன்னொன்று தடித்த கையுறை. அதை அணிந்துவிட்டு பட்டனை அழுத்தினால் கையுறை, தானாகவே உள்நோக்கிச் சுருண்டு கொள்ளும் வசதியிருந்தது. மெல்லிய கையுறையை உள்ளுக்குள்ளும், அதன்மேல் அதிநவீன கையுறையையும் அணிந்துகொண்டு விருந்தில் பங்கேற்றார்.

மற்றவர்களுடன் கையுறையோடு கைகுலுக்கிக் கொண்டார். கிங், குயின் தன் அருகில் வரும்போது பட்டனை அழுத்த, தடித்த கையுறை நொடிப்பொழுதில் சுருண்டு கொண்டது. புனிதத்தன்மை கெடாமல், ரகசிய மெல்லிய கையுறையுடன் அவர்களோடு கைகுலுக்கிவிட்டு மீண்டும் பட்டனை அழுத்தினார். கையுறை தோன்றியது. யாரும் உன்னிப்பாகக்

கவனிக்கவில்லை. ‘எப்படி இவர் மட்டும் உறையோடு கைகுலுக்கினார்?’ என்று குழம்பிப் போனார்கள். பெரும் பாவச்செயலிலிருந்து தப்பிய குதூகலப் புன்னகையை ஜெய் சிங்கின் உதடுகள் சூடிக் கொண்டன.

லண்டனில் தம் புனிதத்தைத் தக்கவைத்துக் கொண்ட ஜெய் சிங்குக்கு அடுத்த சோதனை சிம்லாவிலிருந்து வந்தது.

(ஜெய் சிங் வருவார்...)

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 21**

**முகில், படம்: பா.காளிமுத்து**

# கிறுக்கு ராஜாக்களின் கதை 21

## சிறுவர்கள் ஜாக்கிரதை!

கோடைக்காலத்தில் சூடு தாங்காமல், இந்தியாவின் மலைவாசஸ்தலங்களைத் தேடி ஓட ஆரம்பித்தனர் பிரிட்டிஷார். அப்படித்தான் இந்தியாவெங்கும் மலைவாசஸ்தலங்களில் நகரங்கள் உருவாகின. சிம்லா, காலனியாதிக்க இந்தியாவின் கோடைக்காலத் தலைநகரமாகத் திகழ்ந்தது. நீதி, நிர்வாகம் எல்லாம் அங்கிருந்துதான். விளையாட்டு, விருந்து, கேளிக்கை என்று கோடைகளில் வெள்ளைக்காரர்களாலும், ராஜ குடும்பங்களாலும் சிம்லா நிறைந்துகிடந்தது.

வெலிங்டன், 1931-36 காலத்தில் இந்தியாவின் வைசிராயாகப் பணியாற்றியவர். அவர் ஒரு கோடையில், அல்வார் மகாராஜா ஜெய் சிங்கை சிம்லாவுக்குக் கூப்பிட்டார்.

புனிதப்பித்தரான ஜெய் சிங்குக்கு வெளியில் செல்வதென்றாலே ஆயிரத்தெட்டு நிபந்தனைகள் உண்டே. அவருடைய செயலாளர், வைசிராயின் செயலாளருக்குப் புனிதக் கடிதம் ஒன்றைத் தீட்டினார். ‘எங்கள் மேதகு மகாராஜா ஆசார சீலர் என்பதால், அவருக்குத் தோல் பொருள்களோ, நாய் போன்ற செல்லப்பிராணிகளோ ஆகவே ஆகாது. அவை அவரது மதக்கொள்கையைப் பாதிக்கும் விஷயங்கள். எனவே, இவை எவையும் இல்லாதபடிக்கு மாளிகையில் வசதிகளைச் செய்துகொடுத்தால், மகாராஜா வந்துபோக வசதியாக இருக்கும்.’

சுர்ர்ர்ரெனக் கோபமேற்றும் கடிதமென்றாலும் வெலிங்டன், 'அப்படியே செய்து தொலையுங்கள்' என்றார். ஜெய் சிங், சிம்லாவுக்குக் குஷியாகக் கிளம்பினார். அவர் கேட்ட வசதிகளுடன் அறை அமைந்திருந்தது. வைசிராயுடன் அரசுரீதியான சந்திப்பு முடிந்தது. இரவில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


மற்ற மகாராஜாக்களுடன்
ஜெய் சிங் (நடுவே)

வைசிராயின் மனைவி லேடி வெலிங்டனுக்கு நகைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அடுத்தவர் நகைகளை உரிமையுடன் கொள்ளையடிக்கவும் பிரியம். பரோடா அரண்மனைக்கு ஒருமுறை அவள் சென்றபோது, நகைகளை மண்ணில் புதைத்துவைத்தனர் என்றால்

பார்த்துக்கொள்ளுங்கள். அப்படித்தான் அன்றைய விருந்தில் ஜெய் சிங்கின் வைர மோதிரத்தை உரிமையுடன் வாங்கி அணிந்து பார்த்தாள். அவரும் மரியாதைக்குக் கொடுத்துவிட்டு, மறக்காமல் திருப்பிக் கேட்டு வாங்கி, ஒரு குவளை நீரில் கழுவித் துடைத்து, புனிதத்தை மீட்டு, தன் கையுறைமீது அணிந்து கொண்டார். அசிங்கப்பட்டாள் லேடி வெலிங்டன்.

பிறகு, உணவு மேஜைக்கடியில் யாரோ தனது காலை பிராண்டுவதுபோல உணர்ந்த ஜெய் சிங், குனிந்து பார்த்தார். பெர்கிங்கீஸ் வகை புஸுபுஸு நாய். லேடி வெலிங்டனின் டார்லிங் அது. ஜெய் சிங் அருவருப்புடன் பதறி எழுந்தார். முகத்தில் கடுகடுப்பின் தாண்டவம். விறுவிறுவெனக் கிளம்பி, அறைக்கு வந்து, அனைத்தையும் அவிழ்த்துப் போட்டுத் தலைமுழுகினார். புதிய உடைகளுடன் மீண்டும் விருந்து மேஜைக்குச் சென்று உணவைத் தொடர்ந்தார். சபை நாகரிகம் கருதி ஒரு 'எக்ஸ்க்யூஸ் மீ' கூட உதிர்க்கவில்லை. லேடி ஆவேசப் பார்வையை வீச, வெலிங்டன் எதையும் கண்டுகொள்ளவில்லை. 'இந்த ஆள் தனிப்பட்ட முறையில் எப்படி இருந்தால் என்ன? பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசமான அடிமையாக இருக்கிறார் அல்லவா? அது போதும்.'

அதற்கு முன்னுதாரணங்களும் இருந்தன. பிரிட்டிஷ் இளவரசர் ஆர்தர் ஒருமுறை அல்வாருக்குச் சுற்றுப்பயணம் வந்தார். இளவரசர், வனப்பகுதியில் தங்கி புலி வேட்டையாட, 'சரிஷ்கா' என்ற பிரமாண்ட வேட்டை அரண்மனை ஒன்றையே கட்டிக் கொடுத்தார் ஜெய் சிங். லட்சக்கணக்கில் செலவு. உபயம், மக்கள் வரிப்பணம். சில வருடங்கள் கழித்து அல்வார் நகர அரண்மனையிலிருந்து, வேட்டை அரண்மனைக்கும், மகாராஜா சென்று வரும் வேறு சில மாளிகைகளுக்கும் இடையே உயர்தரச் சாலைகள் போடப்பட்டன. அதுவரை அல்வாரில் சாலையே கிடையாது என்பதால் மக்கள் சந்தோஷப்பட, 'இது மகாராஜாவுக்கான சாலை மட்டுமே. மக்கள் உபயோகிக்கக் கூடாது. மீறினால் தண்டனைக்குள்ளாவர்' என்று கட்டளையிட்டுக் கதிகலங்கவைத்தார் ஜெய் சிங்.

அவருக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள் இரண்டு. ஒன்று, புலி வேட்டை. விதவைகள், ஆதரவற்றோர் அல்லது சிறுவர்கள் காட்டில் இரையாகக் கட்டப்பட்டிருப்பர். புலி அவர்களை வேட்டையாடும்போது, மறைந்திருந்து ஜெய் சிங் புலியை வேட்டையாடுவார். இரண்டாவது பொழுதுபோக்கு, மாட்டு வண்டியின் பின்னால் சிறுவர்களைக் கயிற்றால் கட்டி, கரடுமுரடான நிலத்தில் இழுத்துச்செல்வார். சிறுவர்கள் வதைபட்டுச் சாவதை அமர்ந்து ரசித்துக்கொண்டிருப்பார்.

அன்றைக்கு அல்வார் சிறுவர்கள் பீதியுடன்தான் வாழ்ந்துகொண்டிருந்தனர். அதில் சில சிறுவர்களுக்கு அரண்மனை வாழ்க்கை வாய்த்தது. அது வேறு மாதிரி வாழ்க்கை. பத்து முதல் இருபது வயது வரையுள்ள சிறுவர்களும் இளைஞர்களும் வானவில் நிறத்தில் பட்டாடை அணிந்து ஜெய் சிங்கைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தனர். 'இவர்கள் எல்லாம் அல்வார் படை வீரர்களே' என்றார் ஜெய் சிங். ஆனால், அரசல்புரசலாகச் சில செய்திகள் உண்டு.

அதென்னவோ ஜெய் சிங்குக்கு இயல்பிலேயே பெண்கள் மீது ஈர்ப்பில்லை. பெயருக்காக நான்கு பேரைத் திருமணம் கொண்டாலும், வாரிசெனப் பிறந்தது ஒரே ஒரு மகள் மட்டுமே. கௌரவத்துக்காக பல பெண்கள் கொண்ட அந்தப்புரத்தையும் போஷாக்குடன் பராமரித்து வந்தார். அவர்களுக்கு வீணாக எதற்கு ரொட்டியும் தாலும் போட வேண்டுமென்று யோசித்தபோது, 'பலான' திட்டமொன்றைச் செயல்படுத்தினார். அரண்மனை விருந்துகளில் அந்தப்புர அழகிகளும் கலந்துகொள்வார்கள். மந்திரிகளும் உயரதிகாரிகளும் விருப்பத்துக்குரிய பெண்களுடன் அன்றிரவு காதல் வளர்க்கலாம். பதிலுக்கு அவர்களும் தங்கள் குடும்பப் பெண்களை விருந்துக்கு அழைத்து வரவேண்டும். வேறெதற்கு? ஜோதியில் கலக்கத்தான். ஓரிரு முறை சாக்குப்போக்குச் சொல்லி சமாளிக்கலாம். ராஜ கட்டளையென்பதால் எல்லா நேரமும் ஓடவும் முடியாது; ஒளியவும் முடியாது. தப்பிக்க நினைத்தால் விளைவுதான் தெரியுமே. இந்தக் களியாட்ட விருந்துகளில் மகாராணிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர் என்பது

கூடுதல் தகவல். 'யாருக்கும் ஒழுக்கம் கிடையாது. எவனும் எவனைப் பற்றியும் கேவலமாகப் பேசக்கூடாது' என்பதே இதிலுள்ள ராஜதந்திரம். ஆனாலும், இதிலெல்லாம் கலந்துகொள்ளாமல் ஓரமாக, சுத்தபத்தமாக உட்கார்ந்துகொண்டார் ஜெய் சிங்.



வெலிங்டன் - லேடி வெலிங்டன்



அல்வார் நகர அரண்மனை தர்பார்

ஒருமுறை ஜெய் சிங்கின் மகாராணி ஒருத்தியின் சகோதரர், குடிபோதையில் ஒரு கோரிக்கை வைத்தார். ''இருப்பதிலேயே அழகி ஒருத்தியை எனக்கு ஏற்பாடு பண்ணுங்க மாமா.'' கோபச் சூறாவளி மகாராஜாவுக்குள் மையம் கொண்டது. அடுத்த நாளே ஜெய் சிங், ''நீ கேட்டது தயார்'' என்று மச்சானை ஓர் இருட்டு அறைக்குள் அனுப்பினார். அங்கே ஒரு பெண் இருந்தாள். நிமிடங்கள் கரைந்தன. திடீரென்று அறைக்குள் ஒளி பாய, மச்சான் அந்தப் பெண்ணின் முகம் பார்த்து அலறினான். அவளும் அலறினாள். அவள் வேறு யாருமல்ல, மகாராணிதான். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அந்த மகாராணியும், அவளுடைய சகோதரரும் தற்கொலை செய்துகொண்டார்கள்.

குதிரையைக் கொளுத்துவது, வேட்டைக்கு மனித இரை, சிறுவர்கள்மீதான வன்முறை என்று சகிக்கவே இயலாத பல விஷயங்களை ஜெய் சிங் தொடர்ந்து அரங்கேற்றினார். அவரைப் பதவியிலிருந்து தூக்கச்சொல்லி பலமுறை பிரிட்டிஷ் அரசுக்கு பிராதுகளும் சென்றன. பிரச்னை வந்தால், பிரிட்டிஷ் இந்தியாவின் செயலாளராகப் பணியாற்றிய எட்வின் சாமுவேல் மாண்டேகுவிடம் சரணடைவார் ஜெய் சிங். இனிக்க இனிக்கப் பேசி, குளிர்வித்து, தன்மீது நடவடிக்கைகள் எதுவும் பாயாமல் பார்த்துக்கொள்வார்.

'இதையெல்லாம் தட்டிக்கேட்க யாராவது வர மாட்டார்களா' என்று மக்கள் ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில், அவர்கள் மத்தியிலிருந்தே ஒரு பிரிவினர் ஆவேசமாகக் களமிறங்கினர். மியோ பழங்குடியினர். அல்வார் சமஸ்தானத்தில் பெருமளவில் வாழ்ந்த இஸ்லாமியப் பிரிவினர். அசல் வீரர்கள். ஜெய் சிங்கின் அராஜகங்களுக்கு எதிராக ஆயுதங்களுடன் திரண்டார்கள் (1933). சில நூறு அல்வார் படையினருக்கும், சில ஆயிரம் மியோக்களுக்கும் இடையே நடந்த மோதலில், அல்வார் வீரர்கள் நசுக்கப்பட்டனர். சிலர் பொது இடங்களில் தூக்கிலிடப்பட்டனர். ஜெய் சிங் அலறியடித்துக்கொண்டு பிரிட்டிஷ் அரசிடம் உதவி கேட்டார். குதிரைகள்,

*பீரங்கிகளுடன் பிரிட்டிஷ் படைப்பிரிவு வந்து சேர்வதற்குள் மியோக்கள் மாயமாக மறைந்தனர்.*



**எட்வின் சாமுவேல் மாண்டேகு**

*ஆனால், சமஸ்தானத்தின் பரிதாப நிலையை பிரிட்டிஷார் புரிந்துகொள்ளும் வாய்ப்பாக அது அமைந்தது. மக்களிடம் விசாரித்தபோது, ரத்தக் கண்ணீர்வடித்தனர். அல்வாரின் நிர்வாக அவலங்கள், ஜெய் சிங்கின் சதிராட்டங்கள் குறித்த ரிப்போர்ட் டெல்லிக்குச் சென்றது. உடனடியாக அல்வார் சமஸ்தானத்தின் சீரமைப்புக்காக 3,75,000 பவுண்டு நிதி ஒதுக்கப்பட்டது. 'அட!' என்று ஜெய் சிங் பிளந்த வாயை மூடுவதற்குள், 'அய்யோ!' என்று அதிர்ச்சிக்குள்ளாக்கும் செய்தி வந்துசேர்ந்தது. 'மகாராஜா ஜெய் சிங், அல்வாரிலிருந்து உடனே வெளியேற வேண்டும். இந்தியாவிலேயே இருக்கக்கூடாது. இரண்டு லட்சம் ரூபாய், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மகாராஜாவின் செலவுகளுக்கு அளிக்கப்படும்.'*

*பாரிஸ் செல்லத் தீர்மானித்து, அல்வார் நகர அரண்மனையில் கங்கை நீரில் தலைமுழுகினார் ஜெய் சிங். உடைமாற்றிக்கொண்டு வந்த அவரை, கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக உடனே வெளியேற்றினார்கள். அவருடன் 20 பணியாளர்களும், ஓர் இசைக்குழுவினரும் சென்றனர். கூடவே நானூறு பெட்டிகளும். திண்ணை காலி.*

*ஜெய் சிங்கின் ஆடம்பர, புனிதம்கெடா வாழ்க்கை பாரிஸிலும் தொடர்ந்தது. 1937, மே 13 அன்று மாடிப்படியில் இறங்கும்போது தவறி விழுந்தார். ஏகப்பட்ட எலும்பு முறிவுகள். மரணப் படுக்கை. வண்டியின் பின் இழுத்துச்செல்லப்பட்ட சிறுவர்களின் கதறல் காதில் கேட்டுக்கொண்டே*

இருந்தது. மே 19-ம் தேதி இறந்துபோனார். அவரது பூத உடல், அல்வாருக்குக் கொண்டு வரப்பட்டது. மகாராஜாவின் உடலை உட்காரவைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்று எரிப்பது அவர்கள் வழக்கம். மகாராஜா உடலை அலங்கரித்து, மறக்காமல் கையுறை மாட்டி, தங்க முலாம் பூசப்பட்ட லான்ஸெஸ்டர் காரில் கஷ்டப்பட்டு உட்காரவைத்துக் கட்டினர். முகம் பயங்கரமாக இருக்க, ஒருவர் கருப்புக் கண்ணாடியை மாட்டிவிட்டார். அது ஜெய் சிங் உயிரோடு இருப்பது போன்ற தோற்றத்தைக் கொடுத்தது. அவருக்கென அவரே போட்ட சாலையிலேயே இறுதி ஊர்வலமும் நடந்தது.

சாவென்றால் வதந்தி உயிர்க்குமே. மக்கள் பேசிக்கொண்டார்கள். ‘‘கண்ணாடி பார்த்தியா? மகாராஜா சாகல. உயிரோடு கொண்டுபோய் எரிச்சுட்டாங்க. அதான் அந்த கெட்ட சக்தியை அழிக்க ஒரே வழி!’’

**(வருவார்கள்...)**

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 2

முகில், படம்: பா.காளிமுத்து




### இருட்டு அறையிலிருந்து ஒரு முரட்டு சுல்தான்!

ஒரு பேரரசின் இளவரசராகப் பிறப்பது எவ்வளவு பெரிய விஷயம்! சில பல கொலை முயற்சிகளில் சிக்காமல் தப்பினால்... சில பல கொலைகளைப் பிசகின்றி நிகழ்த்தினால் போதும். ராஜ வாழ்க்கை, மிதமிஞ்சிய அதிகாரம், பூலோகத்திலேயே சொர்க்கத்தின் சுகம், சொகுசு, உல்லாசம்... என எல்லாம் வாய்க்கலாம். அரியணை ஏறுவது என்பது மியூஸிகல் சேர் விளையாட்டுப்போல. ஆனால், இதில் ஒரே ஒரு நாற்காலிதான் உண்டு. அதில் வீற்றிருக்கும் அரசன் செத்து விழுந்தபின், அல்லது சாகடிக்கப்பட்டபின், மற்றவர்கள் பதவிவெறியுடன் அதை நோக்கி ஓடுவார்கள். உடன் ஓடி வருபவர்களையெல்லாம் கொன்று, வென்று, எவன் சென்று நாற்காலியில் அமருகிறானோ, அவனே அடுத்த அரசன். இந்த மியூஸிகல் சேரில் இசை என்பது வீழ்த்தப்பட்டவர் களின் மரண ஓலமே. ரத்தப் பிசுபிசுப்புடன் கூடிய அந்த அரியணையில் ஏறியவனும் எந்தக் கணத்திலும் வீழ்த்தப்படலாம் என்பதே இந்த அரசியல் விளையாட்டின் தீரா சுவாரஸியம்.

துருக்கியின் ஒட்டோமான் பேரரசின் அரியணை அப்போது காலியானது. துருக்கி சுல்தான் முதலாம் அகமது, கி.பி.1617, நவம்பர் 22-ம் தேதி இறந்தார். அடுத்த சுல்தானாகப் பதவியேற்று மியூஸிகல் சேர் விளையாடியவர்கள்: அகமதுவின் இளைய சகோதரர் முஸ்தபா (சுமார் நான்கு மாதங்கள்), அகமதுவின் மூத்த மகன் இரண்டாம் ஒஸ்மான் (சுமார் நான்கு ஆண்டுகள்), மீண்டும் முஸ்தபா (சுமார் ஒன்றரை ஆண்டுகள்). 1623, செப்டம்பரில் அகமதுவின் மகன்களில் ஒருவனான நான்காம் முராத் என்ற

பதினொரு வயது இளவரசன் அரியணை ஏறினான். இத்தனை ஆட்சி மாற்றங்கள். இவற்றுக்கிடையில் சில இளவரசர்களின் கழுத்துகள் நெரிக்கப்பட்டன. (ஆம், கழுத்தை நெரித்துக் கொல்வதே அவர்களது விருப்பத்துக்குரிய கொலை முறை). ராஜ்ஜியத்தை சுல்தான்கள் ஆட்சி செய்தாலும், சுல்தான்களை ஆட்சி செய்தது இஸ்தான்புல் அந்தப்புர கேபினெட்டே. அதில் ஒருத்தி அப்போது அதீத அதிகாரத்துடன் அனைவரையும் ஆட்டுவித்துக் கொண்டிருந்தாள்.


சுல்தான் இப்ராஹிம்

அனாஸ்டாஸியா. கிரேக்கத்தைச் சேர்ந்தவள். பேரரசர் அகமதுவின் அந்தப்புரத்துக்கு அடிமையாக வந்தவள். இஸ்லாமிய மதத்துக்கு மாறி, 'கோஸெம்' என்ற பெயர் பெற்றாள். நன்றாகப் பாடுவாள். அவளின் இசையிலும், அவள் மீதான இச்சையிலும் தடுமாறிய அகமது, இதயத்தில்

அதிகமாகவே இடம் கொடுத்தார். கோஸெம் அடுத்தடுத்து வாரிசுகளைப் பெற்றுப் போட்டாள். அதில் ஐந்து ஆண் வாரிசுகள். மெஹ்முத், முராத், காஸிம், சுலைமான் மற்றும் இப்ராஹிம்.

மெஹ்முத் இறந்துவிட, 1623-ல் சுல்தானாக சிறுவன் முராத் அறிவிக்கப்பட்டான். அறிவிக்கப்படாத சுல்தானாகப் பின்னணியில் ஆட்சி செய்தது கோஸெம்தான். வளர்ந்தபின் முராத்தின் ஆட்டங்கள் ஆரம்பமாகின. தன் ராஜ்ஜியத்தில் மது, புகையிலை, காபி மூன்றுக்கும் தடை விதித்தார். தானே வீதிகளில் இறங்கி அதிரடி சோதனை நடத்தினார். யாராவது இவற்றை விற்றாலோ, உபயோகித்தாலோ உடனடி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஆனால், முராத்தே மறைமுகமாக மது அருந்தினார் என்பது ஆஃப் தி ரெக்கார்டு தகவல். பாரசீக ராஜ்ஜியத்தின் மீது படையெடுத்துப் பெரும்பகுதிகளை வென்றார். முகலாயர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தார் என்பவையெல்லாம் உபரித் தகவல்கள்.


'அண்ணன் எப்ப சாவான்? அரியணை எப்ப நமக்குக் கிடைக்கும்?' இதுவே சகோதர இளவரசர்களின் மனநிலை. 'தான் செத்த பின்பு தன் மகன்களே ஆட்சிக்கு வரவேண்டும்' என்பது சுல்தான்களின் இயல்பான மனநிலை. இருந்தாலும் சில சகோதர இளவரசர்களை உயிருடன் விட்டு வைத்திருந்தனர். ஒட்டோமான்களின் பிரதான அரண்மனையான டாப்காபி (Topkapi) அரண்மனையின் அந்தப்புரத்தின் ஒரு பகுதியில், அவர்களைச் சிறை வைத்திருந்தனர். எதற்கு? ஒருவேளை ஆளும் சுல்தான் திடீரெனப் போய்ச் சேர்ந்துவிட்டால்? அவருக்கு ஆண் வாரிசும் இல்லாமல் போய்விட்டால்? ஒட்டோமான் வம்சத்தில் யாராவது எஞ்சியிருக்க வேண்டுமல்லவா!

அதற்காகத்தான் தன் இளைய சகோதரர்கள் சிலரையும் சுல்தான் முராத், சிறை வைத்திருந்தார். அவரின் கடைசித் தம்பியும், கோஸெமின் செல்ல மகனுமான இப்ராஹிமும், எட்டு வயதிலேயே அந்தத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டான். ஜன்னல்கூட இல்லாத அறை. சிறிதே

வெளிச்சம் உண்டு. வெளிநபர்களைப் பார்க்கவோ, பேசவோ முடியாது. உணவு உண்டு. உயிரைப் பறிக்க எப்போது வேண்டுமானாலும் சுல்தானிடமிருந்து உத்தரவு வரலாம். இப்ராஹிமுக்கு அடிக்கடி தலை வலித்தது. நோய்வாய்ப் பட்டான். அடிமைப்பெண் எம்.ஜி.ஆர் போலவே உலகமறியாது வாழ்ந்தான். கோஸெம், மகன் முராத்திடம் கெஞ்சினாள். ''பாவம் சிறுவன், அவனை விட்டு விடு!'' சுல்தான் ஆகிவிட்டால் இரக்கமெல்லாம் மரத்துப்போன விஷயம். முராத் செவிசாய்க்கவில்லை.

''இன்றைக்கு உன் மூத்த சகோதரன் சுலைமானைக் கொன்றுவிட்டார்கள்.'' இப்ராஹிமுக்கு எப்படியோ தகவல் வந்தது. நடுநடுங்கிப் போனார். 'அய்யோ, அடுத்து நான்தானா?'

**சுல்தான் நான்காம் முராத்**



''சுல்தானின் உத்தரவுப்படி இன்றைக்கு காஸிமுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.'' இப்ராஹிமுக்கு 1638-ல் செய்தி வந்தது. கதறி அழக்கூட தைரியமில்லை. மிஞ்சியிருப்பது நான் மட்டுமே! எனக்கான மரண

*நாள் எது? கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டார். சாவதற்கு ஒரு நொடி போதும். ஆனால், அதை நினைத்து நினைத்தே நொடிகள் ஒவ்வொன்றையும் விழுங்கி வாழ்வது பெருங்கொடுமையல்லவா!*

*இந்த இடத்தில் விதியின் நிறம் மாறியது. இருபத்தேழே வயதான சுல்தான் நான்காம் முராத், நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் விழுந்தார். அவருக்குப் பத்து ஆண் வாரிசுகள். பத்தும் நிலைக்கவில்லை. அந்தக் கோபமோ என்னவோ. ''இப்ராஹிமுக்கு மரண தண்டனை நிறைவேற்றுங்கள்'' என்று உத்தரவிட்டார். இங்கே கோஸெம் குறுக்கே வந்தாள். பிரதம மந்திரி காரா முஸ்தபாவைத் தடுத்தாள். ''ஒட்டோமான் வம்சத்தில் எஞ்சியிருப்பது அவன் மட்டுமே. அவன் நமக்குத் தேவை.''*

*1640 பிப்ரவரி 8. சுல்தானுக்கு அடுத்து அதிக அதிகாரம் கொண்ட பிரதம மந்திரி காரா முஸ்தபா, இப்ராஹிம் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்குச் சென்றார். இருள் அகன்று ஒளி பாய்ந்தது. இப்ராஹிம் பயத்துடன் அவரைப் பார்த்தார். ''சுல்தான் முராத் இறந்துவிட்டார். நீங்களே அடுத்த சுல்தான். வெளியே வாருங்கள்'' என்று அழைத்தார்.*

*18 ஆண்டுகள் இருளை மட்டுமே பார்த்து வாழ்ந்த இப்ராஹிமால் இந்த திடீர் வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ''பொய் சொல்கிறீர்கள். என்னை ஏமாற்றி அழைத்துச் சென்று கொல்லப் போகிறீர்கள். நான் வரவே மாட்டேன்'' என நடுங்கினார். தாய் கோஸெம் வந்து வார்த்தைகளால் ஒத்தடம் கொடுத்தாள். ''பயப்படாதே மகனே, நீயே வந்து உன் அண்ணனின் உடலைப் பார்.'' அப்போதும் நம்பாமல் நடுங்கியபடியே அவர்களுடன் சென்றார் இப்ராஹிம். அங்கே முராத்தின் உடல் கிடத்தி வைக்கப்பட்டிருந்தது. அச்சத்துடன் அருகில் சென்று, 'உயிர் இருக்கிறதா' என்று பார்த்தார். முராத் சட்டென எழுந்து தன் கழுத்தில் கத்தியைச் செருகிவிடுவாரோ என்று பயம். மூச்சு இல்லை. நாடித்துடிப்பில்லை. இதயமும் துடிக்கவில்லை.*

'ஆம்! செத்துவிட்டான். உண்மையாகவே கொலைகாரன் செத்துவிட்டான்.' இப்ராஹிம் சந்தோஷத்தில் துள்ளிக்குதித்தார். அங்கிருந்தவர்களையெல்லாம் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார். அந்தப்புரத்துக்குள் ஆனந்தக் கூச்சலிட்டபடியே ஓடினார். அங்கிருந்த பெண்களுடன் கெட்ட ஆட்டம் ஆடினார். 'நான் சுல்தான் ஆகப்போகிறேன்!'

மறுநாளே ஒட்டோமான் ராஜ்ஜியத்தின் பதினெட்டாவது சுல்தானாக 24 வயது இப்ராஹிம் பதவியேற்றார். நீதி, நிர்வாகம், ஆட்சி, அதிகாரம், பொருளாதாரம், சட்டம் என்னதான் தெரியும் அவருக்கு? பிரதம மந்திரிதான் சகல பொறுப்பு களையும் ஏற்றுக்கொண்டார். அண்டை ராஜ்ஜியங்களுடன் உறவைக் காத்தல், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளால் கஜானாவைக் காத்தல், உள்ளூர் எதிரிகள் தலைதூக்காமல் ராஜ்ஜியத்தைக் காத்தல், கீழ்ப்படியாதவர்களைப் பதவிகளிலிருந்து நீக்கி நிர்வாக நலனைக் காத்தல், போட்டியாகத் தலையெடுத்து வருபவர்களின் தலைகளை எடுத்து சுல்தானின் பதவியைக் காத்தல்.



இஸ்தான்புல் அந்தப்புரத்தில் பெண்கள்

இப்படிக் காத்தலில் பிரதம மந்திரி கண்ணும் கருத்துமாக இருக்க, இப்ராஹிமோ 'கலத்தலில்' கிறக்கமாகத் திரிந்தார். எல்லாம் தாயின் ஏற்பாடுதான். ''பாவம் எம்புள்ளை. பல வருஷங்களா அடைஞ்சு கிடந்திருக்கான். ஆனந்தமா அனுபவிக்கட்டும்.'' அந்தப்புரத்தில் சுல்தான் துள்ளி விளையாடினார். விளையாட்டில் வீரியம் குறையாமலிருக்க உரிய மருந்துகளையும் உணவுகளையும் அருமைத்தாயே விநியோகம் செய்தாள். மகனும் தாயிடம் உரிமையுடன் கேட்டார். ''கொடியிடைப் பெண்கள் எனக்குப் பிடிக்கவில்லை. கொழுக் மொழுக்கென குண்டுப் பெண்களை அனுப்பி வை.''



குழந்தைக்குப் பாலூட்டும் கோஸெம்

பல நாள்கள் அந்தப்புரத்தை விட்டு வெளியே வராமல் அங்கேயே கிடந்தார் இப்ராஹிம். தனது திறமையைத் தானே பார்த்து வியந்து பெருமைப்படுவதற்காக அறைகளெங்கும் நிலைக்கண்ணாடிகளை வைத்துக் கொண்டார். சில சமயங்களில் மணிக்கொருத்தி என 24 பெண்களுடன் அந்நாளைக் கட்டிலிலேயே கடந்தார்.

ஒருமுறை துருக்கியின் இஸ்லாமிய தலைமை மதகுருவின் மகள் ஒருத்தியைக் கண்டு, அவள் அழகில் (குண்டுப்பெண்ணாக இருந்திருக்கலாம்) கிறங்கினார் சுல்தான். ''உங்கள் மகளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன்'' என்று மதகுருவிடம் சொன்னார். சுல்தானின் அந்தப்புர லீலைகளை அறிந்த மதகுரு தயங்கினார். தன் மகளிடம், 'மறுத்துவிடு' என்று அறிவுறுத்தினார். இப்ராஹிமுக்குக் கடும்கோபம். அந்தப்பெண் கடத்தப்பட்டாள். அவளை அந்தப்புரத்தில் சில நாள்கள் அடிமையாக வைத்து ஆட்டிப்படைத்தார். ஆசைகள் தீர்ந்ததும் அனுப்பிவைத்தார். பழிவாங்கல். 'நான் கேட்டு மறுக்கும் உரிமை இங்கே எவனுக்கும் இல்லை.'

''சுல்தான் கட்டில் காரியங்களுக்குத்தான் லாயக்கு. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து நிர்வாகம் செய்வதற்கல்ல'' என்று சிலர் முணுமுணுத்தனர். அதற்காகவே 'ஒருநாள் முதல்வர்' போல இப்ராஹிம் அதிரடியாகத் தெருவில் இறங்கினார். இஸ்தான்புல் சந்தைக்கு வந்தார். கடைகளில் திடீர் சோதனை நடத்தினார். வியாபாரிகளின் குறைகளைக் கேட்டறிந்தார். 'அதைச் செய்யுங்கள், இதை நிறைவேற்றுங்கள்' என்று பிரதம மந்திரிக்கு ஒப்புக்குக் கட்டளைகள் இட்டார். அந்தி சாய்வதற்குள் அந்தப்புரம் வந்தடைந்தார். பேரின்ப சேவைகள் தொடர்ந்தன.

'உரியவருக்கு சோப்பு போட்டால், சாதாரண நபரும் உயர்பதவிகள் பெறலாம்' என்பது அரசியல் பாடம். இப்ராஹிம், தனக்கு சோப்பு போட்டுக் குளிப்பாட்டி விடும் நபரை உயர்பதவியில் வைத்து அழகு பார்த்தார். காலாட்படையின் தளபதி ஆக்கினார். தான் விரும்பிய இன்னொரு

வேலைக்காரரை, அரண்மனையின் தலைமை நிர்வாகி ஆக்கினார். எது மாதிரியும் இல்லாத புது மாதிரியான கிளுகிளு கிறுக்குத்தனங்கள் பலவற்றையும் அரங்கேற்றினார்.

(சுல்தான் வருவார்...)

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 23**

**முகில், படம்: பா.காளிமுத்து**




**பசுவின் அரசியல்!**

பதினெட்டு ஆண்டுகள் இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு மனிதரிடம், 'இனி நீயே ராஜ்ஜியத்தை ஆளும் சுல்தான்!' என்று உச்சபட்ச அதிகாரத்தைத் தூக்கிக் கையில் கொடுத்தால் தலைகால் புரியாதல்லவா! அவ்விதமாக கி.பி. 1640-ல் துருக்கி ஒட்டோமான் ராஜ்ஜியத்தின் பதினெட்டாவது சுல்தானாகப் பதவிக்கு வந்த இப்ராஹிமும், கெட்ட ஆட்டம் ஆடினார். அந்தப்புரத்திலிருந்து அவர் வெளியே வருவதே அரிதாகிப்போனது.

முதல் நான்கு ஆண்டுகள் பிரதம மந்திரியான காரா முஸ்தபா, நிர்வாகத்தைத் திறம்படக் கவனித்துக்கொண்டார். அதுதான் அவருக்குப் பிரச்னையாகவும் அமைந்தது. உண்மைக்கும் நேர்மைக்கும் எந்தக் காலத்தில்தான் மதிப்பிருந்தது? ராஜமாதாவாக இருந்த சுல்தானின் தாய் கோஸெம், அடுத்த பிரதம மந்திரி கனவுடன் இருந்த ஆளுநர் மெஹ்மத் பாஷா, இப்ராஹிமின் மரியாதைக்குரிய மதகுருவாக இருந்த சின்சி ஹோகா மூவருமே முஸ்தபாவுக்கு எதிராகச் சதி செய்தனர். 'எப்போது வேண்டுமானாலும் முஸ்தபா உங்களையே காலி செய்யலாம். ஆட்டம் ஜாஸ்தியாக இருக்கிறது' என்று சுல்தானிடம் மந்திரம் ஓதினர்.

'போங்கடா நீங்களும் உங்க பதவியும்' என்று முஸ்தபா, ராஜினாமா செய்ய முயன்றார். அதை இப்ராஹிம் ஏற்றுக்கொள்ளவில்லை. நல்ல எண்ணமெல்லாம் கிடையாது. 'நீயே விலக உரிமை கிடையாது. நான்தான் விலக்குவேன்' என்ற கர்வம்தான் காரணம். 1644, ஜனவரி 31-ம் தேதி,

சுல்தான் முஸ்தபாவைப் பதவி நீக்கம் செய்தார். சில மணி நேரத்திலேயே அவரது உயிரும் நீக்கப்பட்டது.

அடுத்த பிரதம மந்திரியாக மெஹ்மத் பாஷா நியமிக்கப்பட்டார். இந்த கிறுக்கு சுல்தானின் ராஜ்ஜியத்தில் நேர்மையாக உழைத்தால், முஸ்தபாவைப் போல் நம்மையும் போட்டுத்தள்ளி விடுவார்கள். ஆமாம் சாமி போட்டால் மட்டும் போதும் என்று முடிவெடுத்த மெஹ்மத் பாஷா, பணிவுச் செல்வமாக வலம்வந்தார். அதில் உருகி மருகிய இப்ராஹிமே ஒருமுறை கேட்டார், 'நீங்கள் ஏன் எப்போதும் என் கருத்தை மறுத்தே பேசுவதில்லை' என்று. மெஹ்மத் பாஷா நெடுஞ்சாண்கிடையாகப் பதிலளித்தார். 'சுல்தானின் ஆழ்ந்த கருத்துகளை என்னைப் போன்ற சாதாரணர்களால் என்றைக்கும் புரிந்து கொள்ளவே முடியாது.'

விலங்கு மயிர் உடையுடன் சுல்தான் இப்ராஹிம்



*அப்படியிருந்தும், மெஹ்மத் பாஷாவின் பதவி பறிபோனது. புதிய பிரதம மந்திரியாக ஷாலி என்பவர் வந்தார். மெஹ்மத் பாஷாவைத் தளபதியாக்கி, போர் ஒன்றுக்கு அனுப்பி வைத்தார் இப்ராஹிம். ஆம், சுல்தான் என்றால் அவரது சரித்திரத்தில் நான்கைந்து போர்களாவது இடம்பெற வேண்டாமா? கிரேக்கத்தின் பெரிய தீவான கீரிட்மீது வெனீஸ் குடியரசும், ஒட்டோமான் பேரரசும் உரிமை கொண்டாடின. அதற்காக, ஏற்கெனவே நான்கு முறை போர்கள் நடந்திருக்க, கி.பி.1645-ல் ஐந்தாவது முறையாகப் போரை அநாவசியமாக ஆரம்பித்து வைத்தார் இப்ராஹிம். மெஹ்மத்தின் தலைமையில் மாபெரும் கப்பல் படையொன்று கீரிட்டை முற்றுகையிட்டது. போர்ச் செலவுகளினால், ஒட்டோமான் ராஜ்ஜியத்தைப் பொருளாதார நெருக்கடி முற்றுகையிட்டது.*

*ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட துருக்கி வீரர்கள் அங்கே ரத்தம் சிந்திப் போரிட்டுக் கொண்டிருக்க, சுல்தான் அந்தப்புரத்தில் முத்தம் சிந்தி, தனக்கு வசதியான பொசிஷன் எது என்ற புத்தகங்கள் படித்துத் தெளிந்துகொண்டிருந்தார். புதிய கோணங்களில் பரிட்சார்த்த முயற்சிகளை நிகழ்த்தினார். யாருமறியா கோணமொன்றைத் தானே கண்டறிய வேண்டுமென்ற தீரா வேட்கையும் அவருக்குள் நிலைகுத்தி நின்றது.*

*இன்னொரு வேட்கையும். தான் புழங்கும் இடங்களில் விலங்குகளின் புஸுபுஸு மென் மயிரால் (fur) செய்யப்பட்ட பொருள்களே இடம்பெற வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார் சுல்தான். கம்பளங்கள், திரைச்சீலைகள், சுல்தான் உடையின் ஓரங்கள், தொப்பி, மேல் அங்கி, ஆசைநாயகிகளின் மேலாடை, மெத்தை, போர்வை, தலையணை என எல்லாம் விலங்கு மயிரால் நெய்யப்பட்டன. அவற்றைத் தருவிக்கவே ஏகப்பட்ட செலவானது. அதை ஈடுகட்ட தனது மந்திரிகளுக்கும், ராஜ்ஜியத்தின் ஆளுநர்களுக்கும் புதிய வரிகளை விதித்தார் இப்ராஹிம். அவர்கள் கடுப்புடன் திரிந்துகொண்டிருக்க, ராஜ்ஜியத்தின் பூனைகள் சவரம் செய்யப்பட்டு மொழுக்கென அலைந்துகொண்டிருந்தன.*

விலங்கு மயிருக்கு அடுத்து, வாசனைத் திரவியங்களை வகைதொகையின்றி வாங்கி நிரப்பினார். ஐரோப்பிய நகை வியாபாரிகளிடமிருந்து தன் தாடியில் சொருக வைரக்கல் முதல் ஆசைநாயகிகளுக்கான அட்டிகை வரை வாங்கிக்குவித்தார். உள்ளூர் மக்களின் வயிறு ஒட்டிக்கிடந்தது.

கி.பி.1642-ல் இப்ராஹிமுக்கும் அவரின் ஆசைநாயகி துர்ஹானுக்கும் முதல் மகன் பிறந்தான். இளவரசன் மெஹ்மத். ஒட்டோமான் பரம்பரையில் அடுத்த வாரிசு பிறந்துவிட்டதென மகிழ்ந்தனர். அதே சமயத்தில், அடிமைப்பெண் ஒருத்தியும் இப்ராஹிமால் கர்ப்பமுற்று, ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இப்ராஹிம், அடிமைப்பெண்ணின் குழந்தை மீதே பாசத்தைக் கொட்டினார். அடிமைப்பெண்ணை இளவரசனின் வளர்ப்புத் தாயாக்கி அழகு பார்த்தார். இதனால், துர்ஹான் கோபத்துடன் வாக்குவாதம் செய்ய, இப்ராஹிம் அவளது கையிலிருந்த மெஹ்மத்தைப் பிடுங்கித் தண்ணீரில் எறிந்தார். வேலைக்காரன் ஒருவனால் வருங்கால சுல்தானின் உயிர் காப்பாற்றப்பட்டது.

அடுத்து ஓர் ஆசைநாயகி, இன்னொரு மகனைப் பெற்றெடுத்தாள் (இளவரசர் சுலைமான்). வேறு வேறு பெண்கள் வழியாக, வருடத்துக்குச் சில பிள்ளைகள் பெற்றுத் தன் வம்சத்தை விருத்தியாக்கிப் பெருஞ்சேவை செய்ததே சுல்தான் இப்ராஹிமின் ஒரே அருஞ்சாதனை! அதில் ஒரு தனிப்பெருஞ் சாதனையும் உண்டு. பசு சமாச்சாரம்.

பசு ஒன்று தன் வாலைத் தூக்கி, கோமியம் பொழிந்த பொழுதொன்றில், சுல்தானின் பார்வை அவ்விடத்தில் மையம் கொண்டது. அட! பசுவின் பிறப்புறுப்புதான் என்னே அழகு! லயித்த சுல்தான், பொற்கொல்லரை வரவழைத்தார். அதைப்போன்ற மாதிரி வடிவங்களைத் தங்கத்தில் செய்யச் சொன்னார். தயாராகின. ‘இதே மாதிரி அமைப்பு கொண்ட பெண்ணை எங்கிருந்தாவது பிடித்து வாருங்கள்!’

தங்க மாதிரிகளைக் கையில் ஏந்தியபடி, பலரும் ராஜ்ஜியமெங்கும், ராஜ்ஜியத்துக்கு வெளியேயும் அலைந்து திரிந்தனர். எப்படித் தேடினார்கள் என்பதெல்லாம் அவரவர் கற்பனைக்கு. அர்மேனியாவில் பெண் ஒருத்தி சிக்கினாள். அவளை இப்ராஹிம் முன் அழைத்து வந்தார்கள். 150 கிலோ பேருடலுடன் நின்ற அவள், சுல்தானுக்குப் பேரழகியாகத் தெரிந்தாள். பரிசோதித்ததிலும் பரம திருப்தி. பெயரைக் கேட்டார். 'Sechir Para' என்றாள். சர்க்கரைக் கட்டி என்று பொருள். சுல்தான் கட்டெறும்பு ஆனார். அவளோட ராவுகள் தித்தித்தன.

சர்க்கரைப் பெண் என்ன சொன்னாலும் சுல்தான் நம்பினார். ஒருமுறை விஷத்தைக் கிசுகிசுத்தாள். 'நம்ம அந்தப்புரத்துல இருக்குற ஒருத்திக்கும் வெளியாள் ஒருத்தனுக்கும் தொடர்பு இருக்குதாம்.' சுல்தானுக்குச் சினம் சிரசேறியது. பெயர், அடையாளம் எதுவும் தெரியாததால், அந்தப்புரப் பெண்கள் அனைவரையுமே மூன்று நாள்களுக்குச் சித்ரவதைகள் செய்தார். அப்படியும் யாரும் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை.

'அனைவரையும் தனித்தனியாகக் கோணிப்பையில் கட்டுங்கள்.' சுமார் 280 பெண்கள் கட்டப்பட்டனர். அந்தக் கோணிப்பைகள் ஒரு கப்பலில் ஏற்றப்பட்டன. பொஸ்போரஸ் ஜலசந்தியில் அவர்கள் தூக்கி வீசப்பட்டனர். ஜல சமாதி.

கோஸெம் கோபத்தில் கொதித்தாள். பிற ஆசைநாயகிகளின் ஆக்கிரமிப்பால் அவளுக்கும், மகன் இப்ராஹிமுக்குமான உறவில் ஏற்கெனவே விரிசல் விழுந்திருந்தது. தன் தாயின் அதிகாரத்தைப் பிடுங்கிய இப்ராஹிம், அவளை டாப்காபி அரண்மனையிலிருந்து வெளியேற்றி, பழைய அரண்மனையில் ஒதுக்கிவைத்தார். 280 கொலைகளுக்குப் பிறகு கோஸெம், சர்க்கரைப் பெண்ணை அன்புடன் விருந்துக்கு அழைத்தாள். தொண்டைக்குழியில் உணவு இறங்கும் போதே, கழுத்தை நெரித்துக் கொன்றாள். 'திடீரென உடல்நிலை சரியில்லாமல் செத்துவிட்டாள்' என்று இப்ராஹிமிடம் சொல்லப்பட்டது.

ஏழு ஆசை நாயகிகளுக்குப் பிறகு, எட்டாவதாக வந்த ஹூமாஸாவை, ஆடம்பரமாக மணந்துகொண்டார் இப்ராஹிம் (கி.பி.1647). அவளுக்கு வரதட்சணையாக, ஒட்டோமான் பேரரசின் வசமிருந்த எகிப்தின் கஜானாவையே கொடுத்தார். ஒரு மாளிகையைக் கொடுத்தார். தன் சொந்த சகோதரிகளின் நகைகளை, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பிடுங்கிக் கொடுத்தார்.

'வாரிசே இல்லையே என்றுதான் இப்ராஹிமை விட்டு வைத்தேன்.ஆண் வாரிசுகளைத்தான் பெற்றுப் போட்டுவிட்டானே. இனி அவன் எதற்கு?' தாய்ப்பசு, பிரதம மந்திரி ஷாலியுடன் இணைந்து சதி செய்தது. இப்ராஹிம், சதியை மோப்பம்பிடித்தார். மந்திரி சபைக்கூட்டத்துக்கு வந்த ஷாலியை நிற்கவைத்துக் கேள்வி கேட்டார். 'இஸ்தான்புல்லில் இன்னும் மாட்டுவண்டிகளும், குதிரைவண்டிகளும் ஏன் தடை செய்யப்படவில்லை?'

**டாப்காபி அரண்மனை வளாகம்**



ஒருமுறை சுல்தான் சென்ற பாதையில் இடையூறாக சில வண்டிகள் வந்துவிட, ஊரில் எவனுமே வண்டி வைத்துக் கொள்ளக்கூடாது என்று இப்ராஹிம் கிறுக்குத்தனமான உத்தரவு போட்டிருந்தார். அது நடக்கிற காரியமா? ஷாலியிடம் பதில் இல்லை. ஆகவே, கைது செய்யப்பட்டார். பின் கொல்லப்பட்டார்.

கீரிட் மீதான போரும், அதற்கான செலவினங்களும் இழுத்துக்கொண்டிருந்தன. (1669 வரை போர் நீண்டது). சுல்தானின் மடத்தனமான செய்கைகளினாலும் செலவுகளினாலும் ராஜ்ஜியத்தின் பொருளாதாரம் இருளடைந்து கிடந்தது. இந்த அசாதாரணமான சூழலிலும் புதிய பிரதம மந்திரி அகமது பாஷாவிடம், 'நான் கேட்ட அளவு விலங்கு மயிரை ஏன் தருவிக்கவில்லை?' என்று கோபப்பட்டுக் கொண்டிருந்தார் இப்ராஹிம். அகமது பாஷாவும் அழுத்தம் தாங்காமல், அந்தச் செலவினங்களுக்காக துருக்கி வீரர்களின் சம்பளத்தில் கைவைத்தார். அவர்கள் கொதித்தனர்.

தலைமை மதகுரு, இப்ராஹிமால் மானபங்கப் படுத்தப்பட்ட தன் மகளுக்காகப் பழிவாங்கும் தருணத்துக்காகக் காத்திருந்தார். கோஸெமும் கைகோக்க, இஸ்லாமியச் சான்றோர்கள் நிரம்பிய சபையினரும் ஆதரவு தெரிவிக்க, மதகுரு, துருக்கிய வீரர்களைப் புரட்சிக்குத் தூண்டினார். 1648, ஆகஸ்டு 8. டாப் காபி அரண்மனைக்குள் புகுந்த வீரர்கள், பிரதம மந்திரி அகமது பாஷாவைத் துண்டுதுண்டாக வெட்டி, அந்த மாமிசத்தைச் சந்தையில் விற்றனர்.



கொஸெம்




இளவரசன் மெஹ்மத்

*சுல்தான் இப்ராஹிம் சுற்றி வளைக்கப்பட்டார். எட்டு ஆண்டுகள் ஆண்டு அனுபவித்த சுல்தான் பதவி, இப்ராஹிடமிருந்து பிடுங்கப்பட்டது. கைது செய்யப்பட்டு மீண்டும் அதே பழைய சிறையில் அடைக்கப் பட்டார். தலைவலித்தது. உடல் பதறியது. நிலைகுலைந்தார் இப்ராஹிம். கதறினார். ஏதேதோ பிதற்றினார். இரவுகளில் அவரது அழுகைச் சத்தம் வெளியே கசிந்து கொண்டிருந்தது.*

*கோஸெம், இப்ராஹிமின் வெறுப்புக்குரிய மகனான ஆறு வயது மெஹ்மத்தை, சுல்தான் நான்காம் மெஹ்மத்தாகப் பதவியேற்கச் செய்தாள். 'இரண்டு சுல்தான்கள் இருக்க முடியாது. ஒருவரைக் கொல்வதுதான் நியாயம்' - காட்மதர் கோஸெம் திருவாய் மலர்ந்தாள். மெஹ்மத்திடம், அவனுடைய தந்தைக்கான மரண தண்டனைக்கு உத்தரவு வாங்கப்பட்டது. இப்ராஹிமின் உத்தரவுப்படி, பலருக்கும் மரண தண்டனை நிறைவேற்றிய வீரன் ஒருவன், இப்ராஹிமுக்கும் மரண தண்டனையை நிறைவேற்றினான். வில்லின் நாண் ஒன்று, அவரது கழுத்தை நெரித்தது. சபை, சலனமின்றி அதைப் பார்த்துக் கொண்டிருந்த நாள், 1648, ஆகஸ்ட் 18.*

*நான்காம் மெஹ்மத் சார்பில், பிரதிநிதியாக ஆட்சி செய்தவள் கோஸெம்தான். தன் வாழ்நாளில் ஆறு சுல்தான்களைக் கண்டவள் அவள். 1661-ல் சதி ஒன்றில் வேலைக்காரத் திருநங்கையால் அவளும் கொல்லப்பட்டாள். ஆம், கழுத்து நெரிக்கப்பட்டுதான்.*

**(வருவார்கள்...)**

**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 24**

**முகில், படம்: பா.காளிமுத்து**





**ஒரு தேசத் தந்தையின் கதை!**

மிக மிகச் சோகமான, நெஞ்சைப் பிழியும் நிகழ்வுகளுடன்தான் ஆரம்பிக்கப் போகிறோம். கண்ணீர் பீறிட்டுக் கொட்டினாலும் கொட்டலாம். எதற்கும் கைக்குட்டையை எடுத்துவைத்துக்கொண்டு ஆரம்பியுங்கள்.

பால்ய வயதில் ஒருவருக்கு ஓரிரு துயரங்கள் நிகழலாம். ஆனால், பால்யமே துயரமாக இருந்தால்? பாவம் அல்லவா! அவன், அன்றைக்கு சோவியத் யூனியனின் அங்கமாக இருந்த துர்க்மெனிஸ்தானில் பிறந்தான். என்னது... அவன் இவன் என்ற ஏக வசனமா? சரி, அவர் 1940, பிப்ரவரி 19-ம் தேதி பிறந்தார். அவருடைய இயற்பெயர் சபார்முராத் நியாஸோவ் (Saparmurat Niyazov).

நிச்சயம் மிகவும் ஏழ்மையான குடும்பமாகத்தான் இருந்திருக்க வேண்டும். குடும்பத்தின் தூண் போல இருந்த நியாஸோவின் தாத்தா, ஊரில் சொந்தமாக வணிகம் செய்தார். ஜோசப் ஸ்டாலின் அதற்குத் தடைவிதித்தார். தாத்தா வாழ வழியின்றி பரதேசம் போனார். நியாஸோவின் அப்பா, ஆகச்சிறந்த, தேசபக்தி மிகுந்த, நேர்மையான, விவேகமான, எல்லையிலே போரிட்ட ராணுவவீரர். இரண்டாம் உலகப்போரில் வடக்கு ஒசேத்தியப் பகுதியில், கொடும்பாவி ஹிட்லரின் நாஸிப் படைகளுடன் போரிட்டபோது, வீரமரணமடைந்தார். மிச்சமிருந்தது தாயும், உடன்பிறந்தவர்களும் மட்டுமே.




*மீண்டும் விதி வீறுகொண்டு விளையாடியது. துர்க்மெனிஸ்தானின் தலைநகரமான அஸ்காபாத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1948-ல் மிகப்பெரிய நிலநடுக்கம் உண்டானது. ரிக்டர் அளவு 9.0. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். அது, துர்க்மெனிஸ்தானின் மக்கள் தொகையில் பத்து சதவிகிதம். அதில் நியாஸோவின் தாயும் சகோதரர்களும் அடக்கம்.*

*நியாஸோவுக்கு மட்டும் விதி மிச்சமிருந்திருக்கிறது. ஆம், துர்க்மெனியர்களின் தலைவிதியையே மாற்றி எழுதுவதற்காக அவர் மட்டும் அப்போது தப்பித்திருந்தார். சாதாரணமாக அல்ல. இடிந்த ஒரு கட்டடத்தின்*

உள்ளே சிக்கி, மூச்சுத்திணறி, அரண்டு, அழுது, தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து, நம்பிக்கை வற்றாமல், கொஞ்சம் கொஞ்சமாக இடிபாடுகளை அகற்றி, தட்டுத்தடுமாறி உயிரைத் தக்கவைத்து மேலே வந்துசேர, அவருக்கு எட்டு நாள்கள் பிடித்தன. அப்போது அவருக்கு வயதும் எட்டு.

எட்டு எட்டாகப் பிரிக்கப்பட்ட மனித வாழ்வின் முதல் எட்டு, நியாஸோவுக்குச் சோகம் சொட்டச் சொட்டத்தான் இருந்திருக்கிறது. ஆம், இதை யாவரும் நம்பித்தான் ஆகவேண்டும். ஏனெனில், நிகரற்ற நியாஸோவே இதைத் தன் 'சுயசரிதை' நூலில் செதுக்கியிருக்கிறார். இங்கே 'சுயசரிதை' என்பதுகூட வலுவற்ற, முறையற்ற வார்த்தைதான். அது, அதற்கும் மேலே. எதற்கும் மேலே? அதையெல்லாம், மேலே போகப்போக பார்த்துத் தொலைக்கலாம்.

மீட்புப் பணியிலிருந்தவர்கள் நியாஸோவுக்குச் சிகிச்சையளித்தனர். கொஞ்சம் உணவு கொடுத்தனர். அநாதை என்று அறிந்து, காகசஸ் மலைப்பகுதியிலுள்ள ஆதரவற்றோர் விடுதி ஒன்றுக்கு அனுப்பிவைத்தனர். அங்கேதான் தனது இரண்டாம் எட்டில் நல்லதொரு மாணவனாக, மனிதனாக, குடிமகனாக, ஒழுக்கசீலனாக, நேர்மையான கொம்பனாக, etc., etc.,-ஆக நியோஸோவ் வளர்ந்தார்.

1959-ல் பள்ளிப்படிப்பை முடித்தார். பாலிடெக்னிக் படித்தார். எலெக்ட்ரிகல் என்ஜினீயரிங் முடித்தார். சில வேலைகளில் இருந்தார். மேற்படிப்புக்கு ரஷ்யா சென்றார். தோல்வியுடன் திரும்பினார். அதற்கெல்லாம் முன்பாகவே, அந்தப் பிரதேசத்துக்குரிய கல்யாண குணங்கள் நிரம்பிய கம்யூனிஸ்ட்டாகத் தன்னை வார்த்துக் கொண்டிருந்தார். துர்க்மென் சோவியத் சோஷலிசக் குடியரசின் (Turkmen SSR) கம்யூனிஸ்ட் கட்சியில் அடிமட்டத் தொண்டராக இணைந்து, பணிந்து, கலந்து, துணிந்து, கவிழ்த்து, வளர்ந்து, நிமிர்ந்து, அடுத்தடுத்த மட்டங்களுக்கு உயர்ந்து ஒரு தலைவராக நின்றார் நியாஸோவ். (ஒரே பாடலில் ஹீரோ ஓஹோ ஆகும் கதைதான். அதெப்படி என்றெல்லாம் நியாஸோவ் நீட்டி முழக்கவில்லை.)

முகம்மத்நாசர் கேபுரோவ் என்பவர் துர்க்மெனிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தார். பல முறைகேடுகளிலும் ஈடுபட்டிருந்த அவர்மீது, 1985-ல் பருத்தி தொடர்பான ஊழல் குற்றச்சாட்டு பெரிதாக வெடித்தது. சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் மிகேல் கோர்பசோவ், கேபுரோவைப் பதவியிலிருந்தும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கினார். அந்த இடத்தில் கோர்பசோவால், நியாஸோவ் நியமிக்கப்பட்டார். 1990-ல் நியாஸோவ், The Supreme Soviet of the Turkmen SSR-ன் சேர்மனாக நியமிக்கப்பட்டார். இது, அதிபர் பதவிக்கு நிகரான அதிகாரம் கொண்டது.

1991 ஆகஸ்டில் சோவியத் ஒன்றியத்தைக் கலைக்கும் வகையில், கோர்பசோவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கவிழ்ப்பு முயற்சியில் நியாஸோவும் மறைமுகமாகப் பங்குவகித்தார். அந்த முயற்சி அப்போது தோல்வியடைந்தது. அந்த டிசம்பர் 8-ல் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டது. ஆனால், அக்டோபரிலேயே நியாஸோவ் துர்க்மெனிஸ்தானை தனி நாடாகப் பிரித்துக் கொண்டுவந்திருந்தார். அதன் முதல் அதிபராக அறிவிக்கப்பட்டும் இருந்தார்.

இருந்தாலும் ஜனநாயகம் கொஞ்சமாவது வாழ்ந்துவிட்டுப் போகட்டுமென புதியதாக ‘ஜனநாயகக் கட்சி’யை ஆரம்பித்தார். 1992-ல் அதிபர் தேர்தலையும் நடத்தினார். அவர் மட்டுமே வேட்பாளர். அமோக வெற்றி. மக்கள், 99.5 சதவிகித ஆதரவு வாக்குகளை அளித்து அழகு பார்த்தனர். துர்க்மெனிய மக்கள் தேர்ந்தெடுத்த மகத்தான அதிபராக சபார்முராத் நியாஸோவ் பதவியேற்றார். என்மீது இத்தனைப் பாசம் வைத்திருக்கும் இந்த மக்களுக்கெல்லாம் ஏதாவது செய்தே ஆகவேண்டுமே என்று உட்கார்ந்து யோசித்தார். வெச்சி செய்ய ஆரம்பித்தார்!

துர்க்மெனிஸ்தான், இஸ்லாமியர்கள் நிரம்பிய நாடு. என்றாலும், ஸ்டாலின் காலத்திலெல்லாம் அங்கே மசூதிகள் காணாமல்போயிருந்தன. துர்க்மெனியர்களுக்கான தனித்துவ கலாசாரமெல்லாம் கம்யூனிஸ்ட்

போர்வையில் புதைந்துபோயிருந்தன. அங்கே முக்கிய விளைபொருள் பருத்தி. இயற்கை எரிவாயும், எண்ணெய் வளமும் செழிப்பாக நிரம்பிய நாடு. இருந்தாலும், அந்த வளங்கள் சோவியத் யூனியன் பிரதேசங்களுக்குக் குறைந்த விலையில் பகிரப்பட்டதால், மக்கள் செழிப்பாக இல்லை. தேசத்தின் பொருளாதாரமும் அதுவரை வளமாக இல்லை.

துர்க்மெனிஸ்தான் புதிய தேசமாக உருவாகியபோது, கம்யூனிஸத்தின் சுவடுகளும், திணிக்கப்பட்ட ரஷ்யர்களின் கலாசாரமும் தன் தேசத்தில் இருக்கவே கூடாது என்று முடிவெடுத்தார். துர்க்மெனிஸ்தானின் தனித்துவ அடையாளங்களை, கலாசாரத்தை அழுத்தமாக உலகத்துக்குத் தெரியப்படுத்த விரும்பினார் நியாஸோவ். ஆனால், தானே இனி துர்க்மெனிஸ்தானின் பெருமைக்குரிய அடையாளம், தான் உருவாக்குவதே இனி துர்க்மெனியர்களின் கலாசாரம் என்று செயல்பட ஆரம்பித்தார்.

உலகமெங்கும் வாழும் துர்க்மெனியர்களுக்கான அமைப்புக்கு (*Association of Turkmens of the World*) தலைவரானார். 'உலகவாழ் துர்க்மெனியர்களின் தன்னிகரற்ற ஒரே தலைவர் நானே. துர்க்மெனிஸ்தான் தேசத்தின் தந்தையும் நானே. இனி என்னை எல்லோரும் 'துர்க்மென்பாஷி' (*Turkmenbazy*) என்றே அன்புடன் அழைத்து இன்புறுங்கள்!' துர்க்மெனியர்களுக்குப் புல்லரித்தது. 'தலைவன் இருக்கிறான்' என்று தலைநிமிர்ந்து பார்த்தார்கள். அந்தத் தலைவரோ, தன்னையே கடவுளாக நினைக்க ஆரம்பித்திருந்தார். அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தால் ஆட்சியாளர்களுக்கு மண்டைக்கனம் மிகுதல் இயல்புதானே.

துர்க்மெனிஸ்தானைப் பொருளாதாரச் செழிப்புள்ள தேசமாக முன்னேற்ற என்னிடம் பல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்த எனக்குப் பத்தாண்டுகள் தேவை. ஆம், புதிய துர்க்மெனிஸ்தான் பிறக்கப்போகிறது! (குழந்தைக்குப் பத்து மாதம். தேசத்துக்குப் பத்தாண்டுகள். கணக்கு சரிதானே!) அதற்கு ஐந்து வருட அதிபர் பதவி என்பது போதாது. 2002 வரை தானே அதிபர் என்று 1994-ல்

அறிவித்தார் நியாஸோவ். சரி, அதுவரையிலான அந்த இரண்டு ஆண்டுகளில் என்னென்ன ஆணிகள் பிடுங்கியிருந்தார்?

துர்க்மெனிஸ்தானுக்கும் கம்யூனிஸத்துக்கும் ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது. அது ஒரு தூய்மையான இஸ்லாமிய தேசம் என்று அடையாளப்படுத்துவதற்காக, சவுதியுடன் பிணைப்பை நெருக்கமாக்கிக் கொண்டார். தான் ஓர் உண்மையான இஸ்லாமியன் என்று காட்டிக்கொள்ள அடியார்கள் புடைசூழ மெக்காவுக்கும் சென்று வழிபட்டுவந்தார். இதன்மூலம் The Organisation of Islamic Cooperation என்ற உலக இஸ்லாமிய தேசங்களின் கூட்டமைப்பில் துர்க்மெனிஸ்தானையும் உள்நுழைத்துக் கொண்டார். துருக்கியுடன் பாசமாகக் கைகுலுக்கி கடனுதவி பெற்றுக் கொண்டார். ஈரானுக்கு எண்ணெய், எரிவாயு, மின்சாரம் விற்க ஒப்பந்தம் செய்துகொண்டார். கொள்ளை லாபம் கொண்ட திட்டம் அது. ஈரானுக்குக் குழாய்கள் வழியாக எரிவாயு கொண்டு செல்ல பணிகள் ஆரம்பமாயின. ஆனால், அதற்கு முன்பு அது பாதுகாப்பானதா, நிலநடுக்கம் போன்ற பேரிடர்களைத் தாங்கும் வல்லமை கொண்டதா, மக்களுக்குப் பாதிப்பு உண்டாகுமா என்ற ஆய்வுகளெல்லாம் மேற்கொள்ளப்படவில்லை. ஆட்சியாளர்கள் நினைத்தால் எங்கும், எவன் நிலத்தையும் குடைந்து குழாயைப் பதித்துவிடலாம் என்பதுதானே உலக நடைமுறை.

இது ஒரு மதச்சார்பற்ற நாடு. எல்லோருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. அப்படித்தான் தேனொழுக வெளியே சொன்னார்கள். ஆனால், துர்க்மெனிஸ்தானில் வாழ்ந்த பிற மதத்தினரும், சிறுபான்மை இனத்தினரும் அடக்குமுறைக்கு ஆளாகத் தொடங்கினர். துர்க்மெனிய வாழ் ரஷ்யர்கள் இனிமேல் இங்கே வாழவே முடியாதோ என்று அச்சம் உருவானது. ஆனால், முஸா ஸோகோலோவா என்ற ரஷ்யப் பெண்ணைத்தான் நியாஸோவ் திருமணம் செய்திருந்தார். முராட் என்ற மகனும், இரினா என்ற மகளும் அவர்களுக்கு இருந்தனர். ஆகவே, அந்தப் பிணைப்பு கொடுத்த நம்பிக்கையில் ரஷ்யர்கள் காலம் தள்ள ஆரம்பித்தனர்.



**துர்க்மெனிஸ்தான் நிலநடுக்கம்**

*துர்க்மெனிஸ்தானின் பிற கட்சிகள் முகவரியின்றி நசுக்கப்பட்டன. தொலைக் காட்சிகளும், பத்திரிகைகளும் அரசின் வசம் சென்றன. எதை மக்கள் பார்க்க வேண்டும், வாசிக்க வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும் என்று அரசு முடிவெடுத்தது. தணிக்கை தறிகெட்டு நடந்தது. தினமும் நியாஸோவே வண்ண வண்ண உடைகளுடன் தலைப்புச் செய்தியாகக் காட்சி தந்தார். 1992-ல் நியாஸோவுக்கு 'துர்க்மெனிய மக்களின் நாயகன்' விருது வழங்கப்பட்டது. ஆம், தனக்குத்தானே விருதளித்துக் கொண்ட தானைத் தலைவர்!*

*ஒரு சாலைக்கு லெனினின் பெயர் இருந்தது. ஒரு பண்ணை, இன்னும் சில இடங்கள் லெனினின் பெயருடன் திகழ்ந்தன. அத்தனைக்கும் தன் பெயரையே அருளி, துர்க்மெனியர்களை உய்வித்தார். ஸ்டாலின்போல நியோஸோவும் ஒரு சர்வாதிகாரியே என்று சலசலப்புகள் கிளம்பின. இடுங்கிய கண்களிலும் புன்னகை தேக்கி நியாஸோவ் பதில் சொன்னார், 'ஸ்டாலின் அனைத்தையும் அடக்குமுறையால் சாதித்தார். நான் எனது களங்கமற்றப் புகழால் இவற்றை அடைந்திருக்கிறேன்!'*

*1999-ல் கடைந்தெடுத்த ஜனநாயகவாதியான நியாஸோவ், நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினார். அதில் அவரது ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே போட்டியிட்டு, வியர்வை சிந்தி மக்கள் தொண்டாற்றி, அமோக ஆதரவுடன் நேர்மையாக வென்றனர். அந்த டிசம்பர் 28-ல் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 'துர்க்மெனிஸ்தானின் வாழ்நாள் அதிபர் நியாஸோவ்தான்.'*

*அவரின் அடிப்பொடிகளுடைய பரிபூரண ஆதரவுடன் அந்தத் தீர்மானம் பூப்போல நிறைவேற்றப்பட்டது. நியாஸோவ், துர்க்மெனிஸ்தானின் அதிகாரபூர்வ சர்வாதிகாரியாக விஸ்வரூபம் எடுத்தார். அந்தத் தேசம் இரும்புத்திரைக்குள் கட்டுண்டது.*

(நியாஸோவ் வருவார்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 25

முகில், படம்: பா.காளிமுத்து




### நான் அசைந்தால் அசையும்...

இன்குபேட்டரில் வைக்க வேண்டிய குழந்தையாகத்தான் 1991-ல் துர்க்மெனிஸ்தான் பிறந்தது. பொருளாதாரம் சூம்பிக்கிடந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருத்துக்கிடந்தது. புதிய அதிபராகப் பொறுப்பேற்றிருந்த சபார்முராத் நியாஸோவ்மீது மக்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். அந்த துர்க்மென்பாஷியின் நிர்வாக மாயாஜாலங்களால் துர்க்மெனிஸ்தான் விரைவிலேயே சொர்க்கபுரியாக ஜொலிக்கும் என்று மனதார நம்பினர். ஆனால், தாங்கள் அமோகமாகத் தேர்ந்தெடுத்த ஆட்சியாளர், பரிசுத்தமான சர்வாதிகாரி என்று அவர்கள் உணர்ந்துகொள்ள கொஞ்ச காலம் பிடித்தது.

நியாஸோவ், கருத்துச் சுதந்தரத்தின் கழுத்தை நெரித்தார். மீடியாவின் மூச்சை நிறுத்தினார். எதிர்க்கட்சிகளுக்குத் தெவசம் செய்தார். தன்னைக் கடவுளாகச் சித்திரித்துக்கொண்டார். துர்க்மெனிஸ்தானின் இயற்கை வளங்களான எரிவாயு, எண்ணெய், மின்சாரம் போன்றவற்றின் மூலம், தான் எப்படி பணத்தில் கொழிக்க முடியும் என்று அக்கறையுடன் திட்டமிட்டார். தன் அதிபர் பதவியை பத்தாண்டுகள் வரை நீட்டித்துக் கொண்ட அவர், 1999-ல் தன்னை வாழ்நாள் அதிபராகவும் அறிவித்துக்கொண்டார்.

இந்தச் சர்வாதிகாரப் போக்கை மக்கள் எதிர்க்கவில்லையா?

திருடன் ஒரு வீட்டில் திருடப்போகும்போது, நாய் குரைத்தால் அதை அமைதியாக்க பிஸ்கட் போடுவான் இல்லையா. அதுபோல, தன் நாட்டின் வளங்களைத் திருடுவதற்கு ஏதுவாக, மக்கள் எப்போதும் குரைக்காமல் இருக்க 'இலவசங்களை' பிஸ்கட்டாகப் போட்டார் நியாஸோவ். அந்த மனம் மயக்கும் அறிவிப்பு, அவர் அதிபரான சில காலத்திலேயே வெளியானது. 'என் அன்புக்குரிய துர்க்மெனிய மக்களுக்கு அடுத்த பத்தாண்டுகளுக்கு மின்சாரம் இலவசம். எரிபொருள் இலவசம். தண்ணீர் இலவசம். சுத்திகரிக்கப்பட்ட உப்புகூட இலவசம். அரசுப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு. உணவுப் பொருள்களுக்கான மானியம் உயர்வு. வாழ்க மக்கள்! வளர்க என் புகழ்!' இலவசங்களையும் சலுகைகளையும் விட்டெறிந்தால், மக்கள் எந்த அநியாயத்தையும் கண்டுகொள்ளாமல், ஆயுசுக்கும் நன்றிக்கடனுடன் வாலாட்டுவர் என்பது உலகறிந்த ரகசியம்தானே.



மனாட் நோட்டில் நியாஸோவ்

துர்க்மெனிஸ்தானுக்கான மனாட் என்ற கரன்ஸி அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நோட்டுகளில், தன் முகம் பதித்தார் நியாஸோவ். ஆம், ஒவ்வொரு துர்க்மெனியனும் பணத்தைப் புழங்கும்போதெல்லாம் தன் புகழை நினைத்து உருக வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன். தலைநகரம் அஸ்காபாத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில் அமைந்த அர்ஸாபில் என்ற பகுதியில் இருந்த பெரிய

அரண்மனையை அதிபர் மாளிகை ஆக்கினார். அதிபர் காரில் செல்வதும் துர்க்மெனியர்களுக்கு கௌரவக் குறைச்சல் அல்லவா! பிரிக்க முடியாதது, தலைவர்களும் ஹெலிபேட்களும். நியாஸோவ் செல்லும் இடங்களிலெல்லாம் 'ஹெலிபேட்'கள் அமைக்கப்பட்டன. தவிர, அவருக்கென போயிங் 767 நவீன ரக விமானம் வாங்கப்பட்டது. அது ஓர் அதிபர் மாளிகைக்குரிய சொகுசுகளுடன் வடிவமைக்கப்பட்டது. வாஷ் பேஷின் முதற்கொண்டு பல இடங்களில் தங்க முலாம் பூசப்பட்ட அந்த ஆடம்பர விமானம் வாங்குவதற்கு ஆன செலவு, $130 மில்லியன்.

தேசத்தில் பருத்தி செழிப்பாகக் காய்த்தது. அதன் வணிகத்தால் நியாஸோவுக்கும் அவர் சார்ந்த குடும்பத்தினருக்கும் பணம் கொத்துக் கொத்தாகக் காய்த்தது. 'பருத்தி விவசாயிகளுக்குத்தான் மீதமிருந்த கோவணமும் கிழிந்தது' என்ற வரி இங்கே தேவையா என்ன? தேசத்தின் எண்ணெய் மற்றும் எரிவாயு வணிகத்தை நிர்வகிக்க, Turkmenneftegaz State Trading Corporation என்ற அரசு நிறுவனம் இயங்கியது. இல்லையில்லை, தன் ஆடம்பரக் கனவுகளை நிறைவேற்றுவதற்காகவே அந்நிறுவனத்தை இயக்கினார் நியாஸோவ். அதன் அதிகாரிகளுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. ஏற்றுமதி ஒப்பந்தங்கள், புதிய முதலீடுகள் என்று ஒவ்வொன்றிலும் நியாஸோவே தனக்கான கமிஷன் எத்தனை சதவிகிதம் என்று துண்டுபோட்டுக் கறாராகப் பேசி முடிவெடுத்தார். ஆம், தனக்குப் போகத்தான் தேசத்துக்கும் மக்களுக்கும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக, அரசால் கட்டப்பட வேண்டிய கட்டடங்களுக்கான தேவையே நிறைய இருந்தன. அதெல்லாம் எதற்கு அசிங்கமாக? அஸ்காபாத் நகரமெங்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைக் கட்டுங்கள். கவின்மிகு மாளிகைகளை, வானுயர்ந்த வணிக வளாகங்களை உருவாக்கி நகரை அழகுப்படுத்துங்கள் என்று உத்தரவிட்டார் நியாஸோவ். துர்க்மெனிஸ்தானுக்கு வரும் அயல்நாட்டினர் அதன் அழகை, வளத்தை, டாம்பீகத்தைக் கண்டு வியந்து நிற்க இந்த ஏற்பாடு. அதன்படி, நகரமெங்கும் நட்சத்திர ஹோட்டல்களும் (எண்ணிக்கை 22 என்று

ஒரு தகவல் உண்டு), பிற ஆடம்பரக் கட்டடங்களும் தண்டத்துக்குக் கட்டப்பட்டன.

இஸ்லாம் மார்க்கத்தில் சிலை வழிபாடு கூடாது. ஆனால், தானே தேசத்தின் மார்க்கம் என்று நம்புபவருக்கு அதெல்லாம் கிடையாதே. நாடெங்கும் தனது சிலைகளை நிறுவச் சொன்னார் நியாஸோவ். அதுவும் தங்க முலாம் பூசப்பட்ட உயரமான, பிரமாண்டமான சிலைகள். நின்றபடி, நடந்தபடி, சிரித்தபடி, சிந்தித்தபடி, ஒரு கையைத் தூக்கியபடி, சல்யூட் அடித்தபடி, விதவிதமான சிலைகளாக நகரமெங்கும் தன்னை நிறைத்தார் நியாஸோவ். சிலைகளைச் சுற்றிப் பூங்காக்களும், நீரூற்றுகளும் நிறுவப்பட்டன. தன் தாய்க்குப் பொது இடங்களில் சிலை வைத்தும், நாணயங்கள் வெளியிட்டும் தன்னை நல்லதொரு மகனாகவும் அவர் நிறுவிக்கொண்டார்.



சர்வதேசப் பிரச்னைகளில் துர்க்மெனிஸ்தான் நடுநிலைமை வகிக்கும் என்று நியாஸோவ் அழுத்தமாக அறிவித்திருந்தார். எந்த அந்நிய சக்தியும் தன் விஷயத்தில் மூக்கை நுழைக்கக்கூடாது. நானும் எதையும் கண்டுகொள்ள மாட்டேன் என்பது வெளியுறவுக் கொள்கைத் தெளிவு. Neutral Turkmenistan என்று அரசின் அதிகாரபூர்வ நாளிதழின் பெயரை மாற்றி வைக்கும் அளவுக்கு நடுநிலைமையில் உறுதியாக இருந்தார்.

Neutrality Arch என்று, ஈஃபிள் டவர் போன்ற கோபுரம் ஒன்றைக் கட்டும் பணிகள் ஆரம்பமாயின. முக்காலி போன்றதொரு அடித்தளம். அதன் மேல் ஒரு கோபுரம். மொத்தம் 246 அடி. அதன் உச்சியில் 39 அடி உயரத்தில், கைகளை வானை நோக்கி உயர்த்தியிருக்கும் நியாஸோவின் சிலை. அதுவும் தங்கத் தகடுகளால் ஆன தகதக சிலை. சூரியன் நகரும் திசைக்கேற்ப அந்தச் சிலை 360 டிகிரி சுழலும்படியான அமைப்பு. ஆம், துர்க்மெனிஸ்தானின் இருளை அகற்ற வந்த சூரியனான நியாஸோவ், இந்தக் கோபுரத்துக்காகக் குப்பையாக்கிய தொகை $12 மில்லியன்.

'எதுக்கு இந்த விளம்பரம்?' என்று கேள்விகள் எழுந்தபோது, நியாஸோவ் கொஞ்சம்கூடக் கூச்சமில்லாமல் பிரசவித்த பதில், 'நான் ஒரு சாதாரணக் குடிமகனாக இருந்தால், எனக்கு இந்தத் தேசத்தில் அனைத்தையும் தரும் எனது அதிபரின் படத்தை வரைந்து வைப்பேன். அதை என் உடையில் ஒட்டிக் கொள்வேன். அதைத்தான் என் மக்களும் செய்கிறார்கள். மற்றபடி, என் படங்களும் சிலைகளும் வைக்கப்படுவதில் எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், மக்கள் விரும்புகிறார்களே!'

நட்சத்திர ஹோட்டல்கள், ஆடம்பர கட்டடங்கள், சிலைகள், பூங்காக்கள் எல்லாம் கட்டுவதற்கென பல்வேறு மக்களிடமிருந்து அவர்களது நிலங்கள் பிடுங்கப்பட்டிருந்தன. அதற்கென நஷ்டஈடோ, மாற்று நிலமோ வழங்கப்படவில்லை. அந்த மக்களில் பலர், அனைத்தையும் இழந்த சோகத்துடன் பிளாட்பாரங்களில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள்.

திரும்பிய திசையெங்கும் சிலைகளாக நியாஸோவ் சிரித்துக் கொண்டிருந்தார், 24 காரட் புன்னகையுடன்!

இப்பேர்ப்பட்ட மக்கள் நல அதிபரான நியாஸோவ், தன் ஆட்சிக்காலத்தில் மெய்யாகவே சமூக அக்கறையுடன் செய்த காரியம் ஒன்றே ஒன்றுதான்.



நியாஸோவின் தங்கச் சிலை

1997-ல் அவருக்குக் கடும் நெஞ்சு வலி. பெரிய அறுவைச் சிகிச்சையும், பல நாள்கள் ஓய்வும் தேவைப்பட்டன. புகை பிடிக்கவே கூடாது என்று மருத்துவர்கள் எச்சரித்... ம்ஹூம், பணிவன்புடன் கோரிக்கை வைத்தனர். தன் நலனுக்காக மட்டுமல்ல, தானே தேசம் என்பதால் தேசநலனுக்காகப் புகைபிடிப்பதைக் கனத்த இதயத்துடன் கைவிட்டார் நியாஸோவ். அப்படியே தன் அமைச்சர்கள், அதிகாரிகள் யாருமே புகைபிடிக்கக்கூடாது என்று உத்தரவிட்டார். பொது இடங்களிலும் புகைபிடிக்கத் தடைவிதித்தார். இதைச் சமூக அக்கறை என்றும் சொல்லலாம். 'சாமிக்கே சுருட்டு கெடையாதாம். பூசாரிங்களுக்கு எதுக்குடா புகை?' என்ற கோணத்திலும் ஊதித் தள்ளலாம்.

பொருளாதாரத் தள்ளாட்டங்களைச் சமாளிக்க துர்க்மெனிஸ்தானின் சென்ட்ரல் பேங்க், வரைமுறையின்றி மனாட் நோட்டுகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது. அது 3000% பணவீக்கத்தில் கொண்டுபோய்விட்டது. அமெரிக்க டாலருக்கு நிகரான மனாட்டின் மதிப்பு 5200 என்று சீரழிந்துபோனது. இன்னொரு பக்கம், எரிபொருள் ஏற்றுமதி செய்த கணக்கில், வராத பெரும் பாக்கியால் Turkmenneftegaz நிறுவனம் விழிபிதுங்கி நின்றது. 1998-ல் ஏற்றுமதி நிறுத்தப்பட, எரிவாயு உற்பத்தி சுமார் 80% வரை குறைந்துபோனது.

எங்கெல்லாம் பொருளாதாரம் தடுமாறுகிறதோ, அங்கே எண்ணெய் வளமும் இருந்துவிட்டால், 'என்னப்பா பிரச்னை?' என்று அமெரிக்கப் பெரியண்ணன் போலி அக்கறையுடன் வந்து நிற்பார் இல்லையா. அது நடந்தது. நியாஸோவ் அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றார். வெள்ளை மாளிகையில் பில் கிளிண்டனுடனும், அல் கோருடனும் உணவு உண்டார். $2 பில்லியன் திட்ட மதிப்பீட்டில், துர்க்மெனிஸ்தானின் தௌலதாபாத்திலிருந்து, பாகிஸ்தானின் முல்டானுக்கு எரிவாயு குழாய் பதிக்க, அமெரிக்க நிறுவனமான யுனோகால் முன்வந்தது. அமெரிக்காவுடன் அன்பு பாராட்டினால், சீனா சினம் கொள்ளுமல்லவா. ஆகவே சீனாவுக்கும் சென்று, கைகுலுக்கி, சில பல வணிக ஒப்பந்தங்களில் கையெழுத்தைப் பதித்துவிட்டு வந்தார் நியாஸோவ். ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் முடிந்தால் என்ன, எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்ன. என் கமிஷன் வந்துவிட்டதல்லவா. சுபம்.

இப்படி எண்ணெய் வளமும், எரிவாயு வளமும் நிரந்தர அதிபர் நியாஸோவை (மட்டும்) சுபிட்சமாக வைத்திருக்க, அவர் மீட்டருக்கு மேலே தாறுமாறாகச் சிந்திக்க ஆரம்பித்தார். சில வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட துர்க்மெனிஸ்தானின் தேசிய கீதத்தை அழிரப்பர் கொண்டு அளித்தார். தனது சர்வதேச நடுநிலைமையைப் பிரதிபலிக்கும் புதிய தேசிய கீதத்தைச் சிந்தித்து எழுதினார். துர்க்மென்பாஷியாகிய தனது புகழைத் தானே அதில் பாடிக்கொண்டார். (துர்க்மென்பாஷி உருவாக்கிய இந்த

அதிசிறந்த தாயக தேசம், புகழுடன் நீடூழி வாழட்டும்!) அதற்கு இசை, தாளம், ராகம், பல்லவி, ஸ்ருதி, ஸ்வரம், அபஸ்வரம் அனைத்தும் அவரே. பாட்டும் நானே! பாவமும் நானே! நான் அசைந்தால் அசையும் துர்க்மெனிஸ்தானே!

*2000* பிறந்தது. புதிய, நவீன நூற்றாண்டுக்குள் அடியெடுத்து வைக்கப்போகிறோம். ஆகவே, துர்க்மெனியர்களுக்கான சமூக உரிமைகளை அதிகரிக்கப் போகிறேன் என்று ஆசை ஊட்டினார் நியாஸோவ். மனிதர் திருந்திவிட்டார்போல என்று துர்க்மெனியர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்க, அடுத்த ஆறு ஆண்டுகள் துர்க்மென் பாஷி நிகழ்த்திய விஷயங்களெல்லாம் கேவலங்களின் ஆரோகணம். கேனத்தனங்களின் இலக்கணம்.

முட்டாள்தனங்களின் நர்த்தனம். மூடத்தனங்களுக்கான சமர்ப்பணம்.

அவை...

(நியாஸோவ் வருவார்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 26

முகில், படம்: பா.காளிமுத்து




**இந்த நூற்றாண்டின் இம்சை அரசன்!**

துர்க்மெனிஸ்தானின் நிரந்தர அதிபரான சபார்முராத் நியாஸோவ், ஏகாந்தமான பொழுதொன்றில் தன் தேசத்தையே இம்சிக்கும் முடிவொன்றை எடுத்தார். தனது சுயசரிதையை எழுத ஆரம்பித்தார். 'அது புனித நூல்' என்று அவரே அறிவித்துக்கொண்டார். 'ருஹ்நாமா' (Ruhnama - ஆன்மாவின் புத்தகம்) என்பது தலைப்பு.

நூலின் ஒரு பகுதியாக தனது உன்னத வாழ்க்கைப் போராட்டத்தைப் பொய்களால் கட்டமைத்தார் (இரண்டு அத்தியாயங்களுக்கு முன்பு பார்த்தோம் அல்லவா). தான் துர்க்மெனிஸ்தானின் முதல் அதிபராக, தேசத்தின் தந்தையாக வளர்ந்த புரட்சி வரலாற்றை 'மானே, தேனே' சேர்த்துப் பிசைந்தார். வரலாற்றில் இல்லாதவற்றைப் புனைந்தார்.

இவை தவிர, அரசின் கொள்கைகளையும் மதக்கோட்பாடுகளையும் அடிக்கோடிட்டு அந்த நூல் விளக்கியது. தேசத்தின் கலை, இலக்கியச் செழிப்பைக் கட்டம்போட்டுக் காட்டியது. 'ஒரு துர்க்மெனியன் எப்படி ஒழுக்கத்துடன் வாழ வேண்டும், எவ்வளவு சமூக அக்கறையுடன் இருக்க வேண்டும்' என்றெல்லாம் நீட்டி முழக்கியது.

அதில் கதைகள் இருந்தன. தத்துவங்கள் ததும்பின. சூஃபி கவிதைகள் மிளிர்ந்தன. (சூஃபி கவிஞர் பைராகி என்பவர் நியாஸோவுக்காகத் தித்திக்கும், தேன்சொட்டும் கவிதைகள் சிந்தினார்.) கடவுள் தன்முன் தோன்றி, தேவதூதனான தன்னிடம் சொல்லச் சொல்ல நூலின் சில பகுதிகளை

எழுதியதாகக் கூச்சமின்றிச் சொன்னார் நியாஸோவ். இதுவே, இனிமேல் துர்க்மெனியர்களின் ஆன்மிக வழிகாட்டி என்று பிரகடனமும் செய்தார்.

**நியாஸோவ்**



இதன் முதல் பாகம் 2001-லும், இரண்டாம் பாகம் 2004-லும் வெளிவந்தன. நியாஸோவ், ருஹ்நாமாவை மக்கள்மீது வன்முறையாகத் திணித்தார். ஆதார்போல என வைத்துக்கொள்ளுங்களேன். அனைத்துப் புத்தகக் கடைகள், நூலகங்கள், அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களிலெல்லாம் இதைக் கண்டிப்பாகக் காட்சிக்கு வைக்க உத்தவிட்டார். பள்ளிகளில் விளையாட்டு, இயற்பியல், இயற்கணிதம் பாடங்களுக்குப் பதில் ருஹ்நாமா புகுத்தப்பட்டது. அதுவும் நியாஸோவைப்

*புகழும் பாடல்களையும் பத்திகளையும் மனப்பாடப்பகுதியாக்கி, அதில் மாணவர்களுக்குத் தேர்வும் வைத்தனர். அரசுப் பதவிகளுக்கான நுழைவுத் தேர்வுகள், ஓட்டுநர் உரிமத்துக்கான தேர்வு என்று அனைத்திலும் ருஹ்நாமாவிலிருந்து கேள்விகள் மிரட்டின. அரசு விழாக்களில் இதிலிருந்து பாடல்களும் நாடகங்களும் கதறக் கதற அரங்கேற்றப்பட்டன.*

*நாடெங்கும் மசூதிகளில் குர்-ஆனுடன், ருஹ்நாமாவும் வைக்கப்பட வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. எதிர்த்த இமாம்களைச் சிறையிலடைத்தார். வைக்க மறுத்த சில மசூதிகள் இடிக்கப்பட்டன. ருஹ்நாமாவை விமர்சனம் செய்தாலோ, அல்லது அவமதித்தாலோ, அது அதிபரான நியாஸோவையே அவமதித்த குற்றமாகக் கருதப்பட்டது. கைதுகள் அரங்கேறின. குடும்பத்துடன் சித்ரவதைகளுக்கு ஆளாயினர். ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனையுடன் பெரும் அபராதமும் கட்ட வேண்டியதிருந்தது.*

*நியாஸோவ், தலைநகரில் ருஹ்நாமா புத்தகத்துக்கென 30 அடி உயரத்தில் மாபெரும் சிலை ஒன்றையும் எழுப்பினார். தினமும் இரவு எட்டு மணிக்குப் புத்தகத்தின் அட்டை திறக்க, திரையில் ருஹ்நாமாவிலிருந்து ஒரு பகுதி வீடியோவாக ஒளிபரப்பானது. அரசு அலுவலகங்கள் முதல் மசூதிகள் வரை பல்வேறு இடங்களில் ருஹ்நாமாவிலிருந்து புனிதத் தத்துவங்கள் செதுக்கப்பட்டன.*

*சிறையிலிருந்து வெளியே வரும் குற்றவாளிகள், 'இனி தவறுகள் எதுவும் செய்யமாட்டேன்' என்று ருஹ்நாமாமீது சத்தியம் செய்தால் மட்டுமே விடுவிக்கப்பட்டனர். நியாஸோவின் பெருமுயற்சியால் அந்நூல் நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. ருஹ்நாமாவுக்கு இலக்கியத்துக்கான தேசிய விருதை அறிவித்து, அதைத் தானே பெற்றும் கொண்டு விழாவைச் சிறப்பித்தார் நியாஸோவ்.*

அனைத்துக்கும் மேலாக, ரஷ்ய விண்கலம் ஒன்றில் ருஹ்நாமை வைத்து விண்வெளிக்கும் அனுப்பிவைத்தார். 'இனி இந்தப் புனித நூல் பால்வெளிப் பாதையையும் ஆளும்!' எனப் புளகாங்கிதம் அடைந்தார்.

இப்படி துர்க்மெனியர்களின் கலாசாரக் காவலராக, ஆன்மிக குருவாகத் தன்னைத்தானே நியமித்துக்கொண்ட நியாஸோவ், பாலே, நாடகங்கள், சினிமா, வீடியோ கேம், கார்களில் ரேடியோ போன்றவற்றைத் தடைசெய்து அதிரடி காட்டினார். இணையம் உபயோகிக்க ஏகப்பட்ட கெடுபிடி. அரசு இணையத்துக்கு மட்டுமே அனுமதி. அதற்கும் கொள்ளைக் கட்டணம்.

தொலைக்காட்சிகளும் எல்லா நேரமும் நியாஸோவின் புகழ்பாடுவதற்கென்றே நேர்ந்துவிடப்பட்டன. சரி, டிவி-யில் தோன்றும் பெண்களின்/ஆண்களின் அழகையாவது ரசிக்கலாமென மக்கள் நினைத்தால், 'செய்தி வாசிக்கும் நபர்கள் மேக்கப் போடக்கூடாது' என்று திடீர்த் தடைவிதித்தார் நியாஸோவ். ஏன்? 'மேக்கப் போட்டால் ஆண், பெண் வித்தியாசம் தெரியவில்லை' என்றார். இதையெல்லாம் எதிர்த்து எவனாவது 'மீசைய முறுக்கு!' என்று கிளம்பிவிடக் கூடாதல்லவா! 'ஆண்கள் யாரும் மீசை, தாடி, நீண்ட முடி வைப்பது கூடாது' என்று புதிய விதி சமைத்தார். மொழுமொழு முகமுடையாருக்கு வளரவில்லையோ என்னவோ!


அடுத்ததாக, கல்வியில் கைவைத்தார். பள்ளி, கல்லூரிகளின் சேர்க்கையைக் குறைத்தார். அயல் மொழிகள் படிப்பதைத் தடைசெய்தார். பாடத் திட்டங்களிலும் குழப்பங்கள். மாணவர்கள் வாழ்க்கையில் ஆட்சியாளர்கள் விளையாடுவது அங்கும் நடந்தது. 'அதிகம் படிக்காதவர்களை ஆள்வதே எளிது' என்ற முத்தை உதிர்த்தார் நியாஸோவ்.

பொழுதுபோகவில்லை என்றால், எதுஎதற்கோ 'துர்க்மென்பாஷி' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார். தலைநகரின் விமானநிலையம், சாலைகள்,

பள்ளிகள் எனப் பல இடங்களுக்கும் அவர் பெயரே. துர்க்மெனிஸ்தானில் தெரியாமல் விழுந்த விண்கல்லுக்கும் அந்நாமம் சூட்டப்பட்டது.

இப்படியெல்லாம் உயிரை வாங்கிய அவர், அடுத்து உயிரெழுத்துகளிலும் கைவைத்தார். சிரில்லிக் எழுத்துமுறையில் அமைந்திருந்த துர்க்மெனிய உயிரெழுத்துகளை, லத்தீன் எழுத்துமுறையில் மாற்றியமைத்தார். கிழமைகளுக்கும் தினுசு தினுசாகப் புதுப்பெயர்கள் வைத்தார். மாதங்களையும் விட்டுவைக்கவில்லை. எழுத்து, கிழமை, மாதம் எதுவும் சட்டென மனதில் பதியாமல் தேசமே குழம்பித் திரிந்தது.

**பிரமாண்ட ருஹ்நாமா சிலை**




இந்தக் கூத்துகளுக்கெல்லாம் முடிவு கட்டிவிடலாம் என்று முன்னாள் அமைச்சர் போரிஸ் என்பவர் முஷ்டி உயர்த்தி, ரகசியமாகக் களமிறங்கினார். 2002, நவம்பர் 25 அன்று அதிபர் மாளிகையிலிருந்து நியாஸோவின் குண்டு துளைக்காத சொகுசு மெர்சிடிஸ் கிளம்பியது. அதைச் சுற்றி வளைத்த ஒரு கும்பல் துப்பாக்கிச் சூடு நடத்தியது. காவலர்களுக்கும் தாக்குதல்

நடத்தியவர்களுக்கும்தான் காயம். ஒருவர் பலியானார். நியாஸோவுக்குச் சிறு சிராய்ப்புகூட இல்லை. போரிஸும், அவரைச் சார்ந்தவர்களும், வேறு பகைவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

'நான் அதிக போதையில் இந்தத் தவறைச் செய்துவிட்டேன். நியாஸோவ் நல்லவர். உத்தமர். தேசத்துக்கு அவரே தேவை. நானே பாவி!' என்று போரிஸைத் தொலைக்காட்சியில் சொல்ல வைத்தார்கள். அவருக்கு மரணதண்டனை நிச்சயம் என்று அனைவரும் எதிர்பார்த்திருக்க, 25 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

'அல்லாவுக்கு மட்டுமே உயிரைப் பறிக்கும் உரிமை உண்டு; எனக்கில்லை' என்று நல்லவரானார் நியாஸோவ். ஆனால், தன்மீதான கொலை முயற்சியில் ஆடிப்போன அவர், பாதுகாப்பு என்ற பெயரில் இரும்புத்திரையை மேலும் பலமாக்கினார். கிறுக்குத்தனங்களால் மக்களை விதவிதமாக வதைக்கத் தொடங்கினார்.

தலைநகரம் அஸ்காபாத்தைத் தாண்டி வெளியே நூலகங்களே இருக்கக்கூடாது. 'மூடுங்கள்' என உத்தரவிட்டார். ஏனாம்? 'துர்க்மெனியர்கள் பெரும்பாலும் படிப்பறிவற்றவர்கள். தவிர, சாதாரண குடிமகனுக்குப் புத்தக வாசிப்பெல்லாம் தேவையில்லை' என்றார் நியாஸோவ். அடுத்து, பெருநகரங்கள் தவிர தேசமெங்கும் இருந்த மருத்துவமனைகளையும் மூடச்சொன்னார். 'அரசுக்குச் செலவு குறையும். உடம்பு சரியில்லையென்றால் நகரத்துக்கு வந்து வைத்தியம் பார்த்துக்கொள்ளட்டுமே' என்றார். சுமார் 25,000 மருத்துவப் பணியாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியானது பற்றி அவர் அலட்டிக்கொள்ளவில்லை. கொள்ளை நோய்கள் பரவி மக்களின் உயிரைக் குடித்தன. அரசு அதை ஒப்புக்கொள்ளாமல் மறைத்தது.

விழா ஒன்றில் இளம்பெண் பேச்சாளர் ஒருவர் பேசும்போது, அவரது தங்கப்பல் நியாஸோவைத் தொந்தரவு செய்தது. 'தங்கப்பல் சுகாதாரக்

கேடானது. அதனால், கறியைக் கடிக்கவே முடியாது. அதைக் கழற்றி எறியுங்கள் மக்களே' என்று வெள்ளைப்பல் காட்டினார் நியாஸோவ். தங்கப்பல் என்பது துர்க்மெனியர்களின் கௌரவ அடையாளம். பெண்வீட்டுச் சீதனமாகக்கூட தங்கப்பல் வருவதுண்டு. ஆனால், அதிபரால் மக்களின் (தங்கப்)பல் நிஜமாகவே பிடுங்கப்பட்டது. அதை அகற்றாதவர்களை வேலையை விட்டு அகற்றிய அவலமும் நிகழ்ந்தது.

டிராஃபிக் போலீஸார் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று தெரிந்துகொண்ட நியாஸோவ், அந்தத் துறையையே கலைத்தார். ராணுவ வீரர்களைப் போக்குவரத்தைச் சரிப்படுத்த நியமித்தார். வானிலை ஆய்வாளர்களது அறிக்கைப்படி அன்றைக்கு மழை / வெயில் /காற்று தவறினால், அவர்களும் கைதுசெய்யப்பட்டனர். முக்கியக் கட்டடங்கள், வீதிகள், அரசு அலுவலகங்கள் என எங்கும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டன. ரகசியப் போலீஸார் எங்கும் எப்போதும் சுற்றித் திரிந்தனர்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், அரசு சாரா அமைப்புகள், மனித உரிமை அமைப்புகளால் துர்க்மெனிஸ்தானுக்குள் நுழையவே முடியவில்லை. நாய்களும்தான். 'நாய்கள் நாறுகின்றன' அவற்றுக்கும் அஸ்காபாத் நகரத்தில் தடை விதித்திருந்தார்.

வாழ்க்கையை எட்டு எட்டாகப் பிரிப்பதைப்போல, நியாஸோவ் பன்னிரண்டு பன்னிரண்டாகப் பிரித்து புதியதொரு கணக்கை உருவாக்கினார். அதில் சீனியர் சிட்டிசன் வயது என்பது 84-க்கு மேல் என்றாகிப்போனது. அதன்படி, 2006 பிப்ரவரி முதல் பலருக்கும் பென்ஷன் தொகை நிறுத்தப்பட்டது. பலருக்குக் குறைக்கப்பட்டது. தவிர, 'முந்தைய இரண்டு ஆண்டுகள் வாங்கிய பென்ஷனைத் திருப்பியளிக்க வேண்டும்' என்றும் உத்தரவிட்டு வயதானவர்களை வதைத்தார் நியாஸோவ். இந்த அதிர்ச்சியில் இறந்தவர்களின் எண்ணிக்கைக்குக் கணக்கில்லை.

அடுத்து, 'பிரசவத்துக்கு விடுமுறை அளிக்க முடியாது' என்றார். 'நோய்க்காக விடுப்பெடுத்தால் சம்பளப் பிடித்தம்' என்றார். 'ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நியாஸோவைப் புகழ்ந்து நான்கு வரிகள் எழுதி, அது பத்திரிகைகளில் வராவிட்டால் வேலை காலி' என்று தற்பெருமைப் பித்து தலைக்கேற கூவினார்.

ஒரு கட்டத்தில் தேசத்தில் எங்கே திரும்பினாலும், எதைப் பார்த்தாலும் நியாஸோவே தெரிந்தார். சிலை, ஃபிளக்ஸ், போஸ்டர், ஓவியங்கள், பணம், நாணயம், ஸ்டாம்ப், ரயில் பெட்டிகள், விமான கேபின்கள், கட்டட முகப்புகள், பாத்திரங்கள், கலைப்பொருள்கள், வோட்கா பாட்டில்... இன்னும் இன்னும்.

திடீரென, 'பாலை நிலங்களில் ஆயிரக்கணக்கில் மரக்கன்றுகளை நட்டு, சோலைவனமாக்கப் போகிறேன்' என்றார். மரக்கன்றுகள் அவருக்கு அடிபணியாமல் கருகிச் சாய்ந்தன. அடுத்து, 'கரா கும் பாலைவனத்தில் பனியாலான மாபெரும் மாளிகையை உருவாக்குவேன். அங்கே பென்குயின்களைக் கொஞ்சி விளையாடச் செய்வேன்' என்று களமிறங்கினார். பனிபோலவே, செலவு செய்த பணமும் உருகிப் போனது. பென்குயின்கள் தப்பித்தன.



துர்க்மென்பாஷி மசூதி

*வருடத்துக்கு இரண்டு பில்லியன் டாலர் எண்ணெய் மற்றும் எரிவாயு வணிகத்தால் நாட்டுக்கு வருமானம் வர, அதில் பெரும்பங்கு பணம் நியாஸோவின் பினாமி கணக்குகளில் விழுந்தது. அதேசமயம், சாதாரண துர்க்மெனியர்களின் வருமானம் பரிதாப நிலையில் கிடந்தது. தேசத்தில் சுமார் 60% பேர் வேலையின்றிக் கிடந்தனர். தன் 17 ஆண்டுகால ஆட்சியை, துர்க்மெனிஸ்தானின் பொற்காலம் என்று கூசாமல் விளம்பரம் செய்துகொண்டார் நியாஸோவ்.*

*2006, டிசம்பர் 21 அன்று அதற்கு முற்றுப்புள்ளி விழுந்தது. நீண்ட கால இதய நோயால், நியாஸோவ் இறந்துபோனார். ''அவர் எப்போதோ செத்து விட்டார். இவர்கள் மறைத்து மிகத் தாமதமாகச் சொல்கிறார்கள்'' என்று அங்கும் முணு முணுத்தார்கள். தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மசூதி என்று பல மில்லியன் செலவில் துர்க்மென்பாஷி மசூதியை அஸ்காபாத் அருகில் கட்டியிருந்தார் நியாஸோவ். அங்கே தனக்கான சமாதியையும் உருவாக்கியிருந்தார். அதிலேயே புதைக்கப்பட்டார்.*

*'யாரெல்லாம் ருஹ்நாமாவை மூன்று முறை முழுமையாகப் படிக்கிறார்களோ, அவர்களுக்குச் சொர்க்கம் நிச்சயம்' என்பது நியாஸோவின் அருள்வாக்கு. ஆனால், ருஹ்நாமாவை எழுதியவருக்கே அந்தப் பாக்கியம் கிட்டியிருக்க வாய்ப்பில்லை.*

(வருவார்கள்...)

# கிறுக்கு ராஜாக்களின் கதை!

**பொய்யில் உதித்த பேரரசர்!**

*ரோமாபுரி சாம்ராஜ்ஜியத்துக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. பல கொடுங்கோலர்களும் அரைக்கிறுக்கர்களும் கையாலாகாதவர்களும் காமப்பித்தர்களும் அதன் அரியணையில் அமர்ந்து அசிங்கப்படுத்தியதுண்டு. அவர்களில் இந்த 'மைனர்', தன்னிகரற்ற, தனித்துவமான தறுதலை. பெயர், மார்கஸ் ஔரேலியஸ் அண்டோனியஸ் அகஸ்டஸ் என்ற எலகாபாலஸ்.*



*கோயில் ஒன்றுக்குச் செல்லும் வழியில் 'ஒன்னுக்கடிக்க' ஓரமாக ஒதுங்கிய ரோமானியப் பேரரசர் காராகல்லா, அவருடைய தலைமைத் தளபதி மெக்ரினெஸ் என்பவராலேயே குத்திக் கொல்லப்பட்டார் (கி.பி.217, ஏப்ரல் 8). அடுத்து அரியணையைக் கைப்பற்றினார் மெக்ரினெஸ்.*

காராகல்லாவுக்கு வாரிசுகள் கிடையாது. அதற்காக கூடவே இருந்து, பணிவிடைகள் செய்து, பாதுகாப்பும் தந்து, பின் கொலையும் பண்ணிய ‘அன்புத்தோழர்’ மெக்ரினெஸை அடுத்த பேரரசராக மக்களும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்வார்களா? சமீபத்தில் நாம் பார்த்தது போலவே அசாதாரணமான சூழ்நிலை நிலவியது.

காராகல்லாவின் சொந்த பந்தங்கள், தங்கள் வம்சத்திலிருந்து ஒருவரைப் பேரரசராக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் போட்டியில் முன்னணியில் இருந்தவன் எலகாபாலஸ். 14 வயதுச் சிறுவன். அவன் தந்தை மார்செலஸ், பேரரசின் முக்கியமான தளபதி, அரசியல்வாதி. தாய் ஜூலியா சோயிமியாஸ், பேரரசர் காராகல்லாவின் ஒன்றுவிட்ட சகோதரி. பாட்டியான இன்னொரு ஜூலியா, ராஜமாதாவாக இருந்தவள். அதிகாரமுள்ள சொந்த பந்தங்கள் பலரும் எலகாபாலஸின் பின்னணியில் இருந்தனர். ரோமானியப் பேரரசுக்குட்பட்ட சிரியா மாகாணத்தின் மதகுரு பதவிக்கான பரம்பரை உரிமையும், எலகாபாலஸ் குடும்பத்துக்குத்தான் இருந்தது. அப்போதைய மதகுருவும் எலகாபாலஸ்தான்.

‘‘எலகாபாலஸ், முன்னாள் பேரரசர் காராகல்லா வுக்கு முறைதவறிப் பிறந்த மகன். அவனுக்கே அரியணை ஏறும் உரிமை இருக்கிறது’’ எனத் தாய் ஜூலியாவே கூச்சமின்றி பொய் சொன்னாள். மறுத்துப் பேச காராகல்லா உயிர்த்து வரப்போவதில்லை என்ற நம்பிக்கை. காராகல்லாவின் ஆதரவாளர்கள், ஆதரவுப் படை வீரர்கள் அனைவருமே எலகாபாலஸை ராஜ வாரிசாக ஏற்றுக்கொண்டு ஆதரவு நல்கினர். தலைமைத் தளபதியான கோமாஸோன் இந்தக் கூட்டணியில் கைகோத்தார். சொல்லப்பட்ட பொய்க்கு வலுச்சேர்க்கும்விதமாக, எலகாபாலஸ் தன் பெயருக்கு முன்பாக காராகல்லாவின் முன்பெயர்களான மார்கஸ் ஔரேலியஸ் அண்டோனியஸ் என்பதையும் சேர்த்துக் கொண்டான். ‘இதெல்லாமே நாடகம். பச்சைப்பொய்’ என்று பேரரசின் மேலவையான செனட்டில் பிராது கொடுத்தார் மெக்ரினெஸ். அவர்கள் எலகாபாலஸைக் கண்டித்ததுடன், ‘இருவரும்

மோதுங்கள். யார் வெல்கிறீர்கள் என்று பார்க்கலாம்' என்பதாகப் போர் மூட்டி விட்டனர்.

எலகாபாலஸின் உறவுகள், தம் செல்வத்தால் முக்கியப் படைப்பிரிவுகளை வளைத்துப் போட்டனர். கி.பி. 218-ல் இரு தரப்புப் படைகளும் மோதின. தளபதியும் குருவுமான கானீஸ் தலைமையில் எலகாபாலஸ் ஆதரவுப் படைகள், மெக்ரினெஸின் படைகளைத் தோற்கடித்தன. மெக்ரினெஸும், அவரது மகனும் தப்பி ஓடினர். பின்பு கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். செனட் உறுப்பினர்கள் வேறு வழியே இன்றி, காராகல்லாவின் மெய்யான மகனாக பொய்யான எலகாபாலஸை ஒப்புக்கொண்டனர். பதினான்கு வயது எலகாபாலஸ், ரோமானிய சாம்ராஜ்ஜியத்தின் பேரரசனாக... சாரி, பேரரசராக அரியணை ஏறினார்.

அரசியல் அனுபவம் கிடையாது. மதிநுட்பம் இல்லை. முதிர்ச்சியும் பக்குவமும் ஆளுமைத்திறனும் புரிதலும் பொறுமையும் அற்றவர். பேரின்பமும் சிற்றின்பங்களுமே வாழ்வின் அவசியத்தேவைகள் என்ற குதூகல மனம் கொண்டவர். இப்படி ஒருவர், பரந்து விரிந்த ரோம் சாம்ராஜ்ஜியத்துக்கே பெருந்தலைவர் ஆனால்? கெட்ட ஆட்டம் ஆரம்பமானது.



களியாட்ட ஊர்வலம்

பேரரசரான பின் ரோம் நகரத்துக்குச் செல்வதற்கு முன்பாக, அந்தக் குளிர்காலத்தை, கருங்கடலுக்குத் தெற்கில் அமைந்த நகரமான பித்தினியாவில் கழித்தார், களித்தார் எலகாபாலஸ். மதகுரு அந்தஸ்திலிருந்த எலகாபாலஸ், ரோமானியர்களின் முதன்மைக் கடவுளான ஜூபிடரையும் பிற கடவுள்களையும் நிராகரிக்க ஆரம்பித்தார். அது குருவான கானீஸுக்குக் கோபத்தைத் தந்தது. ‘‘மதிப்புள்ளவனாக, விவேகமுள்ளவனாக வாழக் கற்றுக்கொள்’’ என்று அறிவுரை சொன்னார். எனக்கே அறிவுரை சொல்கிறாயா? ‘மடார்’ என மரண அடி ஒன்று கொடுத்தார் எலகாபாலஸ். சுருண்டு விழுந்த குருவை, மற்றவர்கள் கொன்று போட்டனர்.

கி.பி.219-ன் இலையுதிர் காலத்தில், ஒரு பசும் இலைபோல கோலாகலக் கொண்டாட்டங் களுடன் ரோமுக்கு வந்து சேர்ந்தார் எலகாபாலஸ். தனக்கு நெருங்கியவர்களுக்கெல்லாம் உயர் பதவிகள் கொடுத்து அழகு பார்த்தார். ரோமானிய சாம்ராஜ்ஜிய வரலாற்றிலேயே புதிய புரட்சி ஒன்றையும் நிகழ்த்தினார். தனது தாய்க்கும் பாட்டிக்கும் பெரும் பதவிகளும் கௌரவப் பட்டங்களையும் அளித்தார். இருவரையும் செனட் உறுப்பினர்களாக நியமித்தார். ஆணாதிக்கம் மிகுந்த செனட்டில் நுழைந்த முதல் ரோமானியப் பெண்மணிகள் அந்த ஜூலியாக்களே.

‘அடுத்து அதிரடியாக என்ன செய்யலாம்’ என்று யோசித்தார் எலகாபாலஸ். அதிரடி என்றாலே ‘பணமதிப்பிழப்பு’ ஆபரேஷன்தான் என்பது பல நூற்றாண்டுகளாகத் தொடரும் வழக்கம்தான். சாம்ராஜ்ஜியத்தில் புழக்கத்திலிருந்த நாணயங்களின் (டெனாரியஸ்) மதிப்பு, குறைக்கப் பட்டது. நாணயங்களிலுள்ள சுத்தமான வெள்ளியின் அளவை 58 சதவிகிதத்திலிருந்து 46.5 சதவிகிதமாகக் குறைத்தார். நாணயங்களின் எடையும் குறைந்தது. அதேசமயம் தனது தாய் மற்றும் பாட்டியின் உருவங்கள் பொறிக்கப்பட்ட புதிய நாணயங்களை வெளியிட்டார். ரோமானிய சாம்ராஜ்ஜியத்தில் பெண்களின் உருவத்துடன் வெகு சிலருக்கே

நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அடுத்தது என்ன? மக்களின் மத நம்பிக்கையில் கைவைப்பது. எலகாபாலஸும் அன்றே அதைத்தான் செய்தார். 'எலகாபாலஸ்' என்ற பெயர் சிரியர்களின் சூரியக் கடவுளைக் குறிப்பது. ரோமானியர்களின் சூரியக் கடவுளான ஜூபிடரைவிட, சிரிய எலகாபாலஸே உயர்ந்தவர் என்று நிறுவும் முயற்சிகளை ஆரம்பித்தார் பேரரசர். எலகாபாலஸை வணங்குவது தன்னை வணங்குவது போலாகும் அல்லவா. கரியநிற விண்கல் ஒன்று சிரியாவில் கண்டெடுக்கப்பட்டது. 'இது, சொர்க்கத்திலிருந்து சூரியக் கடவுள் எலகாபாலஸால் பூமிக்கு அனுப்பப்பட்ட கல்' – பேரரசர் அறிவித்தார். அக்கல்லே சூரியக் கடவுள்!

ரோம் நகரத்துக்கு அருகே பாலாடின் மலையடிவாரத்தில் ரோமானியக் கடவுள்களுக்கான கோயில்கள் இருந்தன. அதை விரிவாக்கி 'எலகாபாலியம்' என்ற புதிய கோயிலைக் கட்டினார். இங்கே நிறுவ அந்த விண்கல் ரோமுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. வெள்ளை வெளேரென ஆறு குதிரைகள், தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பளபளவென தங்கத் தகடுகள் பதிக்கப்பட்ட பிரமாண்ட ரதம் ஒன்று. ஆறு குதிரைகள் அந்த ரதத்தை இழுத்துச் செல்ல, அதன் மேல் அமர்ந்து ஓட்டிச் சென்றது அந்த கரிய நிறக் கல். மன்னிக்கவும், சூரியக் கடவுளான எலகாபாலஸ். கல்லும் கண்ணைக் கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ரதத்தின் முன்னால் ஓடிக் கொண்டிருந்தார் பேரரசர். அதுவும் ரதத்தைப் பார்த்துக் கடவுளை வணங்கியபடியே, பின்னோக்கி. முழு தொலைவையும் அவர் பின்நவீனத்துவ ஓட்டத்திலேயே கடக்க, வழியெங்கும் மக்களின் ஆரவாரம்.




ஒவ்வொரு கோடையிலும், எலகாபாலியத்தில் சூரியக் கடவுளுக்கான திருவிழா அமர்க்களப்பட்டது. மேள தாளங்களும் சிங்கிகளும் முழங்க, சூரியக் கடவுளைச் சுற்றிச் சுற்றி வந்து பேரரசர் நளினமாக நடனமாடினார். உச்சியில் இருந்தபடி தங்க, வெள்ளி நாணயங்களை, புதிய உடைகளை, பரிசுப் பொருள்களை மக்கள் மீது வீசியெறிந்தார் பேரரசர். ஆம், இன்னொரு கடவுளின் மீது நம்பிக்கையை உண்டாக்க வேண்டுமென்றால் மக்களைப் பணத்தாலும் பரிசுகளாலும் அடிப்பதுதானே ஒரே வழி. மக்கள் தம்மை மறந்து ஆடிப்பாடிக் களித்திருக்கும்போது, புத்தாடை அணிந்த சிறார்கள் கமுக்கமாக எலகாபாலியத்தின் உள்ளே அழைத்துச் செல்லப்படுவார்கள். கொண்டாட்டங்களில் லயித்து உள்ளே செல்லும் அந்தக் குழந்தைகள், மீண்டும் உயிருடன் வெளியே வந்ததில்லை. எலகாபாலஸுக்குக் குழந்தைகளின் ரத்தமும் தேவைப்பட்டது!

ரோம் நகரத்தில் அவர் அவ்வப்போது சென்ற ஊர்வலங்கள், ஊதாரித்தனத்தின் அப்பட்டமான சாட்சி. எலகாபாலஸ் தகதக பட்டுடை தரிப்பார், ('ரோமானியப் பேரரசர்களில் முதன்முதலாகப் பட்டுடுத்தியது

இவரே' என்கிறது ஒரு சரித்திரக் குறிப்பு.) தன்னை விதவிதமாக அலங்கரித்துக்கொள்வார். ஏகப்பட்ட வெள்ளைக் குதிரைகள் இழுக்கும் உயரமான ரதத்தில் ஏறி அமர்வார். ஊர்வலம் ஆரம்பமாகும். ரதத்தின் இருபுறமும் நிர்வாண மங்கைகள் நடனமாடியபடியே வரவேண்டும். மக்களின் இடைவிடாத வாழ்த்தொலியும் ஆரவாரமும் கட்டாயம்.

இன்னொரு பக்கம் எலகாபாலஸின் அந்தப்புரமும் ஆரவாரமாகத்தான் இருந்தது. இரவினில் ஆட்டம். நள்ளிரவினில் கொட்டம். விடிய விடியக் கொண்டாட்டம். ஆனால் என்ன, அந்த அந்தப்புரத்தில் காதலிகளின் எண்ணிக்கையைவிட, காதலன்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருந்தது. ஆம், அவர்கள் எலகாபாலஸின் காதலன்களே!

(எலகாபாலஸ் வருவார்...)

*ராஜாக்களின் கதை! - 28*

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை! 28

***மானங்கெட்ட மரணம்!***

*அவள் காதலின் முகவரி. ஆசையின் தேவதை. காமத்தின் திருவுருவம். வம்ச விருத்தியின் பேரருள். வெற்றியின் அடையாளம். செழிப்பின் சின்னம். பேரழகின் கடவுள். அவள் பெயர் வீனஸ். ரோமானியப் பெண் தெய்வம். ‘‘நான்தான் மண்ணில் வாழும் வீனஸ்’’ என்று தன்னைத்தானே அறிவித்துக்கொண்டார் எலகாபாலஸ்.*

*ஒரு சமயம் பணியாள் ஒருவன் ஓடிவந்து மரபுப்படி வணங்கினான். ‘‘மதிப்புக்குரிய பேரரசரே! எம் கடவுளே! வணங்குகிறேன்.’’ எலகாபாலஸின் முகம் சுருங்கியது. சினத்துடன் வார்த்தைகளை வீசினார். ‘‘என்னை அப்படி அழைக்காதே. நான் ஒரு பெண்... புரிகிறதா?’’*

*தான் ஒரு பேரரசர் என்ற அகந்தையுடன், பேரழகுப் பெண் என்ற அசைக்க முடியாத நினைப்பும் எலகாபாலஸுக்கு இருந்தது. உடலை அடிக்கடி மழித்துக்கொண்டார். அளவுக்கதிகமான ஒப்பனையைப் பூசிக் கொண்டு சபையோர்முன் வருவார். உடைகளைக் களைவார். வீனஸ் போலவே வலதுகையால் மார்பை மறைத்தபடியும், இடது கையால் அந்தரங்கத்தை மறைத்தபடியும் ஒயிலாக நிற்பார்.*

*14 வயதிலேயே ரோமானியப் பேரரசன் ஆன இளங்கன்று. பயமறியாதுதான். ஆனால், மூத்தோர்களை மதிக்கும் பண்பும் மரியாதையும் இன்றி, மமதையுடன் திரிந்தார். ரோமானியர்களின் மதநம்பிக்கைகளில் இஷ்டத்துக்கு விளையாடினார். ரோமானியக் கடவுள் சிலைகளை உடைத்தது, எலகாபாலஸ் என்ற தன் பெயரிலான சிரியக் கடவுளைத்*

தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடியது, சில தருணங்களில் தன்னையே கடவுள்போல காட்டிக்கொண்டதெல்லாம் அவர்மீது வெறுப்பை வரவழைத்தது.



யாருக்கு என்ன தகுதி, அனுபவம், வயது என்றெல்லாம் பார்க்காமல், யாரெல்லாம் தன் விருப்பத்துக்கேற்ப அடிமைச் சேவகம் செய்கிறார்களோ, தன் பேரின்பக் கொண்டாட்டங்களுக்குச் சாமரம் வீசுகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் நல்ல பதவிகளைக் கொடுத்தார். செனட் மற்றும் அரண்மனை சார்ந்த முக்கியப் பொறுப்புகளுக்கான பதவிகளை, விலைபேசி விற்றார். ஆம், அன்றே அது நடந்தது.

எலகாபாலஸ், குறிப்பிட்ட இடைவெளியில் ஐந்து பெண்களைத் திருமணம் செய்துகொண்டார். அவர்களில் பெண் மதகுருவும் ஒருத்தி. 'நான் கடவுள் போன்றவன். அவள் கடவுள்தன்மை கொண்டவள். எங்களுக்குக் கடவுள்களே பிள்ளைகளாகப் பிறப்பர்' என்று அவளை வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்துகொண்டார் எலகாபாலஸ். ஆனால், தெய்வ நிந்தனை செய்துவிட்டோமே என்ற பயத்தாலும், எலகாபாலஸின் அந்தப்புர வக்கிரங்களாலும் வேதனையுற்று அந்தப்பெண் தற்கொலை செய்து

கொண்டாள். மற்ற பெண்களும் அவருடன் அதிக காலம் வாழவில்லை. பேரரசுடன் இணையாக, இன்பமாக, இச்சை தீர வாழ்ந்தது ஹைரோக்ளெஸ் மட்டுமே. யாரவள்?

அவள் அல்ல, அவன். பேரரசர் எலகாபாலஸின் நம்பிக்கைக்குரிய தேரோட்டி. 'நான் ஹைரோக்ளெஸின் ஆசைநாயகி, மனைவி, அவனுக்கு மகாராணி என்று சொல்லிக்கொள்வதில் பேரானந்தம் அடைகிறேன்' என்பது எலகாபாலஸின் காதல் புலம்பலே. ஒரு பெண்போல, ஹைரோக்ளெஸுக்குப் பணிவிடை செய்வதும், தன்னை அடிக்கச் சொல்லி, தன் கணவனின் துன்புறுத்தலில் மகிழ்வதும் அந்த மனைவிக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு.

ஸோடிகஸ் என்ற கம்பீரமான விளையாட்டு வீரனையும் ஊரறிய, உலகறிய, காண்போர் முகம்சுளிக்கத் திருமணம் செய்துகொண்டு, அவனுக்கு மனைவியானார் பேரரசர். மாலைப்பொழுதின் மயக்கத்திலே, கண்களில் மை, உதட்டினில் சாயம், ஒட்டப்பட்ட சிகையில் சிறப்பலங்காரம் போன்றவற்றுடன் வாசனைத் திரவியங்களையும் அள்ளிப் பூசிக்கொண்டு, 'ப்ப்ப்பா' என்று காண்போர் மிரளும் எழில் தோற்றத்துடன் ஒரு பெண்ணாக வெளியே வருவார். ச்சீ... ஆடைகளெல்லாம் அநாவசியம். அரண்மனை வாசலிலோ, அல்லது கேளிக்கை விடுதி முன்போ நின்று, தான் அணிந்த ஆபரணங்களால் ஒலியெழுப்பி, பெண் குரலில் சிணுங்குவார். அவரைக் கவர்ந்திழுக்கும் கட்டழகுடன் ஆண் ஒருவன் அங்கே தோன்றுவான். (எல்லாம் முன்னேற்பாடுதான்.) அவனை ஆசையுடன் அழைப்பார்.

இப்படியாக, எலகாபாலஸின் அந்தப்புரம், அவரே தேர்ந்தெடுத்த ஆண் தேவதைகளால் நிரம்பியிருந்தது. அதற்காகவே தரகர்களை நியமித்திருந்தார். இன்னொரு வேட்கையும் அவருக்கு இருந்தது. 'பாலின மாற்று அறுவைச்சிகிச்சை மூலம், முழுமையான பெண்ணாக மாறிவிட வேண்டும்!' அதற்காக சகல திசைகளிலிருந்தும் மருத்துவர்களை வரவழைத்து ஆலோசனை நடத்தினார். ''வேண்டாம் பேரரசரே! உங்கள்

உயிருக்கே ஆபத்தாகிவிடும்'' என்று அவர்கள் கைவிரித்ததாகச் செய்திகள் உண்டு. (அது நடந்திருந்தால் உலகின் முதல் பாலின மாற்று அறுவைச் சிகிச்சையாகவும் இருந்திருக் கலாம்.) 'எலகாபாலஸ் ஒரு திருநங்கைதான்' என்று பிற்காலச் சரித்திர ஆசிரியர்கள் சிலர் அழுத்தமாகக் கூறுகின்றனர். இது குறித்த தீராத சர்ச்சைகள் உண்டு.




அந்தப்புரத்தில் ஆண்களை மட்டுமல்ல, செல்லப் பிராணிகளையும் வளர்த்தார். அதாவது, சிங்கங்களையும் சிறுத்தைகளையும். இரவு முழுக்கக் கொட்டமடித்துவிட்டு, அனைவரும் போதையில் கிறங்கிக்கிடப்பார்கள். அதிகாலையில் சிங்கங்களையும் சிறுத்தைகளையும் அவிழ்த்துவிடுவார். அவற்றின் உறுமலில் மற்றவர்கள் உயிர் பதறக் கதறுவதைக் காண்பதிலும், சிலர் நெஞ்சடைத்துச் சாவதை ரசிப்பதிலும் அவருக்கு ஆனந்தம்.

ஒருமுறை கொடூர விஷம் கொண்ட பாம்புகள் பலவற்றைச் சேகரித்தார். மக்கள் வீர விளையாட்டுகளைக் காண்பதற்காகக் கூடும் அரங்கில் பாம்புகளைத் திறந்துவிட்டார். பாம்பு கடித்துச் செத்தவர்களைவிட, பீதியில் மோதி, நசுங்கி, மிதிபட்டுச் செத்தவர்களின் எண்ணிக்கை அதிகம் இருக்கும்.

ராஜ்ஜியத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்குச் சம்பளமாகக் கலைநயமிக்க ஜாடிகளை அனுப்பி மனம்குளிர்ந்தார் பேரரசர். அந்த ஜாடிகளுக்குள் மரணயோகம் கிட்டச்செய்யும் விஷத் தேனீக்களோ, தவளைகளோ, கருந்தேள்களோ, கொடிய பாம்புகளோ நிரப்பப்பட்டிருக்கும் என்பது கூடுதல் தகவல்.

இரவு விருந்துகளிலும், தன் கற்பனையைக் கமகமக்கச் செய்தார் எலகாபாலஸ். இன்று பச்சை தினம். உணவும் மற்றவையும் பச்சை நிறத்தில் இருக்க வேண்டும். அடுத்த நாள் நீல தினம். இன்னொரு நாள் வேறொரு நிறம். பருகும் ஒயினிலும் புதுப்புதுச் சுவையும் மணமும் வேண்டும். தலையணைகளும் மெத்தைகளும் போர்வைகளும் மெத்மெத்தென முயலின் தோலால் இருக்க வேண்டும். இப்படிப் பல கட்டளைகள். ஒருநாள் நீச்சல்குளத்தைக் குங்குமப்பூவாலும், வாசனைத் திரவியங்களாலும் நிரப்பச் சொல்வார். இன்னொரு நாள் ரோஜாக்களால். சில நேரங்களில் குளத்தில் நீருக்குப் பதில் திராட்சை ரசமே நிரம்பியிருக்கும்.

மயிலின் நாக்கு, நைட்டிங்கேல் பறவையின் தலை, ஃப்ளமிங்கோ பறவையின் மூளை, கோழியின் கொண்டை, கௌதாரி முட்டை, ஒட்டகத்தின் குளம்பு, கிளி, வான்கோழி, மடவை மீனின் உள்ளுறுப்புகள். வீரியத்துக்காகவும், நோய் எதிர்ப்புச் சக்திக்காகவும் எலகாபாலஸ் உணவாகவும் மருந்தாகவும் உண்ட மெனு இது.

சில சமயங்களில் வயதானவர்களையும், சாதாரண மக்களையும் விருந்துண்ண அழைப்பார். எப்படி? பரிமாறப்பட்ட உணவை ஜன்னல் வழியே தூக்கியெறிவது அல்லது உணவு என்று வெறும் ஓவியங்களைக் காட்டி உண்ணச் சொல்லிப் படுத்துவது எனப் பிறரை இரவு முழுக்கப் பட்டினியில் வாட்டி, தான் மட்டும் பசியாறும் கொடுமைக்காரராகவும் இருந்தார்.

இப்படி அகந்தையாலும், அதீத ஆடம்பரத்தாலும் படோடோபச் செயல்களாலும், பணத்தையும் செல்வத்தையும், தன்மீதான மக்கள் நம்பிக்கையையும் வீணடித்தார். பல ஆண்டுகளுக்கான மக்களின் உணவு தானியச் சேமிப்பு, பேரரசரது தினசரி விருந்துகளால் ஒரே ஆண்டில் காலியாகிப்போனது. இப்படி ஒருவரைப் பேரரசராக்கிவிட்டோமே என்று செனட் உறுப்பினர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

ரோமானியப் பேரரசர்கள், தனக்கு அடுத்து ஆளப்போகும் வாரிசுக்கு 'சீஸர்' என்ற சிறப்புப் பட்டம் அளிப்பது மரபு. எலகாபாலஸ், தன் சாரதி ஹைரோக்ளெஸுக்கு 'சீஸர்' பட்டம் கொடுத்து அனைவருக்கும் கடுப்பேற்றினார். தன் அரசியல் சாதுர்யத்தால் எலகாபாலஸைப் பேரரசராக்கிய தாய்வழிப் பாட்டியான ஜூலியா மேஸாவே, இந்தச் செயலால் கடுப்பானாள்.

ஜூலியாவின் இன்னொரு மகள் அவிட்டா. அவள் வழியே ஒரு பேரன் இருந்தான். 13 வயது செவெரஸ் அலெக்ஸாண்டர். "இனி 'சீஸர்' பட்டம் அலெக்ஸாண்டருக்கு உரியது. அவன் விரைவில் எலகாபாலஸுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து ஆட்சி செய்வான்" என்று அறிவித்தாள் ஜூலியா. கொந்தளித்தார் எலகாபாலஸ். ஆனால், செனட் உறுப்பினர்களும், பெரும் பாலான படைவீரர்களும் அந்த முடிவை ஆதரித்தனர். பேரரசரின் பிரத்யேகப் படைப் பிரிவினர்கூட அலெக்ஸாண் டரை ரகசியமாக ஆதரிக்கத் தொடங்கினர்.






ஆகவே எலகாபாலஸ், அலெக்ஸாண்டரைக் கொல்வதற்கான சதித் திட்டங்களைத் தீட்டினார். ‘‘அவனைத் தனிமைப்படுத்திக் கொல்லுங்கள். வாளா, விஷமா, அல்லது நீரில் மூழ்கிச் சாகப்போகிறானா? அதை அவனது விருப்பத்துக்கே விட்டு விடுங்கள்!’’ என்றார்.

அவர் ஏவி விட்டவர்களெல்லாம் அலெக்ஸாண்டர் பக்கம் தாவிச் சென்று, பாதுகாப்பு அரணாக நின்றார்கள். திகைத்தார் பேரரசர். ‘இனி எப்படியாவது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்’ என்ற முடிவுக்கு வந்தார் எலகாபாலஸ். தன்னை மரணம் நெருங்கினாலோ, தற்கொலை செய்துகொள்ளும் சூழல் வந்தாலோ, அது கௌரவமான உயிர் பிரிதலாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அலங்கரிக்கப்பட்ட தங்க வாள், கொடும் விஷத்தில் தோய்க்கப்பட்ட வைரம், மரகதக் கற்கள் தயாராக இருந்தன. தான் குதித்துச் சாவதெற்கென்றே உயரமான கோபுரம் ஒன்றைக் கட்டினார். அந்தக் கோபுரம் தங்கத்தாலும், பிற ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ‘எவனது மரணமும் என்னுடையதுபோல ஆடம்பரமானதாக, மதிப்புமிக்கதாக இருக்கக்கூடாது!’

பேரரசரது படையினரின் விசுவாசத்தைச் சோதிக்க, ‘மரணப் படுக்கையில் கிடக்கிறான் அலெக்ஸாண்டர்’ என்றொரு வதந்தியை எலகாபாலஸ் கிளப்பிவிட்டார். நிலைமை அமளி துமளியானது. ‘பேரரசரும் சீஸரும் ஒன்றிணைந்து எங்கள் முன் தோன்ற வேண்டும்’ என்று படையினர் அழுத்தம் கொடுத்தனர்.

கி.பி. 222, மார்ச் 11. அந்தப் படையினரது முகாமுக்கு எலகாபாலஸ் தன் தாய் ஜூலியாவுடனும், அலெக்ஸாண்டருடனும் வந்தார். ‘அலெக்ஸாண்டர்... அலெக்ஸாண்டர்...’ என்று படையினர் விண்ணதிர கோஷம் எழுப்பினர். அங்கே எலகாபாலஸ் நிராகரிக்கப்பட்டார். சினம் உச்சியிலேற, ‘‘எனக்குக் கீழ்ப்படியாதவர்களின் தலை தரையில் உருளும்’’ என்று கர்ஜித்தார். படையினர் எலகாபாலஸ்மீது வெறியுடன் பாய்ந்தனர். வேறு வழியின்றி தப்பித்து ஓடினார்.

*கழிவறையில் ஒளிந்து, நடுங்கிக் கொண்டிருந்த பேரரசரை வீரர்கள் இழுத்துவந்தனர். இஷ்டத்துக்குத் தாக்கினர். ஆடைகளே அவருக்குப் பிடிக்காதே. நிர்வாணமாக்கினர். அவரின் தலை சீவப்பட்டது. அவர் தாயின் தலையும். (ஹைறோக்ளேஸ் உள்ளிட்ட நெருக்கமான பிறரும் கொல்லப்பட்டனர்)*

*தனது மரணம்கூட ஆடம்பரமானதாக, கௌரவமானதாக இருக்க வேண்டும் என்று நினைத்த பேரரசர் எலகாபாலஸின் உடல், தெருத்தெருவாக இழுத்துச் செல்லப்பட்டது. சாக்கடைகளில் தோய்த்தெடுக்கப்பட்டு, இறுதியாக டிபெர் நதியில் வீசியெறியப்பட்டது. நான்காண்டு நாசக்காரனின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அப்போது அவரது வயது 18.*


*ரோமானிய சாம்ராஜ்ஜிய வரலாற்றிலேயே மானங்கெட்ட முறையில் மரணத்தைச் சந்தித்த ஒரே பேரரசர் என்ற 'கௌரவம்' எலகாபாலஸுக்கு மட்டுமே உண்டு.*

**(வருவார்கள்...)**

*ராஜாக்களின் கதை! - 29*

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை




***கெட்ட பய சார் இந்த கலிகுலா!***

*‘சுண்டைக்காய்ப்பயல் எலகாபாலஸைப் பற்றியெல்லாம் எழுதும்போது, அவனுக்கு முப்பாட்டன்களான எங்களை ஏன் கிறுக்கு ராஜாக்களின் பட்டியலில் சேர்க்கவில்லை? நாங்கள் அரங்கேற்றிய*

கொடூரங்களுக்கு முன்பெல்லாம் எவனும் மண்டிபோட்டுக்கூட நிற்க முடியாது என்பது தெரியாதா?’

ரோமாபுரிப் பேரரசர்களான கலிகுலாவும் நீரோவும் காட்டேரிகள்போலக் கனவில் வந்து கழுத்தைக் கவ்வி மிரட்டியதால்... இதோ அவர்களது ரத்தச் சரித்திரம். சரி, ரோம் நகரம் பற்றியெரியும்போது, நீரோ உண்மையாகவே பிடில் வாசித்தாரா? அட... அதைவிடப் பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. தொடருங்கள்...

நிகரற்ற நீரோவின் வாழ்க்கையைத் தெரிந்து கொள்வதற்குமுன், அவர் எப்படிப்பட்ட வம்சத்திலிருந்து உதித்திருக்கிறார் என்று அறிந்து கொள்வது அவசியம். அவரின் முன்னோர்கள் ஒன்றும் டம்மிபீஸ்கள் இல்லை. அவருடைய ஜூலியோ-கிளாடியான் பரம்பரையின் குருதி கொப்பளிக்கும் அத்தியாயங்களைப் புரிந்து கொள்வதும் மிக மிக அவசியம். ஆகவே...

ரோமாபுரி சாம்ராஜ்ஜியத்தின் மற்றும் ஜூலியோ-கிளாடியான் வம்சத்தின் முதல் பேரரசர் அகஸ்டஸ். ஜூலியஸ் சீஸர் தத்து எடுத்துக்கொண்ட வாரிசு. அகஸ்டஸின் ஆட்சிக் காலம் கி.மு 27 முதல் கி.பி 14-ம் ஆண்டுவரை. அவர் 75 வயதில் இயற்கையான மரணம் அடைந்தார். ‘இல்லை, அகஸ்டஸை விஷம் வைத்துக் கொன்றது அவரின் மனைவி லிவியா’ என்ற உறுதிப்படுத்தப்படாத தகவலும் உண்டு. அடுத்து, பேரரசர் ஆனவர் டைபெரியஸ். இவர், அகஸ்டஸின் மகன் இல்லை. வளர்ப்பு மகன். இன்னொரு முறையில் மருமகன்.

கேப்ரி. இத்தாலியின் தெற்குப் பகுதியில் அமைந்த சிறிய தீவு. டைபெரியஸ் அங்கே ஜோவிஸ் என்ற சொகுசு மாளிகையைக் கட்டினார். இஷ்டமித்ர பந்துக்களுடன் அங்கேயே தம் வாழ்நாளின் பெரும்பகுதியை இன்பமாகக் கழித்தார். வேறென்ன, வரைமுறையற்ற, வக்கிரமான விருந்துகள். அவருக்குச் சிறுவர்கள் மீதுதான் பாசம் பொங்கிவழிந்தது என்பது உபரித் தகவல். டைபெரியஸுக்கு யார் மீதாவது துளி சந்தேகம்

தோன்றினாலும், உரியவருக்கு 'தோற்றம் – மறைவு' எழுதிவிட வேண்டியதுதான். அப்படி அவர் அரங்கேற்றிய அரசியல் கொலைகள் எண்ணிக்கையில் அடங்காதவை. 22 ஆண்டுகள் சொகுசாக ஆண்டு அனுபவித்து, தன் எழுபத்தேழாவது வயதில் அடங்கிப்போனார். அவராக அடங்கவில்லை, பதவி வெறியிலிருந்த கலிகுலாதான் தலையணையால் அழுத்தி மூச்சை அடக்கினார் என்றும் ஒரு சர்ச்சை உண்டு.

டைபெரியஸுக்குப் பிறகு, கலிகுலா பேரரசர் ஆனார் (கி.பி.37). அவர், டைபெரியஸின் மகன் இல்லை. அவரால் தத்தெடுக்கப்பட்ட பேரன். அரசியல் சதுரங்க ஆட்டத்தில் பிற போட்டியாளர்களை வீழ்த்தி, அவர்களின் சடலங்களின் மீதேறி அரியணைக்கு வந்தவர். ரோமாபுரி சரித்திரத்திலேயே கற்பனைகளையும் தாண்டிய மகா கொடூரன் கலிகுலாதான் என்பதை நீட்டி முழக்கிச் சொல்லத் தேவையில்லை. ஆகவே, அவர் குறித்து அதிகமறியப்படாத கிறுக்குப் பக்கங்கள் மட்டும் இங்கே...

செஸ்டெர்செஸ் என்பது பண்டைய ரோமானிய நாணயம். டைபெரியஸ் இறக்கும்போது, 2,700,000,000 செஸ்டெர்செஸ் மதிப்புள்ள பணம் கஜானாவில் இருந்தது. குஜாலாகக் கூத்தடித்து, ஓரிரு ஆண்டுகளிலேயே அனைத்தையும் அழித்த பெருமை கலிகுலாவுக்கு உண்டு. அவருக்குத் தங்கம் என்றால் பித்து. தன் உடலில் மட்டுமல்ல, உடையிலும் எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் தங்க ஆபரணங்களைப் பூட்டிக்கொண்டார். தங்கத்தால் செய்யப்பட்ட உணவைப் பரிமாறி விருந்தினர்களை விக்கித்துப் போகச்செய்தார். தங்கத்தைத் தரையில் பரப்பி அதன்மீது நடப்பதும் ஓடுவதும் குதிப்பதும், பெருமை பீறிட அதன் மீது விழுந்து எருமைபோலப் புரள்வதும் கலிகுலா வாழ்வின் தங்கத் தருணங்கள்.

'நான் கடவுள்! நான்தான் கடவுள்! நான் மட்டுமே கடவுள்!' சர்வாதிகாரிகளின் மனம் ஒரு கட்டத்தில் இந்த மையத்தில்தான் குவியும். கலிகுலாவும் அப்படித்தான் தன்னை அறிவித்துக் கொண்டார். தன் அரண்மனைக்கும் ஜூபிடர் கோயிலுக்கும் இடையே பாலம் ஒன்றைக்

கட்டினார். எதற்கு? மக்கள் கோயிலில் வழிபடக் கூடும்போதெல்லாம், தான் கடவுள்போல எளிதாகச் சென்று அருளாசி புரிய! அடுத்ததாக, ஜூபிடர் உள்ளிட்ட அனைத்துக் கடவுள்களின் சிலைகளிலும் தலைகளை நீக்கி, தன் முகத்தைப் பொருத்தினார். பின், தனது பிரமாண்டமான தங்கச்சிலை ஒன்றை நிறுவினார். அவர் சிலைக்குப் பூசைகள் செய்ய, ரோமின் உயர்குடியினர் பூசாரிகளாக நியமிக்கப்பட்டனர். கலிகுலா அணிந்து கழற்றிப்போட்ட உடைகளைக் கடவுள் கலிகுலாவுக்குச் சாத்தினர். அங்கே தினமும் மயில்கள் பலிகொடுக்கப்பட்டன.

கடவுள் ஜூபிடருடன் கலிகுலா அடிக்கடி பேசுவார். அவர் அழைத்தால் நிலவுக்கடவுள் அந்தப்புரத்துக்கு வந்து அவரைத் திருப்திப்படுத்தி விட்டுச் செல்வாள். கடவுள் விக்டோரியாவும் கலிகுலாவுக்கு அடிமைதான். இவை அன்றைய ரோம் மக்கள் மனமார நம்பிய வதந்திகள்.

230 அடி நீளம், 66 அடி அகலம் கொண்ட இரண்டு மாபெரும் படகுகளைக் கட்டினார் கலிகுலா. சுடுநீர் வசதி கொண்ட நீச்சல் குளம், கோயில், விருந்து அறைகள், தூண்களால் நிரம்பிய மண்டபங்கள், சிலைகள், பளபளா தரை என்று மிதக்கும் அரண்மனைகளாக அந்த சொகுசுப் படகுகள், நெமி ஏரியில் மிதந்தன. படகுக்குள் கலிகுலா உச்சபட்ச உல்லாசத்தில் மிதந்தார். அன்றே நவீனத் தொழில்நுட்ப அறிவுடன் விளங்கிய கலிகுலாவை வியக்கலாம்தான். ஆனால், அந்த உல்லாசப்படகு மிதக்கும் ஏரி நீரோடு, மக்களின் கண்ணீரும் ரத்தமும் கலந்து கிடந்தன என்பதை மறக்கக்கூடாது. (இரண்டாம் உலகப்போர் சமயத்தில்தான், பிரிட்டன் வீசிய குண்டுகளால் இந்தப் படகுகள் சிதைந்து போயின என்பது உபரித் தகவல்.)

இன்ஸிட்டேடஸ். கலிகுலாவின் செல்லக் குதிரை. அவரது புனித வாகனம். அது தங்குவதற்கென மினி மாளிகை கட்டியிருந்தார். அதற்குப் பணிவிடைகள் செய்வதற்கென அடிமைகளும் படைவீரர்களும் நேர்ந்து விடப்பட்டிருந்தனர். அவ்வப்போது தன்னுடன் விருந்து உண்ண இன்ஸிட்டேடஸையும் அழைப்பார் கலிகுலா. தங்க ஆபரணங்கள் அணிந்து

விருந்துக்கு வரும் அதற்குத் தங்கத் தட்டில் உணவும், தங்கக் கோப்பையில் ஒயினும் தருவார்கள். தங்கம் கலந்த ஓட்ஸை அதற்கு ஊட்டிவிடுவது கலிகுலாவின் வழக்கம். மறுநாள் இன்ஸிட்டேடஸ் பந்தயத்தில் கலந்துகொள்ளப் போகிற தென்றால், இன்றைக்குச் சுற்றுவட்டாரத்தில் யாரும் எந்தவிதச் சத்தமும் எழுப்பக்கூடாது என்பது கலிகுலாவின் கட்டளை. அதன் கவனம் சிதறிவிடக்கூடாதல்லவா. அந்த வாயில்லா ஜீவனுக்கு 'வெளிநாட்டுத் தூதுவர்' என்ற பதவி கொடுத்து கௌரவித்தார் கலிகுலா.




படையெடுத்துச் சென்று ஜெர்மனியின் சில பகுதிகளைக் கைப்பற்றிய கலிகுலாவுக்கு பிரிட்டனைக் கைப்பற்றவும் ஆசை. ஆனால், கடல் தாண்டிச்சென்று போரிட இயலவில்லை. ஆகவே, தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டார். 'கடலின் அலைகளோடு போரிட்டு அவற்றை வீழ்த்துங்கள். கடலின் கடவுள் நெப்டியூனைக் கொல்லுங்கள்!' வேறுவழியின்றி ரோமானிய வீரர்கள் கடற்கரையில் நின்றபடி அலைகளைத் தம் வாளால் வெட்டிக்கொண்டே இருந்தனர்.

*தன் உடலில் பல பாகங்களில் ஆடுபோல புசுபுசுவென முடி இருந்தது கலிகுலாவுக்குப் பிடிக்கவில்லை. அதனால், யாரும் எதிலும் 'ஆடு' என்ற வார்த்தையைப் புழங்கக்கூடாதென்று உத்தரவிட்டார். மரபுக்கோளாறு. 30 வயதைத் தொடும்முன்பே கலிகுலாவின் தலை வழுக்கை யானது. ஆகவே, 'என்னைவிட உயரமான நபர்கள் என்முன் நிற்கக்கூடாது. உயரத்தில் இருப்பவர்கள் யாரும் என் மண்டையைப் பார்த்துப் பேசக்கூடாது' என்றெல்லாம் உத்தரவு பிறப்பித்தார். இவையெல்லாம் கலிகுலாவின் சாதா கிறுக்குத்தனங்கள். அசாதாரண கோட்டிக்காரத்தனங்கள் எக்கச்சக்கம் உண்டு. சுய தணிக்கைச் செய்யப்பட்ட சில வார்த்தைகள் மட்டும் இங்கே.*

*சிறைக்கைதிகளைச் சிங்கம், காட்டெருமை போன்ற காட்டு விலங்குகளுடன் மோதவிட்டு, அவர்கள் ரத்தச் சகதியுடன் துடிதுடித்து மாள்வதைக் காண்பதில் கள்வெறி கொண்டார். கொல்வதற்குச் சிறையில் கைதிகளே இல்லாமல் போன சமயத்தில், பொதுமக்களையே களத்தில் தூக்கியெறியுமாறு உத்தரவிட்டு உள்ளம் மகிழ்ந்தார். கலிகுலாவுக்கு அடுத்தவர்களின் மனைவிமீது தீராத ஆசையுண்டு. ஆசை தீர்ந்த பின்பு அவர்களைத் தீர்ப்பதிலும் ஆர்வமுண்டு. தன் ரத்த சொந்தங்களுடனேயே ஜோதியில் கலப்பதில் அதீத ஆவலுண்டு. 'ஆணென்ன, பெண்ணென்ன, நீயென்ன, நானென்ன எல்லாம் ஓரினம்தான்' எனத் தன் அரண்மனையையே சிவப்பு விளக்குப் பகுதியாக மாற்றிய கெட்ட பய சார் இந்த கலிகுலா!*

*எல்லாம் வரம்பு மீறிப்போன ஒரு சமயத்தில், செனட் உறுப்பினர்கள், பேரரசருக்குரிய தனிப்படையினர், பிற வீரர்கள் அனைவருமே கலிகுலாவுக்கு எதிராக அணி திரண்டனர். அவரின் பாதுகாப்புப் படையினரது சதிவலையிலேயே சிக்கிய கலிகுலா குத்திக் கொல்லப்பட்டார் (இருபத்தெட்டு வயதில். கி.பி. 41, ஜனவரி 12). மொத்தம் 30 கத்திக் குத்துகள். கலிகுலாவின் காட்டாட்சி நீடித்தது நான்காண்டுகள் மட்டுமே.*

*கலிகுலாவுக்கும் ஆண் வாரிசு கிடையாது. அடுத்து பேரரசராக அமர்ந்தவர் கிளாடியஸ். கலிகுலாவுக்குச் சித்தப்பா. கால் சற்றே ஊனம்,*

*காதும் கொஞ்சம் மந்தம் போன்ற குறைகளால், கிளாடியஸை முன்னாள் பேரரசர்கள் பாவப்பட்டு உயிருடன் விட்டு வைத்திருந்தனர். ஜூலியோ-கிளாடியான் பரம்பரையில் வந்த அவருக்கு அரியணை யோகம் கிட்டியது. அந்தப் பதவிக்கு ஓரளவு நியாயமும் செய்தார். போர்களால் ராஜ்ஜியத்தின் எல்லைகள் விரிவாகின. தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. செனட்டின் அதிகாரங்கள் சீரமைக்கப்பட்டன. தேங்கிக் கிடந்த வழக்குகளையெல்லாம், தானே நீதிபதியாக அமர்ந்து முடித்து வைத்தார். தடுப்பணை, கால்வாய், கலங்கரை விளக்கம், சாலைகள், கட்டடங்கள் என்று தேவையானவற்றைக் கட்டிக் கொடுத்தார். வரிகளையெல்லாம் குறைத்து மக்கள் நல அரசை முன்னெடுத்துச் சென்றார்.*

*இத்தனை நல்லவரான கிளாடியஸும் பெண்ணாசையால்தான் சறுக்கி விழுந்தார். கிளாடியஸுக்கு நிச்சயிக்கப்பட முதல் இரு திருமணங்கள் நடக்கவில்லை. அடுத்து அவர் செய்த இரு திருமணங்கள், கொஞ்ச காலத்திலேயே விவாகரத்தில் முடிந்தன. அவரது வாழ்க்கையில் மூன்றாவது மனைவியாக வந்தவள், வலேரியா மெஸ்ஸாலினா. Nymphomania-வால் பாதிக்கப்பட்டவள். அதாவது, அதீதமான காம உணர்வு ஆளைப் படுத்தும். படுக்கையிலும் படுக்கை சார்ந்த விஷயங்களிலுமே கவனம் குவியும். இதனால் 'தான் ஒரு பேரரசி' என்பதையே மறந்து, உடைகள் துறந்து, ஒரு பாலியல் தொழிலாளியாகவே வீதியில் அலைந்தாள். ஒருமுறை ஸ்கைல்லா என்ற பாலியல் தொழிலாளிக்கும் மெஸ்ஸாலினாவுக்கும் நடந்த போட்டி, ரோம் நகரத்தின் பேசு பொருளானது. யார் அதிக நேரம், அதிகமான நபர்களுடன் தொடர்ந்து... அந்தக் கலவி மாரத்தான் பந்தயத்தில் 25 என்ற ஸ்கோருடன் வென்றது மெஸ்ஸாலினாவே.*

**கிளாடியஸ்**



ஒரு கட்டத்தில் அவள் கிளாடியஸைக் கொன்று, தன் புதிய காதலன் ஒருவனை அரியணை ஏற்ற சதி செய்தாள். ஆகவே, கொல்லப்பட்டாள். இனி திருமணமே வேண்டாம் என்று கிளாடியஸ் முடிவெடுத்திருந்த தருணத்தில், அவரது வாழ்க்கையில் நான்காவது மனைவியாக வலுக்கட்டாயமாக வந்து நுழைந்தாள் அக்ரிப்பினா. ஏற்கெனவே அவளுக்கு ஒரு மகனும் இருந்தான். அவன் பெயர் நீரோ.

(நீரோ வருவார்...)

## *கிறுக்கு ராஜாக்களின் கதை! - 30*

*முகில், படம்: பா.காளிமுத்து*




### *என் தாயெனும் கோயிலை...*

*ஜூலியோ-கிளாடியான் பரம்பரையில் தோன்றியவள் அக்ரிப்பினா. ரோமாபுரியின் முதலாம் பேரரசர் அகஸ்டஸ், அக்ரிப்பினாவின் அம்மாவுக்குக் கொள்ளுத் தாத்தா. அவளின் தந்தை ஜெர்மானிகஸ், ஒரு காலத்தில் ராஜ வாரிசாக இருந்தவர். அவர், ரோமாபுரியின் நான்காவது பேரரசர் கிளாடியஸின் அண்ணனும்கூட. அக்ரிப்பினாவின் உடன்பிறந்த மூத்த சகோதரனே, முன்னாள் பேரரசர் கலிகுலா. தன் உருவத்தை ஒருபுறமும், தங்கை உருவத்தை மறுபுறமும் பதித்து புதிய நாணயமெல்லாம் விட்ட பாசக்காரர். பகுதிநேரக் காதலனும்தான். பின் பல்வேறு காரணங்களால் ஒத்துப்போகவில்லை. ஆகவே, அக்ரிப்பினாவை தீவொன்றில் விலக்கிவைத்தார்.*

*அக்ரிப்பினாவுக்கும், உயர்குடியைச் சேர்ந்த டொமிடியஸ் என்பவருக்கும் ஏற்கெனவே திருமணம் நடந்திருந்தது. அவரும் முரட்டு ஆள்தான். ஏழெட்டு அசால்ட் கொலைகளுக்குச் சொந்தக்காரர். அவர்களுக்குப் பிறந்த மகனே நீரோ. சில காலத்திலேயே டொமிடியஸ் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். அந்தச் சமயத்தில் கலிகுலாவும் கொல்லப்பட்டார். அக்ரிப்பினாவின் சித்தப்பாவான கிளாடியஸ், புதிய பேரரசராகப் பதவிக்கு வந்தார். அக்ரிப்பினா, தன் குழந்தையுடன் கிளாடியஸின் ஆதரவை நாடிச்சென்றாள்.*

அரசியல் தெரிந்தவள். ஆதிக்கக் குணம் நிறைந்தவள். சிறுவயது முதலே ராஜ்ஜியத்தில் நடக்கும் சதுரங்க வேட்டையின் நெளிவுசுளிவுகளை அறிந்தவள். அழகானவள். யாரையும் வசியப்படுத்தும் வித்தையில் தேர்ந்தவள். அப்போது அவளது ஒரே குறிக்கோள், தன் மகன் நீரோவை ரோமாபுரியின் வருங்காலப் பேரரசராக்குவது. அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தாள். ஆம், எதை வேண்டுமானாலும்! ஒரு செல்வந்தரை மறுமணம் செய்துகொண்டாள். அவரும் தன் சொத்துகளை நீரோவுக்கு எழுதிவைத்துவிட்டு, சீக்கிரமே செத்துப்போனார். 'அன்புக்குரியவளே விஷமானாள்' என்றொரு சர்ச்சையுண்டு.



இந்தச் சமயத்தில்தான் பேரரசர் கிளாடியஸ், மெஸ்ஸாலினாவை மணந்தார். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். பிரிட்டானிகஸ். தன் மகனுக்குப் போட்டியாக நீரோ வந்துவிடக்கூடாதென, நீரோவைக் கொல்ல மெஸ்ஸாலினா நடத்திய சதி, தோல்வியில் முடிந்தது. மக்கள் மத்தியில் இளவரசர் பிரிட்டானிகஸுக்கு இருந்த மதிப்பும் புகழும், நீரோவுக்கும் இருந்ததைக் கண்டு புகைந்தபடியே இருந்தாள். இச்சையால் வழிதவறிய மெஸ்ஸாலினா, கிளாடியஸின் உத்தரவினாலேயே கொல்லப்பட்டதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். அக்ரிப்பினா, அடுத்த கட்டத்தை நோக்கி சாதுர்யமாகக் காய் நகர்த்தினாள். 'ஜூலியோ-கிளாடியான் பரம்பரை தொடர்ந்து ரோமாபுரியை ஆள வேண்டுமெனில் பேரரசர் கிளாடியஸ் என்னை மணந்துகொள்வது அவசியம்' என்று செனட் உறுப்பினர்கள் மூலமாக அழுத்தம் கொடுத்தாள். இறுதியில், அந்த 'சித்தப்பா – மகள்' திருமணம் நடந்தது (கி.பி.49).

அதே நாளில், சிலானெஸ் என்பவர் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டார். காரணம், பேரரசியாகியிருந்த அக்ரிப்பினாதான். கிளாடியஸின் மகளான ஆக்டேவியாவுக்கு ஏற்கெனவே சிலானெஸுடன் நிச்சயதார்த்தம் முடிந்திருந்தது. ''என்னது... அவனுடனா? அவன் கேடுகேட்டவன். தன் சகோதரி உடனேயே... சீச்சீ...'' – அக்ரிப்பினா பொய்யைக் கிளப்பிவிட்டு, நிச்சயதார்த்தத்தை முறித்தாள். சிலானெஸின் பதவிகள் பறிக்கப்பட்டன. விரக்தியில் அவர் தன் வாழ்வை முடித்துக் கொண்டார். சரி, அக்ரிப்பினா அந்தத் திருமணத்தை நிறுத்தியது ஏன்? தன் மகன் நீரோவுக்கும் ஆக்டேவியாவுக்கும் திருமணம் செய்துவைக்கத் திட்டமிட்டிருந்தாள். இப்போது நீரோவுக்கு ஆக்டேவியா சகோதரி முறையல்லவா? கேடுகெட்ட ரோமாபுரி அரசியலில் முறைதவறிய திருமணங்களெல்லாம் சாதாரணமப்பா! கி.பி. 53-ல் நீரோ – ஆக்டேவியா திருமணம் நடந்தது. அப்படியே, நீரோவை கிளாடியஸின் வாரிசு என்று அறிவிக்கவும் வைத்தாள் அசகாய அக்ரிப்பினா!

நாளடைவில் கிளாடியஸுக்கு அக்ரிப்பினாவையும் ஆகவில்லை; நீரோவையும் பிடிக்கவில்லை. 'தவறு செய்துவிட்டோமோ' என்று தாமதமாக வருந்த ஆரம்பித்தார். ''பிரிட்டானிகஸே என் வாரிசு! நீரோ அல்ல'' என்று அறிவிக்கும் திட்டத்தையும் வைத்திருந்தார். அதை மோப்பம் பிடித்த அக்ரிப்பினாவுக்குள் கவலை சூழ்ந்தது. கிழவனுக்கு வயது 63 ஆகிவிட்டது. இன்னமும் ஆள் கிளம்புவதுபோலத் தெரிய வில்லை. எப்போது என் மகன் நீரோவை பேரரசனாக்கி அழகு பார்ப்பது? கி.பி.54, அக்டோபர் 13 அன்று, கிளாடியஸ் உண்ட உணவில் விஷக்காளான் அல்லது காளானில் விஷம் இருந்தது. சாப்பிட்டு ஏப்பம் வருவதற்கு முன்பே அவரது உயிர் வெளியேறியிருந்தது. 'எல்லாம் அக்ரிப்பினாவின் கைங்கர்யம்' என்று ஊரே பேசிக்கொண்டது.




**நீரோவும் அக்ரிப்பினாவும்**

இப்படியாக நீரோ தன் பதினேழாவது வயதில் அன்றைய உலகின் மாபெரும் சாம்ராஜ்ஜியமான ரோமாபுரியின் ஐந்தாவது பேரரசரானார். 'ஜூலியோ-கிளாடியான் பரம்பரையில் வந்த எந்தவொரு பேரரசருக்குப் பிறகும், அவரின் மகன் பேரரசரானதே இல்லை' என்பது இறுதியாக ஒருமுறை நிரூபிக்கப்பட்டது. தான் பேரரசரான பின், 'காளான் என்பது கடவுள்களின் உணவு' என்று அதற்கு நீரோ மிகப்பெரிய கௌரவத்தைக் கொடுத்ததாகவும் சொல்லப்படுவது உண்டு.

'அம்மாவின் ஆணைக்கிணங்க' நீரோவின் ஆரம்ப கால ஆட்சி அமைந்தது. செனட் கூட்டங்கள் நடக்கும்போது, திரைக்குப் பின்னாலிருந்து அவையைக் கவனிக்கும் வாய்ப்பு அக்ரிப்பினாவுக்கு வழங்கப்பட்டது. தானும் தாயும் நாணயத்தின் இரு பக்கங்களாக இருப்பதாகச் சிறப்புச் செய்தார் நீரோ. 'அகஸ்டா' என்ற உயரிய கௌரவப் பட்டம் அவளுக்கு அளிக்கப்பட்டது. பர்ரெஸ், செனெகா என்ற இரு குருக்களின் வழிகாட்டலில் 'அமைதியான நதியினிலே ஓடம்' போலத்தான் முதல் சில ஆண்டுகள் கழிந்தன. குருக்கள் இருவருக்குமே அக்ரிப்பினாவின் வரம்பற்ற அதிகாரத்தில் விருப்பமில்லை.

நீரோவுக்கு தன் மனைவி ஆக்டேவியாவைப் பார்த்தால் கொஞ்சம்கூட 'ஆக்ஸிடோஸின்' சுரக்கவில்லை. ஆகவே, காதல் வெள்ளம் வேறு பள்ளம் தேடிப் பாய்ந்தது. அடிமைப்பெண்ணாக இருந்த அக்டே, நீரோவின் நெஞ்சைக் கொய்தாள்! அவளைத் திருமணம் செய்துகொள்ளும் நினைப்பும் நீரோவுக்கு இருந்தது. அதற்கான ஏற்பாடுகளையும் ரகசியமாகச் செய்தார். அடிமை ஒருத்தி மறைமுகமாக அதிகாரத்துக்கு வந்தால், அன்புடை மாமியார் அக்ரிப்பினாவால் பொறுத்துக்கொள்ள முடியுமா? மகனை எச்சரித்தாள். 'என்னைப் பகைக்காதே! நான் உன்னைப் பேரரசன் ஆக்கியவள். நான் நினைத்தால் உன்னைத் தூக்கியெறிந்துவிட்டு அந்த இடத்தில் பிரிட்டானிகஸைக் கொண்டுவர முடியும்' - அக்ரிப்பினா கொக்கரித்தாள். நீரோ அலட்டிக்கொள்ளவில்லை. ஒரு மதிய உணவில் விஷத்தைக் கலந்து பிரிட்டானிகஸை அமைதியாக வழியனுப்பி வைத்தார் (கி.பி. 55).

தாயின் பிடியிலிருந்து முழுமையாக விலக விரும்பிய நீரோ, அவளது அதிகாரங்களைக் குறைத்தார். அவளின் பட்டங்களும் கௌரவங்களும் பிடுங்கப்பட்டன. பிரதான அரண்மனையிலிருந்து அவளை வெளியேற்றினார். இருந்தாலும் அவளது புகழோ, செல்வாக்கோ கொஞ்சமும் குறையவில்லை. நீரோவுக்கு வேண்டாதவர்களெல்லாம் அக்ரிப்பினாவுக்கு வேண்டியவர்களானார்கள். 'மகனை எப்படி, யார் மூலம் கவிழ்ப்பது' என்பதிலேயே அந்தத் தெய்வத்தாயின் சிந்தனை நிலைகொண்டிருந்தது.



**தாயைக் கொன்ற சோகத்தில் நீரோ**

நீரோவின் வாழ்க்கையில் இன்னொருத்தி வந்தாள். பாப்பேயா சபினா. கொஞ்சம் தலைசுற்ற வைக்கும் பின்னணி கொண்டவள்தான். முதல் கணவனை விட்டுப் பிரிந்து, இரண்டாவதாக ஆதோ என்பவரைத் திருமணம் செய்திருந்தாள். இந்த ஆதோதான் பின்பு ரோமாபுரியின் ஏழாவது பேரரசரானவர். நீரோவின் ஆத்ம நண்பர். ஆதோ வழியாக நீரோவை நெருங்கி, அவரைக் கவிழ்த்து ஆசைநாயகியாகி, பின் பேரரசியாவதே சபினாவின் திட்டமாக இருந்தது. தினமும் தன் மேனி எழிலுக்காகப் பாலில் குளிக்கும் வழக்கம் கொண்டிருந்த சபினாவிடம், காமத்துப்பாலில் வழுக்கி விழுந்தார் நீரோ.

அந்த உறவு, திருமணத்தின் திசையில் நகர்ந்தது. அக்ரிப்பினா குறுக்கே வந்தாள். நீரோவின் கண்கள் சிவந்தன. இனியும் இவளை விட்டுவைத்தல் ஆகாது. அக்ரிப்பினா விருந்து ஒன்றில் கலந்துகொண்டு இரவு நேரத்தில்

திரும்பிக் கொண்டிருந்தாள். கடலில் ஒரு சிறிய கப்பலில் குறைந்ததூரப் பயணம். நீரோவுக்கு வேண்டிய கடற்படைத் தளபதியான அனிசெடெஸ், அந்தக் கப்பலை மூழ்கடித்தார். எவ்வளவோ எதிர்நீச்சல் போட்டு அதிகாரத்தின் உச்சத்துக்கு வந்த அக்ரிப்பினாவுக்கு, கடலில் நீச்சலடித்துத் தப்பிப்பது பெரிய விஷயமாக இல்லை. நீரோவின் மறைமுகச் சதி தோல்வியடைந்தது.

ஆகவே, நேரடியாகவே அனிசெடெஸை அனுப்பி வைத்தார். அவள் இருந்த மாளிகைக்குள், ஆயுதங்களுடன் சிலர் புகுந்தனர். அக்ரிப்பினா கதறினாள், 'இப்படி ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த என்னை இந்த வயிற்றைக் கிழித்துக் கொல்லுங்கள்!' அவளது இறுதி ஆசையை அனிசெடெஸ் நிறைவேற்றினார் (கி.பி. 59). அக்ரிப்பினா தற்கொலை செய்துகொண்டதாக வெளியே தகவல் பரப்பப்பட்டது. ஆயிரம்தான் இருந்தாலும் அன்னை ஓர் ஆலயமல்லவா. நீரோவின் ஈர நெஞ்சில் தாங்கமுடியாத பாரம் அழுத்த... இரவெல்லாம் அழுதார்.



*அடுத்து? ஆருயிர் சபினாவை மணம் முடிக்க வேண்டுமெனில் ஆக்டேவியாவை முடிக்க வேண்டும். ஆகவே, அவளுக்கும் அனிசெடெஸுக்கும் கள்ள முடிச்சுப் போட்டுப் பழிசுமத்தினார். அவளால், தனக்கு வாரிசு பெற்றுத்தர இயலவில்லையெனக் குற்றஞ்சாட்டினார். இதற்கெல்லாம் தண்டனையாக ஆக்டேவியா, தீவுச் சிறையொன்றில் அடைக்கப்பட்டாள். அனிசெடெஸும் தண்டிக்கப்பட்டார். அதாவது, கண்காணாத ஊரொன்றில் குடும்பத்துடன் நிம்மதியாக வாழ பெருஞ்செல்வத்துடன் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டார்.*

*மக்கள் கொதித்தெழுந்தனர். பேரரசி ஆக்டேவியாவின் சிலையை மலர்களால் அலங்கரித்து ரோம் நகர வீதிகளில் ஆவேசமாக இழுத்து வந்தனர். நீரோவுக்கு எதிரான கோஷங்கள் அதிர்ந்தன. புரட்சி வெடித்துவிடும் போலிருந்தது. ஆனாலும், ஆக்டேவியாவுக்கான மரணதண்டனையை நிறைவேற்ற கையெழுத் திட்டார் நீரோ. ஆக்டேவியா கதறக் கதற அவளது நரம்புகள் சிலவற்றை அறுத்தார்கள். நீராவி சூழ்ந்த அறையில் அவள் தள்ளப்பட்டாள். கடும் வெப்பத்தில் அவளது கதறல் கருகிப்போனது. வெட்டப்பட்ட ஆக்டேவியாவின் தலை சபினாவை வந்தடைந்தது (கி.பி. 62). பேரரசியின் மரணச் செய்தியைக் கேட்ட ரோமே கண்ணீரில் மூழ்கியது. நீரோ மட்டும் அவ்வப்போது பீதியில் உறைந்தார். அவரின் தாயும் முதல் மனைவியும் ஜோடி போட்டுக் கொண்டுவந்து சொப்பனங்களை வெப்பமாக்கினர்.*

*இன்னொரு விஷயத்திலும் நீரோ அனலென தகித்தார். அப்போது அங்கே பரவ ஆரம்பித்திருந்த கிறிஸ்தவ மதம். கிறிஸ்தவர்களாக மதம் மாறியிருந்த ரோமானியர்களையும் சிலுவைகளையும் கண்டாலே நீரோவுக்குள் பெருங்கோபச் சீற்றம். அவரது வெறியாட்டத்தால், வாதை அவர்களது கூடாரத்தைப் புரட்டிப் போட்டது.*

**(நீரோ வருவார்...)**

முகில், படம்: பா.காளிமுத்து





## சூப்பர் சிங்கர் நீரோ!

மாபெரும் ரோமாபுரி சாம்ராஜ்ஜியத்தை ஆண்ட பேரரசர்கள் பலரும், ஏதாவது ஒரு பெண் மீதான மயக்கத்தில், தங்களது வானாளவிய அதிகாரத்தை அவளிடம் அடகு வைத்திருந்தனர் என்றே வரலாறு இடித்துரைக்கிறது. நீரோவும் விதிவிலக்கு இல்லை. சபினா என்ற பெண்ணுக்காகத் தன் தாயையும் முதல் மனைவியையும் தீர்த்துக் கட்டிய நீரோ, அவளை ஜாம்ஜாமென்று திருமணம் செய்துகொண்டார். நீரோவைவிட சபினா ஏழு வயது மூத்தவள். அவள், அவருக்கு இரண்டாவது மனைவி; அவர், அவளுக்கு மூன்றாவது கணவர். இருவருக்கும் பிறந்த ஒரு பெண் குழந்தை தங்கவில்லை. சபினா, மீண்டும் கர்ப்பமுற்றாள்.

அந்தச் சமயத்தில் இருவருக்கும் இடையே ஏதோ ஒரு தகராறு. தன்னிலை இழந்த நீரோ, அவளது வயிற்றில் ஓங்கி மிதித்தார். நிலைகுலைந்து விழுந்த சபினா, பிறகு இறந்து போனாள். தன் மடத்தனத்தை எண்ணி நீரோ கதறிக் கண்ணீர் விட்டதாகச் செய்திகள் உண்டு. அந்தக் காலத்தில் ரோமானியர்களுக்கு மிளகு என்பது தங்கத்துக்கு ஒப்பானது. ஏழைகளுக்கெல்லாம் எட்டாத பொருள். அரேபியர்கள் மூலம் கொண்டு வரப்பட்ட மிளகையும், பிற வாசனைப் பொருள்களையும் கொட்டி, சபினாவுக்கு இறுதிச் சடங்குகளைக் கனத்த இதயத்துடன் செய்தார் நீரோ.

சபினாமீது நீரோ எவ்வளவு 'dragoste' (காதலின் ரோமானிய மொழி வார்த்தை) வைத்திருந்தார் என்பதற்கு, அடுத்து அவர் செய்த காரியமே சாட்சி. மக்கள் முன்னிலையில் கோலாகலக் கொண்டாட்டத்துடன் ஸ்போரஸ் என்ற

சிறுவனைத் திருமணம் செய்துகொண்டார். ஏனென்றால், அவனுக்கு அச்சு அசல் சபினாவின் முகஜாடை. அடுத்ததாக பைதாகோரஸ் என்ற ஆண் அடிமையையும் திருமணம் செய்துகொண்ட நீரோ, அவனுக்கு மனைவியாகச் சேவகம் செய்தார். தவிர, பாரிஸ் என்ற நடிகனோடு காதல் வயப்பட்டார். தன்னைவிட அவன் நன்றாக நடிக்கிறான் என்ற பொறாமையில் அவனைப் போட்டுத் தள்ளினார். ஸ்டட்டிலியா என்ற பெண்மீது மோகம் கொண்டு, அவளின் கணவனைத் தற்கொலை செய்துகொள்ள வைத்து, அவளை விதவையாக்கி, தியாக உள்ளத்துடன் பேரரசியாக்கிக் கொண்டார்.




இப்படியாகக் கொலைவெறி கொண்டவராக நம் மனத்தில் பதிந்த நீரோ, கலைவெறி கொண்டவர் என்றால் நம்ப முடிகிறதா? ஆம், அவருக்கு மக்கள்நலப்பணிகளைவிட, எக்ஸ்ட்ரா-கரிகுலர் ஆக்டிவிட்டீஸில் அநியாயத்துக்கு ஆர்வம் இருந்தது. பாடல் எழுதுவார்; பாடுவார்; இசைப்பார்; ஆடுவார்; நடிப்பார்; வரைவார்; செதுக்குவார்.

அரங்கத்தில், 'நீரோனியா' என்று பெயரில் நிகழ்ச்சி ஆரம்பமாகும். அதாவது நீரோவே சிந்தித்து வடிவம் கொடுத்த பாடல்களோ, இசை நாடகமோ மேடையில் அரங்கேறும். சூப்பர் சிங்கர் நீரோவின் குரல் கர்ணகடூரமாக இருந்தாலும், அவர் மீட்டும் இசை நாராசமாக ஒலித்தாலும்,

அவரது நடிப்பு சகிக்கவே முடியாததாகத் தெரிந்தாலும் ஆர்ப்பரித்து ரசிக்க வேண்டியது ஆடியன்ஸின் கடமை. ஆம், அப்படிச் செய்தால் மட்டுமே பூட்டி வைக்கப்பட்ட அரங்கத்தின் கதவுகளை நிகழ்ச்சி முடிந்ததும் திறப்பார்கள். ஆம், கைதட்டுங்கள். திறக்கப்படும்!

இப்படித்தான் ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போதும் நீரோ கொடூரமாக பிடில் வாசித்தாரா? 'இல்லை' என்கிறார்கள் சில சரித்திர ஆசிரியர்கள். கி.பி. 64, ஜூலை 18 இரவில் ரோமின் மேக்ஸிமஸ் என்ற குதிரைப் பந்தய மைதானத்தில் தீ விபத்து ஏற்பட்டது. காற்று மிக அதிகமாக இருந்ததால் தீ பரபரவெனப் பாய்ந்து பரவி, ஏகப்பட்ட வீடுகள், விடுதிகள், கடைகள், கோயில்கள், அரண்மனையின் ஒரு பகுதி என பலவற்றையும் நாசமாக்கியது. நெருப்பை முற்றிலும் கட்டுப்படுத்த ஒரு வாரம் ஆனது.

இந்த நெருப்புக்குப் பின் புகையும் சர்ச்சைகள் நிறையவே உண்டு. இவற்றில், டெசிடெஸ் என்ற நீரோவின் சமகால ரோமானிய வரலாற்றாளரின் பதிவுகள் முக்கியமானவை. 'அந்தச் சமயத்தில் நீரோ ரோமிலேயே இல்லை. அண்ட்டியம் நகரில் இருந்தார். விஷயம் கேள்விப்பட்டு உடனே ரோமுக்கு விரைந்த பேரரசர், தீயை அணைக்கும் பணிகளை முடுக்கிவிட்டு, தானும் களப்பணி ஆற்றினார். பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு அரண்மனையைத் திறந்துவிட்டார். மக்களுக்கு உணவும், நிவாரணப் பொருள்களும் (நீரோ முகம் கொண்ட ஸ்டிக்கர் ஒட்டாமல்) வழங்கப்பட்டன. நீரோ தன் சொந்தப் பணத்திலேயே இதெற்கெல்லாம் செலவு செய்தார்' என்கிறார் டெசிடெஸ்.

சிதைந்த ரோமை, உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிட்டார் நீரோ. வலுவான கல் கட்டடங்கள், அகலமான தெருக்கள், அப்புறம் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் Domus Aurea (தங்க மாளிகை) என்ற புதிய அரண்மனை வளாகம். இதற்கெல்லாம் பணம்? செல்வந்தர்களும், மாபெரும் வணிகர்களும் நீரோவின் காலடியில் வந்து பணத்தைக் கொட்ட வேண்டுமென்பது கட்டளை. அல்லது செல்வம் அடித்துப்

பிடுங்கப்படும். அப்படியும் அதிகப் பணம் தேவைப்பட்டபோது, ரோமானிய சாம்ராஜ்ஜிய வரலாற்றிலேயே முதன்முறையாக நீரோ 'பணமதிப்பிழப்பு' நடவடிக்கையை மேற்கொண்டார். வெள்ளி நாணயங்களில் எடையும், வெள்ளியின் தூய்மையும் குறைக்கப்பட்டன.




புதிய அரண்மனை வளாகத்தின் மத்தியில் செயற்கை ஏரி, அருகிலேயே சுமார் 103 அடி உயரத்தில் நீரோவின் மாபெரும் வெண்கலச்சிலை போன்றவை உருவாக்கப்பட்டன. 'பப்பி ஷேம்' கோலத்தில் ரோமானிய சூரியக் கடவுள்போல நின்றுகொண்டிருந்த நீரோவின் சிலையை அனைவரும் வழிபட வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டது.

அப்போது அங்கு கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினரே. அவர்கள் பேரரசர்களின் சிலைகளை வணங்க மறுத்தார்கள். 'இயேசுவின் ராஜ்ஜியமே உயர்ந்தது' என்றார்கள். கிறிஸ்துவர்கள்மீதான வன்முறை கலிகுலா காலத்திலேயே தீவிரமாகியிருந்தது. நீரோவின் காலத்தில் மிகத் தீவிரமானது.

'தீ மூட்டியதே கிறிஸ்தவர்கள்தாம். ரோமை அழிக்க அவர்கள் செய்த பெருஞ்சதி இது. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்' என்று விபத்தைத் திசைதிருப்பினார் நீரோ. அதற்காக விதவிதமாக மரண

தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. முதலைகள் நிரம்பிய தடாகத்தில் கிறிஸ்தவர்கள் தூக்கியெறியப்பட்டனர். மாபெரும் மரண விளையாட்டு அரங்கின் மத்தியில் தள்ளப்பட்டு, பசித்த புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் இரையாக்கப்பட்டனர். அரண்மனை வளாகத்திலும், நகரத்தின் வீதிகளிலும் இரவு நேரங்களில் விளக்கெரிக்க வேண்டுமல்லவா. 'சிலுவைகளை நடுங்கள். அதில் கிறிஸ்தவர்ளை அறையுங்கள். கொளுத்துங்கள். ஒளிரட்டும் ரோம்!' மனித விளக்குகளின் கதகதப்பில் நீரோவின் மனம் குளிர்ந்தது.

கலைவெறியும் கொலைவெறியும் நீரோவின் ஆட்சிக்கு உலை வைத்தன. புதிய அரண்மனை வளாகக் கட்டுமானத்தால் எக்கச்சக்க அநாவசியச் செலவு. ரோமானிய மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர், அதற்கென அடிமையாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். தவிர, கிறிஸ்தவர்கள் படுகொலை, பிற அரசியல் கொலைகள் என்று நீரோவின் இமேஜ் பாதிக்கப்பட்டிருந்தது. மக்களை எப்போதும் வாட்டுவது புதிய புதிய வரிகள்தானே. நீரோவும் புதிய வரிக்கொள்கைகளினால் அழிச்சாட்டியம் செய்தார். அதை ஏற்று அமல்படுத்தாத மாகாண கவர்னர்கள் இன்னல்களுக்கு உள்ளாயினர். சிலர் துணிச்சலாக எதிர்க்க ஆரம்பித்தனர். அதில் முக்கியமானவர், Hispania Tarraconensis என்ற மாகாணத்தின் கவர்னராக இருந்த கல்பா. பழுத்த அரசியல்வாதி. பல பேரரசர்களின் கீழ் பணியாற்றிய அனுபவஸ்தர்.

கல்பாவை 'ராஜ்ஜியத்தின் துரோகி' என்று அறிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டார் நீரோ. இதை செனட் ஏற்றுக்கொண்டால், கல்பாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றலாம். ஆனால், நீரோவின் பாதுகாப்புப் படைத்தளபதியாக இருந்த சபினெஸும், கல்பாவுடன் கைகோத்தார். நீரோவுக்கான ஆதரவு மிகவும் பலவீனமானது.

கி.பி. 68 ஜூன் 9. ரோமுக்கு வெளியே ஒரு மாளிகையில் சில விசுவாசிகளுடன் நீரோ பதுங்கியிருந்தார். அப்போது அஞ்சல் ஒன்று வந்து சேர்ந்தது. 'செனட்டில் நீரோவை ராஜ்ஜியத்தின் துரோகியாக

அறிவித்துவிட்டார்கள்' என்று. எனில், அடுத்து நீரோவைக் கொல்ல படை வீரர்கள் கிளம்பி வந்துவிடுவார்கள். எதிரிகள் கையால் சாவதை நீரோ விரும்பவில்லை. விசுவாசிகளின் கையில் கத்தியைக் கொடுத்துத் தன்னைக் குத்தச் சொன்னார். அவர்கள் தயங்கினார்கள். 'குத்திக்கொண்டு சாவது எப்படி என்று நீங்கள் யாராவது செய்து காட்டுங்களேன்' - கெஞ்சினார் நீரோ. அதற்குள் வெளியே குதிரையின் சத்தம் கேட்டது.




'நீரோவைக் கொல்ல வேண்டாம். அவர் மூலம் பிறக்கும் வாரிசை ஆதரிக்க வேண்டும்' என்று அவர்மீது நம்பிக்கை தெரிவித்து செனட்டில் முடிவெடுத்திருந்தார்கள். அந்தச் செய்தியோடு குதிரை வீரன் மாளிகைக்குள் நுழையும்போது, வயிற்றில் கத்தி பாய்ந்திருக்க ரத்த வெள்ளத்தில் கிடந்தார் நீரோ. ரோம் வரலாற்றிலேயே தற்கொலை செய்துகொண்ட முதல் பேரரசரான நீரோவின் இறுதி வார்த்தைகள் இவை... ''எப்பேர்ப்பட்ட கலைஞன் என்னுடன் மரணிக்கிறான்!''

(வருவார்கள்...)

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 32

முகில், படம்: பா.காளிமுத்து

கிறுக்கு ராஜாக்களின் கதை!

### தொண்டையில் சிக்கிய தோட்டா!

தங்க நாணயமா அது? அரண்மனை வேலைக்காரர் கண்களை நன்றாகத் துடைத்து விட்டு மீண்டும் பார்த்தார். நீர் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரத்தின் அடியில் நாணயம் ஒன்று கிடந்தது. அவர் சுற்றும்முற்றும் பார்த்து, யாரும் அந்த அறையில் இல்லையென்பதை உறுதி செய்து கொண்டார். தனது வேலையைத் தொடருவது போன்ற பாவனையுடன் பாத்திரத்தை நெருங்கினார். உற்றுக் கவனித்தார். நிச்சயம் தங்க நாணயமேதான்!

எடுக்கலாம் என்ற நினைப்புடன் பாத்திரத்துக்குள் கைவிட்டார் வேலைக்காரர். திரவத்தில் கை நனையவும் அலறினார். பதறி, கையை உதறித் துடித்தார். அந்தச் சத்தம் கேட்டு மன்னர் அங்கே பிரசன்னமானார். அவரது உதட்டில் வெற்றிப் புன்னகை ஒன்று முடி சூடியிருந்தது. கண்கள், 'மாட்டிக் கொண்டாயா?' என்று ஏளனமாகக் கேட்டன.

அது, தங்க நாணயம்தான். ஆனால், அந்தத் திரவம் நீர் அல்ல; ஏதோ ஓர் அமிலம். வேலைக்காரர்களின் நேர்மையைச் சோதிக்க மன்னர் அடிக்கடி கையாண்ட உத்தி இது. அந்த அன்புக்குரிய மன்னரது பெயர் ஃபுவாட் (Fuad). பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் எகிப்தையும் சூடானையும் ஆட்சி செய்த முகமது அலி பரம்பரையில் வந்தவர். அந்த ராஜ்ஜியத்தின் ஒன்பதாவது ஆட்சியாளர்.

ஃபுவாடுக்கு எங்கும் எப்போதும் எதிலும் சுத்தம் வேண்டும். தூசியும், அழுக்கும், நாற்றமும் ஆகவே ஆகாது. ஆகவே வேலைக்காரர்களைப் படுத்தியெடுப்பார். 'அதைத் துடை. அங்கே பார் அழுக்கு.' ஒரு நாளில்

எத்தனை முறை தம் கைகளைக் கழுவுவார் என்பதற்கெல்லாம் கணக்கே கிடையாது. இதை *Mysophobia* என்பார்கள்.

**மனைவி, மகளுடன் ஃபாருக்**



ஃபுவாடின் மனைவிகளும் அவரை எப்போது கைகழுவலாம் என்ற வெறுப்புடன்தான் காத்திருந்தனர். அப்பேர்ப்பட்ட சந்தேகப் பேர்வழி அவர். மனைவிகள் தம்மை விட்டு ஓடிவிடுவார்களோ என்ற பயத்தில் அவர்களை அந்தப்புரத்துக்குள்ளேயே சொகுசு அறைகளில் சிறை வைத்திருந்தார். ஷிவாகியார், முதல் மனைவி. இருவருக்கும் கி.பி. 1895-ல் திருமணம் நடந்தபோது, அவர் வெறும் இளவரசரே. பிள்ளைகள் பிறந்தாலும் அவர்களுக்குள் காதல் சுரக்கவே இல்லை. ஒரு தகராறு. அதில் ஷிவாகியாரின் சகோதரர், ஃபுவாடைத் துப்பாக்கியால் சுட்டார். உடலில்

தோட்டாக்கள் பாய்ந்தாலும் உயிருக்குச் சேதாரமின்றிப் பிழைத்தார் ஃபுவாட். தொண்டையில் பாய்ந்த தோட்டாவை மட்டும் முழுமையாக நீக்க முடியவில்லை. இச்சம்பவத்துக்குப் பின் ஷிவாகியாரை விவாகரத்து செய்தார்.

'தொண்டையில் குண்டடிபட்டால், மாபெரும் மக்கள் தலைவராகலாம்' என்பது ஃபுவாட் விஷயத்திலும் நடந்தது. கி.பி. 1917-ல் ஃபுவாடின் மூத்த சகோதரரும், எகிப்தின் சுல்தானுமான கமீல் இறந்துபோனார். ஃபுவாட், அடுத்த சுல்தான் ஆனார். எகிப்தில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை எதிர்த்து 1919-ல் மாபெரும் புரட்சி வெடித்தது. அதன் விளைவாக எகிப்தில் தன் ஆதிக்கத்தை விலக்கிக்கொள்வதாக அறிவித்த பிரிட்டன், அதற்குப் பெயரளவில் சுதந்திரம் வழங்கியது(1922). அதாவது வெளியுறவு, ராணுவம் உள்ளிட்ட சில விஷயங்களில் மட்டும் பிரிட்டனின் தலையீடு இருக்கும்.


முன்னாள் மன்னர் ஃபுவாட்


ராஜமாதா நஸ்லி

அதன்பிறகு சுல்தான் ஃபுவாட், தன்னை 'மன்னர் ஃபுவாட்' என்று அறிவித்துக்கொண்டார். தன்னைவிட 25 வயது இளையவரான நஸ்லி ஷப்ரி என்ற பெண்ணை இரண்டாவது திருமணமும் செய்திருந்தார். அந்தப் பெண்ணுடனும் சந்தேகம் சூழ்ந்த தாம்பத்யமே தொடர்ந்தது. ஐந்து குழந்தைகள் பிறந்தன. நான்கு இளவரசிகள். ஓர் இளவரசன். ஜோதிடர் ஒருவர் 'F என்று ஆரம்பிக்கும் பெயர்தான் குழந்தைகளுக்கு உகந்தது' என்று

மன்னரிடம் சொல்லியிருந்ததால் பிள்ளைகளின் பெயர்கள் இப்படி வைக்கப்பட்டன. ஃபௌஸியா, ஃபைஸா, ஃபைகா, ஃபதியா. இளவரசனின் பெயர் ஃபாருக்.

1920-ல் ஃபாருக் பிறந்தான். தாய், சகோதரிகள், பிரிட்டிஷ் டீச்சர் என்று பெண்கள் சூழ்ந்த அந்தப்புரச் சுவர்களுக்குள் அவனது பால்யம் கழிந்தது. ராஜ வாரிசு அல்லவா? மகனுக்கு மட்டும் கூடுதலாகச் சிறகுகளை அளித்தார் ஃபுவாட். ஆறு மணிக்கு எழுந்ததும் உடற்பயிற்சியும் ஜிம்னாஸ்டிக் பயிற்சியும். பின் பாடங்கள். கணிதம் மிரட்டியது; வரலாறு வாட்டியது. ஆனால், மொழிகள் அவனுக்குப் பிடித்திருந்தன. அவனது செல்ல முயல் ஒன்றை பருந்து தூக்கிச் சென்றபோது, நாள்கணக்கில் அழுதான். 'உயிர்களிடத்தில் அன்பு கொண்டவன்' என்று மற்றவர்கள் சிலாகித்த போதே, தான் விரும்பாத பூனை ஒன்றின் வாலைப் பிடித்துத் தூக்கி, அதன் தலையைச் சுவரில் அடித்துக் கொன்று புன்னகை செய்தான்.

ஃபாருக்கின் 11-வது பிறந்த நாளில், அவனுக்கு 'ஆஸ்டின் 7' ரகக் காரைப் பரிசளித்தார் மன்னர். 15 வயதில் மோரிஸ் ரக ரேஸ் கார் அவனுக்குக் கிடைத்தது. கெய்ரோவின் சாலைகளில் இளவரசன் கார் ஓட்டி வருகிறார் என்றாலே பொதுமக்கள் பீதியாயினர். சொகுசாகவும் வசதியாகவும் வளர்ந்த இளவரசனுக்குக் கட்டுப்பாடான ராணுவப் பயிற்சியும் தேவை என்று மன்னர், அவனை பிரிட்டனுக்கு அனுப்பி வைத்தார். ஓராண்டுக்குள்ளாகவே ஃபாருக் திரும்பி வர வேண்டியிருந்தது. காரணம்? தொண்டையில் சிக்கிய தோட்டாவின் மீதியால், நாய் குரைப்பதுபோல பல காலமாகச் சிரமத்துடன் குரலெழுப்பிக் கொண்டிருந்த மன்னர் ஃபுவாட், தன் குரைப்பை நிரந்தரமாக நிறுத்தியிருந்தார் (1936).

அப்போது ஃபாருக்கின் வயது பதினாறுதான் என்றாலும், மைனர் மன்னராக அறிவிக்கப்பட்டார். வானொலியில் உரையாற்றிய முதல் மற்றும் ஒரே எகிப்திய மன்னர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். 'இறைவன் இந்த ராஜ்ஜியத்தை ஆளும் உரிமையை எனது இளம் தோள்களில் இறக்கி

வைத்துள்ளார். நான் என் கடமைகளை நிறைவேற்ற எந்தவிதமான தியாகங்களுக்கும் தயார். என் உன்னத மக்களே! நான் கடவுளிடம் வைத்திருக்கும் விசுவாசம்போல, நீங்கள் என்னிடம் வைத்திருக்கும் விசுவாசத்தைக் கண்டு பெருமை யடைகிறேன்! வாருங்கள். சேர்ந்து இயங்குவோம்! வெற்றி பெறுவோம்! மகிழ்வுடன் இருப்போம்!'

இப்படி மன்னரின் குரலைக் கேட்பதெல்லாம் அந்த மக்களுக்குப் புதுசு! எகிப்தியர்களுக்கெல்லாம் உடல் சிலிர்த்தது. 'புதிய மன்னர் வாழ்க... வாழ்க!' என்று உதடுகள் அனிச்சையாகவே உச்சரித்தன. ஆட்சியாளர்களின் ஆரம்ப ஜோர் (மட்டும்) அட்டகாசமாகத்தானே இருக்கும்.

ஃபாருக் மைனர் என்பதால், மூவர் குழு ஆட்சியை வழிநடத்தியது. மூவரில் அஹ்மத் ஹாசனின் என்பவர் முக்கியமானவர், அனுபவஸ்தர். ஃபாருக்குக்கு அரபி மொழியும் அரசியலும் கற்றுத் தந்த வாத்தியார். ராஜமாதா நஸ்லிக்கு 'மிக மிக நெருக்கமானவரும்'கூட. சகல சௌபாக்யங்களுடனும் சர்வ அதிகாரத்துடனும் வளர்க்கப்பட்ட எந்த இளவரசனாவது அடுத்தவரது அறிவுரையை மதிப்பானா? ஃபாருக், மூவர் குழுவின் சொற்களை மதிக்கவில்லை. மேஜர் ஆனபின் ஃபாருக், 1937, ஜூலை 29 அன்று முடிசூட்டிக் கொண்டார்.

அழிச்சாட்டியங்கள் ஆரம்பமாயின. கிளப்களுக்கும் ரெஸ்டாரன்ட்களுக்கும் செல்வார். வசதியான ஓரிடத்தில் உட்காருவார். பிரெட் துண்டுகளை உருண்டையாக உருட்டி, வருவோர் போவோர்மீது எறிந்து விளையாடுவார். வயதானவர்கள், முக்கியஸ்தர்கள் என்றாலும் அவர்கள் மீதும் ஏதாவது எறியப்படும். எரிச்சலும் கோபமும் வந்தாலும், மன்னரிடம் வெளிக்காட்டாமல் இளித்தபடிக் கடக்க வேண்டும்.

ப்ளேபாயாக சுற்றிய மன்னரின் மன்மத மனது, ஒருத்திமீது மையம் கொண்டது. 1937-ல் ஃபாருக் தன் குடும்பத்தினர் மற்றும் பரிவாரங்களுடன் ஐரோப்பியச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது லண்டனில்

அவளைச் சந்தித்தார். பதினேழு வயது ஃபரிடா (அவர் F-ல் பின்பு வைத்த பெயர்தான்). அந்த ஆகஸ்டில் காதலைச் சொன்னார். அடுத்த ஜனவரியில் திருவிழா போலத் திருமணம். கோலாகலக் கொண்டாட்டம். கூடவே திகட்டத் திகட்ட ரொமான்ஸ். தினமும் காலையில் ஃபரிடா கண்விழிக்கும்போது, அசத்தல் பரிசுடன் கண் சிமிட்டி, உதட்டைக் குவிப்பார் ஃபாருக். தன் தந்தையைப் போலல்லாமல், மனைவிக்குச் சுதந்திரம் தந்தார். தான் போகுமிடமெல்லாம் அழைத்துச் சென்றார். ஃபாருக் அம்மை நோயால் பாதிக்கப்பட்டபோது, ஃபரிடா அங்குமிங்கும் நகராமல் கவனித்துக் கொண்டாள். நெகிழ்ந்தார்.




ஃபாருக் – ஃபரிடா திருமண விருந்து

இருவருக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தன. இளவரசிகள். ஃபெரியல், ஃபௌசியா, ஃபடியா. எகிப்தின் மன்னரான எனக்கு மகன் வேண்டாமா? அடுத்தவர்களெல்லாம் தன் ஆண்மை பற்றி இழிவாகப் பேசுவார்களே என்று ஃபாருக் தவித்தார். பாரியாள் ஃபரிடாவைத் தவிர்த்தார். உறவு கசந்தது. ஃபாருக்கின் இரவுகளெல்லாம் நைட் கிளப்களில் இனிக்க ஆரம்பித்தன.

இரண்டாம் உலகப்போர் சமயம். அச்சு நாடுகளும் நேச நாடுகளும் நேசம் தொலைத்து வெவ்வேறு அச்சுகளில் போரைத் தொடங்கியிருந்தன. உலகமே இறுக்கமானதொரு மனநிலையில் இருந்தபோதும், எகிப்து மன்னர் ஃபாருக்கின் 'இயல்பு' வாழ்வில் கொஞ்சம்கூடப் பாதிப்பில்லை. இரவினில் ஆட்டம், பகலினில் தூக்கம்! உலகப்போரே நடந்தாலும் இதுதான் எனது உலகம் என்று மகிழ்ந்திருந்தார்.

சரி, உலகப்போரில் எகிப்து மன்னரான ஃபாருக்கின் நிலைப்பாடு என்ன? எகிப்தில் அதிகாரத்தைத் தக்க வைத்திருந்த பிரிட்டன், நேச நாட்டு அணியில் பெரும்புள்ளி. ஆனாலும் ஃபாருக், நடுநிலைமை வகிப்பதாகத்தான் தெரிவித்திருந்தார். அவரது இதயத்திலோ அச்சு நாடுகளின் அசுரத்தலைவர் அடால்ஃப் ஹிட்லர் மௌனமாகப் புன்னகை சிந்திக்கொண்டிருந்தார்.


**(வருவார்கள்...)**

## கிறுக்கு ராஜாக்களின் கதை! - 33

முகில், படம்: பா.காளிமுத்து

### சிவப்பு கார் வருகிறது!

கனவில் சிங்கங்கள் வருவது தவறில்லை. ஆனால், சிங்கங்கள் தன்மீது பாய்ந்து கடித்துக் குதறுவதுபோல் கொடூரக் கனவு வந்தால்... பீதியுடன் தூக்கத்திலிருந்து அடிக்கடி எழுந்து உட்கார்ந்தார் எகிப்தின் இளம் மன்னரான ஃபாருக். ஜோதிடரை அழைத்துப் பரிகாரம் கேட்டார். 'சிங்கத்தைக் கொன்றுவிடுங்கள்' என்று அபாரமான யோசனை சொன்னார் ஜோதிடர்.



ராணி நாரிமனுடன் மன்னர் ஃபாருக்

*கெய்ரோவின் விலங்குக் காட்சி சாலைக்குச் சென்றார் மன்னர். அங்கே கூண்டுக்குள் அக்கடாவென சில சிங்கங்கள் படுத்துக் கிடந்தன. வீர தீர சூரராக கூண்டுச் சிங்கங்களைச் சுட்டுக் கொன்றார். லாஜிக்படி, அவர் கனவில் வந்த சிங்கங்களைக் கொல்லவில்லை அல்லவா! ஆகவே, அதற்குப் பிறகும் சிங்கங்கள் கழுத்தைக் கவ்வும் கனவுகள் தொடரவே செய்தன. 'பகல் கனவு' என்றுதான் சொல்லவேண்டும். இரவெல்லாம் கெட்ட ஆட்டம் போட்டுவிட்டு, அதிகாலையில் தூங்க ஆரம்பித்து, உச்சிவேளையில் சோம்பல் முறித்து எழுவதே ஃபாருக்கின் வழக்கமாக இருந்தது.*

*மதியம் உண்ணும் அவரது 'ப்ரேக்ஃபாஸ்ட்' மெனு இது... ஒரு டின் நிறைய caviar என்ற மீன் உணவே ஸ்டார்ட்டர். அப்புறம் கணக்கு வழக்கின்றி அவித்த முட்டை, அள்ளிச் சாப்பிட சில கிலோ இறால், மென்று மகிழ மட்டன், சப்புக்கொட்ட சிக்கன், ருசித்துப் புசிக்க புறாக்கறி, மாட்டுக்கறியும். பின், பருக பல லிட்டர் சோடா. ஏவ்வ்வ்வ்! இவை ஒருவேளை உணவு மட்டுமே. வகைதொகையின்றி வளர்ந்து, தாராள தேக எடையுடன் (130+ கிலோ) திரிந்தார்.*

*1943-ல் நடந்த விபத்தில் அவரது சிவப்பு கார், லாரி ஒன்றில் மோதி, மரத்திலும் மோதி நசுங்கி நின்றது. விலா எலும்பிலும், இடுப்பெலும்பிலும் முறிவுகள். ஃபாருக்கை அள்ளி ஸ்ட்ரெச்சரில் போட்டபோது, அது பாரம் தாங்காமல் முறிந்துபோனது. தேறி எழுந்து நடப்பதற்குச் சில மாதங்கள் பிடித்தன. இது மன்னருக்கு நடந்த விபத்து. மன்னரால் நடந்த விபத்துகள் பற்றிப் பேசுதலும் அவசியம்.*

*ஃபாருக் கண்மூடித்தனமாகவும் விளையாட்டுத் தனமாகவும் கார் ஓட்டி மகிழ்வார். அவருக்குப் பிடித்தது, சிவப்பு நிறம். மெர்சிடிஸ் பென்ஸ், ரோல்ஸ் ராய்ஸ், ஃபோர்ட், காடிலாக் என அனைத்து சொகுசு கார்களையும் தன் இஷ்டப்படி சிவப்பாக்கினார். சாலைகளும் அவர் ஏற்படுத்திய விபத்துகளால், ரத்தம் கொட்டி சிவப்பாகின. மக்கள் யாரும் சிவப்பு நிறக் காரைப் பயன்படுத்த அனுமதி கிடையாது. மன்னரது காரும், சில ராணுவ*

ஜீப்களும் மட்டுமே சிவப்பாக இருக்க வேண்டும். யாராவது தம் காரில் வேகமாகச் சென்றாலோ, வழிவிடாமல் சென்றாலோ, ஃபாருக் தன் துப்பாக்கியை எடுப்பார். அந்தக் காரின் டயர்களை நோக்கி தோட்டாக்கள் பாயும். அதற்காக மனிதாபிமானம் இல்லாதவரென நினைத்துவிடக் கூடாது. ஏனென்றால், அவர் காரின் பின்னாலேயே ஆம்புலன்ஸ் ஒன்றையும் வரச் சொல்லியிருந்தார்.

தன் சிவப்பு கார்களிலேயே ஃபாருக் அதிகம் விரும்பியது, மெர்சிடிஸ் பென்ஸ் 540K ரக கார். ஃபாருக் – ஃபரிடா திருமணத்துக்கு ஹிட்லரிடமிருந்து வந்த பரிசு அது. இப்படி ஓர் ஆடம்பர காரா என்று அனைவரும் வியந்து நின்றனர். ஹிட்லர் அதை அன்புப் பரிசாக மட்டும் அனுப்பிவைக்கவில்லை. 'ஜெர்மானியர்களின் எந்திரவியல் அறிவை, தொழில்நுட்ப அறிவைப் பாரீர்' என்று தம்பட்டம் அடித்துக்கொள்வதற்காகவே அனுப்பியிருந்தார். ஹிட்லருக்கு ஃபாருக்மீது தனி அன்பு இருந்தது. 'இரண்டாம் உலகப் போரில் எகிப்து நடுநிலைமை வகிக்கும்' என்று ஃபாருக் அறிவித்திருந்தார். ஆனால், அவரது மனம் ஹிட்லரை ஆதரித்தது; ஆராதித்தது. நேச நாடுகளின் பெரும்புள்ளியான பிரிட்டன், எகிப்தைத் தன் முக்கிய ராணுவத்தளமாகக் கொண்டு இயங்கியது. எகிப்துக்குப் பெயரளவி லேயே சுதந்திரம் வழங்கியிருந்த பிரிட்டன், அதனுடைய ராணுவம், வெளியுறவுத் துறையை எல்லாம் தன் கட்டுப்பாட்டில் வைத்து, ஓர் அதிரடி கவர்னர்போல செயல்பட்டது. 'எனில், முதல்வர் என்றொருவர்... மன்னிக்கவும், மன்னர் என்றொருவர் எதற்கு?' எகிப்தியர்களிடையே அதிருப்தி வளர்ந்தது.

பிரிட்டிஷார் மீதான மக்களின் வெறுப்பை, ஃபாருக் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனைந்தார். ஹிட்லருக்கு ரகசியச் செய்தி அனுப்பினார். 'ஜெர்மானியப் படைகள் எகிப்தை ஆக்கிரமிக்கலாம். வரவேற்கிறேன்' என்பதுபோல. நாஜிப் படைகள் எகிப்துக்கு வந்து, பிரிட்டிஷாரின் படைகளை அடித்துவிரட்டி, தம் மண்ணுக்குப் பரிபூரண சுதந்திரம் வழங்குமென்று கனவு கண்டார். ஹிட்லர் இதைச்

சாத்தியமாக்கினால் தனக்கும் எகிப்து மக்களிடையே ஆதரவு பெருகும் என்று கணக்கு போட்டார்.

போர் தீவிரமாகியிருந்த நேரத்தில் ஜெர்மனியும் இத்தாலியும் எகிப்தைத் தாக்கக்கூடும் என்று செய்தி கிடைத்தது. ஃபாருக்கின் அரண்மனையில் இத்தாலியப் பணியாளர்கள் பலர் இருந்தனர். எகிப்தில் இருந்த பிரிட்டிஷ் தூதர் மைல்ஸ் லாம்ப்ஸன், ஃபாருக்கிடம் வலியுறுத்தினார். 'உமது இத்தாலியப் பணியாளர்களை இங்கிருந்து விரட்டியடியும்!' பதிலுக்கு ஃபாருக்கும் மூக்குடைத்தார், 'நீர் உமது பொஞ்சாதியைத் துரத்திவிடும். பின்பு நான் செய்கிறேன்' என்று. ஆம், மைல்ஸின் வீட்டம்மா ஜாக்குலின் ஓர் இத்தாலியப் பெண். மைல்ஸுக்கும் மன்னருக்குமான உரசல்கள் தொடர்ந்தன.



**மைல்ஸ் லாம்ப்ஸன் தன் இத்தாலிய மனைவியுடன்**

இந்தச் சூழ்நிலையை எகிப்தின் முக்கிய கட்சியான Wafd, தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டது. மன்னருக்கு விசுவாச அடிமையாகவும், எகிப்தின் பிரதம மந்திரியாகவும் சேவகம் செய்தவர் ஹுசைன். அவர் தலைமையிலான அரசைக் கவிழ்க்க Wafd, பிரிட்டிஷ் அரசுடன் கைகோத்தது. 1942, பிப்ரவரி 4 அன்று, கெய்ரோவிலிருந்த மன்னரது அப்தீன் அரண்மனை பிரிட்டிஷ் படையினரால் சூழப்பட்டது. மன்னர் ஃபாருக் மாளிகைக்குள் மடக்கப்பட்டார். மைல்ஸ் லாம்ப்ஸன், ஃபாருக்கை மிரட்டினார். ''நாங்கள் சொல்வதற்கெல்லாம் ஒப்புக்கொண்டால் மன்னராக நீடிக்கலாம். இல்லையேல்...''

பிரிட்டிஷார் விதித்த நிபந்தனைகளுக்கெல்லாம் வேறு வழியின்றி தலையாட்டினார் ஃபாருக். ஹுசைன் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டது. Wafd கட்சியின் மூத்த தலைவரும், ஏற்கெனவே பிரதமராக இருந்த அனுபவஸ்தருமான எல்-நஹஸ், மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். 'மன்னர் ஃபாருக் வெறும் தலையாட்டி பொம்மை' என்ற முத்திரை மக்கள் மனத்தில் அழுத்தமாக விழுந்தது. அவமானத்தில் துடித்தார் ஃபாருக். போரின் பிற்பாதியில் ஹிட்லர் சறுக்க ஆரம்பித்தார். ஃபாருக்கின் ஆசை, நிராசையானது. போரின் இறுதியில் பிரிட்டன் கொடுத்த பெரும் அழுத்தத்துக்குப் பிறகுதான், ஃபாருக் நேச நாடுகளுக்கு வேறு வழியேயின்றி ஆதரவு கொடுத்தார். எகிப்தின் எல்லையில் அச்சு நாட்டுப் படைகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கையில் இறங்கினார். ஆனால், போருக்குப் பிறகு ஃபாருக், நாஜி ராணுவத்தின் மாஜி தளபதிகளை எகிப்துக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தார். அவர்களைக் கொண்டு எகிப்திய ராணுவத்துக்குப் பயிற்சி கொடுத்தார். எகிப்துக்கென ஒரு ராணுவத்தை உருவாக்கி, போஷித்து வந்த பிரிட்டன், இதனால் கடும் ஆத்திரத்துக்குள்ளானது.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிரான எகிப்தியர்களின் போராட்டம் வலுப்பெற்றது. 'என் தேசம், என் உரிமை' என்று தீவிரமாகக் குரலெழுப்பினார்கள். மன்னராட்சி மீதான

நம்பிக்கையின்மையும் பெருகியது. 1947-ல் பிரிட்டன், சூயஸ் கால்வாய் பகுதியில் நிறுத்தி வைத்திருந்த தன்னுடைய பெரும்பாலான படைகளை விலக்கிக்கொண்டது. 1948-ல் மன்னர் ஃபாருக்கின் முதல் மனைவியான ஃபரிடாவும், அவரிடமிருந்து தன் திருமண உறவை சட்டப்படி விலக்கிக்கொண்டாள்.

இரண்டு விஷயங்களுமே மன்னரை மகிழ்ச்சிக்குள்ளாக்கின. அதே சமயத்தில் சில இடிகளும் விழுந்து அவரது இமேஜைப் பதம் பார்த்தன. அப்போது எகிப்தில் பரவிய காலரா நோயால், ஆறு மாதங்களில் சுமார் 35,000 பேர் மாண்டனர். மன்னரது நிர்வாகத் திறமை கேள்விக்குள்ளானது. 1948, மே 14 அன்று இஸ்ரேல் தேசம் உருவானதாக யூதர்கள் அறிவித்தனர். இஸ்ரேல்மீது அரபு நாடுகள் போர் தொடுத்தன. எகிப்துப் படைகளும் அதில் கலந்துகொண்டன. மார்ஷல் உடையை மாட்டிக்கொண்டார் மன்னர் ஃபாருக். பாலைவனப் போர்க்களத்தில் அங்குமிங்கும் கெத்தாக, வெத்தாக உலா வந்தார். இஸ்ரேல் வென்றது. அரபுப் படைகள் வீழ்ந்தன. தோல்வியால் ஃபாருக்கின் கொஞ்சநஞ்ச மதிப்பும் பஸ்பமாகிப் போனது.



'அதற்கெல்லாம் கவலைப்பட்டால் முடியுமா? நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நானே இந்த மண்ணின் மன்னன்' என்னும் தலைக்கனத்துடனும், குறையவே குறையாத உடல் கனத்துடனும் வழக்கம்போல மஜா வலம் வந்தார் ஃபாருக். 'எப்படியாவது ஓர் ஆண் வாரிசுக்குத் தகப்பனாகிவிட வேண்டும். தன் வாரிசை முகம்மது அலி பரம்பரையின் அடுத்த மன்னராக்கிவிட வேண்டும்' என்ற வேட்கை அவருக்குள் நாளுக்கு நாள் அதிகரித்தது. அதற்கேற்றாற்போல தகுதியும், வம்சப் பெருமையும் கொண்ட ஓர் எகிப்திய அழகியைத் தேடிக்கொண்டிருந்தார். அந்தத் தேடலில்தான் தேவதை அம்சங்கள் பொருந்திய அந்தப் பெண்ணைச் சந்தித்தார். அவள் பெயர் நாரிமன்.

நாரிமனுடனான அத்தியாயம் மட்டுமல்ல... ஐரின், பார்பரா, ஃபாத்திமா, லிலியேன், சமியா, அன்னி, பேட்ரிஸியா, ஜோன், லூசியானோ, பிரிகிட்டா, இர்மா... என காதல் ரசம் ஊற்றெடுக்கும் பல அத்தியாயங்கள் ஃபாருக்கின் மதன வாழ்க்கையில் உண்டு. அத்துடன் நாக்யுப், நாஸிர் என்ற இரு வில்லன்களின் அத்தியாயமும் முக்கியமானது.

**(வருவார்கள்...)**

*கிறுக்கு ராஜாக்களின் கதை! - 34*

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை

***கண்ணீர் சிந்தாத காதலிகள்!***

*அந்தக் கெட்டப்பழக்கத்தை kleptomania என்பார்கள். ஏதாவது ஒரு பொருள் மனதுக்குப் பிடித்து விட்டால், எப்படியாவது அதைத் திருடியே தீரவேண்டுமென்று உள்ளம் படபடக்கும்; கை பரபரக்கும். எகிப்து மன்னர் ஃபாருக்கும் அந்த மேனியாவால் ஆட்கொள்ளப் பட்டிருந்தார். ஆகவே, நகரத்தின் ஆகச்சிறந்த பிக்பாக்கெட் திருடனிடம் 'தொழில்' நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு, திறம்படக் கைவரிசை காட்டினார்.*

*மன்னர் ஓரிடத்துக்கு வந்து போனாலே, யாராவது எதையாவது இழந்துவிட்டுப் பதறுவது வாடிக்கையானது. பர்ஸ், வாட்ச், நகை, லைட்டர் எனக் 'கண்டதை' எல்லாம் களவாடி னார். ஒருமுறை ஃபாருக்கைச் சந்திக்க வந்த வின்ஸ்டன் சர்ச்சில், தனது பாக்கெட் கடிகாரத்தை இழந்தார். ஈரானின் முன்னாள் ஆட்சியாளர் ரேஷா ஷா 1944-ல் இறந்துபோனார். அவரது இறுதிச்சடங்கு கெய்ரோவில் நடந்தபோது, ஷாவின் சடலத்துடன் வைக்கப்பட்டிருந்த வாள், பெல்ட், பதக்கங்களையெல்லாம் 'சுட்டு'க் கொண்டார் ஃபாருக். அது, ஈரானுடனான எகிப்தின் நல்லுறவையே பாதித்தது.*

*திருடுவது மட்டுமல்ல, ஃபாருக் அடித்துப்பிடுங்கவும் செய்தார். எங்கே, யாரிடம், எதைப் பிடுங்கி வரவேண்டு மென, மன்னர் பட்டியல் கொடுப்பார். அதற்கென அரண்மனையிலிருந்து டிரக் ஒன்று சீறிக் கிளம்பும். இந்த மேனியா, பெண்கள் விஷயத்திலும் மன்னருக்கு இருந்தது, 'அடுத்தவன் காதலியை அபகரிப்பது', 'மாற்றான் மனைவியைப் பிடுங்கிக்கொள்வது' என்று.*

முதல் மனைவி ஃபரிடாவுடன் உறவு கசக்க ஆரம்பித்த தருணத்திலேயே, ஐரின் என்பவளிடம் கிறங்கிக்கிடந்தார் ஃபாருக். மன்னரின் முதல் அதிகாரபூர்வ ஆசைநாயகி என்ற அந்தஸ்துடன் செழிப்பாக வலம்வந்தாள் ஐரின். குடி, கூத்து. கும்மாளம். இரண்டாண்டு பந்தம் அது. நிமோனியாவால் பாதிக்கப்பட்ட தன் சகோதரனுக்கு பென்சிலின் ஏற்பாடு செய்து தரச்சொல்லி (காதல்) மன்னரிடம் கெஞ்சினாள் அவள். அவர் கண்டுகொள்ளவில்லை. வெறுப்புடன் விலகிச் சென்றாள்.



**பேட்ரிஸியா**

அடுத்தவள் வந்தாள். நாவலாசிரியையான பார்பரா ஸ்கெல்டன். மன்னருடனான தன் உறவு பற்றி எழுதி வைத்திருக்கிறாள். 'அவர் மோசமான காதலர். ஆனால், முத்தத்தில் வித்தகர். மன்னர் அல்லவா. அவருக்கு அதிகம் சேவை தேவைப்படும்!'

ஃபாருக் படுக்கையில் டெஸ்ட் மேட்ச் விளையாடவே மெனக்கெட்டார். கஞ்சாவைத் தேனில் கலந்து நக்கி, காண்டாமிருகக் கொம்பைப் பொடியாக்கி... பலரது ஆலோசனை களையும் அரைகுறையாகப் பின்பற்றி தடுப்பாட்டம் ஆடிச் சமாளித்தார். சிறந்த ஆட்டக்காரர் இல்லையென்றாலும், சீஸனுக்கொரு காதலியென எண்ணிக்கைக்குக் குறைவில்லை.

முதல் மனைவி ஃபரிடாவுடனான உறவில் விரிசல் விழுந்தபின், வேண்டுமென்றே அவள் கண்ணெதிரிலேயே மற்ற பெண்களுடன் கொஞ்சி குலாவுவதை வழக்கமாக்கிக்கொண்டார் ஃபாருக். ஃபாத்திமா கைரின் என்ற ராஜ குடும்பத்துப் பெண்மீது கண்மூடித்தனமான காதலில் விழுந்தார். 'நீ உன் புருஷனையும், நான் என் பொண்டாட்டியையும் விவாகரத்து பண்ணிட்டு, நாம கல்யாணம் பண்ணிக்குவோம்!' என்றார். எதுவும் நடக்கவில்லை. ஃபாத்திமாவின் கணவர் இறந்தும் போனார். அப்போது அவள்மீது ஈர்ப்பு குறைந்துபோனதால், ஃபாருக் கண்டுகொள்ளவில்லை.

ஃபாருக் வாழ்வில் இளம்பெண் லிலியேன் அத்தியாயம் ஆரம்பமானது. பாடகியான அவள், காதல் சொட்டும் பாடல்களைப் பாடிக்கொண்டு ஆட, திம்மென்று உட்கார்ந்து ரசிப்பார். அவள் சீக்கிரமே விபத்தொன்றில் செத்தும்போக... கட் செய்தால் அடுத்த ஷாட்டில், சமியா என்ற பெல்லி மங்கையின் ஜெல்லி இடுப்பசைவுகளில் ஜொள் வடித்தார் ஃபாருக். அன்னி என்ற பாடகியின் ராகத்திலும் தேகத்திலும் தன்னைத் தொலைத்தார். இந்தப் பெண்களை யெல்லாம்விட, பேட்ரிஸியா வைல்டர் என்ற அமெரிக்க நடிகையுடன் டேட்டிங் செல்வதைப் பெரும் விருப்பத் துடன் செய்தார். பேட்ரிஸியாவும் இரண்டு திருமண உறவுகள் முறிந்தபின், சில காலம் இந்த எகிப்து குண்டருடன் காதல் வளர்த்தாள்.

இப்படிப்பட்ட சூழலில்தான் ஃபாருக், அவரைவிட 13 வயது இளையவளான நாரிமன் என்ற எளிய குடும்பத்து எகிப்து அழகியின் புகைப்படத்தை நோக்கினார். 'கண்டேன் ரெண்டாவது பொண்டாட்டியை' என்று துள்ளியது மனம். அவளை நகைக்கடை ஒன்றில் நேரில் சந்தித்து,

'கட்டிக்கலாமா?' என்றார். 'அய்யோ! எனக்கு இன்னொருவருடன் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதே' என்று அந்தப் பதுமை தயங்கினாள். 'மன்னராகிய நான் அதை ரத்து செய்து உத்தரவிடுகிறேன்' என்று நாரிமனை அபகரித்தார்.

எகிப்தின் வருங்கால ராணியல்லவா! சகல வசதிகளுடனும் ரோம் நகரத்துக்கு அனுப்பி வைத்தார் (1950). ஒரு ராணிக்குரிய நடை, உடை, பாவனை, உச்சரிப்பு, உபசரிப்பு, மிதப்பு, மினுமினுப்பெல்லாம் பழக! அங்கே நாரிமன் வரலாறு படித்தாள். இசை கற்றாள். ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன் எனப் பல மொழிகள் பயின்றாள். உடல் எடை குறைத்து அழகை நிறைத்தாள். 1951 ஜனவரியில் நிச்சயதார்த்தம். மே மாதம் திருமணம். மூன்று மாதங்கள் திகட்டத் திகட்டத் தேன்நிலவு! பல நாடுகளைச் சுற்றி வந்து சுகித்தார்கள். இரண்டாவது திருமணத் துக்குப் பிறகு, சில மாதங்கள் மட்டும் ஃபாருக் ஏகபத்தினிவிரதராக வாழ்ந்தார். கர்ப்பமுற்ற நாரிமன், அவரது வாழ்வின் மகோன்னத லட்சியத்தை நிறைவேற்றினாள். மகன் பிறந்தான் (1952). அகமத் ஃபுவாட் (எ) இரண்டாம் ஃபுவாட். 101 முறை துப்பாக்கிகள் முழங்கின. ஹெலிகாப்டர் நிறைய சாக்லேட்டுகளை நிரப்பிக் கொண்டு கெய்ரோவின் அரண்மனை வளாகத்தில் கூடிய மக்கள்மீது வீசியெறிந்தார்கள்.

கடற்கரையில் கொட்டமடிக்கும் ஃபாருக்



இனிப்புக்கு அந்த மக்கள் ஆலாய்ப் பறந்தாலும் அவர்கள் மனதில் மன்னர்மீதான கசப்பு உணர்வே தூக்கலாக இருந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் எகிப்தின் பொருளாதாரம் நொடிந்துபோயிருந்தது. ஏகப்பட்ட அரசியல் குழப்பங்கள். மக்களைப் பற்றிக் கொஞ்சம்கூட யோசிக்காமல், 'சபலமும் சல்லாபமுமே தன்னிரு கண்கள்' என்று மன்னர் அடிக்கும் கூத்தால் வெறுத்துப் போயிருந்தார்கள். மக்கள் மட்டுமல்ல, எகிப்தின் ராணுவ முக்கியஸ்தர்களும் அவரது ஆட்டத்தை முடிக்க அடித்தளம் போட்டார்கள். ராணுவப் புரட்சி செய்து ஃபாருக்கைத் தூக்கிக் கடாச, மேஜர் ஜெனரல் முகமத் நாக்யுப், கர்னல் காமல் நாஸிர் இருவரும் நிதானமாக, ரகசியமாகத் திட்டமிட்டார்கள். இது Free Officers Movement என்றழைக்கப்படுகிறது.

1952, ஜனவரியில் Army Officers Club-ன் தேர்தல் நடந்தது. மன்னரின் ஆசிபெற்ற ராணுவ அதிகாரி ஒருவரே அதில் வெல்வது வாடிக்கை. ஆனால், அந்த முறை, எதிர்த்து நின்ற நாக்யுப் வென்றார். மன்னருக்கும் அவருக்கும் உரசல் நேரடியாக ஆரம்பமானது. எகிப்தின் சில பகுதிகளில் தனது படைகளை நிறுத்திவைத்திருந்தது பிரிட்டன். அந்த ஜனவரி 26-ல் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கும், உள்ளூர் போலீஸுக்கும் முட்டிக்கொண்டது. மக்களிடையே அது கலவரமாகப் பரவி, தீவைப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. பிரிட்டிஷார் வீசிய குண்டுகளால், 50 எகிப்தியர்கள் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் அதிகாரத்தை முழுமையாக அகற்ற வக்கற்ற ஃபாருக் மீதான பெருங்கோபமாக அந்த 'Cairo Fire' சம்பவம் உருவெடுத்தது.

நாக்யுபும் நாஸிரும் எகிப்து ராணுவத்தை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். கம்யூனிஸ்டுகளின் ஆதரவையும் பெற்றனர். ராணுவப் புரட்சி வந்தே விடும் என்று உணர்ந்த ஃபாருக், முக்கியத் தலைகளைக் கைது செய்யத் திட்டமிட்டார். இதை உணர்ந்த ராணுவத்தினர், குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே கலகத்தைக் கச்சிதமாக ஆரம்பித்தனர்.



**இளவரசனுடன் ஃபாருக்**

*1952, ஜூலை 23, காலை ஏழரை மணிக்கு ஜெனரல் நாக்யுப் வானொலியில் மக்களுக்கு உரையாற்றினார். எகிப்தியர்களின் அவலங்கள் தீர, மக்களின் சார்பாகத்தான் இந்த ராணுவப் புரட்சி என்றார் அழுத்தமாக. மன்னர் ஃபாருக்கின் ஆட்சி முடிவுக்கு வருவதாக அவர் அறிவித்ததும், தேசமெங்கும் மக்கள் வீதிகளில் இறங்கி கொண்டாடத் தொடங்கினர். ஜூலை 25 அன்று, ராணுவம் அலெக்ஸாண்டிரியாவைக் கைப்பற்றியது. அங்கே மாண்டாஸா அரண்மனையில் பதுங்கிக் கிடந்த ஃபாருக் வெலவெலத்துப் போனார்.*

*ஃபாருக் மீது நீதி விசாரணை நடத்தி, அவருக்கு மரண தண்டனை அளிக்க வேண்டுமெனப் பலரும் வலியுறுத்தினர். இளவரசர்மீது இரக்கப்பட்ட நாக்யுப், வேறு முடிவெடுத்தார். அதன்படி, ஜூலை 26 அன்று பகலில் ஃபாருக்கின் மன்னர் பட்டம் பறிக்கப்பட்டது. இளவரசனும், ஆறு மாதக் குழந்தையுமான இரண்டாம் ஃபுவாட், புதிய மன்னராக அறிவிக்கப்பட்டான். மாலை ஆறு மணிக்குள் பெட்டிப் படுக்கையுடனும் குடும்பத்துடனும் ஓடிப்போய்விட வேண்டுமென்று இறுதி எச்சரிக்கை*

விடப்பட்டது. 204 பெட்டிகள் நிறைய பொருள்கள் (சில பெட்டிகள் நிறைய தங்கக்கட்டிகள்) அந்தக் கப்பலில் ஏற்றப்பட்டன. புரட்சியின் சூடு தாங்காமல், புறமுதுகிட்டு கப்பலில் ஏறினார் ஃபாருக். உடன் நாரிமன், மூன்று மகள்கள், புதிய பேபி மன்னன் இரண்டாம் ஃபுவாட். துரத்திவிடப்பட்ட மன்னரின் வாழ்க்கை இத்தாலியிலும், பெரும்பாலும் கேப்ரி தீவிலும் கழிந்தது.



ராணுவப் புரட்சிக்கிடையில் மன்னரின் பயணம்

நாக்யுப் எகிப்தின் அதிபர் ஆனார். நாஸிர் பிரதமர் ஆனார். பிரிட்டன் தன் படைகளை முற்றிலுமாக விலக்கிக் கொண்டது. 1953, ஜூன் 18-ல் எகிப்து குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. பேபி மன்னன் இரண்டாம் ஃபுவாட், விவரம் தெரிவதற்கு முன்பாகவே பதவியிழந்த எகிப்தின் கடைசி மன்னன் ஆகிப் போனான். நாரிமன், ஃபாருக்கிடமிருந்து விவாகரத்து வாங்கி விட்டு விலகினாள்.

ஃபாருக், தனது ப்ளேபாய் வாழ்க்கையை சௌகரியமாகவே தொடர்ந்தார். ஜோன் என்ற சர்க்கஸ் பெண், லூசியானோ என்ற நிழலுலக

மங்கை, பிரிகிட்டா என்ற பேரழகுப் பதுமை, இறுதியாக இர்மா என்ற இத்தாலியப் பாடகி. குதூகலங்களுக்குக் குறைவே இல்லை. 1965, மார்ச் 17 அன்று ஃபாருக் வழக்கம்போல இறாலையும், இன்னபிற இறைச்சிகளையும் எக்கச்சக்கமாக உண்டார். சோடா குடித்தார். பின்பு ஹவானா சுருட்டு. சிறிது நேரத்தில் அப்படியே செத்துக் கிடந்தார் (வயது 45).

மாரடைப்பு, மூளையில் ரத்தம் உறைந்துவிட்டது என்றெல்லாம் பிரேதப் பரிசோதனை செய்யாமலேயே சொன்னார்கள். அவரது உடலை எகிப்துக்குள் அனுமதிக்காமல் இத்தாலியிலேயே அவசரமாகப் புதைத்தார்கள். எந்தக் காதலியும் வந்து கண்ணீர் சிந்தியதாகத் தகவல் இல்லை. எகிப்து ஆட்சியாளர்களின் சதியால் விஷம் கலக்கப்பட்ட இறால்தான் அவரது உயிரைப் பறித்தது என்ற தீரா சர்ச்சையும் உண்டு. அதனால்தானோ என்னவோ, நாஸிர் மீண்டும் ஃபாருக்கின் உடலைப் பெற்று எகிப்தில் ரகசியமாகப் புதைத்தார்.

**(வருவார்கள்…)**


**கிறுக்கு ராஜாக்களின் கதை! - 35**

**முகில், படம்: பா.காளிமுத்து**




***பப்பா டாக் பராக்!***

*1967 அல்லது 1968-ம் ஆண்டு. அந்த ஏர்லைன்ஸ் அலுவலகத்தின் தொலைபேசி ஒலித்தது. எடுத்துப் பேசியது, அங்கே பணிபுரிந்த சாதாரண இளைஞன். எதிர்முனைக் குரலைக் கேட்டதுமே, தனது ஹைதி தேசத்தின் அதிபர் பேசுகிறார் எனப் புரிந்துகொண்டான். குறிப்பிட்ட விமானம் குறித்த விவரங்களை அவர் கேட்க, பவ்யமாக, தெளிவாகப் பதில் சொன்னான். அதிபருக்குத் திருப்தி. ''உன் பெயரென்ன?'' – அதிபர் கேட்டார். அந்த இளைஞன் சொன்னது அதிபருக்குப் புரியவில்லை. தயக்கத்துடன் மேற்கொண்டு விளக்கினான்.*



*''மாண்புமிகு அதிபரே. என் தந்தை பெயர் மேஜர் டூபாண்ட். அவர் அதிபரின் மெய்க் காப்பாளர் பணியில் இருந்தார். 11 வருடங்களுக்கு முன்பு காணாமல்போய்விட்டார்'' – சொல்லி முடிக்கும்போது, அந்த இளைஞனுக்கு நாக்கு வறண்டுவிட்டது. சரியாக 11 வருடங்களுக்கு முன்பாகத்தான், அவர் ஹைதியின் அதிபராகப் பதவியேற்றிருந்தார். ''ஓ... ஆமாம். நினைவிருக்கிறது. உன் உதவிக்கு நன்றி. மகிழ்ச்சி'' என்று தொலைபேசி அழைப்பை முடித்தார்.*

*பின்பு அதிபர், தன் பிரத்யேக உதவியாளரை அழைத்தார். ''மேஜர் டூபாண்ட் இருக்கிறாரா? இல்லை, சுட்டுவிட்டோமா?'' சிறை ஒன்றில் 11 வருடங்களாக அடைக்கப்பட்டிருக்கிறார் என்று தகவல் கிடைத்தது. மறுநாள் மேஜர் விடுதலை செய்யப்பட்டார்.*

*'வாவ், வாட் ஏ ஹ்யூமன் பீயிங்!' என்றெல்லாம் சிலிர்க்க வேண்டாம். பிரான்கோயிஸ் டுவாலியெர் என்ற இயற்பெயர் கொண்டவரும், பப்பா டாக் (Papa Doc) என்று அனைவராலும் அன்பாகவும் அச்சத்துடனும் அழைக்கப்பட்ட அந்த அதிபரின் வன்முறை வரலாற்றை விரிவாகத் தெரிந்து கொண்டபின், ஒரு முடிவுக்கு வாருங்கள்.*

*பிரான்ஸின் மிக முக்கியமான காலனி நாடாக இருந்தது, கரீபியன் தீவான ஹைதி. பல்வேறு தேசங்களில் காலனியாதிக்கம், இருபதாம் நூற்றாண்டில்தான் முடிவுக்கு வந்தது. ஆனால், 1804-லேயே மாவீரன் நெப்போலியனின் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்த ஹைதி வீரர்கள், தம் தேசத்தை பிரான்ஸிடமிருந்து விடுவித்தனர். ஆனால், ஹைதி மக்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிட்டவே இல்லை. இன்றைக்கும் உலகில் பின்தங்கிய நாடுதான் அது.*

*காரணங்கள் பல உண்டு. மக்கள்மீது அக்கறை கொண்ட ஆட்சியாளர்கள் அங்கே தோன்றவில்லை. பப்பா டாக்குக்கு முன்பாக, ஹைதியில் 31 பேர் அதிபராக இருந்துள்ளனர். அதில், 18 பேர் அடித்து*

விரட்டப்பட்டுள்ளனர்; அல்லது கொல்லப்பட்டுள்ளனர். அந்தத் தர(மற்ற) வரிசையில் நிரந்தர சூப்பர் ஸ்டார், பப்பா டாக்!

அமைதியான நீதிமான், சிறந்த நீதிபதி என்ற பெயர் டூவால் டுவாலியெருக்கு உண்டு. அவரின் மனைவி உல்லிஸியா, பேக்கரி தொழில் செய்தவர். இருவருக்கும் பிறந்த மகன் பிரான்கோயிஸ் டுவாலியெர் (1907). கல்வியில் ஆர்வமுடன் இருந்த பிரான்கோயிஸ், டாக்டர் ஆனார். உள்ளூர் மருத்துவமனைகளில் தனது பணியைத் தொடங்கினார். பின், ஒரு வருடம் அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பு முடித்தார்.



மனைவியுடன் அதிபர்

Yaws என்ற தோல் தொற்றுநோய், மலேரியா, டைஃபஸ் போன்றவை ஹைதியில் அதிகமாகப் பரவின. அவற்றைக் கட்டுப்படுத்த அமெரிக்காவின் நிதியுதவியுடன் மருத்துவக் குழு அமைக்கப்பட்டது. அதில் பிரான்கோயிஸும்

இடம்பெற்றார். தேசம் முழுக்கப் பயணம் செய்து பலதரப்பட்ட மக்களைச் சந்தித்தது, அவருக்குப் பேரனுபவமாக இருந்தது. தம்மை நோயிலிருந்து மீட்க வந்த அந்த உள்ளூர் கறுப்புக் கடவுளை ஹைதி மக்கள் அன்புடன் கொண்டாடினர். 'பப்பா டாக்' என்று செல்லமாக அழைத்தனர். பப்பா, அங்கே மரியாதைக்குரிய சொல். டாக்டரின் சுருக்கம் 'டாக்'.

ஹைதி சுதந்திரத் தேசமெனினும், அமெரிக்காவின் ஆதிக்கம் அங்கே பரவியிருந்தது. முலாட்டோ (Mulatto) என்றால் கறுப்பினத்தவரும், வெள்ளையினத்தவரும் கலந்து உருவாக்கிய சந்ததியினர். ஹைதியில் முலாட்டோக்களின் எண்ணிக்கை குறைவென்றாலும், அவர்களே அதிகாரம் செய்யும் இடத்தில் இருந்தனர். பப்பா டாக், ஒரு மருத்துவராக அமெரிக்கர்களுடன் ஒட்டி உறவாடினாலும், அவர் வெள்ளை ஆதிக்கத்தை வெறுத்தார். முலாட்டோக்கள் முடக்கப்பட்டு, தன்னைப்போல அசல் கறுப்பினத்தவர்களே முழுமையாக அதிகாரப் பீடத்தில் அமர வேண்டுமென விரும்பினார். கறுப்பின மக்களுக்காகக் குரல் கொடுக்கும் Négritude என்ற இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அது 'வூடூ' மார்க்கத்தை ஆதரிக்கும் இயக்கம்.

அதென்ன வூடூ (Voodoo)? பொம்மையில் ஊசிகளைக் குத்தி, பில்லி சூனியம் வைக்கும் மாந்திரீக முறை; அல்லது இறந்தவர்களை எழுப்பி ரத்தம் குடிக்கும் ஸோம்பிகளாகத் திரிய விடும் வழிபாடு. இவையெல்லாம் ஹாலிவுட் படங்கள் உருவாக்கியிருக்கும் வூடூ குறித்த பொய் பிம்பங்கள். வூடூ என்பது கடவுளை வழிபடும் மாந்திரீக முறைதான். மந்திர தந்திரங்களுடன், ஆப்பிரிக்க பச்சை இலை மருத்துவமும் உள்ளடங்கியதே வூடூ. அதில் பில்லி சூனியம் ஒரு சிறுபகுதி. ஹைதி மக்களின் பிறப்பு, இறப்பு, திருமணம், தொழில், பகை என அனைத்திலும் வூடூ பின்னிப் பிணைந்தது. பிரெஞ்சுக்காரர்களை ஹைதியிலிருந்து விரட்டியடிக்கவும் வூடூ மந்திர சக்தி பயன் படுத்தப்பட்டதாகப் பதிவுகள் உள்ளன.






வூடூ சடங்குகள்

வூடு மந்திரவாதிகள் பலரையும் சந்தித்த பப்பா டாக், அவர்களது மந்திர சக்தியில் மனம் தொலைத்தார். ஹைதியின் பாரம்பர்யமும் பெருமையும் நிறைந்த 'வூடு' மார்க்கத்தின் மீது அதீதப் பற்று அவருக்கு உண்டானது. Gradual Evolution of Voodoo என்ற ஒரு புத்தகத்தை எழுதினார்; ஒரு பத்திரிகையையும் நடத்தினார். பிற்காலத்தில் பப்பா டாக், தனது அரசியல் வளர்ச்சிக்கும், மக்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும் வூடுவை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார், இந்துத்துவா போல.

திருமணம் (சிமோன் என்ற பெண்ணுடன்). குழந்தைகள். தேசத்தின் புகழ்பெற்ற மருத்துவர். பத்திரிகையாளர். நிதானமாக அரசியலிலும் அடியெடுத்து வைத்தார் பப்பா டாக். 1946-ல் ஹைதியின் அதிபராக இருந்த டுமார்செய்ஸுக்கு நெருக்கமாக இருந்தார். தேசியப் பொதுசுகாதார சேவைத்

துறையின் நிர்வாக இயக்குநர் பதவி கிட்டியது. அடுத்த மூன்று ஆண்டுகளில் சுகாதாரம் மற்றும் தொழிலாளர் துறையின் அமைச்சராகவும் உயர்ந்தார். 1950-ல் டுமார்செய்ஸ் தனது அதிபர் பதவிக்காலத்தை நீட்டிக்க நினைத்தார். ராணுவத் தளபதியாகவும், பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் இருந்த பவுல் மக்லோய்ரே, டுமார்செய்ஸை விரட்டியடித்துவிட்டு தானே அடுத்த அதிபர் ஆனார்.

டுமார்செய்ஸின் ஆதரவாளர்களுக்கெல்லாம் கெட்ட காலம் ஆரம்பமானது. ஆகவே, பப்பா டாக்கும் பதுங்கினார். பெண் வேடமெல்லாம் போட்டுக்கொண்டு வெளியே திரிந்த அந்த இக்கட்டான காலகட்டத்தில், அவருக்கு உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் இருந்த நபர் கிளெமென்ட் பார்போட். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் பப்பா டாக்கு. அந்தக் கறுப்புக் கொக்கின் வசந்த காலம் 1956-ல் வந்தது.



**கிளமெண்ட் பார்போட்**

பவுலின் பதவிக்காலம் முடிந்ததும் அவரும் விரட்டியடிக்கப்பட்டார். பின், தற்காலிக அதிபராக சிலர் வந்து போயினர். 1957-ல் ஹைதி அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட்டது. 'நானும் போட்டியில் இருக்கிறேன்' - நீண்ட காலத்துக்குப் பிறகு வெளியே வந்து நெஞ்சு நிமிர்த்தினார் பப்பா டாக். நேஷனல் யுனைட்டி பார்ட்டியின் வேட்பாளராக நின்ற அவருக்கு மக்கள் ஆதரவும், ராணுவத்தின் ஆதரவும் பெருகியது. எதிர்த்து நின்ற லூயிஸும் லேசுப்பட்ட ஆள் அல்ல. வசதியான பண்ணையார். விவசாயக் கட்சியின் அனுபவ அரசியல்வாதி. நேஷனல் பார்ட்டியைச் சேர்ந்த கிளமென்ட்

என்பவரும் போட்டியில் நின்றார். அதிபர் பதவி வெறியிலிருந்த பப்பா டாக், தனது அசிங்க அரசியலை ஆரம்பித்தார். கடத்தல், முறைகேடுகளுடன் நடந்த அந்த அநீதித் தேர்தல் முடிவுகளின்படி, பப்பா டாக் 72.4 சதவிகித வாக்குகளுடன் வென்றார். ஹைதியின் 32-வது அதிபராக 1957 அக்டோபர் 22 அன்று பதவியில் அமர்ந்தார். 'சேவை மனம் கொண்ட ஒரு மருத்துவர் அதிபராகி விட்டார். இது ஹைதியின் மறுமலர்ச்சி' என்று மக்கள் கொண்டாடினார்கள்.



1958ல் ராணுவ உடையில்
பப்பா டாக்

அதிபராக பப்பா டாக்கின் ஆரம்ப காலம், அவருக்கு அச்சுறுத்தல் நிறைந்ததாகத்தான் இருந்தது. ஹைதியின் தலைநகரமான போர்ட்-ஓ-பிரின்ஸில், 1958, ஜூலை 28 அன்று ஓர் அரைவேக்காட்டு ராணுவப்புரட்சி நிகழ்ந்தது. அமெரிக்கக் கூலிப்படையினர் ஐந்து பேர், ஹைதி ராணுவ அதிகாரிகள் மூவருடன் இணைந்து ராணுவ வளாகத்தைக் கைப்பற்றும் முயற்சியையும், அதிபர் மாளிகையைத் தாக்கி பப்பா டாக்கைக் கொல்லும் திட்டத்தையும் செயல்படுத்தினர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததுபோல ராணுவ ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. திட்டங்கள் சொதப்பின. விஷயமறிந்த பப்பா டாக், காக்கி ராணுவ உடை, தலையில் ஹெல்மெட், கைத்துப்பாக்கியுடன் களத்தில் இறங்கினார். புரட்சி வீழ்த்தப்பட்டது. எட்டுப் பேருமே கொல்லப்பட்டனர். அவர்களில் சிலரது உடல்கள் சாலைகளில்

இழுத்துச் செல்லப்பட்டபோது, ‘தர்மத்தின் வாழ்வுதனை...’ என்ற மனநிலையில் ஹைதி மக்கள் உற்சாகக் குரல் எழுப்பினர். ராணுவ உடையில் பப்பா டாக்கின் புகைப்படம் நாளிதழ்களில் வெளிவர, அவர் ‘சூப்பர் ஹீரோ’ ஆனார்.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த பப்பா டாக், தன் உடலில் இன்சுலின் செலுத்திக்கொள்வது வழக்கம். 1959-ல் ஒருநாள் இன்சுலின் அதிகமாகிப் போக, கடும் மாரடைப்பால் மூர்ச்சை யடைந்தார். ஒன்பது மணி நேரம் கழித்தே நினைவு திரும்பியது. அந்த மாரடைப்பால் பப்பா டாக்கின் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டது; சற்றே மனநலமும்.

அடுத்தடுத்து இருமுறை மரணத்திலிருந்து தப்பித்த பப்பா டாக், அதுவரை பல உயிர்களை நோயிலிருந்து மீட்ட அந்த டாக்டர், அதற்குப்பின் பல்லாயிரம் உயிர்களைப் பிடுங்கியெறியத் தயாரானார்.

(பப்பா டாக் வருவார்...)

***கிறுக்கு ராஜாக்களின் கதை! - 36***

***முகில், படம்: பா.காளிமுத்து***




***மண்டை ஓட்டின் மரணப் புன்னகை!***

*மக்களின் முட்டாள்தனமே ஆட்சியாளர்கள் சர்வாதிகாரத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கான மூலதனம். அதுவும் கல்வியறிவற்ற, மூடநம்பிக்கை களில் ஊறிய பாமர மக்கள் என்றால், ஏமாற்றுவதற்கு மிகவும் வசதி. பிரான்கோயிஸ் டுவாலியெர் (எ) பப்பா டாக், ஒரு மருத்துவராக ஊர் ஊராகச் சேவை செய்தார். மருந்துகள் கொடுத்து நோயைப் போக்கினார். ஆனால், அந்த மக்களோ மருந்துகளின் சக்தியையெல்லாம் உணரவில்லை. 'எல்லாம் வல்ல பப்பா டாக்கின் மந்திர சக்தியே சர்வரோக நிவாரணி' என்று மனதார நம்பினர். அவரும் தன்னை 'வூடு' மார்க்கத்தின் தீவிர ஆதரவாளராக நிலைநிறுத்தினார். 1957-ல் ஹைதியின் அதிபராக அதிகாரத்தைக் கைப்பற்றினார்.*

*அதுவரையிலான ஹைதியின் அதிபர்கள் பலரும் முழு ஆட்சிக்காலத்தை அனுபவித்ததில்லை; அல்லது அவர்களுக்கு நல்ல சாவே வந்ததில்லை. பப்பா டாக்கும் பதவியேற்ற ஒரு வருடத்துக்கு உள்ளாகவே கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார். எல்லாம் ராணுவத்தின் சதி. அதுவரை ராணுவத்திலிருந்துதான் அதிபர்கள் பலரும் உதித்திருக்கிறார்கள். ஆகவே, ராணுவத்தின் முக்கிய தலைகளையெல்லாம் தூக்கினார். ஹைதியில் ராணுவம் என்பதையே டம்மியாக்கினார். பதிலாக, தனக்கு விசுவாசமான, தன் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து செயல்படும் மூர்க்கப் படை ஒன்றை உருவாக்கினார். Tonton Macoute.*




**டான்டான்**
**சின்னம்**

'ரொம்ப சேட்டை பண்ணா பூச்சாண்டி புடிச்சுட்டுப் போயிடுவான்' என்று குழந்தைகளைப் பயமுறுத்துவோம் அல்லவா? 'டான்டான் மேக்கூட்' என்பவன் ஹைதி நாடோடிக் கதைகளில் வரும் பூச்சாண்டி. 'அடங்காத குழந்தைகளைச் சாக்குப்பையில் பிடித்துச்சென்று காலை உணவாகக் கடித்துத் தின்பான்' என்று மக்கள் பயமுறுத்துவார்கள். அந்தப் பூச்சாண்டிக்கு உயிர்கொடுத்து உலவ விட்டார் பப்பா டாக். 'தேசத்தைப் பாதுகாக்கவே இந்த மக்களின் ராணுவம்' என்றார். உண்மையில் அவர்கள் துப்பாக்கிகளுடன் திரிந்த கூலிப்படை. வூடு மந்திரவாதிகள் பலர் டான்டான் தளபதிகளாக மாறினர். அதிபரைப் பாதுகாப்பது அவர்களின் கடமை. அதற்காக யாரை வேண்டுமானாலும் கொல்லலாம் என்பது அவர்களின் உரிமை. ஆம், அவர்களின் சின்னம்கூட மண்டைஓட்டின் மரணப் புன்னகையாகத்தான் இருந்தது. அந்தப் படையைப் போஷாக்குடன் வளர்க்க, பணத்தை அளவின்றிச் செலவு செய்தார் பப்பா டாம். ஆனால், செலவு கட்டுப்படியாகவில்லை.




பப்பா டாக்

அந்தத் தருணத்தில்தான், ஃபிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா வடிவத்தில் அதிர்ஷ்டக் காற்று ஹைதி பக்கமாக வீசியது. 1959 ஜனவரியில் கியூபாவில் காஸ்ட்ரோவின் புரட்சி வென்றது. கியூபா தன்னை சோஷலிச நாடாகப் பிரகடனம் செய்துகொண்டது. ஆகவே, அமெரிக்காவுக்கு அடிவயிறு எரிந்தது. கியூபாவிலிருந்து 50 மைல் தொலைவிலிருந்த ஹைதியும் அமெரிக்காவுக்குப் பிடிக்காத தேசம்தான். ஆனால், பப்பா டாக்கை அனுசரித்துச் செல்ல வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு உண்டானது. 'நான் கம்யூனிஸத்தின் தீவிர எதிர்ப்பாளன். ஆனால், எப்போதும் அப்படி இருக்க முடியாதல்லவா? கரீபியன் தீவுகளெங்கும் கம்யூனிஸக் காற்று வீசும்போது, அது ஹைதியிலும் வீசலாம்தானே?' – நெளிவு சுளிவுடன் தெளிவாக அமெரிக்காவை மிரட்டினார் பப்பா டாக். 'ஹைதியின் மேம்பாட்டுக்காக இத்தனை மில்லியன் டாலர் முதல் கட்டமாக ஒதுக்குகிறோம்' என்று அறிவித்தது அமெரிக்க அரசு. பப்பா டாக் நன்றியுடன் கைகுலுக்கினார்.

தேசத்தின் மேம்பாட்டுக்காகக் கிடைத்த நிதியைத் தனக்கும், தன் கூலிப்படையைக் கொழுகொழுவென வளர்க்கவும் பயன்படுத்திக் கொண்டார். ஹைதியின் ராணுவத்தைவிட, பல மடங்கு பெரிய படையாக

டான்டான் மேக்கூட் வளர்ந்து நின்றது. குறிப்பாக அரசியல் எதிரிகளுக்கும், கறுப்பு-வெள்ளைக் கலப்பினத்த வர்களான முலாட்டோக் களுக்கும் எதிராகத் தோட்டாக்களைப் பாய்ச்சியது. ஒருவர் காணாமல்போனால், அவர் அடுத்த சில நாள்களில் ஏதாவது ஒரு மரத்தில் பிணமாகத் தொங்கலாம் அல்லது ஏதாவது ஒரு கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டுச் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கலாம் அல்லது கல்லால் அடித்துக் கொல்லப்பட்டு இருக்கலாம். ‘ஐயோ’ என்று கதறியழுது அந்த உடலை எடுத்து இறுதிச்சடங்கு செய்ய நினைக்கும் குடும்பத்தினருக்கும் அதே கதிதான். அளவற்ற கொலைகள். எண்ணற்ற பாலியல் பலாத்காரங்கள். நீல டெனிம் உடை, வைக்கோல் தொப்பி, கறுப்புக் கண்ணாடி, கையில் துப்பாக்கி, இடுப்பில் பட்டைக்கத்தி தோற்றத்துடன் திரிந்த டான்டான்களின் ஆட்டத்துக்கு அதிபரின் முழு ஆசியும் இருந்தது.



டான்டான் படையினர்

*பப்பா டாக்கின் அரசியல் வளர்ச்சியில் பங்கெடுத்தவரும், நீண்டகால நண்பருமான கிளமென்ட் பார்போட், டான்டான் படையின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். 1959-ல் பப்பா டாக் மாரடைப்பால் பாதிக்கப்பட்டு சில காலம் ஓய்வில் இருந்த சமயத்தில், பார்போட் வசமே ஆட்சி அதிகாரம் இருந்தது. பப்பா டாக் உடல் தேறியும், சற்றே மனநலம் பாதிக்கப்பட்டும் மீண்டுவந்தபோது, அவரைச் சந்தேகம் அபகரித்தி ருந்தது. பார்போட் தன்னைக் கவிழ்த்து ஆட்சியைப் பிடிக்க நினைக்கிறாரோ? யோசிக்கவே இல்லை. பார்போட்டைச் சிறையில் அடைத்தார்.*

*1961-ல் அதிபர் பப்பா டாக்கின் ஆட்சிக்காலம் நிறைவுக்கு வரவிருந்தது. ஹைதியின் அரசியல் சட்டப்படி, ஒருவர் ஒருமுறை மட்டுமே அதிபராக முடியும். சர்வாதிகார மனோபாவத்தைச் சட்டம் என்ன செய்ய முடியும்? பப்பா டாக், ஹைதியின் இரண்டு அவைகளையும் இணைத்து ஒரே அவையாக மாற்றினார். 1961-ல் மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினார். 'பிரான்கோயிஸ் டுவாலியெர், அடுத்த ஆறு ஆண்டுகளுக்கும் அதிபராகத் தொடரலாமா?' வாக்குச்சீட்டில் 'ஆம்' என்பது மட்டுமே உண்டு. 'இல்லை'க்கு இடமில்லை. '13,20,748 பேர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எதிராக விழுந்த ஓட்டு 0'. அப்படித்தான் முடிவை அறிவித்தார்கள்.*

*''மக்களின் தீர்ப்பை மறுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை' – அதிபர் மாளிகையின் பால்கனியிலிருந்து வெற்றிச் சின்னம் காட்டினார் பப்பா டாக். ஆட்டுமந்தைக் கூட்டத்தின் ஆரவாரம் 'ம்மே' என்று ஒலித்தது. 'நியூயார்க் டைம்ஸ்' கதறியது. 'லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேர்தல்களில் எத்தனையோ மோசடிகள் நடந்துள்ளன. இப்படி ஒரு மூர்க்கத்தனமான மோசடி, வரலாற்றிலேயே பதிவானதில்லை!'*

*1963-ல் பார்போட்டை பாவப்பட்டு விடுதலை செய்திருந்தார் பப்பா டாக். வெளியில் வந்த பார்போட், தன் ஆதரவாளர்களுடன் சேர்ந்து சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினார். அதன்படி, பாதுகாப்பு அதிகாரிகளைச் சுட்டு வீழ்த்தி, பப்பா டாக்கின் குழந்தையைக் கடத்தி மிரட்டினர். அதன் மூலம்*

அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தனர். விஷயமறிந்து விஷப்பாம்பாகச் சீறினார் அதிபர். டான்டான்கள் எட்டுத்திக்கும் தேடுதல் வேட்டை நடத்தினர். சந்தேகத்துக்குரிய பழைய எதிரிகளை, மிஞ்சியிருக்கும் அவர்களின் குடும்பத்தினரைச் சுட்டுவீழ்த்தினர். பார்போட் எளிதில் பிடிபடவில்லை.




**கியூபா புரட்சி**

'அவன் வூடு மந்திர சக்தி மூலம் தன்னை ஒரு கறுப்பு நாயாக மாற்றிக் கொண்டிருந்தால்?' – பயந்தார் பப்பா டாக். தேசமெங்கும் திரியும் கறுப்பு நாய்களையெல்லாம் சுட்டுக் கொல்லச் சொன்னார். ஏராளமான கறுப்பு நாய்களது உயிர்த் தியாகத்துக்குப் பிறகு பிடிபட்ட பார்போட், மனித வடிவிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதிபர் மாளிகையில் பாதுகாப்பு பல மடங்கு பலப்படுத்தப்பட்டது. திரும்பிய திசையெங்கும் துப்பாக்கி வீரர்கள். அந்நியர் எவரும் நுழைந்துவிடவே முடியாது. பப்பா டாக் எங்கே சென்றாலும் சுற்றிலும் பல கார்களில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் பின்தொடர்ந்தனர். இருந்தாலும், அவர் சில இடங்களில் மக்களோடு மக்களாகக் கலந்து நின்றார். அவர்களிடம் ரேஷன் புன்னகை சிந்தி பேசினார். தன் கோட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து, எண்ணிப் பார்க்காமல் கொடுத்தார். பொன்மனச் செம்மலாகவும்,

வாழும் வள்ளலாகவும் அவரை அப்பாவி மக்கள் கொண்டாடினார். அவர் காருக்குப் பின்னே ஏழை மக்கள், 'பப்பா... பப்பா...' என்று கத்தியபடியே ஓடுவதும், அவர் உள்ளிருந்தபடியே பணத்தை விட்டெறிவதும் வழக்கமான காட்சிகள்.

அதிபர் கென்னடி



'யார் அப்பன் வீட்டுப் பணத்தை எவன் அனுபவிப்பது?' அப்போதைய அமெரிக்க அதிபர் ஜான் கென்னடி ஆத்திரமடைந்தார். ஹைதிக்குப் பாய்ச்சும் பணமெல்லாம் அதிபரின் வாய்க்குள் போகிறதென உஷ்ணமானார். அமெரிக்க உதவி அனைத்தையும் நிறுத்தினார். 'பப்பா டாக்கை அகற்றுவது எப்படி, ஹைதியில் மீண்டும் ஜனநாயகத்தைக் கொண்டு வருவது எப்படி' என்றெல்லாம் வெள்ளை மாளிகையில் விவாதித்தார்கள்.

*1963*, நவம்பர் *22*. அதிகாலை முதலே ஹைதி அதிபர் மாளிகையில் பப்பா டாக்கின் வூடு பூஜைகள் ஆரம்பமாகியிருந்தன. ஏதேதோ மந்திரங்களை முணுமுணுத்தபடி, பொம்மை ஒன்றைக் கையில் எடுத்தார். அதை ஊசியால் குத்த ஆரம்பித்தார். மீண்டும் மீண்டும். *2222* முறை. (*22*

என்பது பப்பா டாக்கின் அதிர்ஷ்ட தேதி. அவர் அதிபராக ஆனதும் 22-ம் தேதியில்தான்).

அதே தினத்தில், அமெரிக்க அதிபர் ஜான் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். காதுகளுக்கு செய்தி எட்டிய தருணத்தில், பப்பா டாக் தன் ஆதரவாளர்களுடன் மகிழ்ச்சியாக ஷாம்பெய்ன் அருந்திக் கொண்டிருந்தார். அலட்சியப் புன்னகையுடன் சில சொற்களை உதிர்த்தார். ''வூடு மந்திர சக்தியால் கென்னடிமீது சாபத்தை ஏவினேன். அதுவே அவரது உயிரைப் பறித்தது.''




1964, ஜூன் 14 அன்று, பப்பா டாக் வாக்கெடுப்பு என்ற பெயரில் இன்னொரு கருத்துத் திணிப்பை நிகழ்த்தினார். 'பிரான்கோயிஸ் டுவாலியெரை ஹைதியின் வாழ்நாள் அதிபராகத் தேர்ந்தெடுக்கிறேன்'. வாக்குச்சீட்டில் 'ஆம்' என்பது பெரும்பாலும் டிக் செய்யப்பட்டிருந்தது. அவற்றைப் பெட்டியில் போட மட்டும் வாக்காளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இருந்தும் 0.1% (3,234 பேர்) இல்லை என்று வாக்களித்திருந்தனர். அந்த நல்லவர்களை பப்பா டாக்கால் கண்டறிய முடியவில்லை. ஜனநாயகத்துக்குச்

சவப்பெட்டி வாங்க, சர்வாதிகார முறையில் தேர்தல் நடத்தி ஹைதியின் அல்டிமேட் சக்தியாக விஸ்வரூபம் எடுத்தார் பப்பா டாக்.

கென்னடியின் மரணத்துக்குப் பிறகு அமெரிக்காவின் அழுத்தத்திலிருந்து விடுபட்டார் பப்பா டாக். ஆனால், அதே அமெரிக்காவின் நியூயார்க் நகரத்திலிருந்து 13 பேர் கிளம்பினார்கள். அவர்கள், அமெரிக்காவில் வாழ்ந்த ஹைதி இளைஞர்கள். 'பப்பா டாக்கைக் கொன்று, அவரது கோரப் பிடியிலிருந்து ஹைதியை மீட்டே தீர வேண்டும்' என்று சபதம் எடுத்திருந்தார்கள். உத்வேகத்துடன். உக்கிரத்துடன்.

(பப்பா டாக் வருவார்...)

முகில், படம்: பா.காளிமுத்து




## சர்வாதிகாரமே ஜனநாயகம்!

உயரமான வட்ட வடிவக் கறுப்புத் தொப்பி, மண்டைஓட்டு முகம், வாயில் சுருட்டு, கையில் ரம், வால்போலத் தொங்கும் நீள கறுப்பு கோட். Baron Samedi என்றழைக்கப்படும் ஹைதி எமக்கடவுளின் நவீன உருவச் சித்திரிப்பு இதுவே. 'மண்ணில் உதித்திருக்கும் பரானின் அவதாரம் நானே' என்று பகிரங்கமாகவே பிரகடனப்படுத்திக்கொண்டார் ஹைதி அதிபர் பப்பா டாக். 'அந்த எமனுக்கே எமன் நாங்கள்' என்று நியூயார்க்கிலிருந்து, 'Jeune Haiti' (இளைய ஹைதி) என்ற அமைப்பினர் ரகசியமாகக் கிளம்பினார்கள்.



பேபி டாக் உடன் பப்பா டாக்

*13 பேர். அனைவருமே பப்பா டாக்கினால் குடும்பத்தையோ, உறவுகளையோ இழந்து பாதிக்கப்பட்டவர்கள். 1964, ஆகஸ்ட் 5 அன்று, ஹைதியில் வந்து இறங்கினார்கள். கியூபாவில் காஸ்ட்ரோவின் புரட்சி வென்றதுபோல, ஹைதியில் தங்கள் புரட்சியும் வெல்லும் என்று கனவு கண்டார்கள். கெரில்லா தாக்குதல் நடத்தி, பப்பா டாக்கைக் கொன்று, அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவர்களது லட்சியம்.*

*இப்படி ஒரு குழு ஹைதிக்குள் ஊடுருவியிருக்கிறது என்ற தகவல் பப்பா டாக்கின் காதுகளுக்கு வெகு சீக்கிரமே வந்துசேர்ந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட டான்டான் படையினரையும், ஹைதி ராணுவ வீரர்களையும் தேடுதல் வேட்டை யில் இறக்கினார். அந்த 13 பேரும் தங்கள் திட்டத்துக்குள் முழுமையாக இறங்கும் முன்னரே உயிர் தப்பிக்க காடு, மலை என்று பதுங்கி ஓடினார்கள். செப்டம்பர் 8-ம் தேதிக்குள், அமைப்பின் தலைவரான ஜெரால்டு உள்ளிட்ட நான்கு பேர் துப்பாக்கிச் சண்டையில் கொல்லப் பட்டிருந்தனர். தேடுதல் வேட்டை மேலும் முடுக்கிவிடப்பட்டது. அக்டோபர் 26-க்குள் மேலும் இருவர் கைதாகியிருந்தனர். ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். மீதி அனைவரும் கொல்லப்பட்டிருந்தனர்.*

*1964, நவம்பர் 12, பொது விடுமுறை அறிவிக்கப்பட்டது. கைதான லூயிஸ் டுரோயின், மார்சல் நுமா ஆகிய இருவரும் பொது இடத்தில் தனித்தனியே கம்பங்களில் கட்டப்பட்டிருந்தனர். வெறுமையும் பயமும் சூழ்ந்திருந்த அந்த இரு ஜோடிக் கண்களுக்கு முன், ஏகப்பட்ட வீரர்கள், துப்பாக்கியால் குறிபார்த்தபடி. அவர்களுக்கான மரண தண்டனை, மக்கள் முன்னிலையில், ஏராளமான பள்ளி மாணவர்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட வேண்டுமென பப்பா டாக் கட்டளையிட்டிருந்தார். தவிர, அந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டு நாடெங்கும் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டது. 'இனி எவனுக்கும் புரட்சி செய்யும் எண்ணமெல்லாம் பொங்கக்கூடாது' என்று பூச்சாண்டி காட்டவே அந்த ஏற்பாடு. கட்டளையிடப்பட்ட நொடியில் சரவெடி போல, தோட்டாக்களின் தொடர் முழக்கம். ரத்த வெள்ளத்தில் இருவரது தலைகளும் தொங்கின.*

பப்பா டாக், தனது சொந்த இன மக்களைக் கொல்வதற்கென்றே வதைக்கூடங்களையும் ஏற்படுத்தியிருந்தார். கூடங்களின் சுவர்களில் இருக்கும் துவாரங்கள் வழியாக சித்ரவதைகளைச் சில்லென ரசிப்பது அதிபரின் பொழுதுபோக்கு. குறிப்பாக, கந்தக அமிலத்தைக் கொட்டி, அதில் கைதிகளைக் குளிக்கச் சொல்லித் தள்ளப்படுவதை மிகவும் ரசித்தார். கொல்லப்பட்ட சிலரது தலைகள் மட்டும் தனியே அதிபருக்கு அனுப்பப்பட்டன. அவற்றைக் கொண்டு அவர் வூடு பூஜைகள் செய்தார் என்றும், சாகடிக்கப்பட்டவர்களின் உடல் உறுப்புகள் வெட்டப்பட்டுத் தனித்தனியாக விற்கப்பட்டன என்றும் தகவல்கள் உண்டு.

விஷயமெல்லாம் பெரிதாக வெளியே பரவவில்லை. காரணம், அதிபரான பிறகு அனைத்துப் பத்திரிகைகளுக்குமே முடிவுரை எழுதினார் பப்பா டாக். அவருக்கு எதிராகச் செயல்பட்ட பத்திரிகையாளர்களைக் கொன்றார். அடித்து விரட்டினார். குடும்பத்தினரை வதைத்தார். அந்தக் குடும்பத்தின் பெண்கள்...



இருவரின் மரண தண்டனை

இதெல்லாம் தெரிந்தும் சில வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அரும்பாடுபட்டு அவரைச் சந்தித்துப் பேசினர். பப்பா டாக்கின் ஆட்சியை ஆவணப்படுத்திய பிரிட்டனைச் சேர்ந்த ஆலன் விக்கர் கேட்ட கேள்வி இது. 'உங்களைச் சர்வாதிகாரி என்கிறார்களே?' அலட்சியமும் செருக்கும் நிறைந்த ஓரப்புன்னகையுடன் அவர் சொன்ன பதில், ''அமைதியும் நிலையான ஆட்சியும் நிலவ என்னைப் போல வலிமையான தலைவர் ஒவ்வொரு தேசத்துக்கும் வேண்டும். வலிமையான தலைவர் என்றால் சர்வாதிகாரி அல்ல.

நீங்கள் சர்வாதிகாரம் என்றழைப்பதை, எங்கள் தேசத்தில் ஜனநாயகம் என்கிறோம்.''

மக்களை நேரடியாக வதைத்தது மட்டுமன்றி, வரிகள் மூலமாகவும் வதைத்தார். ஹைதியின் முக்கிய விளைபொருள்களான கரும்பு, காபி, கடலை போன்றவற்றுக்கே வரிகள் கடுமையாக இருந்தன. அரசு லாட்டரி, அரசுப் பத்திரங்களை யெல்லாம் வாங்கியே தீரவேண்டுமென அரசு ஊழியர்களின் சம்பளப் பணம் அபகரிக்கப்பட்டது. Duvalierville என்றொரு அதி நவீன நகரம் கட்டப் போவதாகச் சொல்லி, அதில் பெரும் பணத்தை ஏப்பம் விட்டார் பப்பா டாக். அது கட்டி முடிக்கப் படவே இல்லை.

'தோட்டாக்களால் என் உடலைத் துளைக்கவே முடியாது. ஏனென்றால், நான் மனிதனைவிட மேலானவன்! மரணமில்லாதவன்!' – என்று பொதுக் கூட்டங்களில் மார்தட்டிக் கொண்டார் அதிபர். ஆனால், அவரைச் சுற்றி எப்போதும் விசுவாச டான்டான்கள் துப்பாக்கிகளுடன் பாதுகாப்புக்கு நின்றனர். எந்தச் சதிகாரன் எப்போது தன்னைக் கொல்வானோ என்ற பயம் நிரந்தரமாக அவரது மனதில் அப்பிக் கிடந்தது. ஆயுதக் கிடங்கைத் திறக்கும் தங்கச் சாவியை எப்போதும் அவர் கோட் பாக்கெட்டிலேயே வைத்துக் கொண்டார். வீரர்கள் சூழ காரில் வலம் வந்தாலும், தன் பாதுகாப்புக்காகக் கையோடு ஒரு 'மெஷின் கன்'னும் எடுத்துக் கொண்டார். அவர் பயந்ததுபோலவே, அடுத்த சதியும் அரங்கேற எத்தனித்தது.

1967. ராணுவ அதிகாரிகள் 19 பேர் தனக்கு எதிராகச் செயல்படுவதைக் கண்டறிந்தார். உடனே, துப்பாக்கிகள் வெடித்தன. 19 பேரைக் கொன்ற பிறகு, பொதுக்கூட்டம் ஒன்றில் மக்கள் மத்தியில் பப்பா டாக் உரையாற்றினார். அப்போது, அந்த பத்தொன்பது பேரின் பெயர்களை வரிசையாக வாசித்தார். 'மேஜர் ஹாரி டேஸி...' அவரே இடைவெளி விட்டு 'ஆப்சென்ட்' என்றார். 'கேப்டன் செர்ஜ் ஹிலெய்ரே... ஆப்சென்ட். லெஃப்டினன்ட் ஜோஸ்மா வேலன்டின்... ஆப்சென்ட்.' வருகைப் பதிவேடு எடுத்து முடித்துவிட்டு,

தொண்டையைச் செருமியபடி பெருமிதத்துடன் சொன்னார். 'அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.'



பேபி டாக் – மிக்கேல்

19 பேரைக் கொன்ற பின்னரும், இருபதாவதாக மேலும் ஒருவர்மீது பலத்த சந்தேகம் இருந்தது. அவர்தான் அந்தக் கும்பலின் தலைவன் என்றே எண்ணினார். அவர் பெயர், கர்னல் மேக்ஸ் டொமினிக். அதிபரின் மருமகன். அவரின் மகளான டெனிஸைத் திருமணம் செய்திருந்தார். டெனிஸ் கெஞ்சிக் கூத்தாட, இரக்கப்பட்ட பப்பா டாக், மருமகனுக்கு ஸ்பெயினின் தூதர் என்ற பதவி கொடுத்து, இருவரையும் நாட்டை விட்டு விரட்டினார். 1970-ல் மகளுக்கும் தந்தைக்குமான பிணக்குகள் தீர்ந்தன. மகள் திரும்பி வந்தாள். அதிபரின் காரியதரிசியாகப் பொறுப்பேற்றாள். மருமகன் மேக்ஸுக்குப் புதிய பதவி. பிரான்ஸின் தூதர்.

அதிபருக்கு எதிராகச் சிந்திப்பதற்குக்கூட மக்கள் பயந்தார்கள். யாராலும் அவரை அசைக்கவே முடியாது என்ற நிலை. ஆனால், 'நிரந்தர முதல்வர்', 'நிரந்தர அதிபர்' என்றெல்லாம் யாரும் நிலைத்திருக்க முடியாதல்லவா? மருத்துவரான பப்பா டாக், தன் உடல்நிலை தளர்வதை உணர்ந்தார். தினமும் பள்ளிக் குழந்தைகள் சொல்லும் கடவுள் வாழ்த்தை,

தன் புகழ்பாடுவதாக மாற்றியமைத்தார். அப்படிச் செய்தால் தன் ஆயுள் கூடும் என்ற நப்பாசை.

ஜீன்-கிளெட் டுவாலியெர் (Jean-Claude Duvalier) என்ற பேபி டாக். டாக்டரெல்லாம் அல்ல, பப்பா டாக்கின் மகன் என்பதால் அந்தச் செல்லப் பெயர். செல்லமாகவும் செழிப்பாகவும் செருக்குடனும் வளர்ந்த பணக்காரப் பொறுக்கி. பிளேபாயாகத் திரிந்துகொண்டிருந்தார். 'அவன் அரசியலுக் கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டான்' என்று பப்பா டாக் உணர்ந்திருந்தாலும், வேறு வழியின்றி தன் அரசியல் வாரிசாக முன்னிறுத்தினார். ஹைதியின் அடுத்த அதிபராக, அதுவும் வாழ்நாள் அதிபராக அறிவித்தார். ம், எத்தனைப் பேருக்கு அந்தக் கொடுப்பினை அமையும்?



பப்பா டாக்குக்கு இறுதி அஞ்சலி

*1971*, ஏப்ரல் *21*. பப்பா டாக் தன் படுக்கையிலேயே அமைதியாக இறந்துபோனார். அவரது ஆட்சிக்காலத்தில் ஹைதியில் அமைதியின்றி கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்தது *30,000*. இன்னும் சில ஆயிரங்கள் கூடுதலாகவும் இருக்கலாம். 'உலகின் இளம் அதிபர்' என்ற பெருமையுடன், *19* வயதில் பதவிக்கு வந்த பேபி டாக், எதையும் கிழிக்கவில்லை. முழுமையான அதிகாரம் 'மாமா டாக்' என்றழைக்கப்பட்ட தாயார் சிமோன் வசம் இருந்தது. டாக் குடும்பத்தினரது சர்வாதிகார வாழ்க்கை ஏகபோகமாகத் தொடர்ந்தது.

*1980*. பேபி டாக், மிக்கேல் பென்னெட் என்ற பெரும் பணக்காரியுடன் காதலில் விழுந்தார். வளர்ப்பு மகன் திருமணத்துக்கு முன்னோடியாக, பெரும் செலவு செய்து மிக்கேலை மணந்தார் பேபி டாக். அடுத்த மூன்று மாதங்கள் தேனிலவு, ஐரோப்பியச் சுற்றுப்பயணங்கள், ராயல் ஷாப்பிங், ஆடம்பர விருந்து எல்லாம் மக்களின் வலி கலந்த வரிப்பணத்தில் அரங்கேறின. பின் மருமகள் மிக்கேல், மாமியாரை ஓரங்கட்டினாள். வெளியேற்றினாள். அதிகாரத்தைக் கைப்பற்றினாள்.




பேபி டாக்கின் ஆட்சிக் காலத்திலும் ஆயிரக்கணக்கான அரசியல் கொலைகள், விதவிதமான சித்ரவதைகள் நடந்தன. கணக்கற்றோர் ஹைதியை விட்டுத் தப்பியும் ஓடினர். எய்ட்ஸ் அதிகம் பரவியது. விஷக்காய்ச்சலாலும் பட்டினியாலும் சாவுகள் பெருகின. பற்றிக்கொள்ள ஆதாரமின்றிப் பொருளாதாரம் வீழ்ந்துகிடந்தது. இருந்தாலும், தனது

*கம்யூனிஸ எதிர்ப்பு நிலையை அழுத்தமாகச் சொல்லிக் காட்டி, அமெரிக்க அரசின் செல்ல நாய்க்குட்டியாக வாலாட்டினார் பேபி டாக்.*

*1983-ல் ஹைதிக்கு வந்த போப் இரண்டாம் ஜான் பால், வேதனையை வெளிக்காட்டினார். "ஹைதியில் மாற்றம் நிகழ வேண்டும்" என்று கோடிட்டுக் காட்டினார். மாற்றம் அடுத்த ஓரிரு ஆண்டுகளிலேயே நிகழ்ந்தது. 1984-ல் Gonaives நகரத்தில் மக்களின் போராட்டம் ஆரம்பமானது. 1986-ல் அது தேசம் தழுவிய புரட்சியாகப் பரவிப் படர்ந்தது. அமெரிக்க அதிபரான ரொனால்டு ரீகன், பேபி டாக்கைப் பெட்டியைக் கட்டச் சொன்னார். பெரியண்ணனே கைவிட்டதால், பேபி டாக் தன் குடும்பத்துடன் ஹைதியை விட்டுக் கிளம்பினார். தனி அமெரிக்க விமானம். அது முழுக்கச் செல்வங்களை அள்ளிப் போட்டுக்கொண்டு பிரான்ஸுக்குத் தப்பியோடினார். ஹைதி மண்ணில் டுவாலியெர் குடும்பத்தின் சுமார் 30 வருட இருண்ட கால ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆனால், இன்று வரை ஹைதிக்கு விடியவே இல்லை.*

(வருவார்கள்...)

முகில், படம்: பா.காளிமுத்து

# கிறுக்கு ராஜாக்களின் கதை!


## புனிதப் பழிவாங்கல்!

'ஆட்டு மந்தைக்குள் ஓர் ஓநாய் புகுந்துவிட்டால், அது உள்ளுக்குள் இருந்தபடியே ஒவ்வோர் ஆட்டையும் கொன்றுவிடும். இறுதியில் ஓர் ஆடுகூட மிஞ்சாது. ஆடுகளெல்லாம் சேர்ந்து அந்த ஓநாயை ஒழித்துக்கட்டினால்தான் தப்பிக்கவே முடியும்.' தன் இன மக்களிடம் இளவரசர் மால் இப்படித்தான் சொன்னார். கி.பி பத்தாம் நூற்றாண்டில் உக்ரைன் பகுதியில் வாழ்ந்த டிரெவ்லியன் (Drevlyan) என்ற பழங்குடி இனத்தின் இளவரசர் அவர். அவரின் இனம் ஆட்டு மந்தை என்றால், யார் அந்த ஓநாய்?

ஸ்காண்டிநேவியாவைச் சேர்ந்த வைகிங்குகளில் ஒரு பிரிவினர், கிழக்கு ஐரோப்பிய மற்றும் ரஷ்யாவின் ஆறுகள் வழியே பயணம் செய்து புதிய நிலப்பிரதேசங்களில் குடியேறினர். அவர்களின் முக்கிய தளபதியான ரூரிக், ரஷ்யாவின் நாவ்கராடை மையமாகக் கொண்டு ஒரு ராஜ்ஜியத்தைக் கட்டமைத்தார். இந்த ரூரிக் பரம்பரையினர், சுமார் 700 ஆண்டுகளுக்கு ரஷ்யா மற்றும் உக்ரைனின் பல பகுதிகளை ஆட்சி செய்தது வரலாறு. 13-ம் நூற்றாண்டு வரையில் அந்தப் பிரதேசங்களை ஆண்ட பல்வேறு ராஜ்ஜியங்களின் கூட்டமைப்பு கீவ்யன் ரஷ் (Kievan Rus) என்றழைக்கப்பட்டது. பொது வரலாற்றுத் தகவலை இங்கு நிறுத்திவிட்டு... ஆடு – ஓநாய் கதைக்குத் திரும்புவோம்.

ரூரிக்கின் இறப்புக்குப் பிறகு, அவரின் மகனான இகோர் ஆட்சிக்கு வந்தார் (கி.பி. 914). பல்வேறு பழங்குடி இனத்தவர்கள் ரூரிக் ராஜ்ஜியத்துக்குக் கட்டுப்பட்டு கப்பம் (ஆடுகள், கம்பளி மற்றும் தேன் உள்ளிட்ட காட்டின் விளைபொருள்கள்) கட்டிக்கொண்டிருந்தனர்.

டிரெவ்லியன் இனத்தவர்கள் மட்டும் மறுத்தனர். பொறுமை யிழந்த இகோர், களத்தில் இறங்கினார் (கி.பி. 945). டிரெவ்லியன்களைச் சந்தித்து மிரட்டினார். டிரெவ்லியன் ஆடுகள், இகோர் ஓநாயைத் தீர்த்துக்கட்ட முடிவெடுத்தன. 'ஆடுகள் பொங்கியெழும்' என்று அந்த ஓநாய் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. டிரெவ்லியன்கள், இரண்டு உயரமான பிர்ச் மரங்களின் மேற்பகுதியைத் தரையை நோக்கி வளைத்தார்கள். இரண்டு மரங்களின் உச்சிகளில் பிணைத்திருந்த கயிற்றில், இகோரின் இரண்டு கால்களும் கட்டப்பட்டன. மரங்களை வளைத்து இழுத்த கயிறுகள் விடப்பட்டன. மரங்கள் நிமிர்ந்து மேலேழ, இகோரின் உடல் வானை நோக்கி இரண்டு பாதிகளாகப் பிய்த்தெறியப்பட்டது.



நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறியழுதாள் ஓல்கா (Olga). கொல்லப்பட்ட அரசர் இகோரின் மனைவி. அவர்களுக்கு மூன்று வயதில் ஸ்வியாட்டோஸ்லாவ் (Sviatoslav) என்ற மகன் இருந்தான். சிறுவனை அடுத்த அரசனாக்க இயலாது என்பதால், அரசரின் பிரதிநிதியாக அதிகாரத்தில் ஓல்கா அமர்ந்தாள்.

டிரெவ்லியன் இளவரசர் மால், ஒரு கணக்குப் போட்டார். ஓல்கா வலியமையற்றவள்; அரசியல் தெரியாதவள். நாம் அவளைத் திருமணம் செய்து கொண்டால், எப்போதும் கப்பம் கட்ட வேண்டாம். டிரெவ்லியன்களின் ராஜ்ஜியம் வலிமை பெறும். நானே அதன் புதிய அரசன்! குறுக்குவழியில் கொழுத்த கனவுகண்டார் மால். திருமணத்துக்குப் பெண் கேட்டு டிரெவ்லியன் தூதுவர்கள் சிலரை ஓல்காவின் அரண்மனைக்கு அனுப்பிவைத்தார்.

அவர்களும் ஓல்காவைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னார்கள். ‘‘எனக்கு முடிவெடுக்க ஒருநாள் அவகாசம் கொடுங்கள். இன்று உங்கள் படகில் சென்று தங்குங்கள். நாளை நீங்கள் என்னைப் பார்க்க நடந்தோ, குதிரையிலோ, ரதத்திலோ வரக்கூடாது. நான் உங்களுக்குச் செய்யும் மரியாதையாக, எம் வீரர்கள் உங்களைப் படகோடு தூக்கிக்கொண்டு வருவார்கள்’’ எனத் தேனொழுகப் பேசினாள் ஓல்கா. அவர்களும் நம்பி, படகுக்குச் சென்றார்கள்.

அடுத்த நாள். ஊரே வியப்புடன் பார்க்க, அந்தத் தூதுவர்கள் படகுடன் தூக்கி வரப்பட்டார்கள். ஓல்கா ஓரிடத்தில் காத்திருந்தாள். அவர்களைப் புன்னகையுடன் வரவேற்றாள். அங்கே மாபெரும் குழி ஒன்று வெட்டப்பட்டிருந்தது. என்னவென்று அவர்கள் யோசிக்கும் முன்பே, படகுடன் குழியில் தூக்கி எறியப்பட்டனர். ஓல்கா ஒய்யார நடை நடந்து வந்து, குழிக்குள் எட்டிப்பார்த்தாள். ‘‘எப்படி இருக்கிறது இந்த வரவேற்பு?’’ என்று ஏளனமாகச் சிரித்தாள். ‘‘உயிருடன் புதையுங்கள்!’’ என்று அவள் சொல்லவும், குழியை நிரப்ப ஆரம்பித்தார்கள். சில நிமிடங்கள் மட்டும்

கேட்ட தூதுவர்களின் மரண ஓலம், விரைவில் அடங்கிப்போனது. 'அரசர் இகோரும் இப்படித்தானே கதறியிருப்பார்? அவரைக் கொன்றுவிட்டு, திருமணத்துக்குத் தூதும் அனுப்புகிறாயா?' அரசி ஒல்காவின் பழிவாங்கும் வெறி பயங்கரமாகத் தூண்டப் பட்டிருந்தது.

இளவரசர் மாலுக்கு ஒரு செய்தி அனுப்பினாள். ''திருமணத்துக்குச் சம்மதம். ஆனால், உரிய மரியாதைகளுடன் என்னை இங்கிருந்து அழைத்துச் செல்ல, டிரெவ்லிய சான்றோர்களும் மேன்மக்களும் வரவேண்டும். அப்போதுதான், எம் மக்கள் இந்தத் திருமணத்தின் அவசியத்தை உணர்வார்கள்!'

இப்படி ஒரு செய்தியைக் கண்டதும் வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் உருவமில்லா ஓர் உருண்டை உருள, ஏற்பாடுகளை உடனே செய்தார் மால். முக்கியஸ்தர்கள் அடங்கிய டிரெவ்லியன் குழுவினர், அரசி ஒல்காவைச் சந்திக்கவந்தனர். ''என் அழைப்பை ஏற்று வந்தமைக்கு நன்றி. நீண்ட தூரம் பயணம் செய்திருப்பீர்கள். குளித்து, களைப்பு நீங்கி வாருங்கள்!'' – ஒல்கா இலவம்பஞ்சு வார்த்தைகளால் இதமாகப் பேசினாள்.

வந்த பெரியவர்களும் அகமகிழ்ந்து அவள் சொன்னதுபோல குளிக்கச் சென்றனர். ரஷ்யாவின் குளியல் அறைகளுக்கு banya என்று பெயர். கடுங்குளிருக்கு இதமான வெந்நீர்க் குளியல் முதல் நீராவிக் குளியல் வரை சகல வசதிகளும் அங்கே உண்டு. பெரியவர்களைக் குதூகலப்படுத்தும் மசாஜுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. களைப்பிலும், குளியலின் சுகத்திலும் அந்த டிரெவ்லியன்கள் கிறங்கிக் கிடந்த வேளையில், அந்த மாபெரும் குளியலறையின் கதவுகள் வெளிப்பக்கமாகப் பூட்டப்பட்டன. ''கொளுத்துங்கள்!'' - ஒல்கா கட்டளையிட்டாள். அந்தக் கட்டடத்துக்குத் தீ வைத்தார்கள். குளித்துக்கொண்டிருந்தவர்கள் தீக்குளிக்க வைக்கப்பட்டனர்.

வெறி தீராத ஒல்கா, மூன்றாவது சுற்றுக்குத் தயாரானாள். டிரெவ்லியன்களின் இடத்துக்கே சென்று ஆட்டம் காட்டத் திட்டமிட்டாள்.

மாலுக்கு அடுத்த செய்தியை அனுப்பினாள். ''சில நாள்களில் நான் அங்கே வருகிறேன். கொல்லப்பட்ட என் கணவருக்கு உங்கள் இடத்தில் 'காரியம்' செய்ய விரும்புகிறேன். அதுவே எனக்கு அமைதியைத் தரும். அதற்காக பிரமாண்ட விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.''

தான் அனுப்பிய டிரெவ்லியன்களுக்கு நடந்த கொடுமை எதையும் அறியாத மால், இந்தச் செய்தியையும் அப்படியே நம்பினார். விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். டிரெவ்லியன்களின் தலைநகரமான இஸ்கோரோஸ்டென் ( Iskorosten- உக்ரைனின் இன்றைய கோரோஸ்டென்) சென்றாள் ஒல்கா. உடன் சிறு படை மட்டும். மாலும் ஒல்காவும் நேருக்கு நேர் சந்தித்தார்கள். அவளது அழகைக் கண்டு மால் உற்சாகமானார். 'எனக்கே எனக்கா' என்று ஏகபோக குஷியில் அவரது இதயம் துள்ளியது.

இருந்தாலும் கேட்டார். ''நான் அனுப்பியவர்க ளெல்லாம் எங்கே?'' ஒல்கா பிசகின்றி பொய் சொன்னாள். ''எனது பரிவாரங்கள் சூழ, பின்னால் வந்துகொண்டே இருக்கிறார்கள். நாம் விருந்தை ஆரம்பிக்கலாமா?'' அவள் மது சிந்தும் கண்களால் கேட்கவும், மதி மயங்கிய மால் சற்றுக் கூடுதலாகவே குடித்தார். அந்த விருந்தில் கலந்துகொண்ட சுமார் 5,000 டிரெவ்லியன்களும் மூக்குமுட்டத் தின்று, மூச்சுமுட்டக் குடித்தனர். ஒல்காவும் அவரின் படையினரும் அளவுடன் நிறுத்திக்கொண்டு அமைதியாகக் காத்திருந்தனர்.

நள்ளிரவு நேரம். டிரெவ்லியன்கள் அனைவரும் மயங்கிக்கிடந்த வேளையில், ஒல்கா ''சீக்கிரம் ஆகட்டும்!'' என்று கட்டளையிட்டாள். அவளின் சிறுபடையினர் சரசரவென அங்கிருந்த அத்தனை டிரெவ்லியன்களின் கதையையும் முடித்தனர். அதில் மாலும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. விடிவதற்குள் ஒல்காவும் படையினரும் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர்.

கி.பி. 946-ல் ஒல்காவின் நான்காவது சுற்றுப் பழிவாங்கும் படலம் தொடங்கியது. அப்போது பெரும் படையுடன் நேரடியாகவே

டிரெவ்லியன்கள்மீது படையெடுத்தாள். சுற்றி வளைத்துத் தாக்குதல். பல மாத முற்றுகை. நகரத்துக்குள் சிக்கிக்கொண்ட டிரெவ்லியன்கள், நெடுஞ்சாண்கிடையாக அடிபணிந்தனர். ''நாங்கள் கப்பம் கட்டுகிறோம். அரசி ஒல்காவின் ஆட்சிக்குக் கட்டுப்படுகிறோம். எங்களை மன்னித்து உயிருடன் விட்டுவிடுங்கள்'' என்று செய்தி அனுப்பினர். கூடவே, கம்பளிகளையும், தேன் குடுவைகளையும் அனுப்பி வைத்தனர். அந்தத் தேன் அவளுக்குத் தித்திக்கவில்லை. பதிலுக்கு வேறு செய்தி அனுப்பினாள். ''உங்களை மன்னிக்கிறேன். எனக்கு மரியாதை செய்யும் விதமாக ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மூன்று புறாக்களையும் மூன்று சிட்டுக் குருவிகளையும் கொடுத்துவிடுங்கள்.''

எதற்கு புறா, குருவி என்றெல்லாம் டிரெவ்லிய மக்கள் யோசிக்கவில்லை. ஒல்கா கொல்லாமல் விடுகிறாளே என்று மகிழ்ந்து அவற்றைக் கொடுத்தனர். புறாக்களையும் குருவிகளையும் ஒல்காவின் வீரர்கள் புன்னகையுடன் வாங்கி வைத்துக்கொண்டனர். இரவு நேரம். ஒல்கா தன் வீரர்களிடம் கட்டளையிட்டாள். ''ஒரு சிறு துணியில் ஒரு துண்டு கந்தகத்தை முடியுங்கள். அதை ஒவ்வொரு பறவையின் காலிலும் கட்டுங்கள்.'' அப்படியே செய்தார்கள். ''அந்தப் பறவைகளைப் பறக்க விடுங்கள்!'' என்றாள் ஒல்கா.



டிரெவ்லியன்களிடம் கப்பம் கேட்கும் இகோர்



புனிதர் ஒல்கா

புறாக்கள் அவற்றின் வீடு திரும்பின. குருவிகள் அதனதன் கூடு திரும்பின. காற்றில் கந்தகம் வினைபுரிந்து தீப்பற்றிக் கொள்ளுமல்லவா? அதுவே நிகழ்ந்தது. தவிர, ஒல்காவின் கட்டளைப்படி, தீ ஏந்திய அம்புகள் Iskorosten நகரத்தை நோக்கிப் பாய்ந்து வந்தன. எங்கெங்கும் நெருப்பின் தாண்டவம். டிரெவ்லிய மக்கள் தூக்கம் கலைந்து அலறி ஓடி நெருப்பில் சிக்கி இறந்தார்கள். அதையும் மீறி நகரத்துக்கு வெளியே ஓடி வந்தவர்களை ஒல்காவின் வீரர்கள் கொன்று குவித்தனர். மேலும் பலர் சிறைப் பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர். ஒரு கொலைக்காக, ஓர் இனத்தையே கிட்டத்தட்ட அழித்த பிறகு, ஒல்கா தனது பழிவாங்கும் படலத்தை நிறுத்திக் கொண்டாள்.

ஒல்காவின் இருள் பக்கம் இதுவென்றால், மறுபக்கம் மலைக்கச் செய்வது. அரசியாக சில படையெடுப்புகளையும் நிகழ்த்தி, ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தினாள். மகனுக்கு உரிய வயது வந்தபிறகு, அவனிடம் அதிகாரத்தை ஒப்படைத்தாள். நிர்வாகச் சீரமைப்பு நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொண்டாள். கிழக்கு ஐரோப்பியப் பகுதியின் முதல் சட்டபூர்வமான வரி வசூல் முறை ஒல்கா உருவாக்கியதே. வணிகம் செழிக்கவும் பல வழிமுறைகளை உருவாக்கினாள்.

பாகான் (Pagan) என்ற தொன்ம ஐரோப்பிய மதத்திலிருந்து கிறிஸ்துவத்துக்கு மாறிய முதல் நபர் ஒல்காதான். பின், பாகான் மத மக்களிடையே கிறிஸ்துவத்தைப் பரப்ப பெரிதும் உழைத்தாள். அவள் மகன், இந்த மதமாற்றத்தை எதிர்த்தார். ஆனால், பேரனான விளாதிமிர் (Vlamidir the great), தேசத்தின் அதிகாரபூர்வ மதமாக கிறிஸ்துவத்தை அறிவித்தார். வரலாற்றில் ரத்தவெறி பிடித்த அரசிகளின் பட்டியலில் ஒல்காவுக்கு நிரந்தர இடமுண்டு. அதே சமயம், ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் கிறிஸ்துவம் தழைக்கக் காரணமாக இருந்த ஒல்காவுக்கு, கி.பி 1547-ல் மேன்மையான பட்டம் ஒன்று வழங்கப்பட்டது. புனிதர் ஒல்கா!

(வருவார்கள்...)

முகில், படம்: பா.காளிமுத்து




## கிறிஸ்துமஸ் கொலைகள்

‘‘நாங்கள் செய்யும் வேலைக்கு நீங்கள் கொடுக்கும் கூலி போதாது. அதிகப்படுத்துங்கள்’’ என்று தங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஸ்பானிய அதிகாரியை அவன் தந்தை எதிர்த்து நின்றபோது, ஃபிரான்சிஸ்கோ (Francisco Macias Nguema) பெருமையாக உணர்ந்தான். தந்தை பெரிய மந்திரவாதி. மாந்திரீகத்தாலும் பில்லி சூனியத்தாலும் ஊரிலிருப்பவர்களின் பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பவர். சொந்த சகோதரரையே அடித்துக் கொன்ற பலசாலியும் கூட. ஆகவே, தன் தந்தையின் குரலுக்கு அதிகாரிகள் செவிசாய்ப்பார்கள் என்று பலமாக நம்பினான். ஒரே அடி! அதிகாரி அடித்ததில் தந்தை சுருண்டுவிழுந்தார். அடுத்தடுத்த அடி தாங்காமல் செத்தே போனார். அந்த அதிர்ச்சி அடங்குவதற்குள், அடுத்த பத்தே நாளில் அவன் தாயும் தற்கொலை செய்துகொண்டாள். நொறுங்கி நின்றான் ஃபிரான்சிஸ்கோ.

1924-ல், ஈக்வடோரியல் கினி (Equatorial Guinea) என்ற மிகச்சிறிய ஆப்பிரிக்க தேசத்தில் பிறந்தவன் அவன். அந்தத் தேசத்தின் ரியோ மூனி என்ற பெரிய நிலப்பரப்பு ஆப்பிரிக்கக் கண்டத்துடன் இணைந்தது. தவிர, அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்த பயாகோ தீவு, அன்னபோன் தீவு

உள்ளிட்ட சில தீவுகளையும் ஒன்று சேர்த்ததே மொத்த தேசம். கி.பி 1778 முதல் ஸ்பெயினின் காலனியாக இருந்துவந்ததால் அதன் அப்போதைய பெயர் ஸ்பானிஷ் கினி.




ரியோ மூனியின் மொத்த மக்கள்தொகையில் 80 சதவிகிதம் பேர் ஃபேங் (Fang) என்ற இனக் குழுவினரே. அந்த இனத்தைச் சேர்ந்த ஃபிரான்சிஸ்கோ, கிறிஸ்துவ மிஷனரிகள் உதவியுடன் கல்வி கற்றார். ஏதாவது ஓர் அரசு வேலையில் அமர்ந்துவிட்டால் போதுமென அரசுப் பணித் தேர்வை எழுதினார். மூன்று முறை தொடர்ந்து தோல்வி. 'அதெற்கெல்லாம் அறிவு வேண்டும்' என்ற மற்றவர்களது பரிகாசம் மிகவும் வலித்தது. எப்படியோ நான்காவது முறை தேர்வானார். 'இல்லவே இல்லை, ஸ்பானியர்களின்

காலைப் பிடித்து குமாஸ்தா வேலை ஒன்றை வாங்கினார்' என்றும் சொல்லப்படுவதுண்டு. பின் வனத்துறையில் சிறு பணி. நான்காண்டுகள் கழித்து ஒரு நீதிமன்றத்தில் வேலை.

ஸ்பானிஷ் கினியை சுயாட்சிகொண்ட தேசமாக அறிவிக்கலாமென ஸ்பெயின் முடிவெடுத்தது. 1964-ல் போனிஃபேசியோ என்பவர் பிரதமராக, அவரது தலைமையில் ஓர் அரசு அமைக்கப்பட்டது. கொல்லைப்புறமாக அரசியலுக்குள்ளும் நுழைந்திருந்த ஃபிரான்சிஸ்கோ, உரியவர்களைக் காக்கா பிடித்தும், காய்களை நகர்த்தியும் மொங்கோமோ என்ற நகரத்தின் மேயர் பதவியில் அமர்ந்தார். நாம் எதிர்பார்க்காத ஒருவர் சட்டென முதல்வர் பதவிக்கு வருவதுபோல, போனிஃபேசி யோவின் நம்பிக்கைக்குரிய விசுவாசியாகச் செயல்பட்டு, துணைப் பிரதமராக உயர்ந்தார் ஃபிரான்சிஸ்கோ. 1967 வரை ஸ்பெயின் சுதந்திரத்தை அறிவிக்காமல் இழுத்தடிக்க, அதற்காக வலுவாகக் குரலெழுப்பி, தன்னை 'விடுதலைப் போராளி'யாக நிலைநிறுத்திக்கொண்டார்.



ஃபேங் இன மக்கள்

1968 மார்ச்சில், ஸ்பானிஷ் கினியின் விடுதலையை ஸ்பெயின் உறுதிசெய்தது. ஸ்பானிஷ் கினி, ஈக்வடோரியல் கினி ஆனது. அந்த செப்டம்பரில் அங்கே ஐ.நா-வின் மேற்பார்வையில், முதல் அதிபர் தேர்தல்

ஜனநாயக முறைப்படி நடந்தது. நான்காண்டு காலம் நல்லாட்சி புரிந்த உத்தமரான போனிஃபேசியோ போட்டியிட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர், ஃபிரான்சிஸ்கோதான். போனிஃபேசியோவுக்கு இருக்கும் நல்ல பெயரைத் தாண்டியும் தனக்கு ஓட்டு விழ அவர் கையில் எடுத்த ஆயுதம், வேறென்ன... இன அரசியல்தான். 'ஃபேங் இனத்தின் காவலனாக நம் பெருமையை மீட்டெடுப்பேன்' என்று சூளுரைத்து அந்த மக்களைச் சூடேற்றினார். போனிஃபேசியோவைத் தோற்கடித்து அதிபர் ஆனார். இன்றைய தேதி வரையில் அந்தத் தேசத்தில் ஜனநாயக முறைப்படி நடந்த ஒரே அதிபர் தேர்தல் அது மட்டுமே.

தோல்விக்குப் பின் கபானுக்கு ஓடிப்போன போனிஃபேசியோ, 'அங்கே தற்கொலை செய்து கொண்டார்' என்றும், 'இல்லை... புதிய அதிபரால் சிறைப்பிடிக்கப்பட்டு, கண்கள் குருடாக்கப்பட்டு கொல்லப்பட்டார்' என்றும் செய்திகள் உண்டு. ஆம், அதிபர் ஃபிரான்சிஸ்கோவின் கெட்ட ஆட்டம் அதிகாரபூர்வமாக ஆரம்பமாகியிருந்தது.

ஸ்பானியர்கள் ஆட்சி இருந்த வரைக்கும் தேசத்தின் பொருளாதாரம் நிமிர்ந்தே இருந்தது. கோகோ, காபி விவசாயத்தால் வணிகம் செழிப்பாக நடந்தது. நிர்வாக எந்திரம் பழுதின்றி இயங்கியது. பள்ளிகள், மருத்துவமனைகள், அரசுக் கட்டடங்கள் எனக் கட்டமைப்பும் நன்றாகவே இருந்தது. சுதந்திரம் வழங்கினாலும் சுமார் 7,000 ஐரோப்பியர்கள் வரை (பெரும்பாலும் ஸ்பானியர்கள்) அங்கேயே இருந்து தங்கள் வணிகத்தையும், பிற பணிகளையும் தொடர்ந்தனர். ஃபிரான்சிஸ்கோ அதிபரான 154-வது நாளில் நகர்வலம் சென்றபோது, அவரது கண்களில் ஸ்பெயினின் கொடிகள் தென்பட்டன. ஸ்பெயின் தூதரக அதிகாரியை அழைத்தார். "உங்கள் கொடிகள் எல்லாம் இறக்கப்பட வேண்டும்" என்றார்.இரண்டு நூற்றாண்டுகள் ஆண்ட திமிர் எளிதில் இறங்காதல்லவா. ஸ்பெயின் அதிகாரி "முடியாது" என்றார். ஃபிரான்சிஸ்கோ, இளைஞர்களைக் கொண்டு படை ஒன்றை அமைத்திருந்தார். அந்தப் படையினர் ஸ்பெயினின் கொடிகளை

மட்டுமல்ல, கண்ணில் பட்ட ஸ்பானியர்கள் ஒவ்வொருவரையுமே கிழித்துத் தொங்கவிட்டனர்.



போனிஃபேசியோ

சர்வாதிகார குணம் கொண்ட ஒருவர் அதிபராகும்போது என்னவெல்லாம் செய்வாரோ, அவை அனைத்தையும் அச்சுப் பிசகாமல் ஃபிரான்சிஸ்கோவும் செய்தார். தன் இன மக்களைக் கொண்டு தனக்கு விசுவாசமான ஒரு படையை உருவாக்கினார். அவர்களை ஏவிவிட்டு, அரசியல் எதிரிகள் பலரைச் சிறையில் தள்ளினார்; வதைத்தார்; வதம் செய்தார். எதிர்க்கட்சிகளுக்கு கல்லறை எழுப்பிவிட்டு, தனது கட்சியைத் (United National Workers Party) தேசத்தின் ஒரே கட்சியென பிரகடப்படுத்தினார். தன் குடும்பத்தினரை, உறவினர்களை, Esangui என்ற தன் குலத்தினரை, விசுவாசிகளை மட்டும் கொண்டு அதிகார மையத்தைக் கட்டமைத்தார். பத்திரிகைகளுக்குத் தடைவிதித்தார். 'தானே வாழ்நாள் அதிபர்' என்று அறிவித்துக்கொண்டார் (1972). இறுதியாக, தானே கடவுள்

என்ற போலி பிம்பத்தை உருவாக்கினார். பயத்தைத் தோற்றுவித்து அப்பாவி மக்கள் தன்னை வழிபடுமாறு செய்தார்.

இவையெல்லாம் சகல சர்வாதிகாரி களும் அரங்கேற்றும் அராஜகங்களே. ஃபிரான்சிஸ்கோ, 'இன்னும் மேலே' செய்தார். அப்போது இருந்த அரசியலமைப்பின் பெரும் பகுதி ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார். சென்ட்ரல் வங்கியின் இயக்குநர் படுகொலை செய்யப்பட்டார். வங்கியில் இருந்த பணமெல்லாம் அதிபரின் சொந்தச் செலவுகளுக்காக உரிமையுடன் எடுத்துக் கொள்ளப்பட்டது. பதவியேற்ற முதலாண்டு முடிவதற்குள் கஜானா காலி. 'யாராவது அதிபரை விமர்சித்தாலோ, அல்லது தரக்குறைவாகப் பேசினாலோ, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்' என்ற 100 சதவிகித சர்வாதிகாரம் சொட்டும் சட்டம் ஒன்றை நிறைவேற்றி, அதன் வழியாகப் பலருக்கும் உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றுத் தந்தார் பிரான்சிஸ்கோ.

'நான் Intellectual அல்ல. எனவே, அரசுப் பணித் தேர்வில் மூன்று முறை தோற்றேன். ச்சே... அவமானம்!' – இந்த விஷயம் பிரான்சிஸ்கோவின் மனத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது. ஆகவே, தேசம் முழுவதும் நூலகங்களை இழுத்து மூடினார். பெரும்பாலான பள்ளிகள் மூடப்பட்டன. மாணவர்களுக்கு அதிபரைப் புகழ்ந்து பாடும் வாசகங்கள் மட்டும் கற்றுக்கொடுக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, 'Intellectual' என்ற வார்த்தையை யாரும் எதிலும் பயன்படுத்தக்கூடாது என்று தடை கொண்டு வந்தார். Intellectual என்று தான் கருதியவர்களுக்கு கருமாதி செய்தார். கல்வெட்டு வாசகம் ஒன்றையும் உதிர்த்தார். 'ஆப்பிரிக்கக் கண்டத்தின் பெரும் பிரச்னையே படித்தவர்கள்தாம். அவர்களே அயல்நாட்டுக் கலாசாரத்தைப் புகுத்தி சூழலைக் கெடுக்கிறார்கள்!'

முன்னாளில், அன்றைய முதல்வரது புகைப்படத்தை எங்கும் மாட்டிக் கொண்டும், தூக்கிக் கொண்டும் ஒரு கூட்டம் திரிந்ததல்லவா. அதேபோல அந்நாளில் அங்கு அனைத்து தேவாலயங்களிலும் ஃபிரான்சிஸ்கோவின்


திருவுருவப் படம் மாட்டப்பட்டது. மதகுருக்கள் பிரார்த்தனைக்குப் பதிலாக, அதிபர் புகழ் பாட மிரட்டப்பட்டனர். மீறினால், சென்று சேர வேண்டியதுதான். 'எங்கே அனைவரும் சொல்லுங்கள்... நம் அதிபரே உலகின் ஒரே அற்புதம்! கடவுள் நம் தேசத்தைப் படைத்தார். ஃபிரான்சிஸ்கோவுக்கு நன்றி. ஆம், அவரின்றி நம் தேசமே கிடையாது! ஃபிரான்சிஸ்கோவைத் தவிர வேறு கடவுள் நமக்குக் கிடையாது!' – இப்படி ஃபிரான்சிஸ்கோ புகழ் வாசகங்கள் மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டன. அதே சமயத்தில் பிரசங்கம், விழாக்கள், மதக்கூட்டங்கள், சாவு ஊர்வலங்களுக்குக்கூடத் தடை விதிக்கப்பட்டது.




தேச மக்கள் அனைவரும் தங்களது ஸ்பானிஷ் கலந்த கிறிஸ்தவப் பெயர்களை, அசல் ஆப்பிரிக்கப் பெயர்களாக மாற்றிக்கொள்ளக் கட்டளையிடப் பட்டது. அதிபர், பிரான்சிஸ்கோ மாஸியஸ் நுவேமா என்ற தனது தன் பெயரை *Masie Nguema Biyogo Negue Ndong* என்று மாற்றிக் கொண்டார். நகரத்தின் பெயர்களும் மாற்றப்பட்டன. பயாகோ தீவிலமைந்த தலைநகரமான *Santa Isabel*, மலாபோ ஆனது. பல தேவாலயங்கள் மூடப்பட்டன. சில தேவாலயங்களை குடோன்களாகவும், ஆயுதங்களைப் பதுக்கிவைக்கும் கிடங்காகவும் மாற்றிக்கொண்டார் பிரான்சிஸ்கோ.

மனிதத் தன்மையற்ற பிரான்சிஸ்கோவின் ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட நிறைய கொடூரங்கள் வெளியே வரவில்லை. பதிவு செய்யப்பட்ட

சம்பவங்களில் இரண்டு மட்டும் இங்கே. 1969, கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்தைய மாலை. மலாபோவின் ஒரு மைதானத்தில் ஒலிபெருக்கிகள் கட்டப் பட்டன. அதில் மேரி ஹாப்கினின் புகழ்பெற்ற பாடல் ஒன்று ஒலிக்க விடப்பட்டது. 'Those were the days my friend'. 150 அரசியல் கைதிகள் மைதானத்துக்குள் அழைத்து வரப்பட்டனர். 'We thought they'd never end'. அனைவரும் வரிசையாக நிற்க வைக்கப்பட்டனர். 'We'd sing and dance forever and a day'. சாண்டா கிளாஸ் உடையணிந்த படைவீரர்கள் உற்சாகமாக மைதானத்துக்குள் வந்தனர். 'We'd live the life we choose'. 150 பேரை நோக்கியும் வீரர்களது துப்பாக்கிகள் நீண்டன. 'We'd fight and never lose'. துப்பாக்கிகள் வரிசையாக வெடிக்க ஆரம்பித்தன. 'For we were young and sure to have our way'. 150 பேரும் செத்து விழுந்தனர். 'La la la la...'



**தேர்தல் பிரசாரத்தில் ஃபிரான்சிஸ்கோ**

இன்னொரு சம்பவம்... 36 கைதிகள் அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கான குழியை அவர்களே வெட்ட வேண்டியிருந்தது. கழுத்து மட்டும் வெளியே தெரியும்படி அவர்கள் மண்ணில் புதைக்கப்பட்டனர். அந்தக் கைதிகளின் முகங்கள் மீது சிவப்புக் கட்டெறும்புகள் தூவப்பட்டன.

(ஃபிரான்சிஸ்கோ வருவார்...)

*ராஜாக்களின் கதை! - 40*

*முகில், படம்: பா.காளிமுத்து*

# கிறுக்கு ராஜாக்களின் கதை

**வாழும் சர்வாதிகாரி!**

உரையாற்றும்போது தலைவர்கள் உளறுவது சகஜம்தானே. ஈக்வடோரியல் கினியின் முதல் அதிபரான ஃபிரான்சிஸ்கோவும் சில முறை உளறியிருக்கிறார்.அதில் சர்வதேசத் தர உளறல் ஒன்றும் உண்டு. 'அடால்ஃப் ஹிட்லர், ஆப்பிரிக்காவின் மீட்பர்' என்றார் ஓர் உரையில். ஏன் அப்படிச் சொன்னார் என்பதைவிட, ஹிட்லரைவிடவும் கொடூரமான சர்வாதிகாரியாக ஃபிரான்சிஸ்கோ இருந்தார் என்ற உண்மையே இங்கே முக்கியமானது.


தீவிரவாதிகள் வெளிநாட்டவர் களைக் கடத்திவைத்து அரசாங் கத்தை மிரட்டுவது வாடிக்கை. ஆனால், தேசத்தின் அதிபரான ஃபிரான்சிஸ்கோவே அதைச் செய்தார். எப்போதெல்லாம் பணத்தட்டுப்பாடு இருக்கிறதோ, அப்போதெல்லாம் வெளிநாட்டி னரைக் கடத்தி வைத்துப் பணம் கேட்டு மிரட்டினார். ஒரு ஜெர்மானியப் பெண்ணுக்கு அவர் வைத்த விலை $57,600, ஒரு ஸ்பானிய பேராசிரியருக்கு $40,000, ஒரு சோவியத் பிரஜையின் பிணத்தை ஒப்படைக்க $6,000. ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றிய 95 நைஜீரியர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் தரப்படவில்லை. அவர்கள் போராடியபோது, இரு வார்த்தைகளில் பிரச்னையை முடித்தார் ஃபிரான்சிஸ்கோ. ''அவர்களைக் கொல்லுங்கள்.'' பதறிய நைஜீரிய அரசு, கினியிலிருந்த சுமார் 25,000 நைஜீரியர்களை தன் நாட்டுக்கு அழைத்துக்கொண்டது. பல தேசங்களைச் சேர்ந்தவர்களும் பதறியடித்து வெளியேறினார்கள்.

கொடுமைகள் தாங்காமல் சொந்த தேச மக்களே எல்லை வழியே தப்பித்துச் செல்கிறார்கள் என்ற செய்தி வந்தபோது, ஃபிரான்சிஸ்கோ அமைதியாகச் சொன்னார். ''எல்லைகளை அடையுங்கள். தப்பிக்க

உபயோகிக்கும் சாலைகளை உடைத்து, பெரிய பள்ளங்களைத் தோண்டுங்கள். அப்புறம், இனி தேசமெங்கும் ரயில்களே ஓடக்கூடாது.'' ஆனால், கடல் வழியாகவும் மக்கள் தப்பித்துச் செல்கிறார்களே? விசுவாசிகள் கவலைப்பட்டனர். அதிபர் அலட்சியமாகச் சொன்னார். ''படகுகளை உடையுங்கள். எரியுங்கள். தேசமெங்கும் மீன் பிடிக்கத் தடை என்று அறிவிக்கிறேன்.'' ஆம், கொஞ்சம்கூட யோசிக்காமல், தேசத்தின் முக்கியத் தொழிலான மீன் பிடித்தலையே காலிசெய்தார். பொதுமக்கள் கடற்கரையையே உபயோகிக்கக் கூடாது என்றார். தேசத்தையே சிறையாக்கினார். 'காற்றைச் சுவாசிக்கக் கூடாது' என்ற தடை மட்டும்தான் போடப்படவில்லை.



தனக்கு விருப்பமில்லை என்ற ஒரே காரணத்துக்காக தேசத்தின் முதுகெலும்பாக இருந்த கோகோ மற்றும் காபி உற்பத்தியை அழித்து பொருளாதாரத்தை முடமாக்கினார். ‘பாரம்பர்ய ஆப்பிரிக்க மருத்துவம் இருக்க, நவீன மேற்குலக மருந்துகளை எல்லாம் யாரும் எடுத்துக் கொள்ளவே கூடாது’ என்ற தடையைக் கொண்டு வந்தார். மீறி பயன்படுத்து பவர்களை ‘ஆன்ட்டி-ஆப்பிரிக்கன்’ என்றார். தடையைத் தடையறச் செயல்படுத்துவதற்காக தேசத்தின் மருத்துவ மனைகளையெல்லாம் மூடினார். தலைநகரமான மலாபோவில் ஒரு மின் உற்பத்தி நிலையம் இருந்தது. அதில், ‘இயந்திரங்களுக்கு கிரீஸ் பயன்படுத்த வேண்டாம். என் மந்திர சக்தியால் நான் இயந்திரங்களைச் சீராக இயங்கப் பண்ணுவேன்’ என்றார். இயந்திரங்கள் நிலைதடுமாற, மின் உற்பத்தி ஆலையே வெடித்துச் சிதறியது. மலாபோ நகரமே இருளில் மூழ்கியது.



**கைது செய்யப்பட்ட ஃபிரான்சிஸ்கோ**

*பயோகோ தீவின் பெரும்பான்மை மக்களான புபி இனத்தவர்கள், தங்கள் தீவைத் தனி நாடாக அறிவிக்கும்படிதான் வலியுறுத்தினர். நடக்கவில்லை. ஃபேங் இனவெறி கொண்ட ஃபிரான்சிஸ்கோ, புபி இனத்தவர்களை நாலாந்தரமாகத்தான் நடத்தினார். இனப்படுகொலைகள் தொடர்ந்தன.*

*பல சர்வாதிகாரிகளைப் போல அன்பரும் சபலிஸ்ட்தான். தான் விரும்பிய பெண்களை எல்லாம் அபகரித்ததோடு நில்லாமல், அவர்களின் குடும்பத்தினரைக் கூண்டோடு கொன்றார். அவரின் மூன்றாவது ஆசைநாயகியின் முன்னாள் காதலன்கள்கூட தேடிப்பிடித்துத் தீர்த்துக்கட்டப்பட்டதெல்லாம் சரித்திரம். ஃபிரான்சிஸ்கோ வெளிநாடு செல்லும் சமயங்களில் யாருக்காவது கொம்பு முளைத்து விடக்கூடாதல்லவா. ஆகவே, அதிபர் இல்லாத சமயங்களில் கைதிகளுக்கான மரண தண்டனை, பொது இடங்களில் நிறைவேற்றப்பட்டது. அதிபர் மீதான பயம் குறையவே கூடாது என்பதற்காக.*

*சில குறைந்தபட்ச புள்ளிவிவரங்கள் மட்டும் பதிவாகியுள்ளன. 1979 வரையிலான 11 வருட ஃபிரான்சிஸ்கோவின் பொற்கால ஆட்சியில் கொல்லப்பட்டவர்களின் பட்டியல்: அதிபரால் நியமிக்கப்பட்ட கேபினெட் அமைச்சர் 10 பேர், உயரதிகாரிகள் 22 பேர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 35 பேர், அரசு ஊழியர்கள் 67 பேர், தவிர, போலீஸ் அதிகாரிகள், ராணுவத் தினர், மருத்துவர்கள், மாணவர்கள், பிற துறை அதிகாரிகள் கொலை களுக்கு எண்ணிக்கை தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக 80,000 கொலைகள் என்றொரு உத்தேச எண்ணிக்கை சொல்லப்படுகிறது. உயிர் தப்பித்து, அண்டை தேசங்களுக்கு அகதிகளாக ஓடியவர்களின் எண்ணிக்கையும் பல ஆயிரம் இருக்கலாம்.*

*1974 முதல் 1979 வரையிலான காலகட்டத்தில் பல ஊர்கள் வெறிச்சோடின. மங்கோமோ, பாட்டா, மலாபோ போன்ற நகரங்களின் சிறைகளில் அடைக்கப்பட்டவர்களது எண்ணிக்கைக்கும் அளவே இல்லை.*

குறிப்பாக, பயாகோ தீவில் அமைந்த பிளாக் பீச் சிறை மாபெரும் வதைமுகாமாகச் செயல்பட்டது. அந்தச் சிறையிலிருந்து எப்படியோ விடுதலையாகி வந்த ஒரு கைதியின் வாக்குமூலம் இது. ‘‘வரிசையாக முட்டிக்கால் போட்டு நிற்க வைத்து, இரும்புக்கம்பியால் தலையில் நங்கென்று அடித்துத்தான், அங்கே மரண தண்டனையை நிறைவேற்றினார்கள். 1971-75 காலகட்டத்தில் என் சிறை அறைக்கு வெளியே மட்டும் இப்படிக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 157.’’




1970-களில் ‘ஆப்பிரிக்காவின் வதைமுகாம்’ என்ற பெயருடன் திகழ்ந்த பிளாக் பீச் சிறையின் கவர்னராகப் பணியாற்றவர், தியோடோரோ (Teodoro Obiang Nguema Mbasogo). அதிபர் ஃபிரான்சிஸ்கோவுக்கு மருமகன் முறை. ராணுவப் பயிற்சி பெற்றவர். அவரது வழிகாட்டுதலில்தான் அங்கே கொலைகள் அரங்கேறின. ஃபிரான்சிஸ்கோவுக்கான வழியனுப்பு விழாவும் பின்னால் தியோடோரோவால்தான் நிகழ்த்தப்பட்டது.

எவ்வளவோ கொடுமைகளை அனுபவித்த பிறகும், ‘அதிபர் ஃபிரான்சிஸ்கோ மாபெரும் மந்திரவாதி. பில்லி சூனியம் வைத்தே யாரை வேண்டுமானாலும் ஒழித்துவிடுவார்’ என்றே அப்பாவி மக்கள் நடுங்கினர். அதிபரோ, தாழ்வு மனப்பான்மையில் தத்தளித்துக்கொண்டிருந்தார். விதவிதமான போதைப் பழக்கங்களுக்கு ஆளாகி மனநிலை தடுமாறித்

திரிந்தார். வயது ஏற ஏற பார்வை மங்கியது. கேட்கும் திறனும் குறைந்துபோனது. செத்தவர்களுடன் பேசுவதாகச் சொல்லி, தனி அறையில் மணிக்கணக்கில் தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சூழலில், அவர் மக்களை வதைப்பதும் அதிகமாகியது.



பிளாக் பீச் சிறை

பல மாதங்களாக (அல்லது வருடங்களாக) அரசு ஊழியர்களுக்கும், ராணுவ வீரர்களுக்கும் சம்பளமே கொடுக்கப்படவில்லை. ஆறு ராணுவ ஊழியர்கள், அதிபரைச் சந்திக்க அவரது இருப்பிடமான மங்கோமோவுக்கே சென்றனர். அங்கே அவரது வீட்டில்தான் பெட்டி பெட்டியாக அரசாங்கப் பணத்தையெல்லாம் பதுக்கி வைத்திருந்தார். அதிபரைச் சந்தித்த ஆறு பேரும் சம்பளம் கேட்டு அழுத்தம் கொடுத்தனர். ஆறு பேருக்கும் மரணம் கொடுக்கப்பட்டது. அதுவே அதிபருக்கு வினையாகிப் போனது.

கொல்லப்பட்ட ஆறு பேரில் ஒருவர், அதிபருக்கு மருமகன் முறை. அதாவது, தியோடோரோவின் சொந்தத் தம்பி. கொதித்தெழுந்த தியோடோரோ ராணுவத்தைத் தன் பக்கம் திருப்பினார். ஸ்பெயின், மொராக்கோ என்று சில நாடுகளின் ஆதரவைத் திரட்டினார். அதிபரின் ஆதரவுப் படைகளுக்கெதிராக களமிறங்கினார். 1979, ஆகஸ்ட் 3 அன்று

*அதிபர் ஃபிரான்சிஸ்கோவின் பதவி பிடுங்கப்பட்டது. தலைமறைவான அவர், தன் வசமிருந்த பெரும்பாலான பணத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். தன் குழந்தைகள் மூவரை வட கொரியாவுக்குப் பத்திரமாக அனுப்பி வைத்தார்.*

*காட்டில் பதுங்கியிருந்த ஃபிரான்சிஸ்கோ, ஆகஸ்ட் 18 அன்று கைதுசெய்யப்பட்டார். ராணுவ நீதிமன்றம் வழக்கை விசாரித்தது. இனப்படுகொலை, அரசுப் பணத்தை அபகரித்தல், மனித உரிமை மீறல், தேசத்துரோகம் உள்ளிட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. செப்டம்பர் 29 அன்று ஃபிரான்சிஸ்கோவுக்கு '101 முறை மரண தண்டனை' நிறைவேற்றும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. மேல்முறையீட்டுக்கெல்லாம் வாய்ப்பில்லை. மேலோகமே வழி!*



**வருங்கால அதிபர் தியோடோரின்**

*அன்று மாலையே பிளாக் பீச் சிறையில் சுட்டுக் கொல்ல முடிவெடுத்தார்கள். ஆனால், 'அந்த ஆளு மந்திரவாதி. செத்தாலும் திரும்பி வந்து நம்மளைக் கொல்லுவான்!' என்று உள்ளூர் ஆள்கள் ஒவ்வொருவருமே பயந்தார்கள். ஆகவே, மொராக்கோ வீரர்கள் சிலர் வரவழைக்கப் பட்டனர். மாலை ஆறு மணி அளவில் ஃபிரான்சிஸ்கோவின் உடலைத் தோட்டாக்கள் துளைத்தன.*

அதற்குப் பின் ஈக்வடோரியல் கினி பிழைத்தது என்றெல்லாம் பிழையாக எண்ண வேண்டாம். அடுத்த இரண்டே வாரங்களில், தியோடோரோ இரண்டாவது அதிபராகப் பொறுப்பேற்றார். சர்வாதிகாரம்தான் அவரது வழியாகவும் இருந்தது / இருக்கிறது. ஆம், 1979 தொடங்கி 2017 வரை அவரே அந்தத் தேசத்தின் அதிபர்; சமகால சர்வாதிகாரி. ஏழாண்டுகளுக்கு ஒருமுறை அதிபர் தேர்தல் வைத்து, அதில் தான் மட்டுமே வேட்பாளராக நின்று, வெற்றியை அறிவித்துக் கொள்ளும் உத்தமர்.



ஒபாமாவுடன் தியோடோரோ

அன்னாரைப் பற்றி விளக்க ஒரு சம்பவம் போதும். செவெரோ மோடோ, தியோடோரோவின் அரசியல் எதிரி. அங்கிருந்து தப்பித்து வந்து 2004-ல் ஸ்பெயின் ரேடியோ ஒன்றில் அளித்த பேட்டியில் சொன்ன தகவல் இது. ‘‘அதிபர் ஒரு போலீஸ் கமிஷனரைக் கொன்றுவிட்டார்; தின்றும் விட்டார். ஆம், அந்தக் கமிஷனரது உடலைப் புதைக்கும்போது அவருக்கு மூளையோ,

விரைகளோ இல்லை.'' தியோடோரோ குறித்து, 'தான் பலம் பெறுவதற்காகவும், பலகாலம் உயிருடன் வாழ்வதற்காகவும் தன் எதிரிகளைக் கொன்று தின்னும் நரவெறி பிடித்தவர்' என்று தீராத சர்ச்சை உண்டு.

1996-ல் ஈக்வடோரியல் கினியில் எண்ணெய் வளம் கண்டறியப்பட்டது. தியோடோரோ கொழிக்க அது உதவியது. ஆகவே, அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். தேசத்தின் துணை அதிபர்களில் ஒருவர், அவரின் மகனான தியோடோரின். சொகுசுப் பேர்வழி. ஆடம்பரப் பிசாசு. பல தேசங்களில் உல்லாச மாளிகைகள், சொகுசு ஸ்போர்ட்ஸ் கார்கள், ஜெட் விமானங்கள், பளபளா ஷாம்பெயின் பார்ட்டிகள் என்று தேசத்தின் எண்ணெய் வள லாபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஏகாந்த இளவரசர். இவரே தியோடோரோக்குப் பிறகு அதிபர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறார். ஆப்பிரிக்கக் கண்டத்தின் எண்ணெய் வளம் மிகுந்த நாடான ஈக்வடோரியல் கினியின் பெரும்பான்மையான மக்கள் இன்னும் வறுமையின் கோரப் பிடியிலிருந்தே மீளவில்லை. அசுபம்.

எழுத எழுதத் தீராதவர்கள் இந்தக் கிறுக்கு ராஜாக்கள். கி.மு-வோ, கி.பி-யோ... ஏதாவது ஒரு தேசத்தில், ஏதோ ஒரு பெயரில் கிறுக்கு ராஜாக்கள் முளைத்துக் கொண்டேதான் இருந்திருக்கிறார்கள் / இருக்கிறார்கள். ஆண்டு அராஜகம் செய்து, மூர்க்க முத்திரை பதித்து மாண்டும் போகிறார்கள். அந்த வகையறாவுக்கு என்றும் End Card கிடையாது. ஆனால், இந்தத் தொடர் நிறைவடைகிறது.

**(மீண்டும் சந்திப்போம்)**